பக்கங்கள்: இருபத்தாறு

Registered as a Newspaper

# சஞ்சீவி

விலை ரூபா 10-00

மலை 9 : வள்ளுவர் ஆண்டு 2030 ஐப்பசி 27 சனிக்கிழமை (13-11-1999) SANJEAVY -Regenerative Tamil Weekly சிகரம்:24

## யாழ்.தளபதியாக சரத் முனசிங்க

யாழ்ப்பாணம்,நவ.13

யாழ்.மாவட்ட படைகளின் தளபதியாக மேஜர் ஜெனரல் சரத் முனசிங்க நேற்று பலாலியில் பதவி ஏற்றுக்கொண்டார்.

முன்னாள் இராணுவப் பேச்சாளரான சரத்முனசிங்க ஆனையிறவு வாடிவீட்டைத் தலைமையகமாகக் கொண்ட 54 ஆவது படைய ணியின் கட்டளை அதிகாரியாகப் பதவி வகித்துவந்தார்.

யாழ். மாவட்டப் படைகளின் தளபதியாக இதுவரை கடமையாற்றி வந்த மேஜர் ஜெனரல் லொஹான் குணவர்த்தன கொழும்புக்கு இடமாற்றம் பெற்றுள்ளார். (ஐ-3)

## 'லங்காமுடித்த' நாளை புறப்படும்

யாழ்ப்பாணம், நவ.13

காங்கேசன்துறையில் இருந்து திருகோணமலைக்கு ஒரு தொகுதி பயணிகளை ஏற்றிக்கொண்டு 'லங்கா முடித்த' கப்பல் நாளை புறப்படவிருப்பதாக யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் தெரிவித்தது.

இந்தக் கப்பலில் பயணம் செய்ய விரும்பும் - பாதுகாப்பு அனுமதி பெற்ற பொதுமக்களை பயண ஏற்பாடுகளுடன் இன்று காலை 11மணிக்கு யாழ். சிங்கள மகாவித்தியாலய மைதானத்துக்கு வருமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஐ.-3)

# புதிய முன்னரங்க நிலைகள் மீதும் புலிகள் தொடர்ந்து ஷெல் வீச்சு!

கொழும்பு,நவ.13

வவுனியா மாவட்டத்தில் புளியங்குளத்துக்கு கிழக்கு மற்றும் மேற்குப் பகுதிகளிலும், மன்னார் மாவட்டம் பெரியமடு, பள்ளமடு ஆகிய பகுதிகளிலும் உள்ள படையினரின் புதிய முன்னரங்க நிலைகள் மீது விடுதலைப்புலிகள் தொடர்ந்து மோட்டார் மற்றும் ஆட்லறித் தாக்குதல்களை மேற்கொள்வதாக பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்தது.

இந்தத் தாக்குதல்களை முறியடிக்கும் வகையில் புலிகளின் ஆட்லறி நிலைகள் என அடையாளம் காணப்பட்ட பிரதேசம் மீது படையினர் பதில் தாக்குதல்களை நடத்துகின்றனர் என்றும் -

தெரிவிக்கப்பட்டது.

நொச்சிக்குளம் பகுதியில் விடுதலைப் புலிகளுக்கும் படையினருக்கும் இடையில் இடம்பெற்ற சண்டையில் 5 புலிகள் உயிரிழந்ததாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

புதிதாக அமைத்துள்ள முன்னரங்க நிலைகளைப் பலப்படுத்துவதில் படையினர் ஈடுபட்டுள்ளதாகவும் நேற்று முற்பகல் 10.30 மணிக்கு நடவடிக்கைத் தலைமையகம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது. (ஐ-3)

## சரசாலையில் தேடுதல்

கொழும்பு, நவ.13

தென்மராட்சி சரசாலை வடக்குப் பகுதியில் நேற்று முன்தினம் பகல் தேடுதலில் ஈடுபட்ட படையினர் மீது சைக்கிளில் வந்த நபர் ஒருவர் கிரனேட் வீசியதாக பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கைத் தலைமையகம் நேற்று அறிவித்தது.

படையினர் திருப்பித் தாக்கியதாகவும் - அதில் அந்த நபர் உயிரிழந்தார் என்றும் - தெரிவிக்கப்பட்டது.

இதனை அடுத்து படையினர் மேற்கொண்ட தேடுதலில் சடலம் ஒன்று கைப்பற்றப்பட்டது என்றும் -

இரு கைக்குண்டுகள், ஒரு சயனைட்வில்லை, ஒரு தொலைத் தொடர்புக் கருவி ஆகியவற்றைப் படையினர் கைப்பற்றியதாகவும் - மேலும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-3)

# வீடுகளை வந்து பார்வையிட்டு திரும்பும் வவுனியா நகர மக்கள்

## ஆஸ்பத்திரி நோயாளரும் பாதுகாப்பான இடத்துக்கு

வவுனியா, நவம்பர் 13

**வவுனியா நகரப்பகுதி இரண்டாவது நாளாக நேற்றும் வெறிச்சோடிக் காணப்பட்டது.**

**ஆசிக்குளம், இராசேந்திரகுளம், மடு ஆகிய பகுதிகளுக்கு இடம்பெயர்ந்த நகரப்பகுதி மக்கள் நேற்றுக் காலை தமது வீடுகளுக்கு வந்து அத்தியாவசியப் பொருள்களை எடுத்துச்சென்றனர்.**

**அதேவேளை -**

**வவுனியா மாவட்ட வைத்தியசாலையில் தங்கியிருந்த நோயாளர்களில் ஒரு பகுதியினர் பாதுகாப்புக் கருதி செட்டிக்குளம் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருக்கின்றனர்.**

இரண்டாவது நாளாக நேற்றும் அரச அலுவலகங்கள், பாடசாலைகள், வர்த்தக நிலையங்கள், வங்கிகள் மூடப்பட்டுக்கிடந்தன.

வவுனியா ஆஸ்பத்திரியில் 20 நோயளிகள் மட்டுமே சிகிச்சை பெற்றுவருகின்றனர் என்றும் -

இவர்கள் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதியில் இருந்து சிகிச்சைக்காக வந்த நோயாளிகள் என்றும் -

கூறப்பட்டது.

( 10 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவுக்கு உணவு அனுப்ப அவசர கோரிக்கை

கொழும்பு,நவ.13

வவுனியா மாவட்டத்தில் தற்போது ஏற்பட்டிருக்கும் உணவுத் தட்டுப்பாட்டை நீக்கும் வகையில் அங்கு போதிய அளவு உணவுப் பொருள்களையும் மற்றும் மருந்து வகைகளையும் அனுப்பிவைக்குமாறு கோரி வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அடைக்கலநாதன் ஜனாதிபதிக்கு நேற்று அவசர பக்ஸ் செய்தி ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

வவுனியா மாவட்டதில் சிவில் நிர்வாகம் சீர்குலைந்துவிட்டதால் அங்கு ஏற்பட்டுள்ள உணவு மற்றும் மருந்துத் தட்டுப்பாட்டை நீக்க அரசாங்கம் உடனடி நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென அவர் ஜனாதிபதியிடம் கேட்டுள்ளார். (அ-7)

## கொழும்பு தமிழரின் கேள்விகளுக்கு ஜனாதிபதி பதில்

கொழும்பு,நவ.13

கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் வசிக்கும் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண 'அதே இடத்தில் சேவை' இன்று காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 4.00 மணி வரை பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரியில் நடைபெறவிருக்கின்றது.

கொழும்பு வாழ் தமிழ்மக்களின் கேள்விகளுக்கு ஜனாதிபதி செய்மதி மூலம் பதிலளிக்கும் நிகழ்வும் அங்கு இடம்பெறும்.

கொழும்பு - யாழ்.விமான சேவைக்கான டிக்கெட் வழங்கும் கருமபீடம் ஒன்றும் அங்கு இயங்கும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-3-7)

## டேர்பன் மாநாட்டுக்கு சந்திரிகா செல்லவில்லை

டேர்பன்,நவ.13

தென்னாபிரிக்காவின் தலைநகர் டேர்பனில் நேற்று ஆரம்பமாகிய பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் மாநாட்டில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கலந்துகொள்ளவில்லை.

பொதுநலவாய அமைப்பில் அங்கத்துவம் வகிக்கும் 54 நாடுகளில் 47 நாடுகளின் தலைவர்கள் இந்த மாநாட்டில் கலந்துகொண்டனர்.

நாட்டு நிலைமை காரணமாகவே ஜனாதிபதி இந்த மாநாட்டில் கலந்துகொள்ளவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-7)

## கொக்குத்தொடுவாயிலும் புலிகள் ஷெல் தாக்குதல்

கொழும்பு,நவ.13

திருகோணமலை மாவட்ட எல்லைப் பகுதியில் கொக்குத்தொடுவாயில் படையினரின் முன்னரங்க நிலைகள் மீது நேற்று முன்தினம் மாலை 6 மணியளவில் விடுதலைப்புலிகள் மோட்டார் மற்றும் ஆட்லறித் தாக்குதலை நடத்தியதாகப் பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கைத் தலைமையகம் நேற்று அறிவித்தது.

இந்தத் தாக்குதலை முறியடிக்கும் வகையில் படையினர் பதில் தாக்குதல் நடத்தினர் என்றும் -

அந்தப்பகுதியில் படையினர் மேற்கொண்ட தேடுதலில் ஒருவரின் சடலமும் ரி-56 ரகத் துப்பாக்கியும் மீட்கப்பட்டதாகவும் -

நடவடிக்கைத் தலைமையக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டது. (அ-3)

## வவுனியாவில் இடம்பெயர்ந்தோருக்கு கூரை விரிப்புகள் விநியோகம்

வவுனியா,நவ.13

வவுனியா நகரிலிருந்து இடம்பெயர்ந்து இராஜேந்திரகுளம், ஆசிக்குளம் ஆகிய பகுதிகளில் மரங்களின் கீழும் மற்றும் வெளியிடங்களிலும் தங்கியுள்ளவர்களுக்கு கூரை விரிப்புகளை அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் நேற்று விநியோகம் செய்தது.

அந்தப் பகுதியில் நிலவும் குடிதண்ணீர்த் தட்டுப்பாடு மற்றும் மக்கள் எதிர்நோக்கும் அடிப்படை வசதியீனங்கள் ஆகியவற்றை நீக்க அந்த அமைப்பு நடவடிக்கை எடுத்துள்ளது.

அதேநேரம் - இடம்பெயர்ந்த மக்களுக்கு உதவவடபகுதி மீள்குடியமர்வு, புனர்வாழ்வு அதிகாரசபைத் தலைவர் என்.கே.ஒபடகே நடவடிக்கை எடுத்துள்ளார் என்றும் -

இது விடயமாக அவர் வவுனியா அரச அதிபருடன் தொடர்புகொண்டுள்ளார் என்றும் -

அரச தரப்பில் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-3-7)

## வவுனியா நிலைமையை அடுத்து புளொட் அமைப்புக்கு ஆயுதங்கள்

வவுனியா நகரப்பகுதியில் ஏற்பட்டுள்ள பதற்றநிலையை அடுத்து புளொட் அமைப்பு உறுப்பினர்களின் தனிப்பட்ட பாதுகாப்புக் கருதி ஆயுதங்கள் வழங்கப்பட்டுள்ளதாக நம்பகமாகத் தெரியவருகிறது.

இதேவேளை -

இடம்பெயர்ந்து வேறு இடங்களில் தங்கியுள்ள மக்களின் அன்றாடப் பணிகளை சீராக்க வசதியாக நகரில் இருந்து அரிசி, சீனி, மா போன்ற அத்தியாவசியப் பொருள்களை வெளியிடங்களுக்கு எடுத்துச்செல்ல வேண்டாம் என்று வர்த்தகர்களைப் புளொட் அமைப்புக் கேட்டுள்ளது.

ப.நோ.கூ. சங்கக் கிளைகளை திறந்து வியாபாரம் செய்யுமாறும் புளொட் அமைப்பினர் கேட்டுள்ளனர்.

மக்களின் அத்தியாவசிய வசதிகளைச் சீராக்கும் பணிகளில் புளொட் உறுப்பினர்கள் ஈடுபட்டுள்ளனர். (ஐ-3-7-164)

## ரணில் சார்பில் கட்டுப்பணம்

கொழும்பு,நவ.13

அடுத்த மாதம் 21ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்காக ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க சார்பில் அக்கட்சியின் செயலாளர் காமினி அத்துக்கொறள நேற்றுக் கட்டுப்பணத்தை செலுத்தினார்.

சிங்கள மகாசம்பத பூமிபுத்ர கட்சி சார்பில் போட்டியிடும் ஹரிச்சந்திர விஜயதுங்கவும் -

சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிடவிருக்கும் வாசுதேவ நாணயக்காரவும்

( 10 ஆம் பக்கம் பார்க்க)

யாழ். மாநகரசபை நிதி விவகாரம்

## கூட்டணிக் குழு - அலவி மௌலானா பேச்சில் முன்னேற்றம் இல்லை

கொழும்பு, நவ.13

யாழ். மாநகர சபைக்கான நிதியுதவிகள் வழங்குவதுதொடர்பாக அமைச்சர் அலவி மௌலானாவுக்கும் மாநகர உறுப்பினர்கள் குழுவுக்கும் இடையில் நேற்று நடந்த பேச்சுக்களில் முன்னேற்றம் எதுவும் காணப்படவில்லை என்று கூட்டணி வட்டாரங்கள் தெரிவித்தன.

மாநகரசபையின் பிரதிமேயர் என். ரவிராஜ் மற்றும் மூன்று உறுப்பினர்கள் கடந்த வியாழக்கிழமை கொழும்பிலுள்ள மாகாணசபைகள், உள்ளூராட்சி அமைச்சு அலுவலகம் முன்பாக அடையாள உண்ணாவிரதம் மேற்கொண்டிருந்ததும் -

அதைத் தொடர்ந்து அமைச்சருக்கும் மாநகரசபை உறுப்பினர்களுக்கும் இடையில் நேற்று சந்திப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டதும் தெரிந்ததே.

இதன் பிரகாரம் மாநகரசபை பிரதிமேயர் மற்றும் உறுப்பினர்களான சி.சி. கணேந்திரன், ச.அரவிந்தன், நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா ஆகியோர் கொண்ட குழு அமைச்சரை அவரது அலுவலகத்தில் சந்தித்தது.

அபிவிருத்தித் திட்டங்களுக்கான நிதி யாழ். மாநகரசபைக்கு கிடைக்கவில்லை என்றும் -

இது விடயத்தில் யாழ். மாநகர சபை புறக்கணிக்கப்பட்டுள்ளது என்றும் -

குழுவினர் அமைச்சரிடம் எடுத்துக் கூறினர்.

மாநகரசபைக்கு ஒதுக்க வேண்டிய விசேடநிதி, புனரமைப்பு நிதி, நஷ்டஈடு போன்ற விடயங்கள் குறித்து ஜனாதிபதியுடன் பேசியே முடிவு எடுக்க வேண்டும் என்றும் -

ஜனாதிபதியுடன் இது சம்பந்தமாக பேசி முடிவைத் தெரிவிப்பதாகவும் -

அமைச்சர் பதிலளித்தார்.

யுத்தம் தொடர்ந்து நடப்பதே இப்படியான பிரச்சினைகள் எழக் காரணம் என்றும் -

யுத்தத்தை நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் -

மாவை சேனாதிராசா அமைச்சரிடம் கோரிக்கை விடுத்தார். (ஐ-க-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுமையும் எழிலும் பொலியும் பல்சுவை வார இதழ்

# காங்கேசன்துறை தடுப்பு முகாமில் இருந்து

# கைதிகளை அ.புரம் அனுப்புவது நிறுத்தம்

காங்கேசன்துறை தடைமுகாமில் தடுத்துவைக்கப்பட்டுள்ளகைதிகளை அநுராதபுரம் நீதிமன்றத்துக்கு அனுப்புவது இடைநிறுத்தப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

குடாநாட்டில் கைது செய்யப்படுபவர்களை யாழ். நீதிமன்றங்களிலேயே விசாரிக்கலாம் என்று பிரதம நீதியரசர் சட்டமாஅதிபருக்கு அறிவுறுத்தல் விடுத்ததை அடுத்தே இந்த நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

காங்கேசன்துறையில் தடுத்து வைக்கப்படுபவர்கள் வழமையாக ஒரு வாரத்தில் அநுராதபுரத்துக்கு அனுப்பப்பட்டுவந்தனர்.

ஆனால் கடந்தவாரம் இங்கிருந்து எவரும் அநுராதபுரத்துக்கு அனுப்பப்படவில்லை என்று மனித உரிமைகள் ஆணைக்குழு யாழ். இணைப்பதிகாரி எஸ்.ஸ்ரீதரன் தெரிவித்தார்.

கடந்த புதன்கிழமை காங்கேசன் தடுப்பு முகாமுக்குச் சென்ற ஸ்ரீதரன் கைதிகளுடன் கலந்துரையாடினார்.

கடந்த இருவாரங்களாகக் கைது செய்யப்பட்டவர்கள் காங்கேசன் துறையில் தடுத்துவைக்கப்பட்டுள்ளதாகவும் அவர்தெரிவித்தார்.

(ஐ-3-5-9)



யாழ். மாவட்ட இளைஞர் சேவை மன்றத்தின் உதவியுடன் காரைநகர் சுப்பிரமணியம் வீதியில் அமைந்துள்ள விவசாய வாய்க்கால் புனரமைக்கும் ஆரம்ப வைபவம் அண்மையில் இடம்பெற்றது.

அந்த வைபவத்தில் கலந்துகொண்ட ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் ஜே.எக்ஸ். செல்வநாயகம், தீவக இளைஞர் சேவை உத்தியோகத்தர் க.நித்தியானந்தன் காரைநகர் கிழக்கு கிராம உத்தியோகத்தர் ச.கனகசபாபதி மற்றும் இளைஞர் சேவை மன்ற உறுப்பினர்களை படத்தில் காணலாம். (ஐ-73)

*(படம்: காரைநகர் செய்தியாளர்)*

## நடமாடும் சேவைகள் மூலம் பிறப்புச் சான்றிதழ் வழங்க முடிவு

குடாநாட்டில் பிறப்புச் சான்றிதழ் பெறாதவர்களுக்கு உதவும் வகையில் பிரதேசசெயலக பிரிவு ரீதியாக நடமாடும் சேவைகள் நடத்தப்படவுள்ளன.

யாழ். செயலகத்தில் அண்மையில் நடந்த சிறுவர் பாதுகாப்பு உரிமைகள் அமைப்பின் கூட்டத்தில் இந்தச் சேவைகள் தொடர்பாக முடிவு செய்யப்பட்டது.

குடாநாட்டில் ஒரு வயதுக்கும் ஐந்து வயதுக்கும் இடைப்பட்ட குழந்தைகளில் பெரும்பாலானவர்களுக்கு பிறப்புப்பதிவு செய்யப்படாமை ஆய்வுகள் மூலம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாகவும் -

அந்த வயதுடையவர்கள் பிறப்புப் பதிவுகளை மேற்கொள்ள இந்த நடமாடும் சேவைகள் பிரதேச செயலர் பிரிவு ரீதியாக நடத்தப்படவுள்ளன என்றும் -

தெரிவிக்கப்பட்டது. (ஐ-3-133)

## பிரதேச செயலக பிரிவு ரீதியாக ஆயுள்வேத வைத்தியசாலை

வலி வடக்கு,நவ.13

வடக்கு - கிழக்கு மாகாணசபை மட்டத்தில் பிரதேச செயலாளர் பிரிவு ரீதியாக ஆயுள்வேத வைத்திய சாலைகள் அமைப்பதற்கு வடக்கு - கிழக்கு மாகாண சபை நடவடிக்கை எடுத்து வருகின்றது.

• முதல் கட்டமாக பிரதேசசெயலர் பிரிவுகளில் ஆயுள்வேத வைத்திய சாலை அமைப்பதற்கு ஏதுவாக அரச காணி ஒன்றை ஒதுக்கித் தரும்படி பிரதேச செயலகங்கள் கேட்கப்பட்டுள்ளன.

ஆயுள்வேதவைத்தியத்துறையை மேம்படுத்தும் முகமாக இந்நடவடிக்கையை வடக்கு - கிழக்கு மாகாண சபை மேற்கொண்டுள்ளது.

(ஐ-86)

### அடுத்த ஆண்டு முதல்

## பிரதேச அபிவிருத்திக்கான நிதி பிரதேச சபைகள் ஊடாக

அடுத்த ஆண்டு முதல் பிரதேச அபிவிருத்திக்கான நிதி பிரதேச சபைகள் ஊடாகவே வழங்கப்பட இருப்பதாக கைதடி - நாவற்குழி உபபிரதேசசபைப் பொறுப்பாளர் து.சிவராசா தெரிவித்தார்.

தென்மராட்சி மேற்கு ப.நோ.கூ. சங்க மண்டபத்தில் இடம்பெற்ற பிரதேச அபிவிருத்தித் திட்டம் தயாரிக்கும் கூட்டத்திலேயே அவர் இப்படிக் கூறினார்.

"பிரதேச செயலர் பிரிவு மட்டத்தில் மேற்கொள்ளப்படும் பிரமாண அடிப்படையிலான திட்டங்களுக்கு இதுவரைகாலமும் நிதி வழங்கப்பட்டு வந்தது. இனி இந்த நிதி பிரதேசசபைகள் ஊடாகவே வழங்கப்படும்" என்று அவர் மேலும் கூறினார்.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் இப்பிரதேசப் பகுதிகளில் உள்ள கிராம அபிவிருத்திச் சங்கங்கள், கிராம முன்னேற்றச்சங்கங்கள், மாதர் சங்கங்கள், விளையாட்டுக் கழகங்கள், சமயஸ்தாபனங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகளும், இப்பகுதி சகல கிராமசேவை உத்தியோகத்தர்களும் சாவகச்சேரி பிரதேசசபை உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டனர்.

• வேலைத்திட்டங்கள் தொடர்பாக இக் கலந்துரையாடலில் மேலும் ஆராயப்பட்டன. (ஐ-3-74)


**நாகம்ஸ்**
(சுன்னாகம)
விஜய், சாலினி நடித்த
**காதலுக்கு மரியாதை**
காட்சிகள் –
11.00 – 2.30
(புதிய நேரம்)

**ராஜா**
(யாழ்ப்பாணம்)
கடைசி வாரமாக
ரஜனி ~ ரோஜா
மற்றும் பலர் நடித்த
**உழைப்பாளி**
17 ஆம் திகதி முதல்
**செல்வா**
10.30, 2. 00, 5. 00
(C/9803)

**லிபேட்டி**
(அச்சுவேலி)
இன்றுமட்டும்
ரவிச்சந்திரன்,
K.R. விஜயா
பாலாஜி நடித்த
**இதயக்கமலம்**
காட்சிகள் – 10.30 – 2.30
T.P - No: 070 - 212223
070 - 212678
(70831)

**ஷண்**
பெருமளவு
சினிமா போஸ்ரர்கள்
வந்து குவிந்துவிட்டன.
வேண்டியவர்கள்
இன்றே வந்து
பெற்றுக்கொள்ளவும்.
ஷண்
றெக்கோடிங் ஸ்பொட்
பெரியகடை,
யாழ்.நகர். (70940)



### விண்ணப்பப் படிவம்

தமிழ் மொழிமூலம் தகுதிகாண் ஆசிரியர்களை ஆட்சேர்த்தல்-1999 விண்ணப்பப்படிவங்கள் புலோலி மெ.மி.த.க. பாடசாலையில் சனி, ஞாயிறு, காலை 9 மணி முதல் 12 மணிவரை வழங்கப்படவுள்ளன. மேலதிக விவரங்களையும் பார்வையிடலாம்.

பா. ரகுநாதன்
(அதிபர்)

## 31 ஆம் நாள் நீங்கா நினைவு அஞ்சலியும் அந்தியேட்டி கிரியை அழைப்பும்

மலர்வு 03 - 02 - 1927



உதிர்வு 15 - 10 - 1999

அமரர் **தம்பிப்பிள்ளை கந்தையா**

15-10-99 அன்று இறைவனடி சேர்ந்த எங்கள் குடும்பத்தின் குலவிளக்காய் விளங்கிய அன்புத் தெய்வத்தின் 31 ஆவது நாளாகிய நாளை (14-11-99) ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருக்கும் அந்தியேட்டிக் கிரியையிலும் எமது இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், அன்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

மேலும் அவரது இறுதிக் கிரியைகளிலும் பங்கு கொண்ட அனைவருக்கும் உதவி புரிந்தவர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும்:
**மனைவி,பிள்ளைகள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

முடவேம்படி
சுன்னாகம்.
(70947)


**விற்பனைக்கு**

ஒறியன் ரொபி,
வவுனியா வயர் பாக் (BAG),
வெங்காயம் பொதி செய்யும் நெற்பாக்,
வெங்காயம் பொதி செய்யும் மரப் பெட்டிகள்,
குளிர்சாதனப் பெட்டிக்குரிய யுனிற் வகை,
ஐஸ்கோன், ஐஸ்பழத் தயாரிப்புக்கான குச்சி

என்பன எம்மிடம் மொத்தமாகவும்
சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம.

**நாதன் களஞ்சியம்**
213 C, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல. 2916
(70939)


## மரண அறிவித்தல்கள்

### பொன்னம்மா கார்த்திகேசு

மீசாலை பேற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட பொன்னம்மா கார்த்திகேசு காலமானார். அன்னார் வேலுப்பிள்ளை கார்த்திகேசுவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சின்னையாபிள்ளை (C.T.B பருத்தித்துறை) வேலாயுதபிள்ளை (எழுதுவினைஞர், பரந்தன் இரசாயன கூட்டுத்தாபனம்), தனலக்சுமி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும், தங்கமணி, செல்வராணி, இரவீந்திரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியாரும், பிரதாபன் (லண்டன்), பகீரதன் (D.S சேனனாயக்கா கல்லூரி, கொழும்பு), சசீதரன் (N.D.E மாணவன், யாழ். தொழில்நுட்பக் கல்லூரி), இராகுலன் (ஜேர்மனி), வதனா - குணசேகரம் (ஜேர்மனி), சித்திரா, மாலா, கார்த்திகா, சிந்துஜா (ஜேர்மனி), சாருஜா (ஜேர்மனி), ஆகியோரின் அன்புப் பேத்தியும் தர்மிகனின் (ஜேர்மனி) அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13-11-99) சனிக்கிழமை 12மணியளவில் புகையிரத வீதி, கொடிகாமத்தில் அவரின் இல்லத்தில் நடைபெறும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

தகவல்.
**கா. வேலாயுதபிள்ளை** (மகன்)
கொடிகாமம்.
(70946)

### தையல்நாயகி தயானந்தன் (பிள்ளை அக்கா)

திருமதி தையல்நாயகி தயானந்தன் அவர்கள் 08-11-99 திங்கட்கிழமை சிவபதம் எய்தினார்.

இவர் எந்திரி ஆ. தயானந்தன் (பொறியியலாளர், கட்டடங்கள் திணைக்களம், (மாகாணம்), யாழ்ப்பாணம்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற துரைஐயா தம்பதிகளின் புதல்வியும் Dr. துஷ்யந்தன் (வைத்தியசாலை, நீர்கொழும்பு), எந்திரி சுஜந்தன் (OZTRAK Ltd, ஆஸ்திரேலியா), ஜெயந்தன் (மூன்றாம் வருடம் மருத்துவபீட மாணவன், யாழ்ப்பாணம்), தெய்வயாணி (இரண்டாம் வருட இராமநாதன் நுண்கலைப்பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற ஆறுமுகம், திருமதி ஆறுமுகம் தம்பதிகளின் மருமகளும், திருமதி பரமேஸ்வரி - தம்பிஐயா (நோர்வே), காலஞ்சென்ற திருமதி பவளம் - சிவசுப்பிரமணியம், திரு விஜயரெட்ணம் (இந்தியா), திருமதி சறோஜினிதேவி நடராசா (பொட்ஸ்வானா), திரு. மகாலிங்கம் (MINI), திரு.பாலறஞ்சித் (லண்டன்), திரு. றஞ்சித்குமார் (ஜப்பான்), திரு.சிதம்பரநாதன் (சர்மிளா போட்டோ) ஆகியோரின் அன்புச் சகோதரியும் நித்தியானந்தன் (U.K), சிவானந்தன் (மலாவி), காலஞ்சென்ற சச்சிதானந்தன், விவேகானந்தன் (அதிபர்), விபுலானந்தன் (கனடா), விமலானந்தன் (பரிஸ்), திருமதி ஜெயலக்சுமி - பவளத்துரை (T.O. கட்டடங்கள் திணைக்களம், மட்டக்களப்பு), ரவீந்திரன், சறோஜினிதேவி (கட்டுநாயக்கா), திருமதி மஞ்சுளா - இராஜசூரியர் (N.H.D.A. யாழ்ப்பாணம்) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14-11-99) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு 43, அச்சுக்கூட ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு, கொக்குவிலிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

43, அச்சுக்கூட ஒழுங்கை,
கொக்குவில்.
(70943)

தகவல்.
**ஆ.தயானந்தன** (கணவர்),
பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விசேட, தேசிய அடையாள அட்டைகளில் வேறுபாடுகளை நீக்கிக்கொள்ள வசதி

யாழ்ப்பாணம்,நவ.13

ஒருவரின் விசேட அடையாள அட்டையில் உள்ள விவரங்களுக்கும் தேசிய அடையாள அட்டையில் உள்ள விவரங்களுக்கும் இடையில் வேறுபாடு இருந்தால் அவற்றை உடனடியாகத் திருத்திக்கொள்ளுமாறு பொதுமக்கள் கேட்கப்பட்டுள்ளனர்.

விசேட அடையாள அட்டையில் உள்ள விவரங்களுக்கும் தேசிய அடையாள அட்டையில் உள்ள விவரங்களுக்குமிடையில் வேறுபாடுகள் காணப்படுவதாக சோதனைச்சாவடிகளில் உள்ள படையினரால் படை உயர் அதிகாரிகளுக்கு முறைப்பாடு செய்யப்படுவதாகவும் -


இது தொடர்பாக சில அறிவுறுத்தல்கள் யாழ்.செயலக விசேட அடையாள அட்டைப் பிரிவினருக்கு படை அதிகாரிகளால் வழங்கப்பட்டுள்தாகவும் -

விசேட அடையாளஅட்டைப் பிரிவு கருத்திட்ட முகாமையாளர் திருலிங்கநாதன் தெரிவித்தார்.

அடையாள அட்டைகளில் வேறுபாடு உடையவர்கள் உடனடியாக பொருத்தமான புகைப்படங்கள் மற்றும் விண்ணப்பப் படிவங்களுடன் கிராம அலுவலர் ஊடாகவோ மாணவர்கள் பாடசாலை அதிபர்கள் ஊடாகவோ விண்ணப்பிக்குமாறும் -

இப்படியான புதுப்பித்தல்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும் என்றும் - அவர் தெரிவித்தார்.

இத்தகைய வேறுபாடுகளை பொதுமக்கள் உடனடியாக திருத்திக்கொள்வதன் மூலம் சோதனைச் சாவடிகளில் ஏற்படும் தாமதங்கள் மற்றும் அசௌகரியங்களைத் தவிர்த்துக்கொள்ள முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-9-30-86)



உரும்பிராய் கருணாகரப்பிள்ளையார் கோயில் வருடாந்த மஹோற்சவ காலங்களில் தினசரி நாதஸ்வர இசை வழங்கிய சங்கீத நாதசாகரம் ஆர்.கேதீஸ்வரனையும் பெரியபுராணம் தொடர் சொற்பொழிவாற்றிய செஞ்சொற் கொண்டல் ஆறு.திருமுருகனையும் யாழ்.பல்கலைக்கழக கலைப்பீடாதி செ.பாலச்சந்திரனும் யாழ்.பல்கலைக்கழக கல்வியிறற்றுதைத்தலைவர் பேராசிரியர் வ.ஆறுமுகமும் முறையே பாராட்டி பொன்னாடைபோர்த்திக் கௌரவித்தனர்.

அவர்கள் இருவருடன் வடகோவையூர் ஆசிரியர்பிரான் ஆ.க.ஆறுமுகமும் ஆலயத்தில் அமர்ந்திருப்பதையும் -

ஆசிரியமணி அ.பஞ்சாட்சரம் உரையாற்றுவதையும் படத்தில் காணலம். (ஐ)

# கைதிகளை அழைத்துவர முடியாததால் மன்னார் நீதிமன்ற வழக்குகள் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,நவ.13

அனுராதபுரம் சிறைச்சாலையில் இருந்து கைதிகளை வவுனியா ஊடாக மன்னாருக்கு அழைத்துவர முடியர்த நிலை தோன்றியுள்ளதால் மன்னார் நீதிமன்றில் வழக்குகள் அனைத்தும் ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

எதிர்வரும் 23ஆம் திகதிக்கு வழக்குகள் அனைத்தும் ஒத்திவைக்கப்படுவதாக மன்னார் நீதிமன்ற நீதிபதி எம்.இளஞ்செழியன் தெரிவித்தார்.

மன்னார் நீதிமன்றில் நடைபெறும் வழக்குகளில் சம்பந்தப்பட்ட சந்தேக நபர்கள் அனுராதபுரம் சிறைச்சாலையிலேயே தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்றும் -

இவர்கள் வழக்கு விசாரணைகளின்போது மட்டுமே நீதிமன்றில் ஆஜர் செய்யப்படுவர் என்றும் -

தற்போது வவுனியாவில் காணப்படும் நிலை காரணமாக கைதிகளை மன்னாருக்கு அழைத்து வருவதில் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளதாகவும் -

தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் எதிர்வரும் 23ஆம் திகதி சந்தேக நபர்கள் நீதிமன்றில் கட்டாயம் ஆஜர் செய்யப்பட வேண்டும் என்று நீதிபதி சிறைச்சாலை உத்தியோகத்தர்களுக்குப் பணித்துள்ளார். (ஐ-3-6)



வடபிராந்தியப் போக்குவரத்துச் சபையின் காரைநகர் டிப்போ திறப்பு விழா கடந்த மாதம் 10 ஆம் திகதி நடைபெற்றது. திறப்புவிழாவுக்கு வருகைதந்த மத்திய போக்குவரத்துச் சபை முகாமையாளர் எம். சி. பிரேமரட்னாவை போக்குவரத்துச் சபை அதிகாரிகளும் மற்றும் பிரமுகர்களும் வரவேற்று அழைத்து வருவதையும், மீள அமைப்புச் செய்யப்பட்ட சாலையை அவர் நாடாவெட்டி திறந்துவைப்பதையும் படத்தில் காணலாம்.(ஐ-73)

(படம்: காரைநகர் செய்தியாளர்.)

# உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத் தலைவர் பேராசிரியர் ந.வீரப்பனார் நினைவுக் குறிப்புகள்



**உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத் தலைவரும் தமிழறிஞருமான பேராசிரியர் இர.ந.வீரப்பனாரின் நினைவாக உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் இலங்கைக்கிளையினர் விடுத்த நினைவுக் குறிப்பு இது.**

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத் தலைவரும் தமிழறிஞருமான பேராசிரியர் இர.ந.வீரப்பனார் தமிழகத்தின் புதுவையில் காலமானார். உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் வெள்ளிவிழா மாநாட்டுக்காக தமிழ்நாடு சென்றிருந்த அவர் உடல்நலம் குன்றியதைத் தொடர்ந்து புதுவை பொது மருத்துவமனையில் இயற்கை எய்தினார். அன்னாருக்கு வயது 70. அமரர் வீரப்பனாரின் உடலை புதுவையிலிருந்து மலேசியாவிற்கு அவரது புதல்வர் கொண்டுசென்று இறுதிக் கிரியைகளைச் செய்துள்ளார். அவருக்கு ஓர் ஆணும் மூன்று பெண்களுமாக மொத்தம் நான்கு பிள்ளைகள் உள்ளனர்.

8-6-1930 ஆம் ஆண்டில் இலங்கையில் உள்ள நுவரேலியாத் தேயிலைத் தோட்டத்தில் பிறந்த இவர், மலேசியாவில் கோலசிலாங்கூர் மாவட்டத்திலுள்ள இராசமூசா செம்பனைத் தோட்டத்திற்குப் பெற்றோருடன் வந்து தோட்ட தமிழ்ப்பள்ளியில் தமிழ்க் கல்விப் பயின்றார். 1948,49ஆம் ஆண்டுகளில் கிள்ளான் உயர்நிலைப் பள்ளியில் சனிக்கிழமை தோறும் நடைபெற்ற 6ஆம் 7ஆம் வகுப்பில் பயின்று தேர்வுபெற்றார்.

11-7-1951இல் நாகம்மையாரை மணம்புரிந்து கொண்ட இவர் 1953 முதற்கொண்டு தென்னமரம் செம்பனைத்தோட்டத்தில் உள்ள தமிழ்ப்பள்ளியில் ஆசிரியப் பணி செய்யத் தொடங்கியதுடன், கோலாலம்பூரிலும் கிள்ளானிலும் நடைபெற்ற ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் பயின்று தேர்வு பெற்றார்.

1954 முதல் மலேசியா, சிங்கை, தமிழக ஏடுகளில் பல கட்டுரைகளை எழுதியுள்ளார். 1956 முதல் அமரர் கு.அழகிரிசாமியுடன் தொடர்புகொண்டு பல இலக்கியக் கட்டுரைகளைப் படைத்தார். பல இலக்கிய கருத்தரங்குகளிலும் எழுத்தாளர் மாநாடுகளிலும் திறனாய்வுக்கூட்டங்களிலும் கலந்து எண்ணற்ற எழுத்தோவியங்களை இவர் படைத்துள்ளார்.

1960களில் ஆசிரியர் ஒளி, காவலன், பருவம், திருமுகம், மலைநாடு, மலைமகள், உதயம் போன்ற இதழ்களில் இவர் கைவண்ணம் எழில் சிந்தியுள்ளது. 1970களில் 20ஆம் நூற்றாண்டில் மலேசியத் தமிழ்நூல் வெளியீட்டுத்துறை, மலேசியத்தமிழர் குடியுரிமைச் சிக்கல் போன்ற பயன்மிக்க முப்பது ஆய்வுக்கட்டுரைகளை இவர் எழுதியுள்ளார்.

சங்க இலக்கியச் சிறுகதைகள் குறித்தும் திருக்குறள் சிலப்பதிகாரம் உட்பட இவர் எழுதிய படைப்புகள் சுவைமிக்கவை. 1966இல் கோலாலம்பூரில் நடைபெற்ற முதல் உலகத்தமிழாராய்ச்சி மாநாட்டில் கலந்துகொண்டு 'மலாய் மொழியில் தமிழ்ச் சொற்களின் செல்வாக்கு' என்ற ஆய்வைப் படைத்ததுடன் அதில் தனித்தமிழ்ச் சொற்கள் ஆயிரம் உண்டு என்பதையும் இந்த அளவுக்குப் பிறமொழிகளில் தமிழ்ச்சொற்கள் கலந்துவிடவில்லை என்றும் எண்பித்தார்.

சிங்கப்பூர், இலங்கை, இந்தோனேசியா, தமிழகம், ஆந்திரம், கர்நாடகம், பிரான்சு, இங்கிலாந்து, ஜெர்மனி, மொரீசியஸ், கனடா, ஆஸ்திரேலியா, அமெரிக்கா போன்ற பல்வேறு நாடுகளில் விரிவாகப் பயணம் செய்து தமிழர்களைக் கண்டு இலக்கியபாலம் அமைத்த திரு.வீரப்பனார் தமிழ்ப்பண்பாட்டுறவுகளைப் பேணியும் கூட்டங்கள், கருத்தரங்குகள் போன்ற நிகழ்ச்சிகளில் பேருரையும் ஆற்றியுள்ள தனிசிறந்த நாவலராகவும் இவர் திகழ்ந்தார்.

1966 முதல் 1970 வரை சென்னை மாணவர் மன்றத்தின் தமிழ்மணிப் புலவர் பட்டத்தேர்வை இங்கு நடத்திப் பட்டமும் பரிசும் வழங்கியவர் இவர் தாம்.

உலகத்தமிழ்ப்பண்பாட்டு இயக்கத்தின் தாய்க்கிளையாக 1974இல் மலேசியாவில் தமிழ்ப்பண்பாட்டு அமைப்பினை ஏற்படுத்தி, திருக்குறள் சமுதாய அமைப்புக்கு வித்திட்டவரும் இவரே. 30 நாடுகளில் கிளைகளும் 60 நாடுகளில் தொடர்புறவுகளும் ஏற்படுத்தி உலகத் தமிழரிடையே தமிழ்ப் பண்பாட்டு உறவுகளைப் பேணிவளர்த்தவர் இர.ந.வீரப்பனார். தமது வாழ்நாள் முழுவதும் ஓயாது எழுதியும் தமிழ்த் தொண்டாற்றியும் வந்தார். அன்னாரின் குடும்பத்தார்க்கு உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் இலங்கைக்கிளை தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கின்றது.



பண்ணிசைச்செல்வர் தாவடியூர் எஸ்.ஆர். திருஞானசம்மந்தனுக்கு 'அருளிசையரசு' என்னும் விருது அண்மையில் வழங்கி கௌரவிக்கப்பட்டது. யாழ். வலய உதவிக் கல்விப்பணிப்பாளர் கலாபூஷணம் திலகநாயகம்போல், திருஞானசம்பந்தனுக்கு மலர்மாலை சூட்டி கௌரவிப்பதைப் படத்தில் காணலாம். (ஐ)

# நீண்டகாலம் கடமைக்கு வராத ஆசிரியர் விவரம் சேகரிப்பு

வலிகாமம் தெற்கு,நவ.13

நீண்டகாலம் கடமைக்குச் சமூகம் அளிக்காத-எவ்வித அனுமதியும் இன்றி வெளிநாடு சென்றுள்ள - பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், ஏனைய உத்தியோகத்தர்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட உள்ளது.

மாகாணக்கல்வி அமைச்சின் செயலாளர் வலயக் கல்விப்பணிப்பாளர்களுக்கு விடுத்த பணிப்புரைக்கமைய இவ்வாறான உத்தியோகத்தர்மீது நடவடிக்கை எடுக்க வலயக் கல்வி அலுவலகங்கள் மூலம் விவரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன.

வலிகாமம் கல்விப்பணிப்பாளர் வீ. இராசையா பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில், இது விடயமாக அனுப்பப்பட்ட சுற்றறிக்கைக்கு சில பாடசாலைகள் இன்னமும் விவரங்களைத் தரவில்லை எனச் சுட்டிக்காட்டியுள்ளார்.

பாடசாலைகளில் கடமையேற்று, அல்லது கடமையாற்றி இதுவரை ஒரு மாதத்துக்கு மேல் பாடசாலைக்குச் சமூகம் கொடுக்காதவர்களின் விவரங்களை உடன் அனுப்பி வைக்குமாறும் அவர் கேட்டுள்ளார். (ஐ-152)

## கிராமியக் கலைப்போட்டி

பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகம் நடத்தும் கிராமியக் கலைப் போட்டி விழாவின் இரண்டாவது நிகழ்வு இன்று காலை 9 மணிமுதல் பிற்பகல் 6 மணிவரை நல்லூர் இளங் கலைஞர் மன்றத்தில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் சங்கானை பிரதேச செயலர் கா.சந்திரராசா பிரதம விருந்தினராகவும் யாழ்.பல்கலைக் கழக அரசறிவியல், சமூகவியல் துறைத் தலைவர், வேலணை உதவி அரசாங்க அதிபர் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்வர். (க)

## கூட்டம்

வடமாகாண அதிபர்கள் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் நாளை காலை 10 மணிக்கு யாழ். றோட்டறிக்கழக மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது. (ஐ-3)


## சிந்தித்துப் பாருங்கள்

**நோவு, வலி ஏற்படுகின்றபோது வைத்தியரின் ஆலோசனையின்படி, மருந்து வில்லைகளை பாவிப்பதே சிறந்தது. எனினும், எல்லாவகையான வலி, நோவுகளுக்கும் மருந்து வில்லைகளை உட்கொள்வது சிறந்ததா?**

மரம், செடி, வேர், மலர், பட்டை ஆகியவற்றின் சாறைக்கொண்டு உற்பத்தி செய்யப்படும். சித்தாலேபயை தடவி வலி, நோவுகளில் இருந்து நிவாரணம் பெற்றுக் கொள்ள முடியும் என்பதை இலங்கையில் இலட்சக்கணக்கான சித்தாலேப பாவனையாளர்கள் உறுதிசெய்துள்ள்னர்.

இலங்கை சுகாதாரத் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்ற சித்தாலேப

ஐ.எஸ்.ஓ. 9002 (ISO 9002) சர்வதேச தர நிர்ணயத்தின் மேற்பார்வையின் கீழ் உற்பத்தி செய்யப்படுகின்றது.

சித்தாலேப ஹெட்டிகொ. குரூப்

ஹெட்டிகொட இன்டஸ்ரீஸ் (பிரை) லிமிடெட்
33/3, ஸ்ரீ தர்மாராம வீதி, இரத்மலான
ரெலிபோன் 736910 பக்ஸ் 735465

(C/9497)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமலையில் ஐக்கிய நாடுகள் சிறுவர் உரிமை சாசனத்தின் 10ஆம் ஆண்டு நிறைவு விழா நிகழ்வுகள்

சிறுவர்கள் மீது கவனம் செலுத்தாத சமுதாயம் விரைவில் பின்னடைவது உறுதியாகும். சிறுவர்களை அலட்சியம் செய்யும் உலகம் எதிர்காலமற்றதாகும். தேசியம் ஒன்றின் கனவு அதன் சிறுவர்கள் வாயிலாக மட்டுமே நனவுறும். சிறுவரே ஒரு நாட்டின் உச்சமதிப்புடைய வளமாகும். மனிதன் உருவாக்கிய வேறுபாடுகளையும் வரையறைகளையும் கடந்து சிறுவர்களின் இயல்பான தனித்திறன்களும் உளச் சார்பு வலுக்களும் அறிவாற்றல்களும் வளர உச்சக்கட்ட வசதிகள் வழங்கப்படவேண்டும். துரதிர்ஷ்டவசமாகப் பணத்தை மையமாகக்கொண்டு அசுரவேகத்தில் இயங்கும் இன்றைய உலகில் பெரும்பாலான மக்கள் சிறுவர்களுக்கு உரிமைகள் உண்டு என்பதை மறந்துவிடுகின்றனர்.

இன்று எங்கள் சமுதாயத்தில் குறிப்பாக குறைந்த சலுகையுடைய சிறுவர்கள் பல்வகையில் தவறான பயன்பாடுகளுக்கு உட்படுத்தப்பட்டும் தனிமையான வாழ்க்கை வாய்ப்புக்கள் மறுக்கப்பட்டும் உள்ளனர். நடைபெற்றுக் கொண்டிருக்கும் யுத்தத்தின் தாக்கத்தினால் இந்நிலைமை மேலும் மோசமடைந்து வருகின்றது. 1991இல் இலங்கை அரசு அங்கீகரித்த ஐக்கிய நாடுகள் சிறுவர் உரிமை சாசனமானது குடும்பங்கள், சமூகங்கள், சமுதாயத்திற்கிடையே சிறுவர்களுக்கு பல்வேறு விதமான உரிமைகளைப் பாதுகாக்கவும் மேம்படுத்தவும் வகைசெய்கிறது. 1990ஆம் ஆண்டு ஜனவரியில் ஐக்கியநாடுகள் சிறுவர் உரிமை சாசனத்தில் இலங்கை ஒப்பமிடும்போது சிறுவர்களின் உரிமைகளிலுள்ள தனது ஆழ்ந்த ஈடுபாட்டையும் அவ்வுரிமைகளை மதிப்பதிலும் அவற்றைக் கடைப்பிடிப்பதிலும் ஏற்படும் அனுகூலங்களிலும் தனது கடப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளது. இவ்வுரிமைகளுக்கு மதிப்பளிப்பதும் அவற்றை அடைவதற்கு உதவுவதும் எங்கள் சமுதாயத்தின் கடமையாகும். ஐ.நா. சிறுவர் உரிமைசாசனத்தின் 10ஆவது ஆண்டு நிறைவுவிழாவைச் சிறுவர்களுடன் கொண்டாட ஏற்பாட்டாளர்கள் மேற்கொண்ட செயற்பாடுகள் இத்திசையை நோக்கிய முயற்சியேயாகும்.

ஐ.நா. சிறுவர் உரிமைச் சாசனத்தின் 10 ஆவது ஆண்டு நிறைவு விழா கொண்டாடுவதற்கு சமூக சேவைகள் திணைக்களத்தினதும் திருமலையில் அமைந்துள்ள உள்ளூர் மற்றும் சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்களினதும் ஒத்துழைப்புடன் சிறுவர் உரிமைகள்குழு நடவடிக்கைகளை மேற்கொண்டது.

பாதுகாப்புப் படையினரின் கட்டுப்பாட்டிலில்லாத பகுதிகளிலுள்ள 1500 சிறுவர்களும் சமூகத்தில் குறைந்த சலுகைகளைப் பெறும் யாழ்ப்பாணத்திலுள்ள சிறுவர் கழகங்களின் பிரதிநிதிகளும் திருகோணமலையில் தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளைச் சேர்ந்த சிறுவர்களும் இத்தினத்தில் திருமலை முற்றவெளி மைதானத்தில் ஒன்று கூடினர். முற்றவெளி மைதானத்திலுள்ள வசதிகளை வழங்க திருமலை மாநகரசபை மனமுவந்து இணங்கியது. சிறுவர்களது இச்சந்திப்பானது அவர்களின் விளையாட்டு, பொழுதுபோக்கு நிகழ்வுகளின் ஊடாக ஒருவர் மற்றவர்களது குறிப்பாக சமூகத்தில் சலுகை குறைந்த சிறுவர்களின் பிரச்சினைகள் அபிலாசைகளைப் புரிந்துகொள்ளவும் சந்தர்ப்பங்களை ஏற்படுத்தியுள்ளது.

இந்த நிகழ்வை நடத்துவதற்கு திருமலையிலுள்ள சாரணச்சிறுவர், சிறுமியரின் ஆதரவை இந்நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் பெற்றுள்ளனர். சிறுவர்களுக்கும் வளர்ந்தோருக்கும் சிறுவர் உரிமைகள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கென ஐ.நா. சிறுவர் உரிமைச் சாசனத்தின் சம்பந்தப்பட்ட ஆவணங்கள் கண்காட்சிக்கு வைக்கப்பட்டன. மேன்மை தங்கிய வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநரின் பணிமனைக்கு முன்பாகவுள்ள விளையாட்டுத்திடலிலிருந்து சிறுவர் பேரணி ஆரம்பமானது. பாடசாலை பாண்ட் வாத்திய இசைகளும் சிறுவர்களின் நாடகங்களும் சங்கீதக்கச்சேரி போன்ற நிகழ்வுகளும் இடம்பெற்றன. மேற்குறித்த நிகழ்வுகளோடு இணைந்து பின்வரும் செயற்பாடுகளும் இடம் பெற்றன.

1. மருத்துவ சிகிச்சை.
2. ஆரம்ப சுகாதார பராமரிப்புத் திட்டங்கள்.
3. பற்சுகாதார நிகழ்ச்சித் திட்டங்கள்.
4. ஆற்றுப்படுத்தல் நிகழ்ச்சித் திட்டங்கள்.
5. சட்ட உதவி நிகழ்ச்சித் திட்டங்கள்.
6. சாரண சிறுவர், சிறுமியரின் சாகசங்கள்.
7. சுகாதாரக் கல்வி நிகழ்ச்சித் திட்டங்கள்.
8. சமாதானத்திற்கான சிறுவர் வலயத் திட்டத்தின் முன்னேற்ற செயற்பாடுகள்.

மேற்குறிப்பிட்ட நிகழ்வுகளில் யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, மன்னார், வவுனியாவிலுள்ள அனைத்து இனங்கள், சமயங்களைச் சேர்ந்த சிறுவர் சிறுமியரின் சிறப்பு நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

**சிறுவர் உரிமைகள் குழு**
**கொழும்பு.**

((70881)


உ
கணபதி துணை

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான பிரமாதி வருடம் ஐப்பசித் திங்கள் 29 ஆம் நாள் (15-11-99) திங்கட்கிழமை ஸப்தமி திதியும் திருவோண நட்சத்திரமும் கும்பலக்கினமும் கூடிய நண்பகல் 12.00 மணிமுதல் பிற்பகல் 1.12 மணி வரையுள்ள சுப முகூர்த்தத்தில்

எமது ஏக புதல்வன் திருநிறை செல்வன் **ரவீந்திரன்** அவர்களுக்கும்

எமது கனிஷ்ட புதல்வி திருநிறை செல்வி **சித்திராதேவி** அவர்களுக்கும்

இறைவன் திருவருள் துணையால் திருமணம செய்ய பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு மணமகள் இல்லத்தில் நடைபெற இருக்கும் திருமணத்திற்கு தாங்கள குடும்ப சகிதம் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதித்து, தொடர்ந்து நடைபெறும் மதியபோசன விருந்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்:

திருமதி பரிபூரணம் தர்மராஜா,
"தர்மராஜ் பவன்",
தெல்லுளுவை, வல்வெட்டி.

திரு. திருமதி ஞானரத்தினம்,
55/4, வைமன் றோட்,
யாழ்ப்பாணம்.

திரு. திருமதி சி. சின்னத்துரை,
குஞ்சர்கடையடி,
இமையாணன்.

(இருவீட்டார் அழைப்பு) (70884)



## மனதார வாழ்த்துகின்றோம்

**ஸ்கந்தவரோதயக் கல்லூரி**

கந்தரோடை, சுன்னாகம்.

1997 A/L பரீட்சையில் சித்திபெற்று
இம்மாதம் பல்கலைக்கழகம் சென்ற மாணவர்களையும்,
கல்லூரி அதிபர், ஆசிரியர்களையும் வாழ்த்துகின்றோம்.



| | | |
|---|---|---|
| யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் | – | 21 |
| பேராதனைப் பல்கலைக்கழகம் | – | 02 |
| சப்பிரகமுவப் பல்கலைக்கழகம் | – | 01 |
| அநுராதபுரப் பல்கலைக்கழகம் | – | 01 |
| கொழும்புப் பல்கலைக்கழகம் | – | 01 |

வரலாற்றுச் சாதனை படைத்திருக்கும் எம்
ஸ்கந்தவரோதயக் கல்லூரியை வாழ்த்திப் போற்றுகின்றோம்.

ஸ்கந்தா பழைய மாணவர் சங்கம்
நோர்வே (Norway).

(C/9798)




கோப்பி சுவைஞர்களின் விடாப்பிடியான வேண்டுகோளுக்கிணங்க -

மீண்டும்...

## பென்கபே






* உடனடிக் கோப்பிக் கலவை *

உண்மையான பிரேசில் கோப்பியின் சுவையோடு
உயர்ந்த தரத்திற்கான பத்தாவது கோல்டன் ஐரோப்பிய விருது பெற்ற
'பென்கபே' கோப்பி குறிப்பிட்டளவே வந்துள்ளது.

வாங்குவதற்கு முந்துங்கள்

**அருண் ஸ்போட்ஸ் ஸ்பொட்**

347, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(C/9797)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNOPS

இதழ் :4

# ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் நிதியுதவியூடான ஐக்கிய நாடுகள் திட்ட சேவைகள் அலுவலகம்

## UNOPS/JRRP செயற்திட்டங்களிற்கான கணிப்பீட்டுக் குழுவினரின் விஜயம்

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் (UNDP) கணிப்பீட்டுக் குழுவினர் (Evaluation Team) ஒக்ரோபர் 20 ஆம் திகதி யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்தனர். யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்படும் திட்டங்களிற்கான செலவானது ஒரு மில்லியன் அமெரிக்க டொலருக்கும் கூடுதலானதாகையால் இக் கணிப்பீடு அவசியமானது. இக்குழு இரு வாரங்கள் தங்கியிருந்து UNOPS/JRRP யாழ்ப்பாணத்தில் மேற்கொண்டு வரும் செயற்திட்டங்களை கணிப்பீடு செய்ததுடன், எதிர்வரும் காலங்களில் யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளவுள்ள திட்டங்களிற்கு நிதி வழங்குவது தொடர்பாகவும் ஆராய்ந்தனர்.


UNDP திட்ட மிடலின், தொடரும் வழிகாட்டலை இக் கணிப்பீடானது தீர்மானிப்பதில் பங்கெடுப்பதுடன், இலங்கையின் குழப்பங்களால் பாதிக்கப்பட்ட இடங்களில் திட்டமிடலிற்கு உகந்த முகாமைத்துவ செயற்பாடுகளையும் தொழில் நுட்ப அணுகுமுறைகளையும் அளிக்க மேலதிக சந்தர்ப்பங்களை வழங்கும்.



அளவெட்டி அருணோதயாக் கல்லூரிச் சுற்றாடலில் நடைபெற்று வரும் கண்ணிவெடி அகற்றல் திட்டத்தை பார்வையிட்ட போது . . . . . . .



தெல்லிப்பளையில் UNOPS/JRRP இன் சுயதொழில் முயற்சிக்கடன் திட்டதின் மூலம் நடாத்தப்பட்டு வரும் விற்பனை நிலையம் ஒன்றை மேற்பார்வையிட்டனர். . . . . .





யாழ்ப்பாணம் தொழில்நுட்பக்கல்லூரிக்கு UNOPS/JRRP இனால் வழங்கப்பட்ட சாதனங்கள் சிலவற்றின் பாவனையையும், மிதிவெடி அகற்றப்பட்ட சுற்றாடலையும் பார்வையிட்ட போது . . . . . . . . . . . . .



அச்சுவேலியில் அமைந்துள்ள கோழிப் பண்ணை . . . . . . . . . .

போரினால் நலிவுற்று சோர்வடைந்துள்ள யாழ் மக்களுக்கு புனர்வாழ்வை அளிக்கும் முகமாக UNDP கடந்த ஒன்றரை வருடங்களிற்கும் மேலாக மேற்கொண்டு வரும் செயற் திட்டங்களை மிகுந்த மகிழ்ச்சியுடன் UNDP கணிப்பீட்டு குழுவினர் கணிப்பீடு செய்தனர்.



மருதங்கேணியில் UNOPS/JRRP இன் பயன்தரு மரநடுகைத்திட்ட சுற்றாடலில். . . . .



குருநகரில் அமைந்துள்ள UNOPS/JRRP வழங்கிவரும் வள்ளம்/கட்டுமரம் உற்பத்தி செய்யப்படும் இடத்தில். . . .



UNOPS/JRRP இனால் யாழ் போதனா வைத்தியசாலையில் புனரமைக்கப்பட்டு வரும் இரண்டு மாடிக்கட்டடத்தை பார்வையிட்ட போது. . . . .

## தீவக மக்களுக்கான 3 மில்லியன் ரூபா சுயதொழில் முயற்சிக்கடன் திட்டம்





UNOPS/JRRP இன் சுயதொழில் முயற்சிக்கடன் திட்டத்தின் (முதற்சுற்று) கீழ் காரைநகர்ப்பகுதி மக்களுக்கான கடன் ஒக்டோபர் மாதம் 8 ஆம் திகதி காரைநகர் பலநோக்கு கூட்டுறவுச் சங்க கிராமிய வங்கியினூடாக வழங்கப்பட்டது. இதற்கென 76 பயனாளிகளுக்கு பத்து லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டது.

தற்போது புங்குடுதீவுப்பகுதியைச் சேர்ந்த 12 பயனாளிகளுக்கு 235,000.00 ரூபாவும், நெடுந்தீவு பகுதியைச் சேர்ந்த 65 பயனாளிகளுக்கு 725,000.00 ரூபாவும், வேலணைப் பகுதியைச் சேர்ந்த 36 பயனாளிகளுக்கு 680,000.00 ரூபாவும், ஊர்காவற்துறைப் பகுதியைச் சேர்ந்த 20 பயனாளிகளுக்கு 330,000.00 ரூபாவும் அப்பகுதிகளைச் சேர்ந்த பலநோக்கு கூட்டுறவுச் சங்க கிராமிய வங்கியினூடாக வழங்கப்பட்டுள்ளன.

## சாவகச்சேரிப்பகுதியில் சோளம் பயிர்ச்செய்கை



சாவகச்சேரி, கைதடி ஆகிய பிரதேசங்களில் 50 கெக்ரெயர் (Hectare) நிலப்பரப்பில் சோளம் உற்பத்தியை மேற்கொள்வதற்காக UNOPS/JRRP 320,000.00 ரூபா பெறுமதியான சோளம் விதைகள், பசளைகளை அப்பகுதி கமநல சேவை நிலையங்களிற்கு வழங்கியுள்ளது. அப்பகுதிகளைச் சேர்ந்த விவசாய திணைக்களம், கமநல சேவைகள் நிலையங்களினால் 376 விவசாயிகள் தெரிவுசெய்யப்பட்டு இவை உற்பத்திக்காக விநியோகிக்கப்பட்டுள்ளன.

இவ் விவசாயிகளினால் உற்பத்தி செய்யப்படும் சோளத்தை, கோழித்தீவன உற்பத்திக்காக கமநலசேவை நிலையங்கள் ஊடாக திருநெல்வேலி மாவட்ட அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் கிலோ 25 ரூபா வீதம் கொள்வனவு செய்யவுள்ளது.

## யாழ் போதனாவைத்திய சாலைக்கு லான்ட் மாஸ்டர் விநியோகம்



யாழ் போதனா வைத்திய சாலைக்கு ஒருலட்சத்து எண்பதாயிரம் ரூபா பெறுமதியுடைய லான்ட் மாஸ்டரும், இழுவைப்பெட்டியும் UNOPS/JRRP வழங்கியுள்ளது.

இவ்வியந்திரம் மூலம் யாழ் போதனா வைத்திய சாலையில் தேங்கி வரும் கழிவுகளை இலகுவாக வெளியேற்ற முடியும்.

இவ்விதழ் தொடர்பான உங்கள் சந்தேகங்கள், கேள்விகளுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :

*Programme Manager*
*Public Information Team*
*UNOPS/JRRP*
*125, Temple Road*
*Jaffna.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரங்கள்

### O/L கணிதம் '99

தற்போதைய திட்டத்திற்கமைய கணித பாடத்தின் பெரும் பிரிவுகளான அட்சரகணிதம், கேத்திரகணிதம், எண் கணிதம், புதியகணிதம் ஆகியவற்றின் சகல அலகுகளையும் ஆரம்ப அறிவிலிருந்து 20 நாள்களில் தொடர் 40 மணித்தியாலங்களில் Distinction பெறுபேறடையச் கற்பிக்கப்படும். க. ஆறுமுகநாதன், 10, கச்சேரிகிழக்கு ஒழுங்கை, சுண்டுக்குளி. (70824)

### விற்பனைக்கு

அமெரிக்காவில் இருந்து தருவிக்கப்பட்ட 1999 மொடல் 4 Head - Hi -Fi-Multi Digital Converter, Auto Voltage V.C.R. HV-Mx100 181, Chl Cable T.V Tuner விற்பனைக்கு உண்டு. ஒறிஜினல்ப் பிரதி பண்ணுவதற்கும் வெளிநாட்டுப் பிரதிகள் எடுப்பதற்கும் மிகச்சிறந்தது. தொடர்புகளுக்கு ஆ. ஆனந்தன் (கனடா) "ஆனந்தபவன்", இல. 05, மஞ்சவனப்பதி வீதி, கொக்குவில்மேற்கு, யாழ்ப்பாணம் (மஞ்சவனப்பதிஆலயம்அருகில்) (70866)

மீன் தொட்டிக்குரிய அலங்காரப் பொருள்கள், மோட்டர்கள், ஸ்ரிக்கர்கள், பில்ரர், வெளிநாட்டு மீன் உணவு வகைகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: ஐ.அருளானந்தம் (குட்டி)17,இராஜேஸ் வரிவீதி, நாயன்மார்கட்டு, யாழ்ப்பாணம். (70867)

கண்டி வீதி, கைதடி நுணாவில் அறவழி காரியாலயத்துக்கு அருகில் பனை, தென்னை, மாமரம், விளாத்தி மரம், கிணறு முதலியன அடங்கிய 9 பரப்புக்காணி உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு Dr. S. ஞானசம்பந்தர் சிவன்கோவில் லேன், புகையிரத வீதி, சாவகச்சேரி அல்லது இராமலிங்கம் 373, நாவலர்வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (70869)

கொன்டென்சர் இல்லாத குளிர் சாதனப்பெட்டி, குஷன் ஸ்பிறிங் செற்றிகள் ஐந்து, 6 அடி நீளப் பெட்டகம் பூட்டுடன், பெரிய பழைய யன்னல்கள் ஐந்து, மாட்டுத்தொட்டில், அன்ரனாக் கம்பிகள், எஸ்லோன் பைப்புகள் எம்மிடம் விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு துரை, பூதராஜர் கோயிலடி, சூராவத்தை, சுன்னாகம். (70891)

3 ,1/4' உயர திண்டுக்கல் இரும்புப் பெட்டி (அயன்சேவ், ரூபா 25,000) 311, K.K.S வீதி கடையிலும் 2 1/4' உயர திண்டுக்கல் இரும்புப் பெட்டி (அயன்சேவ் ரூபா. 15,000) 92, 4ஆம் குறுக்குத் தெருவிலும் நல்ல நிலையில் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- எஸ்.ஜி.பிள்ளை, 92, 4ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். பார்வையிடும் நேரம் காலை 9-4 மணிவரை. (70876)

நல்ல நிலையில் உள்ள பதிவு செய்யப்பட்ட HONDA MB-5 மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு - ரவி S.M ஹாட்வெயாஸ் ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம். (70903)

### வாடகைக்குத் தேவை

நல்லூர் சுற்றாடலில் வீரமாகாளி கோயிலுக்கு அண்மையில் வீடு வாடகைக்குத் தேவை. தொடர்புகளுக்கு: திருமதி ச.நாகராசா ஐயர், 111/3, கோயில்வீதி, நல்லூர். (70899)

### சோதிடம்

பொய்யாமொழி சோதிடம் அழைக்கின்றது. எத்தகைய தீராத பிரச்சினைகளும் தீர ஆலோசனை வழங்கப்படும். சாதகத்துடன் வரவும். ஞாயிறு முழு நாளும் V.S.S. குருக்கள், மல்லாகம் பழம்பிள்ளையார் கோயில்மடம், மல்லாகம். (70898)

### சித்திவிநாயகர் சோதிடம்

சாதகம் எழுத, தீர்க்கமான பலன் அறிய விவாகப் பொருத்தம், விவாக தாமதம் கிரகதோசத்திற்கு சரியான பரிகாரம் காண சகல விதமான யந்திரங்களுக்கும் நாடுங்கள் கொழும்பில் 22 வருடம் அனுபவம் வாய்ந்த சோதிடர் விஸ்வ பிரம்ஸ்ரீ மா.தங்கவேல் 9, டச்சுவீதி, சாவகச்சேரி. (70904)

### பரிசு

பரிசளிப்பதற்கு ஏற்ற நூல்கள் அராலியூர் ந.சுந்தரம்பிள்ளையின் 1. நாடகம் எழுதுவது எப்படி? 2. யாழ்ப்பாணத்தில் அந்த ஆறு மாதங்கள். 3.யாழ்ப்பாணம்? கொழும்பா? நாடக நூல் 4. யாழ்ப்பாணம் சிறுகதைகள் ரூபா 50. (70900)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம்
17 - 03 - 1930



மறைவு
14 - 10 - 1999

### திருமதி நடராசா மகேஸ்வரி
(வீமன்காமம் ~ தெல்லிப்பழை)

எமையெல்லாம் சீராட்டி, தாலாட்டி
பாசமாய் வளர்த்தெடுத்து இந்தத் தரணியில்
தலை நிமிர்ந்து வாழ வைத்த
எமது அன்பு அம்மாவே! இனி எப்போ
உங்கள் அன்பு முகம் காண்போம்?
தங்கள் ஆன்மா சாந்தியடைய
இந்நாளில் பிரார்த்திக்கின்றோம்.

14-10-1999 இல் காலமான எங்கள் குடும்பத் தலைவியின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டும், அனுதாபச்செய்தி அனுப்பி மற்றும் பலவழிகளிலும் எமக்கு உதவிய உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இதேவேளை 17-11-1999 அன்று எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டி ஆத்ம சாந்திக் கிரியைகளில் கலந்துகொண்டும் அதன்பின் நடைபெறும் மதியபோசனத்திலும் பங்குபற்றுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

க. நடராசா (கணவர்)
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

தொம்பை வீதி,
உடுவில் கிழக்கு,
சுன்னாகம்.

(C/9622)

## முதலாம் ஆண்டில் நெஞ்சம் சுமக்கும் நினைவுகள்



### அமரர் குமாரசாமி கேசவன்
(முன்னாள் அதிபர், யா/மந்துவில் ஸ்ரீ பாரதி வித்தியாலயம்)

மண்மகிழ 28-06-1944 — கண் நெகிழ 28-10-1998

**திதி:- 16-11-1999**

வையகத்தில் வாழ்வாங்கு வாழ்ந்தாய் வண்ண
வடிவிலங்கச் சேவை பல செய்தாய் - ஏழை
கையணைத்துக் காத்திட்டாய் கலக்கம் இன்றி
காசினியில் மாணவர்க்கு விளக்காய் ஆனாய்
பையெனவே நடந்திங்கு பாசஞ்செய்து
பகலிரவா யெல்லோரும் வாழநின்று
மையலுடன் உழைத்தாயே எல்லாம் இன்று
மறந்தெங்கு சென்றிட்டீர் மறக்கப்போமோ?

மன்னவி, பிள்ளைகள்
மற்றும் குடும்பத்தினர்.

மீசாலை வடக்கு,
மீசாலை.

(70888)


# ஒரு கணக்கில் பல நன்மைகள்

கொமர்ஷல் வங்கியின் 3 வருட நிலையான **வைப்புக் கணக்கை** ஒரு முழுநிறைவான கணக்கு என்று நீங்கள் அழைக்கலாம். ஏனெனில் அது உங்களுக்கு 13% * வருடாந்த வட்டியை (முதிர்ச்சியில்) தருவது மட்டுமன்றி இன்னும் எத்தனையோ நன்மைகளையும் வழங்குகிறது.

நீங்கள் ரூ. 100,000 அல்லது அதற்கு மேற்பட்ட தொகையை முதலீடு செய்ய விரும்பினால் எமது 3 வருட நிலையான வைப்புக் கணக்கு மிகச் சிறந்த வழியாகும். இதோ, உங்களுக்குக் கிடைக்கும் அனுகூலங்கள்:

* வட்டிய்ய உங்கள் விருப்பப்படி மாதாந்தம், காலாண்டு தோறும், அரையாண்டு தோறும், வருடாந்தம் அல்லது கணக்கின் முதிர்ச்சியில் பெற்றுக்கொள்ள முடியும்.

* முதலாவது அல்லது இரண்டாவது வருட முடிவில் நீங்கள் விரும்பினால் வைப்புத் தொகையை மீளப்பெறலாம்.

* உங்களுக்கு ஆயுள் காப்புறுதி வசதியும் கிடைக்கும்.

* வைப்புத் தொகையில் 90% வரையிலான ஒரு தொகையைக் கடனாக அல்லது வங்கி மேலதிக பற்றாக உடனடியாகப் பெற்றுக்கொள்ளலாம்.

* கிறெடிட் கார்ட் வசதியைப் பெற்றுக்கொள்ளலாம்.

* வழமையான குறைந்தபட்ச வைப்புத்தொகை நிபந்தனை இல்லாமலே நடப்புக் கணக்கொன்றை ஆரம்பிக்க முடியும்.

* பிணை வைப்பு இல்லாமலே பாதுகாப்புப் பெட்டக (Safe Lockers) வசதியைப் பெறலாம் (பெட்டகங்கள் இருக்கும் கிளைகளில்)

இன்றே அண்மையிலுள்ள கொமர்ஷல் வங்கிக் கிளைக்குச் செல்லுங்கள். எமது 3 வருட நிலையான வைப்புக் கணக்கில் முதலீடு செய்து உங்கள் சேமிப்புக்களுக்கு அதிகபட்ச ஆதாயத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

* வருடாந்த தேறிய வட்டி 11.6%

## கொமர்ஷல் வங்கி

உங்கள் ஆதாயமே எங்கள் நோக்கம்

(C/9722)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடியோகாட்சி

யாழ்ப்பாணம்,நவ.13

யாழ். பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகின் ஏற்பாட்டில் தொடர்ந்து இடம்பெறவுள்ள திரைப் படங்களாக்கப்பட்ட இலக்கியப் படைப் புகள் வரிசையில் 'சங்ஹராபரணம்' என் னும் வீடியோப்படக்காட்சி இன்று சனிக்கிழமை மு.ப 10.00மணிக்கு புவி யியற்துறை மண்டபத்தில் இடம்பெற வுள்ளது. ஆர்வமுடையோர் எவரும் இந்த படக்காட்சிக்கு வருகைதரமுடியு மென புறநிலைப் படிப்புகள் அலகின் இணைப்பாளர் பேராசிரியர் இரா.சிவச் சந்திரன் அறிவிக்கிறார். (3)

## பரிசளிப்புவிழா

மானிப்பாய்,நவ.13

மானிப்பாய் சோதிவேம்படி வித்தி யாசாலையின் பரிசளிப்புவிழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு மானிப்பாய் பிரதேசசபை மண்டபத் தில் அதிபர் அ.நடராசா தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் வலிகாமம் கல்வி வலய பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு மதி றெ.இருதயநாதன் பிரதம விருந்தி னராகவும் சண்டிலிப்பாய் கல்விக் கோட்ட உதவிக் கல்விப்பணிப்பாளர் கே.தனபாலசிங்கம், தீவக வலய உத விக் கல்விப்பணிப்பாளர் வி.இராதாகி ருஷ்ணன் ஆகியோர் சிறப்பு விருந்தி னர்களாகவும் கலந்துகொள்வர்.(3-90)

## கலந்துரையாடல்

குடாநாட்டில் யுத்தத்தினால் சொத் துக்களை இழந்த அரச உத்தியோ கத்தர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று நாளை காலை 10.00மணிக்கு யாழ். சன்மார்க்க மகாவித்தியாலயத் தில் நடைபெறவுள்ளது. (3)

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 01 - 03 - 1941 | 15 - 11 - 1996 |

அமரர்

### இராசதுரை ஜெயகுணரத்தினம்

திதி: 13-11-1999

உழைப்பின் சிறப்பறிவாய் உண்மை உயர்வறிவாய்
களைப்பறியாய் கர்வமில்லா கண்ணியமே வடிவானாய்
மழைபோல் எல்லோர்க்கும் மாறாத பயனானாய்
இளைப்பாற எண்ணியா நீங்கள் எங்களையும்
மறந்து சென்றீர்?

எங்கள் மனங்களில் என்றென்றும்
வாழ்வாய் மறந்திடோம் அப்பா! அப்பா!

- மனைவி, பிள்ளைகள்.

கொம்மந்தறை, வல்வெட்டித்துறை.

(70860)

## வெளியீட்டு விழா

கென்றீசியனின்

### பனிப்பூக்கள்

அருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்களின்
**குருத்துவ வெள்ளிவிழா நினைவாக**

A. R. விஜயகுமாரின் ஆக்கத்தில் ஆனந்த்
இசைக்குழுவின் உதவியுடன்

**கென்றீசியன் பெருமையுடன் வெளியிடும்**

**கிறிஸ்தவ பாடல்கள் ஒலிப்பதிவு நாடா**

இடம்: **புனித ஹென்றிஅரசர் கல்லூரி - இளவாலை.**
காலம்: **13-11-1999** (இன்று மாலை) 3.30 மணி
**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

அன்பளிப்பு:-

### "அம்பிகாபதி"

**அழகுசாதனப்பொருள், நூல் வகைகள்**
**சில்லறை, மொத்த விற்பனையாளர்.**

**66, பெரியகடைவீதி, யாழ்ப்பாணம்.**

(70874)

# UNOPS

# The Barbara Mulvaney Computer Training Center

மகளிர் மட்டும்

**எதிர் வரும் மிலேனியம் புத்தாண்டில்**
**கணனி உலகில் உங்களை இணைத்துக் கொள்ள மகளிரே! நீங்கள் தயாரா?**

குறைந்த கட்டணத்துடன் நிறைந்த சேவையை பெற்றுக்கொள்வதற்கு

மகளிரால் மகளிருக்கென பிரத்தியேகமாக ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட

## ☞ பாபறா மல்வேணி கணனிப்பயிற்சி நிறுவனத்தில்

உங்களை இணைத்துக்கொள்ளுங்கள்.

மட்டுப்படுத்தப்பட்ட மாணவர்கள் பொதுஅறிவு, நுண்ணறிவு உள்ளடங்கிய பொதுவான போட்டிப்பரீட்சை ஒன்றின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு புலமைப்பரிசில் வழங்கப்படவுள்ளனர்.

கற்கை நெறி:

**Diploma in Microsoft Office** - 5 Months - 6500.00

- MS Word
- MS Excel
- MS Access
- MS Power Point
- Windows Operating System

விண்ணப்பப்படிவங்கள் யாவும் கீழ் தரப்பட்ட மாதிரிப்படிவத்தினை ஒத்த வகையில் பூர்த்தியாக்கப்பட்டு 1-12-99 இற்கு முன்பாக 100.00 பரீட்சைக் கட்டணத்துடன் கீழ்க்காணும் முகவரிக்கு நேரடியாகவோ அல்லது காசுக்கட்டளைகளை இணைப்பதன் மூலமாகவோ அனுப்பிவைக்கவும். காசுக்கட்டளைகளை **The Administrator, The Barbara Mulvaney Computer Training Center**. என்று பெயரிட்டு, பணம் பெறும் நிலையம் **Post Office - Jaffna** எனக் குறிப்பிடப்படல் வேண்டும்

| | | |
|---|---|---|
| **Full Name** | - | ........................................ |
| **Resident Address** | - | ........................................ |
| | | ........................................ |
| **Age** | - | ........................................ |
| **N.I.C Number** | - | ........................................ |

விண்ணப்பங்கள் யாவும் வந்து சேரவேண்டிய முகவரி
**The Administrator,**
**The Barbara Mulvaney Computer Training Center**
**No: 758, Hospital Road,**
**Jaffna.**

- ☛ மகளிரால் மகளிருக்கென பிரத்தியேகமான பயிற்சி
- ☛ ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் மேலதிக விசேட பயிற்சி அளிக்கப்பட்ட ஆசிரியர் குழு.
- ☛ தொலைக்காட்சி விளக்கப்படத்துடன் கூடிய விரிவுரை
- ☛ மாணவர்களின் மேலதிக அறிவு மேம்பாட்டிற்கான Tutorial CDs வசதி
- ☛ தரம் வாய்ந்த விளக்கப்படத்துடன் கூடிய நூல்கள் அடங்கிய நூலகம்.

கடந்த காலங்களில் யாழ் குடாநாட்டிலுள்ள வறிய இளம் பெண்களுக்கு ஐ. நா அபிவிருத்தி திட்டத்தின் கீழ் சிறந்த கணனிப்பயிற்சியினை வழங்கி சேவையாற்றிய நிறுவனம் என்பது குறிப்பிடத்தக்கது

**UNDP- யாழ்ப்பாணம் புனர்வாழ்வு மீள்குடியேற்ற நிகழ்ச்சித்திட்டம் (JRRP)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

மலர்வு 11 - 03 - 1924



உதிர்வு 14 - 10 - 1999

## திருமதி லீலாவதி கனகசபை

**பாசத்தின் உறைவிடமாய் இருந்து எங்களை எல்லாம் மீளாத்துயரில் ஆழ்த்திவிட்டு இறைவனடி எய்திய அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.**

14-10-99 அன்று இறைவனடி எய்திய எமது அன்புத் தெய்வத்தின் இறுதிச் சடங்கில் கலந்துகொண்ட உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் அனுதாபச் செய்திகள் அனுப்பி ஆறுதல் தெரிவித்தோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

இன்று (13-11-1999) சனிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டி, சபிண்டீகரண கிரியைகளிலும் கலந்து அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கு மாறும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

**76, இலந்தைக்குளம் வீதி,**
**மாம்பழம் சந்தி,**
**அரியாலை,**
**யாழ்ப்பாணம்.**

(C/9799)


# தென்மராட்சி கூ.சங்கத்தில் போதியளவு பொருள் கையிருப்பு

தென்மராட்சி மேற்கு ப.நோ.கூ சங்கத்தில் போதியளவு உணவுப்பொருள்களும் மற்றும் மண்எண்ணெய் போன்ற அத்தியாவசியப் பொருள்கள் கையிருப்பில் இருப்பதாகவும் -

எனவே பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படும் என எவரும் அச்சம் கொள்ளத் தேவையில்லை என்றும்-

தென்மராட்சி மேற்கு ப.நோ.கூ. சங்கத்தின் தலைவர் சி.சுப்பிரமணியம் உதயனுக்குத் தெரிவித்தார்.

செயற்கைத் தட்டுப்பாட்டை ஏற்படுத்தமுயலும் சிலராலேயே மக்கள் பொருள்களை வாங்குவதற்கு முண்டியடிக்கிறார்கள் எனவும் அவர் தெரிவித்தார்.

சங்கத்தின் கிளைகள் அனைத்திலும் நாளை முதல் மண்எண்ணெய் விநியோகம் சீராக நடைபெறுவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ஐ-10)

# நீர்வேலி உபஅலுவலக பிரிவில் வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி

யாழ்ப்பாணம்,நவ.13

வலி, கிழக்கு பிரதேச சபையின் நீர்வேலி உப. அலுவலகப் பிரிவில் உள்ள சனசமூக நிலையங்களில் எதிர்வரும் 16ஆம் திகதி வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி ஏற்றப்பட உள்ளது.

பன்னாலை சிவசக்தி சனசமூக நிலையத்தில் காலை 9 மணி தொடக்கம் 10 மணி வரையும் -

நீர்வேலி வடக்கு காமாட்சியம்பாள் சனசமூக நிலையத்தில் முற்பகல் 10.15 மணி தொடக்கம் 11.15 மணி வரையும் -

மாசிவன்சந்தி இராசன் சனசமூக நிலையத்தில் முற்பகல் 11.30 மணி தொடக்கம் 12.30 மணி வரையும் -

நீர்வேலி மத்தி ஸ்ரீபரமேஸ்வரி சனசமூக நிலையத்தில் பிற்பகல் 12.45 மணி தொடக்கம் 1.45 மணி வரையும்-

நீர்வேலி இளைஞர் மத்திய சனசமூக நிலையத்தில் பிற்பகல் 2.00 மணி தொடக்கம் 3.00மணி வரையும்-

நீர்வேலி தெற்கு ஸ்ரீ சுப்பிரமணிய சனசமூக நிலையத்தில் பிற்பகல் 3.15 மணி தொடக்கம் 4.15 மணி வரையும்-

வளர்ப்பு நாய்களுக்கான தடுப்பூசி ஏற்றப்படுமென வலி.கிழக்கு பிரதேச சபையின் செயலாளர் தெரிவித்துள்ளார். (ஐ-10)

# சமய சந்நிதிகளில்

கொழும்புத்துறை,நவ.13

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் கந்தசஷ்டியை முன்னிட்டு குருமூர்த்த ஆலயத்தில் தினசரி மாலை 4.30 மணி தொடக்கம் கந்த புராணப் படிப்பும் பயன்சொல்லலும் இடம்பெறுகிறது.

பின்னர் பூசை, வழிபாடு நடைபெறும். (ஐ-30)

* * *

காரைநகர், நவ.13

காரைநகர் சிவன் கோயிலில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு சூரசங்ஹார உற்சவம் நடைபெற உள்ளது.

கடந்த திங்கட்கிழமை முதல் முருகப்பெருமானுக்கு விசேட அபிஷேகம் பூசை. கந்தபுராணப்படிப்பு என்பன இடம்பெற்று வருகின்றன. (ஐ-73)

* * *

யாழ்ப்பாணம்,நவ.13

சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவை நடத்தும் கந்த சஷ்டி சொற்பொழிவுத் தொடரில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு 'கந்தபுராணக் களஞ்சியம்' எனும் தலைப்பில் யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறைப் பேராசிரியர் கலாநிதி நா.சுப்பிரமணியன் உரைநிகழ்த்துவார். (க)

* * *

கொழும்புத்துறை,நவ.13

கைதடி கயிற்றசிட்டி ஸ்ரீ கந்தசாமி கோயிலில் கந்தசஷ்டி திருவிழாவில் தினசரி காலை 9 மணி தொடக்கம் நண்பகல் 12மணி வரை கந்தபுராணப் படிப்பும் பயன்சொல்லலும் மு.தம்பையா தலைமையில் நடைபெற்று வருகிறது. (ஐ-30)

* * *

யாழ்ப்பாணம்,நவ.13

காரைநகர் புளியங்குளம் அருளானந்தப் பிள்ளையார் கோயில் பாலஸ்தாபன அபிஷேகம், தீபாராதனை ஆகியன நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணிமுதல் நடைபெறவிருக்கின்றன. (ஐ-3)

* * *

யாழ்ப்பாணம்,நவ.13

நெல்லியடி தடங்கன் புளியடி முருகமூர்த்தி ஆலயத்தில் நடைபெற்றுவரும் கந்தசஷ்டி கால நிகழ்வில் இன்று காலை சங்காபிஷேகமும் விசேட பூசையும் இடம்பெற்று பிற்பகல் ஒரு மணி முதல் 3 மணிவரை கந்த நாதஸ்வர கானமழை இடம்பெறும்.

நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3. 30 மணியளவில் சூரசம்ஹாரம் இடம்பெறும். (க)

## அகண்ட நாம பஜனை

யாழ்ப்பாணம்,நவ.13

யாழ்ப்பாணம் பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணி முதல் மாலை 5.30 மணி வரை அகண்ட நாம பஜனை நடைபெறவுள்ளது.

(ஐ)

## கலந்துரையாடல ஒத்திவைப்பு

நெல்லியடி, நவ. 13

நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருந்த வடமராட்சி கல்வி அபிவிருத்திக் குழுவின் கலந்துரையாடல் தவிர்க்கமுடியாத காரணத்தால் எதிர்வரும் 21ஆம் திகதி மாலை 3 மணிக்கு நடைபெறும் என கழக செயலாளர் எஸ். சேதுராசா தெரிவித்துள்ளார். (ஐ-109)

# விளையாட்டு நிகழ்வுகள்

## கூடைப் பந்தாட்டம்

யாழ்ப்பாணம்,நவ.13

ஹற்றன் நஷனல் வங்கி ஏற்பாட்டில் பாடசாலைகள் மற்றும் கழகங்களுக்கிடையில் யாழ்.மத்தியகல்லூரி கூடைப்பந்தாட்ட ஆடுகளத்தில் நடைபெற்றுவரும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று இடம் பெறும் ஆட்டங்களில் பங்கு பற்றும் அணிகளின் விவரம் வருமாறு:

* பிற்பகல் 3.30 மணி - சென் ஜோன்ஸ் 'ஏ' அணி எதிர் ஹாட்லி அணி.

* பிற்பகல் 4.30 மணி - சென் ஜோன்ஸ் 'பி' அணி எதிர் யாழ்ப்பாணக் கல்லூரி 'பி' அணி (ஐ-3)

## மென்பந்து கிரிக்கெட்

யாழ்ப்பாணம்,நவ.13

அரியாலை மத்தி இளைஞர் கழகம் நடத்தும் 7 பேர் கொண்ட 12 ஓவர்கள் மென்பந்துச் சுற்றுப் போட்டியில் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் இன்று இடம் பெறும் ஆட்டங்களில் பங்கு பற்றும் அணிகளின் விவரம் வருமாறு:

* முற்பகல் 11 மணி - வெங்கடேஸ்வரா 'பி' அணி எதிர் யாழ். செயலக அணி.

* நண்பகல் 12 மணி - ஜம்பேர்ன் அணி எதிர் நல்லூர் ஐக்கிய வி.க. 'ஏ' அணி.

* பிற்பகல் 2 மணி - ஸ்புட்னிக் வி.க.அணி எதிர் விக்ரம் வி.க.அணி.

* பிற்பகல் 3 மணி - அரியாலை வி. க. அணி எதிர் கொமேர்ஷல் வங்கி அணி.

* பிற்பகல் 4.30 மணி - விக்டறி வி.க. அணி எதிர் விநாயர் வி.க 'பி' அணி. (ஐ-3)

## உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம்,நவ.13

சென். ஜோன்ஸ் கல்லூரி பழைய மாணவர் சங்கம் 175 ஆவது ஆண்டு நிறைவையொட்டி யாழ்.பல்கலைக்கழக மைதானத்தில் நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:

* பிற்பகல் 4. மணி - றோயல் எதிர் கலைவாணி.

* பிற்பகல் 5.15 மணி - பாடும் மீன் எதிர் அரியாலை. (ஐ-3

## நாளை

யாழ்ப்பாணம்,நவ.13

யாழ். மாவட்ட மாணவ முயற்சியாளர்களுக்கான விருதுவழங்கும் நிகழ்வு நாளை காலை 10 மணிக்கு வைத்தீஸ்வராக் கல்லூரியில் நடைபெறவிருக்கின்றது.

யாழ். றோட்டறிக் கழகத்தினால் மகளிர் அபிவிருத்தி நிலைய ஆதரவில் நடத்தப்படும் இந்த நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக வணிகத் துறைத் தலைவர் கே.தேவராசா பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (ஐ-3)

* * *

நெல்லியடி, நவ.13

வடமராட்சி கால்நடைவளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தில் 'ஜமுனாபாறி' ஆடு பெறுவதற்காக விண்ணப்பித்த பயனாளிகளுக்கான கலந்துரையாடல் நாளை ஞாயிறு காலை 10 மணிக்கு புலோலி றோ.க.த.க. பாடசாலை மண்டபத்தில் சங்கத்தலைவர் அ.ம.சாம் செபஸ்ரியன் தலைமையில் நடைபெறும். (ஐ-109)

## இன்று

யாழ்ப்பாணம், நவ. 13.

அறவழிப் போராட்டக் குழுவினால் நடத்தப்படும் அறவழி மழலைகள் கல்விப் பூங்காக்களின் ஆக்கப் பொருள் கண்காட்சி இன்று காலை 10.30 மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் மகளிர் கல்லூரியில் வீ.ஜீ. தங்கவேல் தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் உடுவில் பிரதேச செயலர் ஆ. மகாலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (ஐ-152)

* * *

யாழ்ப்பாணம்,நவ.13

அருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசத்தின் குருத்துவ வெள்ளிவிழா நினைவாக கென்றீசியனின் "பனிப் பூக்கள்" கிறிஸ்தவப் பாடல்கள் ஒலிப்பதிவு நாடா வெளியீட்டு விழா இன்று பிற்பகல் 3.30 மணிக்கு இளவாலை புனித ஹென்றிஅரசர் கல்லூரியில் நடைபெறும். (க)


வெண்மையோ வெண்மை

நிள்மா

நறுமணச் சொட்டு நீலம்

ஜப்பானிய கட்டமைப்புக்கு அமைய சர்வதேச தரத்திற்கேற்ப நவீன முறையில் தயாரிக்கப்பட்ட நறுமணம் கொண்ட சொட்டு நீலம் நிள்மா.

இது ஆடைகளில் காணப்படும் பழுப்பு நிறத்தை விரட்டியடித்து ஒளி வீசும் பிரகாசமான வெண்மையை தருவதுடன ஆடைகளுக்கு மிருதுவான தன்மையைத்தந்து ஆடைகளின் பாவனையை நீடித்துத் தருகிறது.

ஒரு லீட்டர் நீருக்கு நிள்மா 4/5 துளிகள் வீதம் இட்டு கலக்கிய பின் சலவை செய்து பிழிந்த நிலையில் உள்ள ஆடைகளை நிள்மா நீரில் ஒவ்வொன்றாக இட்டு தேவையான வெண்மைக்கேற்ப அலசிய பின் நன்றாக பிழிந்து நிழலில் காயவிடவும்.

இப்போது முற்றும் புதியவை போன்ற தோற்றமுடைய ஒளிவீசும் பிரகாசமான வெண்ணிற ஆடைகள் உங்கள் கைகளில்.




சந்தைப்படுத்துவோர்
ஏஜே டிரேடிங் கொம்பனி
95,ஜெயந்த வீரசேகர மாவத்தை
கொழும்பு 10 தொலைபேசி: 458699

இணையற்ற தூய அன்புக்கு அம்மா, ஒளிமயமான வெண்மைக்கு நிள்மா.

**யாழ். ஏக விநியோகஸ்தர்கள்**

S.V.M
**NO. 154, HOSPITAL ROAD, JAFFNA.**
T.P NO:- 021 - 2202
021 - 2991
021 - 2911

CITY AGENCY
**NO. 158., STANLEY ROAD, JAFFNA.**
T.P NO :- 021 - 2055
021 - 2100

(C/9809)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிரடி அரங்கு

கடந்த மாதம் (ஒக்ரோபர்) ஆறாம் திகதி யாழ்ப்பாணக் குடாநாட்டில் அனேகமாக எல்லாப் பாடசாலைகளிலும் ஆசிரியர் தினம் கொண்டாடப்பட்டது. ஆரம்பப் பாடசாலைகளிலும் ஆசிரியர் தினம் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. சிறுவர் சிறுமியர் முதல்நாளே வீடுவீடாகச் சென்று, வீதி வீதியாகத் திரிந்து மலர்களைப் பறித்து மாலை கட்டினர். அடுத்தநாள் உற்சாகத்துடனும் உணர்வு பூர்வமாகவும் மாலைகளைத் தமது ஆசிரியர்களுக்குச் சூடிக் கௌரவித்து மகிழ்ந்தார்கள். இந்த நிகழ்வுகள் பலவற்றிலும் பாடசாலை அபிவிருத்திச்சங்க உறுப்பினர்களும், பழைய மாணவர் சங்க உறுப்பினர்களும், பெற்றோர்களும் கலந்துகொண்டதால் ஆசிரியர்கள் கௌரவிக்கப்பட்டார்கள் எனும் பரவலான திருப்தி நிலவியது.

ஆனால் தென்மராட்சிக் கல்வி வலயத்திலுள்ள பாடசாலை ஒன்றில், மாணவ மாணவியர் ஆர்வத்துடன் கட்டிச் சென்ற பூமாலைகளைத் தமது ஆசிரியர்களுக்குச் சூடி மகிழ முடியவில்லை. அன்றைய தினம் அவசர வேலை ஒன்றின் காரணமாக அதிபரால் நிகழ்விற்கு நேரகாலத்துடன் வந்து சேரமுடியவில்லை. அதனால், நிர்வாகம் பிரதி அதிபரின் கைக்கு மாறியது. மாணவ மாணவிகள் கட்டி வந்த மாலைகளை ஆசிரியர்களுக்குச் சூடவேண்டாம் என்றும் அங்கு வைக்கப்பட்டிருந்த சரஸ்வதி படத்திற்கு அணிவிக்குமாறும் உத்தரவிட்டார். மாணவர்கள் ஏமாற்றத்துடனும் கவலையுடனும் தாம் கொண்டுசென்ற மாலைகளை சரஸ்வதி படத்திற்குச் சூட்டினர்.

குறிப்பிட்ட பாடசாலையில் ஆசிரியைகளே அனேகர். அவர்களிலும் மிகப்பலர் திருமணமாகாத செல்விகள். திருமணமாகும் முன் பெண்களுக்கு வேறொருவரும் மாலை போடுவதில்லை என்ற மரபைப் பேணியே தான் சரஸ்வதி படத்திற்கு மாலைகளைச் சூடுமாறு கூறியதாக விளக்கமளித்தாராம் பிரதிஅதிபர்.

குரு - சிஷ்ய மரபைப் பேணும்போது, மாணவன் தன் குருவை கௌரவிக்கும் போது பிரதி அதிபர் மாலை போடக் கூடாது என்று தடுத்தது சரிதானா என்ற கேள்வி பெற்றோர்கள் மத்தியில் எழுந்துள்ளது. அந்த மாலைகளை ஆசிரியைகளின் கைகளில் கொடுக்கவாவது ஏற்பாடு செய்திருக்கலாம். தமது சக ஆசிரியைகள் மாலை வாங்கி கௌரவம் பெறக்கூடாது என்று பிரதி அதிபர் நினைத்தாரோ என்னவோ!

* * *

அரசாங்க எழுதுவினைஞர் சேவைக்கு ஆட்சேர்க்கும் பரீட்சை கடந்த வாரம் யாழ்ப்பாணத்திலும் நடைபெற்றது. இப்பரீட்சையில் ஆயிரக்கணக்கில் இளைஞர்களும் யுவதிகளும் தோற்றினர். இவர்களில் பலர் ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றி பல்கலைக்கழகத்தில் அனுமதி பெறுவதற்கு தேவையான புள்ளிகளைப் பெறத் தவறியோர் ஆவர். இன்னும் பலர் ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சையில் சராசரியாகச் சித்தியெய்தியோர். இவர்களில் பலர் உயர் கல்வி வசதி கிடைக்காததால் வேலை தேடி அலையும் வகையினர். பலர் ஏழைக்குடும்பங்களையும் சேர்ந்தோர்.

மேற்கூறிய வகையினரைவிட, இன்னும் ஒரு வகை பெருங்கூட்டம் இந்தப் பரீட்சைக்குத் தோற்றியது. பல்கலைக்கழகப் புகுமுகமாணவர்களும், அங்கு 1ஆம், 2ஆம் வருடங்களில் பயிலும் மாணவர்களும் சேர்ந்த கூட்டம்தான் அது. உயர்கல்வி பெறுவதற்கெனப் பல்கலைக்கழகம் சென்றவர்கள் இரண்டு தோணிகளில் கால்வைத்தவர்கள் போல இவ்வாறு நடந்துகொள்வதால் தமக்குக் கிடைக்கக்கூடிய வாய்ப்பு இல்லாமற் போய்விடுமென்று உயர்கல்வி கிடைக்காத இளைஞர் யுவதிகள் பெரிதும் விசனப்படுகிறார்கள். உயர்கல்வி பெறுபவர்கள் அதனை முடித்துக்கொண்டு தமது தகுதிக்குரிய தொழிலைத் தேடுவது வேறு. அந்த வசதி கிடைக்காத இளைஞர் யுவதிகளின் வாய்ப்பை வெட்டுவது வேறு. பல்கலைக்கழகத்தில் பயிலும் மாணவர்கள் அரசாங்கத் திணைக்களங்களிலும் தொழில்புரிவது ஏற்கனவே நடந்துவரும் ஒன்றுதான். சட்டத்துக்குமாறாக இவ்வாறு இரண்டு தோணிகளிலும் கால்வைப்பதற்கு உயர்அதிகாரிகளே உடந்தையாக இருக்கின்றார்கள் எனப்பெற்றோர்கள் கண்டனம் தெரிவிக்கின்றார்கள்.

இந்த விவகாரத்தில் திணைக்களத் தலைவர்கள் மட்டுமன்றி பல்கலைக்கழக நிர்வாகமும் ஏனோதானோ எனவும் கட்டுப்பாடின்றியும் செயற்படுவதாக அதிருப்தி தெரிவிக்கிறார்கள். அனேகமாக அரசாங்கத் திணைக்கள அதிகாரிகள் தமது உறவினர்கள், தெரிந்தவர்கள், நண்பர்கள் ஆகியோரின் பிள்ளைகளுக்கே தமது செல்வாக்கைப் பயன்படுத்தி இங்கு வேலை செய்யவும் அங்கு கல்வி கற்கவும் உடந்தையாக இருக்கிறார்கள் எனக் கண்டனம் தெரிவிக்கப்படுகிறது.

"பல்கலைக்கழகத்தில் பயில்வதால் புலமைப்பரிசில்கள் மற்றும் இதர சலுகைப்படிகளை மாணவர்கள் பெறுகிறார்கள். அதேவேளை அரசாங்கத் திணைக்களங்களிலும் தொழில் செய்து மாதச்சம்பளமும் பெறுகிறார்கள். ஆனால் நாங்களோ நான்கைந்து புள்ளிகளால் பல்கலைக்கழகமும் செல்ல முடியாமல் தொழிலும் இல்லாமல் பெற்றோருக்குச் சுமையாகவே இருக்கின்றோம். எங்கள் கதியைச் சற்றேனும் சிந்தித்துப் பார்க்காமல் பல்கலைக் கழகத்தில் பயிலும் எமது சகோதரர்கள் எமக்குத் தொழில் கிடைக்கும் வாய்ப்பை இல்லாமற் செய்வது பெருங்கொடுமை" என இளைஞர் ஒருவர் வெந்த மனத்துடன் கூறியுள்ளார்.

பல்கலைக்கழக மாணவர்களின் மனச்சாட்சி இந்தப்பக்கம் திரும்பிப்பார்க்குமா?

* * *

அதிகாரம் கையிலிருந்தால் தாம் நினைத்தது எதனையும் செய்யலாம் என்ற மமதையில் பல அதிகாரிகள் செயற்பட்டு வருகின்றனர். தமது நடவடிக்கைகளினால் பணியாளர்கள் மற்றும் மக்கள் பாதிக்கப்படுகிறார்களா என்பதில் எவ்வித அக்கறையும் இல்லாத போக்குள்ளவர்களே அந்த அதிகாரிகள் ஆவர்.

அண்மையில் யாழ்ப்பாணம் வலயம் ஒன்றைச் சேர்ந்த 26 ஆசிரியர்களுக்கு திடீரென தீவுப்பகுதிக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. திருகோணமலையிலுள்ள அதிகாரி ஒருவர் அரசியல் செல்வாக்கிற்கு உட்பட்டு இந்த இடமாற்றத்துக்கு உத்தரவிட்டார் என்று ஆசிரியர்களின் வட்டாரங்கள் குற்றஞ்சுமத்துகின்றன. குறிப்பிட்ட ஆசிரியர் இடமாற்றம் கொள்கை அல்லது விதிமுறைப்படி நடைபெறவில்லை என்றும் சிலரின் விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்ப நடைபெற்றதாகவும் அறியப்படுகிறது.

இடமாற்றம் பெற்றவர்களில் பலர் கடமை ஏற்று ஒரு வருடம் மட்டுமே கழிந்த பட்டதாரிப் பயிலுனர் ஆசிரியர்கள். ஏற்கனவே தீவகத்தில் கடமையாற்றியவர்கள், கஷ்டப்பிரதேசங்களில் பணியாற்றியவர்கள் ஆகியோரும் இந்தத் திடீர் இடமாற்றத்திற்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். நிரந்தர நியமனம் இல்லாத தொண்டர் ஆசிரியை ஒருவரும் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இடமாற்றப் பெயர்ப்பட்டியல் என்ன அடிப்படையில் தயாரிக்கப்பட்டது என்பது பற்றி எதுவித விளக்கமும் தெரியாது. ஒரே பாடசாலையில் பல ஆண்டுகள் கற்பிக்கும் ஆசிரியர்களில் தொடாமல், மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்கு உதவக்கூடிய ஆசிரியர்கள் பலரும் இவ்வாறு இடமாற்றம் செய்யப்பட்டவர்களில் அடங்குவர்.

ஆசிரியர் ஒருவர் இடமாற்றம் செய்யப்படும் போது சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர், ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள் ஆகியோருடன் ஆலோசனை நடத்தப்பட்டு சம்பந்தப்பட்ட ஆசிரியர் பயிற்றுவித்த பாடம், பாடவேளைகள் குடும்பநிலை என்பன பரிசீலனை செய்யப்பட்டே இடமாற்றம் வழங்கப்படுகிறது.

ஆனால் இந்தத் திடீர் இடமாற்றப்பட்டியலில் இடம் பெற்றவர்கள் குறித்து எவ்வித ஆலோசனையோ பரிசீலனையோ நடைபெறவில்லை. அதிகாரி ஒருவர் தாம் நினைத்ததை, அதிகாரம் தன்னிடமே குவிந்துள்ளது என்ற காரணத்தால் இந்த இடமாற்றத்துக்கு அங்கீகாரம் வழங்கியுள்ளார். இதனால் தமது மாணவர்களின் கல்விக்கு குந்தகம் ஏற்பட்டுள்ளது எனப் பெற்றோர்கள் பலரும் விசனம் தெரிவிக்கின்றனர். விதிமுறைகள், கொள்கைகள், அடிப்படைகளைத் தமக்கு ஏற்றவாறு வளைப்பதில் வல்லவர்களே எமது பகுதி அதிகாரிகளாகி இவ்வாறு அட்டகாசம் புரியவேண்டும்; இதுவும் தலைவிதியா என்றும் அவர்கள் கேட்கிறார்கள்.

தீவுப்பகுதிக்கு தேவையான அளவில் ஆசிரியர்கள் நியமிக்கப்பட வேண்டும் என்பதில் எந்தக் கருத்து வேறுபாடும் இருக்க முடியாது. ஆனால் உரிய கொள்கை, விதிமுறைகள் அடிப்படைகள் எதுவும் இல்லாமல் அதிகாரிகள் தாம் நினைத்ததை செய்வதாயின் தமிழ்ப்பகுதி மாணவர்களின் எதிர்காலம் என்னவாகும்?

– மின்னல்


## IBMS இன் மாபெரும் புலமைப் பரிசில் திட்டம்

யாழ் மாணவ சமுதாயத்திற்கு அதிசிறந்த கணனி அறிவை வழங்கும் நோக்கோடும் அவர்களின் கல்வியை குறைந்த செலவில் தொடர்வதற்கு உதவுமுகமாகவும் **IBMS** நிறுவனமானது போட்டிப்பரீட்சை (நுண்ணறிவு, பொதுஅறிவு) ஒன்றின்மூலம் பின்வரும் கற்கைநெறிகளுக்கு புலமை பரிசில்களை வழங்கவுள்ளது.

1. Diploma in Computer Studies
2. Advance Diploma in Computer Studies
3. Diploma in Software Engineering
4. Advanced Programming Specialist
5. Diploma in Ms Office(97/2000)

கீழ்க்காணும் விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்து ருபா 100 பரீட்சைக் கட்டணத்துடன் நேரடியாகவோ, தபால் மூலமாகவோ அனுப்பிவைக்கவும். காசுக்கட்டளையாக அனுப்பின் **The Director, IBMS.** எனப்பெயரிட்டு யாழ் தபாலகத்தில் மாற்றக்கூடியதாக பின்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

விண்ணப்பங்கள் வந்து சேரவேண்டிய முகவரி : **The Director, IBMS, 701**, K.K.S Road, Jaffna.

**அருகில் உள்ளவர்கள் விண்ணப்பபடிவங்களை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.**
**விண்ணப்பங்கள் யாவும் 30.11.99க்கு முன்னர் அனுப்பிவைக்கப்படல் வேண்டும்**

NAME: ..................................................................
AGE: ............................ SEX:..........
NIC No:...................................................
Residential Address: ...................................................
...................................................

Make the Right Move
Take the Right Step
JOIN IBMS

IBMS
CENTER FOR COMPUTER TRAINING


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன்னி செல்ல அனுமதி தர மறுப்பு

# தேர்தலை ஜனநாயக முறையில் அரசு எப்படி நடத்தப் போகிறது?

## ஜயலத் எம்.பி. கேள்வி

கொழும்பு, நவ.13

வன்னியில் நிலவும் பாதுகாப்பு பிரச்சினை காரணமாக இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசத்துக்குச் செல்ல பாதுகாப்பு அமைச்சு எனக்கு அனுமதி மறுத்துள்ளது. அப்படியானால் ஜனநாயக முறையில் ஜனாதிபதித் தேர்தலை எப்படி அரசு நடத்தப்போகின்றது?

இப்படிக் கேள்வி எழுப்பியுள்ளார் ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தன.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வன்னியில் இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசத்துக்குச் சென்று அங்குள்ள மக்களின் இன்னல்களை நேரில் அறிய ஜனாதிபதியிடம் அனுமதி கோரியிருந்தேன்.

பாதுகாப்புக் காரணங்களுக்காக அங்கு செல்ல அனுமதி வழங்க முடியாதுள்ளது என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார்.

வவுனியாவில் மக்கள் இடம்பெயர்கின்றனர். வன்னிக்குப்போக பாதுகாப்புப் பிரச்சினை என்று கூறப்படுகின்றது. இந்த நிலையில் எப்படி நீதியான, ஜனநாயக முறையிலான ஜனாதிபதித் தேர்தலை நடத்த முடியும்?

இவ்வாறு அவர் கேள்வி எழுப்பியுள்ளார். (ஐ-க-3)

# கூச்சல் குழப்பத்தின் மத்தியில் கணக்கு வாக்கு நிறைவேறியது

கொழும்பு,நவ.13

அரசாங்கத்தின் அடுத்த வருடத்தின் முதல் நான்கு மாதங்களுக்கான கணக்கு வாக்கு பெரும் கூச்சல் குழப்பத்தின் மத்தியில் நேற்றைய தினம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

ஈ.பி.டி.பி., புளொட், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஆகியன கணக்கு வாக்கை ஆதரித்தும் -

ஐ.தே.கட்சி, இலங்கை முற்போக்கு முன்னணி ஆகியன எதிர்த்தும் -

வாக்களித்தன.

கணக்கு வாக்கை நீதி, அரசமைப்பு இனவிவகார அமைச்சரும் பிரதி நிதி அமைச்சருமான ஜி.எல்.பீரிஸ் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து உரையாற்றிய போதும் விவாதம் முடிவடையும் வேளையில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ஏற்படுத்திய பெரும் கூச்சல் காரணமாக அவர் விவாதத்துக்குப் பதில் அளிக்காமலேயே கணக்கு வாக்கு வாக்கெடுப்பிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

அடுத்த ஆண்டின் முதல் நான்கு மாதங்களுக்கும் அரசின்செலவு 9,729 கோடியே 26 லட்சத்து 28ஆயிரம் ரூபாவாக இருக்கும்.

அரசாங்கத் திரட்டு நிதியிலிருந்து மேற்படி தொகையை கணக்கு வாக்குப் பணமாகப் பெறுவதற்கும் 542 கோடியே 8 லட்சத்து 27 ஆயிரம் ரூபாவுக்கு மேற்படாத தொகையை அரசாங்கம் திரட்டு நிதியிலிருந்து பெறுவதற்கும் கணக்கு வாக்குத் தீர்மானம் வழிசெய்கிறது. (வ-7)

## விபத்தில் புலி உறுப்பினர் உயிரிழப்பு

வவுனியா,நவ.13

பூநகரி கடலேரியில் கடந்த 8ஆம் திகதி இடம்பெற்ற விபத்து ஒன்றில் லெப்.கேணல் தூயவன் அல்லது திலக் (செல்லத்துரை விமலேஸ்வரன் - யாழ்ப்பாணம்) என்பவர் உயிரிழந்ததாக விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளனர். (ஐ-3)

## கலைவிழா

யாழ். பாலர் கல்விக் கழக நிர்வாகத்தில் இயங்கும் நல்லூர் ஞானக் குழந்தை இல்ல ஆறாவது வருடாந்த கலைவிழா இன்று சனிக்கிழமை பிற்பகல் இரண்டு மணிக்கு பாடசாலையில் செல்வி அனுசுயா அம்பிகைபாகனின் தலைமையில் நடைபெறும்.

இவ்விழாவுக்கு நல்லூர் ஸ்தான சி.சி.த.க. பாடசாலை பிரதி அதிபர் திருமதி த.கமலராஜா பிரதம அதிதியாகக் கலந்து கொள்வார். (ஐ)

## இளைஞர் திரும்பினார்

யாழ்ப்பாணம்,நவ.13

கடந்த மாதம் 17ஆம் திகதி தொடக்கம் காணாமற்போய் விட்டதாக முறைப்பாடு செய்யப்பட்ட ஏழாலை வடக்கைச் சேர்ந்த மகாலிங்கம் சசிகரன் (வயது 21) என்ற இளைஞர் வீடு திரும்பிவிட்டதாக உறவினர்களால் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்திற்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வீட்டில் ஏற்பட்ட மனஸ்தாபம் காரணமாகவே இவர் வீட்டைவிட்டுச் சென்று சில நாள்களின் பின்பு வந்து விட்டார் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-10)

## அஞ்சலிக் கூட்டம்

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் தலைவர் அமரர் இ.ந.வீரப்பனாரின் நினைவஞ்சலிக் கூட்டம் இன்று காலை 10.00மணிக்கு யாழ்.வைத்தீஸ்வரா கல்லூரியில் நடை பெறும். (ஐ)

நிதி உதவி நிறுத்தப்பட்டதால்

# யாழ். செஞ்சிலுவைச் சங்கத்தின் 14 பணியாளர் வேலை நீக்கம்

யாழ்ப்பாணம், நவ.13

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையில் நீண்டகாலமாக பணிபுரிந்த 14 ஊழியர்கள் எதிர்வரும் ஜனவரி முதல் வேலையிலிருந்து நிறுத்தப்படவுள்ளனர்.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு வழங்கி வந்த நிதியுதவியுடன் மேற்கொள்ளப்பட்ட திட்டங்களில் பணிபுரிந்து வந்த ஊழியர்களே வேலை இழப்பவர்களாவர்.

செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு வழங்கி வந்த நிதியுதவி ஜனவரி முதல் நிறுத்தப்படவிருப்பதாகவும் -

இதன் காரணமாக இவர்கள் வேலையிலிருந்து நிறுத்தப்படுவதாகவும் -

செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளை வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-3-178)

# மாகாணசபைகளில் உள்ள 7,000 வெற்றிடங்களை நிரப்பநிதி

## இன்று குறைநிரப்பு பிரேரணை

கொழும்பு,நவ.13

மாகாண சபைகளில் உள்ள 7 ஆயிரம் வெற்றிடங்களையும் நிரப்புவதற்கு 2 கோடி 18 லட்சம் ரூபாவைப் பெற குறைநிரப்புப் பிரேரணை ஒன்று இன்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவிருக்கின்றது.

மாகாணசபைகள் உள்ளூராட்சி அமைச்சர் அலவி மௌலானா இன்று இந்தப் பிரேரணையைச் சமர்ப்பிக்கவுள்ளார்.

மாகாணசபைகள் சேவையில் நிலவும் ஊழியர் பற்றாக்குறைவால் பணிகளை முன்னெடுக்க முடியாத நிலை உள்ளது என்றும் -

அந்த வெற்றிடங்களை நிரப்ப அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது என்றும் -

அமைச்சர் தெரிவித்தார்.

மாகாணசபைகளில் உள்ள ஏழாயிரம் வெற்றிடங்களுடன் மத்திய அரசசேவையில் உள்ள 736 வெற்றிடங்களும் நிரப்பப்படவிருக்கின்றன என்றும் அவர் தெரிவித்தார்.

## வீடுகளை வந்து பார்வை......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைத்தியசாலைப் பணிப்பாளர் உட்பட நான்கு டாக்டர்கள் மட்டும் அங்கு பணிபுரிவதாகத் தெரிவிக்கப்பட்டது.

பாதுகாப்புக் கருதி 50 நோயாளர்கள் செட்டிகுளம் ஆஸ்பத்திரிக்கு மாற்றப்பட்டுள்ளனர். மருத்துவ உபகரணங்கள், மருந்து வகைகளும் இடம்மாற்றப்பட்டுள்ளன.

கொழும்புக்கும் வவுனியாவுக்கும் இடையேயான ரயில் சேவை பகலில் மட்டுமே இடம்பெறும் என்றும் -

இரவு ரயில்கள் மதவாச்சியுடன் திரும்பிவிடும் என்றும் -

வவுனியா ரயில் நிலைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

நகரப்பகுதியில் உள்ள எரிபொருள் நிலையங்களில் பெற்றோல், டீசல் ஆகியவற்றுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என்றும் -

வாகனங்கள் மண்எண்ணெய் மூலம் இயக்கப்படுவதாகவும் -

தெரிவிக்கப்பட்டது. (ஐ-3-164)

## ரணில் சார்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுக் கட்டுப்பணம் செலுத்தினர்.

இவர்களுடன் சேர்த்து ஜனாதிபதி வேட்பாளர்களாக இதுவரை ஐவர் கட்டுப்பணம் செலுத்தியுள்ளனர்.

ஜே.வி.பி.,ஜனநாயக ஐக்கிய முன்னணி ஆகியவற்றின் சார்பில் ஏற்கனவே இருவர் கட்டுப்பணம் செலுத்தியமை குறிப்பிடத்தக்கது.

எதிர்வரும் 16ஆம் திகதி நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்யப்படவிருக்கின்றன. (ஐ-க-3)


யாழ்நகரில்

வந்து விட்டது

மிலேனியம் 2000 ஆம் ஆண்டிற்கான

மெய்கண்டான் தினசரி நாள்காட்டி

தனித்துவமாக ஒரே இடத்தில்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக் கொள்ள

ஈஸ்வரன் ரேடர்ஸ்

69, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்
தொலைபேசி இல - 2813

மிலேனியம் 2000ஆம் ஆண்டிற்கான
மெய்கண்டான் வெளியீடுகளின்
யாழ். ஏகவிநியோகஸ்தர்கள்

ஈஸ்வரன் ரேடர்ஸ்

(C/98..)

படிவம்

ஆசிரிய பதவிக்கான
விண்ணப்பப்படிவம்
விற்பனையாகின்றது.

பாரதி பதிப்பகம்
430, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

அருண்ஸ்
ஸ்போட்ஸ் ஸ்பொட்
347, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(C/9808)

எமது புதிய CD
வெளியீடுகள்

❋ புதுக்குடித்தனம்
❋ கண்மணி உனக்காக
❋ சிவலீலை

வீடியோவிமல்
யாழ்ப்பாணம்.

(சி-9821)

நாளைய புதிய
CD வெளியீடுகள்

✳ அமர்க்களம்
பேபிஷாலினி
நடித்த
✳ காதலுக்கு மரியாதை

சுப்பமேஸாவீடியோ
136, கஸ்தூரியர் வீதி,
யாழ்ப்பாணம்.
(சி-9820)


# மரண அறிவித்தல்கள்

## பரமேஸ்வரி பாலசிங்கம்

கருகம்பானை வந்தானைப்புலத்தைப் பிறப்பிடமாகவும் இருபாலை கிழக்கை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட பரமேஸ்வரி பாலசிங்கம் 12.11.99 வெள்ளிக்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நரசிங்கம் - சின்னத்தங்கம் தம்பதிகளின் கனிஷ்ட புத்திரியும் கொல்லன்கலட்டியைச் சேர்ந்த தாமோதரம்பிள்ளை - ஆச்சிப்பிள்ளை தம்பதிகளின் மருமகளும் பாலசிங்கத்தின் அன்பு மனைவியும் சஜீகரனின் (பிரான்ஸ்) அருமைத் தாயாரும் அனுசியாவின் அன்பு மாமியாரும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பு, இராசையா, நடராசா, திருமதி செல்லம் சின்னத்தம்பி, செல்லத்துரை மற்றும் பொன்னுத்துரை (இளைப்பாறிய கனிஷ்ட அதிபர். வீமன்காமம் மகாவித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் திருமதி செல்லமுத்து சின்னத்துரை, திருமதி அன்னலட்சுமி சோமசுந்தரம், திருமதி மனோன்மணி செல்லத்துரை, திருமதி சரஸ்வதி அம்மா பொன்னுத்துரை ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் செந்தாவளவு இருபாலை கிழக்கில் இன்று (13.11.99) சனிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் நடைபெற்று பூதவுடல் இருபாலை மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
தா.பாலசிங்கம், (கணவர்)

"செந்தாவளவு",
இருபாலை.

(70948)

## இராசரட்ணம் சீவராணி

(வவா)

பிறவுண்றோட், கொக்குவிலை பிறப்பிடமாகக் கொண்ட திருமதி இராசரட்ணம் சீவராணி 10.11.99 புதன்கிழமை கொழும்பில் காலமானார். இவர் சின்னத்துரை - சின்னம்மா தம்பதியரின் அருமை மகளும் சோமசுந்தரம் இராசரட்ணத்தின் அன்பு மனைவியும் றஜிதா(யாழ்.பல்கலைக் கழகம், வெளிவாரி), விஜேச்(விஜி), ராஜீவ், பிரதீப், பிரேமியா(துஷி) ஆகியோரின் அன்புத் தாயாரும் பாக்கியம், கமலாதேவி, சுப்பிரமணியம், பரமேஸ்வரன், சரஸ்வதி (டென்மார்க்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் சிவனேஸ்வரி, சிவராசா, செல்வராணி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார். 13.11.99 சனிக்கிழமை 12 மணியளவில் அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக் கொக்குவில் இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்வும்.

தகவல்:
சோ.இராசரட்ணம் (கணவர்)
*(நோர்லி என்ரப்பிறைஸ் எலக்ரீசியன்)*
இ.வீஜேச் (மகன்)
சோ.சிவராசா (மைத்துனர்)
*(மெக்கானிக்)*

37, பிரம்படி லேன்,
கொக்குவில்.

(70953)

## கனகரத்தினம் யோகராணி

அரியாலையை வசிப்பிடமாகக் கொண்ட கனகரத்தினம் யோகராணி 11.11.99 வியாழக்கிழமை காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்றவர்களான கனகரத்தினம் - புவனேஸ்வரி தம்பதிகளின் புத்திரியும் செல்வராஜா (லண்டன்) காலஞ்சென்ற இந்திராணி மற்றும் தவராசா, காலஞ்சென்ற லீலாராணி மற்றும் குகராஜா(கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் விமலாதேவி (லண்டன்) நந்தினிதேவி, சந்திரலீலா(கனடா) ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று(12.11.99) வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்தில் தகனம்செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க.தவராசா (சகோதரன்)

163/2, கண்டி வீதி,
சின்னக்கிணத்தடி லேன்,
அரியாலை.

(70950)

## பொன்னுச்சாமி சுந்தரலிங்கம்

(சின்னமணிப் பத்தர்)

நல்லூரைப் பிறப்பிடமாகவும் வண்ணார்பண்ணை கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுச்சாமி சுந்தரலிங்கம் 12.11.99 அன்று காலமாகிவிட்டார். இவர் பஞ்சரதத்தின் அன்புக்கணவரும் லலிதாதேவி, சீதாலட்சுமி, சோமளதேவி, பத்மாதேவி, ஸ்ரீரஞ்சன், ஈஸ்வரன் ஆகியோரின் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.11.99) ஞாயிறு நண்பகல் 12 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன் மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சு.ஸ்ரீரஞ்சன் (மகன்)

74/1, காரைக்காட்டு லேன்,
வண்ணார்பண்ணை மேற்கு,
யாழ்ப்பாணம்.

70951)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியர் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 13-11-1999இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



திருமணமா,
பூப்புனித நீராட்டு
விழாவா இன்னும்
கோலாகலமான
விழாக்களுக்கான
புடைவைத்
தெரிவிற்கு

கோலம் சில்க்ஸ்

166, நவீனசந்தை, யாழ்ப்பாணம்.




## கருத்துக் கலசம்

மயூரா

### பணியும் புகழ்

பணியுமாம் என்றும் பெருமை சிறுமை
அணியுமாம் தன்னை வியந்து

~ திருக்குறள் ~

மனிதன் ஒருவனுக்குப் பெருமை சேர்க்கும் பண்புகளில் ஒன்று பணிவு. எல்லோரிடமும் பணிவுடனும் அடக்கத்துடனும் பழகும் ஒருவன் ஏனையோரின் அபிமானத்தையும் அன்பையும் இலகுவில் பெற்றுவிடுகின்றான். அதனால் அவன் பெருமைக்கு உரியவன் ஆகின்றான்.

தன்னிடமுள்ள திறமை குறித்தோ, தனது செயற்பாடுகள், தொண்டுகள் குறித்தோ, தனக்குள்ள ஏனைய செல்வங்கள் குறித்தோ பெரிதாக பீற்றிக்கொண்டு, சுயபுகழ் பாடாமல் வாழ்பவனே பெருமை சேர்க்கத் தகுதியுள்ளவன்.

இன்றைய சமூகத்தில் மட்டுமன்றி முந்திய சந்ததிகளிலும் சுயபுகழ் பேசுவோர் பெரும் எண்ணிக்கையில் இருந்துள்ளனர். அதனாலேயே 'தன்னைப் புகழாத கம்மாளன் இல்லை' என்ற பேச்சு வழக்கு உண்டாகி இருக்க வேண்டும்.

புகழ்விரும்பாதார் இல்லை. ஆனால் புகழ் சேர்க்கக்கூடியதாகத் தனது திறமையை, ஆற்றலை, தொண்டை வளர்க்க முடியாதவர்கள், அவை அறவே இல்லாதவர்கள் என்று யாவருமே இக்காலத்தில் செயற்கையான புகழைச் சேர்த்துக்கொள்ள முனைகிறார்கள்.

ஒருவரைக் குறித்து மற்றவர்கள் நடத்தும் மதிப்பீட்டினால் (வைக்கும் மதிப்பினால்) அவருக்குச் சேரவேண்டியது புகழ். ஆனால் இப்போதெல்லாம் மிகப் பலரும் தத்தமக்குதாமே மதிப்பீடு நடத்தி புகழையும் சுயமாகச் சூடிக்கொள்கிறார்கள். தம்மைத்தாமே வியந்து பாராட்டிக்கொள்ளும் சிறுமையுள்ளவர்களே இப்போது எண்ணிக்கையில் மிக அநேகர்.

அதனையே வள்ளுவரும், 'சிறுமை அணியுமாம் தன்னை வியந்து' என்று சொன்னார். வள்ளுவரின் காலத்தில் சுயபுகழ் பாடுவோர் மட்டும் இருந்திருக்கலாம். இப்போதோ சுயபுகழைத் தமது அதிகாரம், செல்வாக்கு, செல்வம் மூலம் நிலைநிறுத்துவோரும் உளர்.

அதாவது பணியும் பண்பும் அதன் வழிப்பெருமையும் இப்போது காண்பதற்கரியன ஆகிவிட்டன. கற்றுக்குட்டிகள் கூட தம்மைத் தவிரத் திறமைசாலிகள் இல்லை என்று சுயபுராணம் பேசுவதையே எங்கும் காணமுடிகிறது.

மழை நீர் மேட்டு நிலத்தில் தங்கி நிற்பதில்லை. பள்ளமான இடத்தை நாடியே பாய்ந்து தேங்குகிறது. அந்த நீரே பயிர்ச்செய்கைக்கு உதவுகிறது. அதேபோன்று பணிவுள்ளவனிடம் நல்ல பண்புகள் சேர்ந்து கொள்கின்றன. அந்தப் பண்புகளால் அவன் தனக்கு மட்டுமன்றி ஏனையோரின் மேம்பாட்டுக்கும் நலனுக்கும் உழைக்கும் பக்குவத்தை அடைகின்றான். அதனால் அவன் வாழும் சமூகம் பல் பயன்களைப் பெறுகின்றது.

வீண் பெருமை பேசுபவன், சுயபுகழ்பாடுபவன் அதனை நிலைநிறுத்துவதற்குக் காட்டும் ஆர்வத்தை, அக்கறையை சமூகப் பயன்பாட்டுக்கும் மேம்பாட்டுக்கும் உழைப்பதில் காட்டுவதில்லை.

பழங்கள் நிறைந்த மரக்கொப்புத் தானாக வளைந்துகொள்கிறது. ஆனால் பழமோ இலையோ இல்லாத பட்டகிளை வளைவதில்லை. பணிவில்லாதவன் செயற்கையாகச் சேர்க்கும் புகழ் சிலகாலத்தில் வெலவெலத்துப்போகும். ஆனால் பணிவுடைமை உள்ளவனின் புகழ் வேரூன்றி வளர்ந்து ஓங்குகிறது. பணிவுள்ளவன் இதயத்திலேயே இறைவன் அருளும் தங்குகிறது.

# நன்நெறிக்கு வழிகாட்டும் கந்தபுராணம்

தேவர்கள் அசுரருக்கு அடிமைப்படவும் சூரசங்காரம் நிகழவும் காரணமாயமைந்தது தக்கயாகம். தக்கன் பிரம தேவரின் மகன். தந்தையிடம் வேத வேதாகமங்களைக் கற்றுத் தெளிந்தவன். அவன் சிவனை நினைந்து அருந்தவஞ் செய்தான். விதி சதி செய்தது. அவன் வீடு பேற்றை வேண்டிப் பெறாமல் நிலையற்ற பெரும் பேறுகளை வேண்டிப்பெற்றான்.

தக்கனுக்கு வரமளித்த சிவன் "நன்னெறி நின்றி என்னின் நிலைக்கு இச்சீர்" என்று கூறி மறைந்தருளினார்.

உலக மாதாவாகிய உமாதேவியார் தக்கனுக்குப் புதல்வியாய் ஆன்ம நாயகனாகிய சிவனையடையத் தவஞ்செய்தார். தக்கனுக்குச் சிவன் மருமகனாகும் நிலை கிட்டியது. மணமகனாகத் திருமண மண்டபத்துக்கு எழுந்தருளிவந்த சிவன் இடையில் மறைந்தருளினார். அதனால், தனக்கு வரமீந்ததை மறந்து சிவனை நிந்திக்கத் தொடங்கினான் தக்கன். இவ்வாறு செய்ந்நன்றி கொன்ற தக்கன் அவ்வளவில் அமையாது, இனி இறைவனுக்கு முதன்மை வழங்குவதில்லை என்ற முடிவுக்கு வந்தான்.

அவன் தேவர்களை நோக்கி -

"நன்றுநன் றென்னை யெண்ணா, நக்கனை யுமையை
– நீவிர்
இன்று முன்னாக வென்று, மிறைஞ்சியே பரவு கில்லீ
ரன்றியு மதித்தீ ரல்லீ ரப்பணி மறுத்தீ ராயின்
மன்றநும் முரிமை யின்னே மாற்றுவன் வல்லை
– யென்றான்"

"இன்று தொடக்கம் நீங்கள் நக்கனாகிய சிவனையும் உமையையும் வணங்கக் கூடாது. அவர்களை மதித்தால், நான் சொன்னபடி நீங்கள் நடக்காவிட்டால் உங்களுக்குரிய உரிமைகளை நான் பறித்துவிடுவேன்" என்று தேவர்களை எச்சரித்தான்.

"நீ ஏவியவற்றைச் செய்வதற்கு நாம் எப்போதாவது மறுத்ததுண்டா! இனியும் உன் ஏவல் வழியே நிற்போம். எம்மைக் கோபியா தொழிக"என்று கூறிவிட்டுத் தத்தம் விண்ணுலக நகரங்களுக்குச் சென்றார்கள் தேவர்கள்.

இச்சந்தர்ப்பத்தில் 'பலவானுடைய அடக்கு முறைக்குப் பயந்து அநியாயத்தை ஏற்றுக்கொள்வது பாவம். அதை எதிர்த்து அறவழியிற் போராடுவது சத்தியாக்கிரகம்' என்ற காந்தியடிகளின் கருத்தை அளவையாகக் கொண்டாலே போதும் தேவர்கள் அனைவரும் சத்திய நெறியை விட்டு விலகி அசத்தியத்தைப் பற்றிக்கொண்டார்கள் என்பது புலனாகும்.

தேவர்களின் நிலை இவ்வாறாக, பிரமா பெரியதொரு யாகத்தைச் செய்யத்தொடங்கினார். மாண்டிடவரினும் முக்கன் மதிமுடிப் பரமன் தன்னை வரித்து, அவருக்கே அவிப்பாகத்தைக் கொடுப்பதென முடிவுசெய்தார். அந்த யாகத்துக்குத் தக்கனும் தேவர்களும் வந்திருந்தார்கள்.

நந்தியெம் பெருமான் சிவாணைப்படி, அவிப்பாகத்தை ஏற்பதற்காகப் பூதகணம் புடைசூழ அங்கே எழுந்தருளினார். பிரமா அவரை உரிய முறைப்படி உபசரித்தார். தக்கனுக்குக் கோபம் வந்தது. பிரமாவை நோக்கி "நீ என் தந்தையாதலின் உயிர்பிழைத்தாய். நீ என் பிதாவல்லவாயின் உன் தலையை அறுத்திருப்பேன். மாலுக்கும் மற்றைய தேவர்களுக்கும் அவியினைக் கொடு. கற்றைவார்கடை உடையதோர் கண்ணுதற் கடவுளே பரமென்றே சொற்ற மாமறைச் சுருதிகள் விலக்குதி" என்றான்.

நந்தியெம் பெருமான் முன்னிலையில் தக்கன் இவ்வாறாகச் சிவநிந்தனை செய்யத் தேவர்கள் அதைக் கேட்டுக்கொண்டு மௌனிகளாயிருந்தனர். பாவங்களுட் கொடியது சிவநிந்தனை. சிவ நிந்தனையைப் பொறுத்துக்கொண்டிருத்தல் சிவநிந்தனை செய்தலிலுங் கொடியது.


"கண்டன னாயின் முக்கட் கடவுளை நிந்திப்
– போனைத்
தண்டனை புரிந்து செல்க வரிதெனிற் சபிக்க நின்று
மண்டனில் வலிய னன்றேல் வன்செவித் துளைகள்
– பொத்திக்
கொண்ட கன்று செல்க குலைகுலைந் தமல பத்தன்"

என்கின்றது சித்தாந்த சிகாமணி.

தக்கனது கூற்றைக் கேட்ட நந்தியெம் பெருமான் தன்னிரு கைகளாலும் காதுகளைப் பொத்தி, சிவநாமத்தைச் சிந்தித்து 'இன்று இவன் சொன்ன சிவநிந்தனையையும் கேட்கும்படியாயிற்றே' என்று எண்ணித் துக்கித்துக் கோபித்தார். அதைக் கண்டு தேவர்கள் பயந்தனர். அண்டங்கள் நடுங்கின. பிரம விட்டுணுக்கள் மனமுடைந்தனர்.

"ஈ·து வேலையி னந்தி[illegible]
நோக்கி
மாது பாகனை யிகழ்ந்தனை யிண் டுநின் வாய்துளைத்
– திடுவேனா
லாதி தன்னரு ளன்றென விடுத் தன னாதலி னுய்ந்தாய்நீ
தீது மற்றினி யுரைத்தியேல் வல்லைநின் சிரந்துணிக்
– குவனென்றான்"

இவ்வாறு கூறிய நந்தி, 'சிவனையன்றியே வேள்வி செய்கின்றவர் சிரமறக்கடிது' எனவும் 'தக்க நிற்கிவண் மன்னிய திருவெலாம் வல்லை தீர்கவே' எனவும் 'உன்றனக் கெவரும் காண்டக வேறொரு சிறு சிரம் விரைவின் மேவவே' எனவும் 'உன்னைச் சாருறு கடவுளர் தாமுமோர் பகல் ஆருயிர் மாண்டெழீஇ அளப்பிலாவுகம் சூரெனு மவுணனாற்



றுயரின் மூழ்கவே' எனவும் சாபமிட்ட பின் அவ்விடத்தை விட்டகன்றார்.

பிரமதேவர் நந்தியிட்ட சாபத்தைப் பற்றிச் சிந்தித்துச் சிந்தித்துத் திகைத்தார். தக்கனது கூற்றை மறுத்துரைக்கப் பயந்தார். அதனால் யாகஞ் செய்வதை அவ்வளவில் நிறுத்தினார். தக்கன் தேவர்களோடு அவ்விடத்தை விட்டகன்றான். தேவர்கள் பயந்தவர்களாய்த் தத்தம் நகரங்களுக்குச் சென்றனர்.

பின்பொருபோது தக்கன் திருமாலைத் தலைவராகக்கொண்டு யாகஞ்செய்யத் தொடங்கினான். பிரமா, விட்டுணு, இந்திரன் முதலிய இமையவரும் சில முனிவர்களும் பிராமணரும் யாகத்துக்குச் சென்றிருந்தனர். அழைப்பை ஏற்று அகத்தியர் முதலிய முனி சிரேட்டர்கள் அங்கு செல்லவில்லை.

முனிவர்கள் புடைசூழ, யாகம் நடக்கும் இடத்துக்குச் சென்ற ததீசி முனிவரைத் தக்கன் வரவேற்றான். ததீசி தக்கனை நோக்கி, "நீ என்னை அழைத்த காரணம் என்ன?" என்றார். ததீசிக்கு விரிவாகவும் விளக்கமாகவும் பதிலளித்த தக்கன், சிவனுக்கு அவியைக் கொடாது மாற்றி மற்றொருவருக்கு அவியைக் கொடுப்பதற்காகவே தான் யாகஞ் செய்வதாகக் கூறினான்.

'யாகாதிபதியும் யாகத்தைக்காப்பவரும் சிவனே என்று வேதங்கள் கூறுகின்றன. சிவனையன்றி யூகாதிபதியாய் இருப்பதற்குரிய வேறொரு தேவர் உண்டாயின் அவனை இச்சபையிலே தலை நிமிர்ந்து எழுந்து நிற்கும்படி சொல்' என்ற ததீசி தக்கனுக்கு சிவனே பரம்பொருள் என்பதை எடுத்துரைத்தார்.

தக்கன் 'பரம்பொருள் எலும்புகளையும் தலைமாலையையும் அணிவாரா? புலித்தோல் உடுப்பாரா? யானையுரியைப் போர்ப்பாரா? பாம்புகளை அணிவாரா?' என்பன போன்ற பல வினாக்களை வினாவினான். இவற்றைக்கேட்ட ததீசி சினந்தாரானாலும் அவ்வினாக்களுக்கெல்லாம் ஆணித்தரமாகப் பதிலளித்தார். ததீசியின் பதிலால் பலனெதுவுங் கிடைக்கவில்லை. தக்கன் சினந்தான்.

"முனிவகேள் பலவு மீண்டு மொழி வதிற் பயனென்
– வெள்ளிப்
பனிவரை யுறையு நுங்கோன் பக வனெ யெயினு மாக
வனையவன் றனக்கு வேள்வி யவிதனை யுதவே னீயு
மினியிவை மொழியல் போதி யென்செயன் முடிப்ப
– னென்றான்"

இதைக்கேட்ட ததீசி கோபங்கொண்டார். விண்ணோர் நடுங்கினர். ததீசி, முனிவர் கூட்டத்தோடு மெழுந்து தக்கனது முகத்தைப் பார்த்து "சங்கரனை இகழ்ந்தின்று புரிகின்ற மகஞ்சிதைக. உன்னோடிங்கிருக்கின்ற அமரரெல்லாம் அழிக" என்று கூறிவிட்டு அங்கிருந்த மறையோர்தம் முகம் நோக்கி நீங்கள் பிராமணருக்குள்ளே பேடிகளானீர்: உங்கள் குலத் தலைமையை இழந்து விட்டீர்கள்" என்றார்.

தொடர்ந்து -

"பேசிய மறைகளெலாம் பராபரனீ யென் வணங்கிப்
– பெரிது போற்று
மீசனையு மன்பரையு நீற்றொடுகண் டிகை யினையு
– மிகழ்ந்து
நீவிர்காசினியின் மறையவரா யெந்நாளும் பிறந்திறந்து
– கதியு
றாது பாச மத னிடைப்பட்டு மறையுரையா நெறியதனிற்
– படுதி ரென்றான்"

இவ்வாறு கூறிய ததீசி தனது ஆச்சிரமத்துக்குச் சென்றார். (கண்டிகை - உருத்திராக்கம்.)

தக்கன் கொண்டது விடாத பேதையாய் யாகத்தைச் செய்தான். வீரபத்திர உருத்திரர் பூதகணம் புடைசூழ யாகசாலைக்கு வந்தார். யாக சங்காரம் நடந்தது. சிவ ஆணைப்படி வீரபத்திரர் இறந்தவர்கள் அனைவரையும் எழுப்பியருளினார். தக்கனது தலை யாகத் தீயில் எரிந்தமையால் அவன் தலையின்றி எழுந்தான். ஆட்டுத்தலையொன்று அவனுக்குப் பொருத்தப்பட்டது. அவன் மிருககதி எய்தினான். ஆயினும் சந்நிதி விசேடத்தால் அவனது புத்தி சிறிது தெளிவடைந்தது. பிரமதேவர் உபதேசித்தபடி ஆயிரம் ஆண்டுகள் சிவார்ச்சனையாகிய தவஞ்செய்து உய்தி கூடினான்.

தேவர்கள் தவறுசெய்த தக்கனை மதித்து அவனுடைய யாகத்திற் பங்குபற்றியவர்கள். அவர்களுடைய பாவம் ஆயிரம் ஆண்டல்ல ஆயிரமாயிரம் ஆண்டுகள் அனுபவித்தும் தொலையவில்லை. அவர்கள் நூற்றெட்டுக் காலம் அசுரருக்கு அடிமைகளாய், செய்யாத ஏவலெல்லாம் செய்தினைத்துந் தவஞ்செய்தும் தமது பழைய பதத்தை அடைந்தனர்.

தக்க யாகத்தில் தானம் பெற்று உண்டுகளித்த பிராமணர் உய்தி பெற்றார்கள் என்றோ எவ்வாறு உய்தியடைவார்கள் என்றோ கந்தபுராணங் கூறவில்லை.

"பாவம் செய்பவர்களை நன்கு மதிப்பவர்கள் இல்லையாயின் பாவம் செய்பவர்களும் இலர். ஆதலால் பாவம் செய்பவர்களினும் அவர்களை நன்கு மதிப்பவர்களே பெரும் பாவிகள்" என இரண்டாம் பாலபாடத்தில் நாவலர் எழுதியிருக்கிறார். களவெடுப்பவரிலும் கொள்ளையிடுபவரிலும் இவை போன்ற பிற கொடுஞ்செயல்களைச் செய்பவரிலும் பார்க்க இச்செயல்களைச் செய்பவர்களுக்குத் துணைபோவோரும் அவர்கள் செய்யும் கொடுமைகளை மறைக்க முயல்வோரும் மாபாவிகளாவர்.

### மட்டுவில் ஆ.நடராசா

அண்டங்களையும் நூற்றெட்டுக் காலம் ஆளவேண்டுமென வேண்டிச் சிவனிடம் வரம் பெற்றவன். முற்பிறப்பில் தான் முருகப்பெருமானுக்கு வாகனமாக வேண்டுமென விரும்பித் தவஞ்செய்தவன். அவன் முருகப்பெருமானை எதிர்த்துப் போரிடுகின்றான். அவனது மனம் மாறிவிட்டது. இதற்குக் காரணம் விதியின் விளையாட்டு. இவ்வாறு சதி செய்த விதி அவனுடைய விதிமாத்திரமல்ல.

தேவர்கள் தக்க யாகத்திற் பங்குபற்றிய பாவத்தைச் சூரன் வாயிலாக அனுபவித்துத் தொலைக்க வேண்டியவர்கள் ஆனார்கள். அசுரர் தமது குலப் பெருமையை மீண்டும் பெறவேண்டுமென எண்ணித் தவஞ்செய்து அதைச் சூரபத்மன் வாயிலாகப் பெற வேண்டியவர்கள் ஆனார்கள். சூரன் தான் விரும்பியபடி முருகப் பெருமானின் வாகனமாகிய மயிலாகும் பேற்றைப் பெறவேண்டும். இந்நிலையில் தேவர்கள் செய்த பாவமும் அசுரர் செய்த தவமும் சூரனின் மனத்தை மாற்றி அவனை முருகப்பெருமானோடு போரிடச்செய்து விட்டன.

கைகேயி நல்லவள். இராமனிடம் மிகுந்த அன்பு கொண்டவள். தசரதன் இராமனுக்கு முடிசூட்டத் தீர்மானித்து விட்டான் என்ற நற்செய்தியைக் கூனி கூறியவுடன் அவளுக்குத் தனது மணி மாலையை அன்பளிப்புச் செய்தவள். பின்பு இதே கைகேயி மனம் மாறிப் பரதனுக்கு முடிசூட்ட வேண்டுமெனவும் இராமன் பதினான்கு ஆண்டுகள் வனவாசஞ் செய்ய வேண்டுமெனவும் அடம்பிடித்தாள். இதற்குக் காரணம் கூனியின் துர்ப்போதனை என்பது பொதுவான கருத்து. கம்பனின் கருத்து அதுவல்ல. விதி கூனியின் வாயிலாகச் சதி செய்தது என்பதே கம்பனின் கருத்து. அவன்.

"அரக்கர் பாவமும் அல்லவர் இயற்றிய அறமும்
துரக்க நல்லருள் துறந்தனள் தூமொழி மடமான்"

என்கின்றான்.

(XV ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் போரினால் தமிழ்மக்கள் அவலம்; தேர்தல் போதையில் தெற்கின் தலைவர்கள்!

உலகத்தில் இப்போது துரித வேகத்தில் வளர்ந்து வருகிறது தகவல் தொழில்நுட்பம். அதன் விளைவுகள் - புதிய கண்டுபிடிப்புகள் - மனித வாழ்க்கையின் எல்லாத்துறைகளிலும் நவீனத்துவங்களைக்கொண்டு வந்திருக்கின்றன. அந்த நவீன வசதிகளை, மக்களைப்போலவே அரசியல்வாதிகளும் தாராளமாகப் பயன்படுத்துகிறார்கள்.

எதிர்வரும் பதினாறாம் திகதி - எதிர்வரும் செவ்வாய்க்கிழமை - வேட்பாளர் நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்யப்படவுள்ள ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டும் நவீன தகவல் தொடர்பு வசதி பயன்படுத்தப்படுகிறது.

பதவியிலிருக்கும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மக்களை நேரில் சந்திப்பதற்கு நேரமில்லாதவராக, செய்மதிமூலம் சந்தித்து உரையாடுகிறார். அமெரிக்க செய்மதி நிறுவனம் ஒன்றுக்கு லட்சக்கணக்கான ரூபா பணத்தைக் கொடுத்தே மக்களுடனான செய்மதிச் சந்திப்பு நிகழ்வுகள் நடைபெறுகின்றன.

அந்தவகையில் கடந்த சனிக்கிழமை ஆறாம் திகதியன்று ஜனாதிபதி சந்திரிகா யாழ்ப்பாண மக்களை செய்மதி மூலம் சந்தித்தார். யாழ்ப்பாணம் போன்ற - பாதுகாப்புக் காரணமாக தாம் நேரில் விஜயம் செய்யமுடியாத - பகுதிகளில் வாழும் மக்களின் குறைகளைக் கேட்டறிய வேண்டும் என்ற விருப்பம் இருந்திருப்பின் இதற்கு முன்னரே இப்படி ஒரு செய்மதிச் சந்திப்பை நிகழ்த்தி இருக்கலாம்.

ஆனால் இப்போது தமக்கு ஜனாதிபதித் தேர்தலில் வாக்குச் சேகரிக்கும் நோக்குடனேயே இந்தச் சந்திப்பை நிகழ்த்தினார் என்பதில் எள்ளளவும் சந்தேகம் இருக்கமுடியாது. ஜனாதிபதியிடம் மக்கள் தமக்குள்ள குறைகளைக் கேள்வி வடிவத்தில் கேட்டுப் பதில்களைப் பெறமுடியும் என்ற ஏற்பாட்டுடனேயே இச்சந்திப்புக்கு ஒழுங்கு செய்யப்பட்டது.

யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த அரசாங்க அதிகாரிகள், அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள் என்று சுமார் 800 பேர் இந்தச் செய்மதிச் சந்திப்புக்கென பலாலிக்கு அழைத்துச்செல்லப்பட்டனர். இவர்களில் மாணவர்கள், பெண்களும் அடங்குவர். யாழ்ப்பாணத்திலிருந்து அன்று பிற்பகல் 3 மணியளவில் புறப்பட்ட பஸ்கள் சுமார் 4 மணியளவில் பலாலி ஆசிரிய கலாசாலையைச் சென்றடைந்தன.

ஆசிரிய கலாசாலை மண்டபத்தில் அமர்ந்திருந்த மக்களிடம் செய்மதிச் சந்திப்பு நிகழ்வு இரவு 7.30 மணிக்கு ஆரம்பமாகும் எனத் தெரிவிக்கப்பட்டது. கேள்வி - பதில் நிகழ்வு ஒரு மணித்தியாலம் பதினைந்து நிமிடங்களுக்கு மட்டுமே நடைபெறும் எனவும் கூறப்பட்டது.

தங்கள் நாளாந்த வாழ்க்கைக்கு ஏற்பட்டுள்ள குந்தகங்கள், தடங்கல்கள், கட்டுப்பாடுகள் குறித்தும் தங்கள் கஷ்டங்கள் குறித்தும், போர் மற்றும் அரசியல் நிலைமைகள் குறித்தும் தமது உள்ளக் குமுறல்களை கேள்விகளாக்கி ஜனாதிபதியின் பதில்களை அறிய விரும்பினர் மக்கள். ஆனால் மிகப் பலரும் கேள்விகளைக் கேட்க முடியாமல் ஏமாற்றம் அடைந்தனர்.

பலாலி ஆசிரிய கலாசாலை மண்டபத்தில் கூடியிருந்த மக்களுக்கு ஏற்கனவே அறிவிக்கப்பட்டது போன்று இரவு 7.30 மணிக்கு செய்மதித் தொடர்பு கிடைத்தது. எனினும் ஜனாதிபதி, கொழும்பில் ஒழுங்குசெய்யப்பட்ட செய்மதித் திரை மேடைக்கு இரவு 8மணிக்கே வந்தார்; அதில் தோன்றினார்.

ஜனாதிபதியின் ஆரம்ப உரை, பெருமளவில் தேர்தலில் தமக்கு வாக்களிக்கக் கோருவதாகவே அமைந்திருந்தது. இனப்பிரச்சினையைத் தீர்க்கும் பொருட்டுத் தனக்கு வாக்களிக்குமாறு அவர் யாழ்ப்பாணத்து மக்களை நேரில் கேட்டுக் கொண்டார்.

அந்த ஆரம்ப உரையில், இனப்பிரச்சினை

## உள்ளும் புறமும்

குறுமுனி

தொடர்பாகப் பழைய பல்லவியையே பாடினார்.

தாம் பதவிக்கு வந்ததும் அரசியல் தீர்வைக் காணும் நோக்குடன் விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்ததாகவும் கூறிய அவர் -

விடுதலைப்புலிகள் பேச்சுக்களை முறித்துக் கொண்டு போரைத் தொடங்கியதாலேயே அரசாங்கமும் போரை நடத்த நிர்ப்பந்திக்கப்பட்டதாகவும், பேரழிவைத்தரும் இந்த போரை நடத்த தாம் விரும்பவில்லை என்றும் வழமையான பாணியிலேயே பேசினார்.

அவர் புதிதாக வெளியிட்ட தகவல் - அரசாங்கத்தின் தீர்வுத்திட்டத்தின் அடிப்படையில் விடுதலைப்புலிகளுடன் பேசுவதற்குத் தயாரென்று கடந்த இரண்டு வருடங்களில் பல தடவைகள் அவர்களுடன் நெருங்கிய தொடர்புடையவர்கள் மூலம் அவர்களுக்குத் தெரிவித்தேன் - என்பதாகும்.

அவர் புதிதாக தெரிவித்த தமது திட்டம் - எதிர்க்கட்சியின் உதவியின்றி வெளிநாட்டுத் தொடர்பாளர் ஊடாக விடுதலைப்புலிகளுடன் பேசி இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாண்பது - என்பதாகும்.

இதனைத் தாம் செய்யவிருப்பதால் தமக்கே வாக்களிக்குமாறும் சந்திரிக்கா கேட்டுக்கொண்டார்.

இப்போது நடைபெறும் போருக்கு மூலகாரணமானது இனப்பிரச்சினை. அந்தப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாண்பதன் மூலம் போரை இல்லாமற் செய்யலாம் என்று வழமையான வாசகத்தையே கூறினார். போரை நிறுத்துவது குறித்து எதுவும் சொல்லவில்லை!

இராணுவச் சூழ்நிலையில் மக்களுக்கு ஏற்பட்டுள்ள கஷ்டங்கள் குறித்துத் தனக்குத் தெரியும் என்று கூறிய ஜனாதிபதி தனது கையில் இப்பகுதி மக்களுக்கும் பல பிரச்சினைகள் உண்டு என்பதும் தமக்குத் தெரியும். என்று சொன்ன ஜனாதிபதி -

போரை நிறுத்துவது குறித்து மூச்சும் விடவில்லை!

குடாநாட்டு மக்களின் பாதுகாப்புக்கு முன்னுரிமை வழங்கப்படுவதினாலேயே அவர்களுக்கு பிரச்சினைகள் உண்டாகின்றன என்று கூறிச் சமாளித்தாரே அன்றி அவற்றை நீக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதி சொல்லப்படவில்லை. மேலும் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்குத் தாம் செயற்படுத்த உத்தேசித்துள்ள திட்டம் குறித்தோ அல்லது தமது வழி முறை குறித்தோ உறுதியான கருத்து எதனையும் சந்திரிகா வெளியிடவில்லை. இனப்பிரச்சினைக்கான தீர்வு என்ன, மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் ஏன் நிராகரிக்கப்படுகிறது, போர்நிறுத்தம்

ஜனாதிபதி சொன்னார். சம்மந்தப்பட்ட அதிகாரிகளும் இதனையே பலகாலமாகக் கூறிவருகின்றார்கள். ஜனாதிபதியின் வாயால் இம்முறை வந்திருப்பதால் முன்னேற்றம் உண்டாகும் என எதிர்பார்க்கலாம். குடாநாட்டு விளைபொருள்கள், கடலுணவுப் பொருள்களை எடுத்துச்செல்ல சரக்கு விமானம் வழங்கப்படும் என்ற ஜனாதிபதியின் பதில் இந்தப்பிரதேசத்தின் பொருளாதார வளர்ச்சியில் அக்கறையுள்ள சகலருக்குமே மகிழ்ச்சி தருவதாகும். ஆனால் ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் வெளிவந்தபின்னர்தான் அதனைக் கருத்திலேனும் எடுக்கலாம். உடனடியாக நடைபெறக்கூடிய காரியமல்ல!

அரசமைப்புக்கான 13ஆவது திருத்தச் சட்டம் உரிய அளவில் அமுல்செய்யப்படவில்லை என்று உடுவில் பிரதேசசபையின் தலைவர் கேட்ட போது -

அதனைவிடவும் கூடுதல் அதிகாரங்களைப் பிராந்தியங்களுக்கு வழங்க அரசின் தீர்வு யோசனை வகைசெய்வதாகவும், தமக்கு ஆதரவாக வாக்களித்துத் தன்னை மீண்டும் ஜனாதிபதியாக்கினால் அந்தத் திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவரமுடியும் என்றவாறு ஜனாதிபதி பதிலளித்தார். அதுவும் தேர்தல் வாக்குத்தேடும் பதிலாகவே இருந்தது.

ஜனாதிபதியின் செய்மதிச் சந்திப்பு குடாநாட்டு மக்களின் பிரச்சினைகளுக்குப் பரிகாரம் தேடும் கலந்துரையாடலாக இல்லாமல், தேர்தல் பிரசாரம்மேலோங்கியதாகவே அமைந்தது குறித்து பலரும் விசனம் தெரிவித்தனர். செய்மதிப்பேட்டி மக்களின் மனநிலையை அறிந்து அமைக்கப்

அரசியல்வாதிகளாயினும் சரி தமது பதவிக்கும் அதிகாரத்துக்கும் பின்னரே மக்கள் நலனைச் சிந்திப்பர் என்பதற்கு இப்போதைய அவர்களின் தேர்தல் காதல் நல்ல உதாரணம்! மக்களின் வாக்குகள் தேவைப்படும் காலத்தில் கூட. அவர்களின் நலனுக்கு முன்னுரிமையும் முதலிடமும் கொடுக்காமல் தேர்தல் போதையில் தள்ளாடுகிறார்கள்.

அரசாங்கம் தான் தேர்தலை ஒத்திவைப்பது குறித்துச் சிந்திக்கவில்லை என்றால், அவ்வாறு செய்யக்கோரி தெற்கு அரசியல்வாதிகள் எவரும் ஓங்கி ஒலித்ததாக (இப்பத்தி எழுதப்படும் வரை) தகவல் இல்லை. எங்கள் தமிழ் அரசியல்வாதிகளோ மௌன சாமிகளாகிவிட்டனர்.

ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்று யார் வெற்றி கண்டாலும் போர் நிலைமையிலும், மக்கள் படும் கஷ்டங்களிலும் உடனடியாக மாற்றம் வந்துவிடும் என்று எதிர்பார்க்கமுடியாது. இதுவும் அரசியல்வாதிகளுக்குத் தெரியாதது அல்ல. எனினும் அவர்கள் தேர்தலில் ஒருகரை கண்டுவிட வேண்டும் என்று கொடுக்கை வரிந்து, இழுத்துக் கட்டிக்கொள்கிறார்கள். இனிமேல் கட்டிய அந்த முடிச்சை அவிழ்க்கமாட்டார்கள்; அதற்கு மனம் வராது அவர்களுக்கு!

ஜனாதிபதித் தேர்தலை முன்வைத்தே இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் விவகாரம் என்ற பந்தை ஆளுங்கட்சி எதிர்க்கட்சிக்கு முதலில் வீசியது. அந்தப் பந்துவீச்சு இன்னும் ஓயவில்லை. இது தொடர்பில் ஆளுங்கட்சித் தலைவர் சந்திரிகா குமாரதுங்கவுக்கும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும்

## ஜனாதிபதியின் செய்மதிப் பேட்டியில் ஆக்கபூர்வமான பெறுபேறு இல்லையே!

என்பன குறித்துக் கேள்விகள் எழுப்பி ஜனாதிபதியின் பதிலை அறிவதற்கு பலர் நினைத்திருந்தனர். ஆனால் பேட்டி ஒழுங்கமைப்பு அவற்றைத் தவிர்க்கும் வகையில் மிகத் திட்டமிட்ட முறையில் வகுக்கப்பட்டிருந்ததாக சந்திப்பில் கலந்து கொள்ளச்சென்ற ஒருவர் கவலையும் ஏமாற்றமும் தெரிவித்தார்.

### ஜனாதிபதியின் சமாளிப்பு

போரை நிறுத்தவேண்டும், மூன்றாந்தரப்பு மத்தியஸ்தத்துடன் விடுதலைப்புலிகளுடன் பேசவேண்டும் என்று ஆனைக்கோட்டையைச் சேர்ந்த ஒருவரும், கிறிஸ்தவ மதகுரு ஒருவரும் ஜனாதிபதியிடம் தெரிவித்தனர். ஆனால் நேரடியாகப் பதில் கூறாமல் ஜனாதிபதி சுற்றிவளைத்து சமாளித்தார் என்று செய்மதிச் சந்திப்பு நிகழ்வில் கலந்துகொண்ட ஒருவர் தெரிவித்தார்.

நேரத்தை வீணடிக்கும் - எந்தவகையிலும் பயன்படாத - சில கேள்விகளும் அங்கு எழுப்பப்பட்டன. மக்களுக்கு அக்கறையுள்ள கேள்விகள் பலவற்றுக்குத் திட்டவட்டமான பதில்கள் இல்லாமல் சறுக்கலான பதில்கள் தரப்பட்டன. காணாமற்போனோர் நிலை, கைதுசெய்யப்படுவோரின் நிலை என்பன குறித்துக் "கவனிக்கப்படும்" என்ற தொனியிலேயே பதில்கள் அமைந்தன.

பயணிகள் கப்பற் சேவை குறித்துக் கேட்கப்பட்ட வினாவுக்கு உருப்படியான பதில் வழங்கப்பட்டது. குடாநாட்டு மக்களின் போக்குவரத்துத் தேவையை நிறைவேற்றும் பொருட்டு பயணிகள் கப்பல்கள் கொள்வனவு செய்யப்பட இருப்பதாகவும் அது விரைவில் சேவையில் ஈடுபடுத்தப்படும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

கப்பல் கொள்வனவு குறித்து 'றான்' அதிகாரிகள் இரண்டொரு மாதங்களாகக் கூறிவருகின்றனர். ஆனால் இன்னும் கைகூடியதாகத் தகவல் இல்லை. குடாநாட்டு மக்களுக்கு ஏதாவது ஒன்றையாவது பெரிதாகச் செய்ததாகக் காட்டினாலவது அவர்களின் வாக்குகளைப் பெறலாம் என்று ஜனாதிபதி நினைத்திருக்கக் கூடும். ஆகையால் அவரது வாக்குறுதி முந்திய அரசியல் வாக்குறுதிகள் போலன்றி நிறைவேற்றப்படும் என நம்புவோமாக. ஜனாதிபதியின் வாக்குறுதி இரண்டு மாதங்களுக்குள் நிறைவேறுமாயின் 2,000ஆம் ஆண்டில் குடாநாட்டு மக்களின் கடற்பயணம் இலகுவாகிவிடும்.

குடாநாட்டில் உள்ள ஏனைய மாணவர்களின் கல்வி மேம்பாட்டு கருதி விசேட புலமைப்பரிசில் திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்தப்போவதாகவும் ஜனாதிபதி சொன்னார். அதுவும் ஓர் உருப்படியான அறிவிப்பு. தேர்தலைக் கருதி அதனையும் ஜனாதிபதி நிறைவேற்றக்கூடும்.

கைதான பல்கலைக்கழக மாணவனின் விவகாரம், கடற்றொழிலாளர் பிரச்சினை என்பன குறித்தும் கேள்விகள் கேட்கப்பட்டன. பல்கலைக்கழக மாணவன் மீது குற்றம் எதுவும் இல்லையெனக் காணப்படின் அவர் விடுவிக்கப்படுவார் என்றும் பதிலளிக்கப்பட்டது.

மீன்பிடி நேரம் மற்றும் தூரக் கட்டுப்பாட்டை மேலும் தளர்த்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஜனாதிபதி தெரிவித்த பதிலும் ஆக்கபூர்வமானதாகும். மீனவர்களுக்கு அவர்களின் தொழில் விருத்திக்காக நவீன உபகரணங்கள் வழங்கப்படும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

குடாநாட்டின் விளைபொருள்களை கொழும்புக்கு எடுத்துச்சென்று சந்தைப்படுத்துவதற்கான வசதிகள் மேலும் விரிவுபடுத்தப்படும் எனவும்

படவில்லை. பெயருக்காகச் செய்யப்பட்டது போலவே தெரிந்தது. தொனித்தது என்று அதில் கலந்துகொண்ட ஒருவர் கவலை தெரிவித்தார்.

பேட்டியின் முடிவில் ஜனாதிபதி எல்லோரும் தீபாவளி வாழ்த்துக்கூறி விடைபெற்றார். அந்த நிகழ்வில் கலந்துகொண்ட பலரும் திருப்தியற்ற மனங்களுடன் இரவு 9.30மணியளவில் வீடு வந்து சேர்ந்தனர்.

இன்னும் மூன்று நாள்களில் ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்பாளர் நியமனப்பத்திரங்களைத் தாக்கல் செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுவிட்டன. வடக்கு - கிழக்கில் பெரும் போர் நடைபெற்றுக்கொண்டிருப்பதால் ஜனாதிபதித் தேர்தல் ஒத்திவைக்கப்படுமோ என்று மக்கள் மத்தியில் சந்தேகங்கள் உண்டாகி உள்ளன. ஆனால் இப்பத்தி எழுதப்படும் வரை அது குறித்து அரசாங்கம் எள்ளவும் நினைக்கவுமில்லை.

வன்னிப் பிரதேசத்தில் போர்க்களம் கடந்த இரண்டு வாரங்களாகக் கொதித்துக் கொண்டிருக்கிறது. அதனால் இரு தரப்புக்களுக்கும் கிடைக்கும் வெற்றி தோல்வி ஒரு புறமிருக்க, மக்கள் இடம்பெயர்ந்தும் உணவு மற்றும் உணவுப் பொருள்கள் இன்றியும் கஷ்டப்படுகின்றனர். ஆனால் இவை எல்லாவற்றையும் ஒரு பக்கம் ஒதுக்கி விட்டு - மறந்துவிட்டு - கொழும்பில் அரசியல்களம் களைகட்டியிருக்கிறது!

போர் நடைபெறுவது வடக்கில்தானே, அதனால் என்ன ஜனாதிபதி தேர்தல் அறிவிக்கப்பட்ட பிரகாரம் நடத்தப்பட வேண்டும் என்ற எண்ணத்துடனேயே தென்னிலங்கை அரசியல் தலைவர்கள் செயற்படுகிறார்கள். நாம் உண்டு எம்பாடு உண்டு; அங்கே நடைபெறுவது குறித்து நாம் என்ன செய்ய முடியும்; அதற்காக ஜனாதிபதித் தேர்தலை நடத்தாமல் இருக்கமுடியுமா என்ற பாணியில் கொழும்பில் தேர்தல்களம் சூடு பிடித்து வருகிறது. நாடு பற்றிஎரியும் போது பிடில் வாசித்த நீரோ மன்னன் போன்றே அரசாங்கத்தினரும், தெற்கு அரசியல்வாதிகளும் நடந்து கொள்கின்றனர்.

ஜனாதிபதித் தேர்தல் நாடு முழுவதிலும் நடத்தப்படவேண்டிய ஒன்று. ஆனால் அப்படி ஒரு தேவை உண்டு என்ற சிந்தனை அரசுக்கு இருப்பதாகத் தெரியவில்லை. தேர்தலுக்கு நிர்ணயிக்கப்பட்ட திகதி டிசம்பர் மாதம் 21ஆம் திகதியாகும். இன்னும் ஒரு மாத காலத்திற்குள் வடக்கு - கிழக்கில் உள்ள நிலைமை மாறும் என்று எவ்வாறு உத்தேசிக்க முடியும்? போர் நிலைமை அப்போது சற்றுத் தணிந்தாலும் கூட, அதன் விளைவுகள், பாதிப்புக்களில் இருந்து மக்களால் மீள முடியுமா? அல்லது அரசாங்கம் தான் அந்தப் பகுதி மக்களின் வாழ்க்கை நிலையை மீள்வித்து விடுமா? அரசாங்கம் என்ன மாயாவியா, மந்திரக் கோலால் மாற்றங்களைச் செய்வதற்கு?

தலையிடியும் தனக்குத் தனக்கு வந்தால் தான் அதன் வேதனை தெரியும். அரசியல்வாதிகளுக்கோ, அவர்களது உறவினர்களுக்கோ போரின் விளைவுகள் எந்தவிதப் பாதிப்பையும் தருவதில்லை. அதனால் போர்ப் பிரதேசங்களில் வாழும் மக்களின் அவல நிலையை உணரும் வாய்ப்பு இல்லை. அதனாலேயே இப்போதைய போரில் சிங்களப் பொதுமக்களும் மிகப் பெரிய அளவில் பாதிக்கப்பட்ட போதிலும் கரிசனை தேர்தலிலேயே அதிகம் உள்ளது.

### தேர்தல் காதல்

சிங்கள அரசியல்வாதிகளும் சரி, தமிழ்

இடையிலான கடிதப் போர் இன்னும் முற்றுப் பெறவில்லை.

தாம் எழுதும் கடிதங்கள் ஊடகங்களில் வெளிவரும்போது அடுத்த தரப்பின் குறைபாடுகளை மக்கள் அறிந்துகொள்ளட்டும் என்ற உள்நோக்கத்துடனேயே இந்தக் கடிதப் போர் தொடர்கிறது. இதனை வாக்காளப் பெருமக்கள் இதுவரை நன்கு உணர்ந்திருப்பர்.

ஏற்கனவே இப்பத்தியில் எழுதியது போன்று, இனப்பிரச்சினை தீர்க்கப்படவில்லை என்ற வழக்கில் இரண்டு தரப்பினருமே குற்றவாளிகளே! ஆனால் தேர்தல் வந்ததும் தாம் சுற்றவாளிகள், களங்கம் இல்லாதவர்கள், கரிசனை உள்ளவர்கள் என்று காட்ட முனைகிறார்கள் இரண்டு பக்கத்தினரும். ஆனால் மக்கள், வாக்காளர்கள் இதனைப் புரிந்துகொள்ளமுடியாத அளவுக்கு அறிவிலிகள் அல்லர் எனபதையும் மந்திரம் ஓதி அவர்களை மயக்க முடியாது என்பதையும் அரசியல் தலைவர்கள் மறந்துவிடுகிறார்கள்! இந்தக் கடிதப்போர் மூலம் வாக்குகளைப் பெரிதாகக் கவர்ந்துவிட முடியாது. அது ஒரு புறமிருக்க -

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்களும் மற்றும் மாகாண சபைகள், உள்ளூராட்சி சபைகளைச் சேர்ந்த உறுப்பினர்களும் ஆளுங்கட்சிக்கு மாறும் கவர்ச்சிக் காட்சிகளும் தேர்தல் அரங்கில் நிறைவேறியுள்ளன.

தேர்தல் களத்தில் இத்தகைய காட்சிகள் ஒன்றும் புதியவை அல்ல. தாம் சார்ந்திருந்த பக்கத்தில் தாம் எதிர்பார்த்த நலன்கள் கிடைக்கவில்லையெனில், ஏதோ ஒரு காரணத்தைக் கூறிக்கொண்டு அடுத்த பக்கத்துக்கு அரசியல்வாதிகள் தாவிவிடுவர். அதேபோன்று, இருக்குமிடத்தில் இருந்து கொண்டால் எல்லாம் சௌக்கியமே என்று பலனுள்ள பக்கத்துக்கு அரசியல்வாதிகள் திடீரெனக் குதிப்பதும் வழமையே! அவ்வாறு குதிக்கும்போது "சந்தோஷங்களை" எதிர்பார்த்து அல்லது அனுபவித்துச் செல்வதும் வழமை.

தெற்கின் தேர்தல் களம் இவ்வாறு தடல்புடல் கண்டுகொண்டிருக்கிறது. ஆனால் வடக்கு - கிழக்குப் பிரதேசம் போரினால் நிலைகுலைந்து போயுள்ளது. தெற்கின் சிங்களப் பிரதேசம் அல்லது மாகாணம் ஒன்று வாடித் தளர்ந்து கொண்டிருக்கும் வேளையில் தென்னிலங்கை அரசியல்வாதிகள் தேர்தல்களத்தில்நின்று குத்துக்கரணங்கள் அடித்தும் கும்மாளம் போட்டும் வாக்கு வேட்டை ஆடுவார்களா? தேர்தலை ஒத்திவைத்துவிட்டு போர்ப்பிரதேசத்துக்கு ஓடிப்போயிருப்பார்கள் இல்லையா?

இந்தத் தெற்கு அரசியல்வாதிகளுக்கு தமிழ் மக்களின் நலனில் அக்கறை உண்டு என்று அவர்கள் போடும் கூவைக்குரலைத் தமிழ் மக்கள் இனியும் நம்பவேண்டுமா?

*

## வாரவிமர்சனம்

யுத்தச் செய்திகள் விடயத்தில் கடும் தணிக்கை அமுலில் இருப்பதால் வாரந்தோறும் சஞ்சீவியில் இடம்பெறும் 'வார விமர்சனம்' கட்டுரை வெளியாகவில்லை. (ஆ-ர்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இந்தியாவில் பெரும் சர்ச்சையை கிளப்பியுள்ள பாப்பரசர் விஜயம்

பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் கடந்த வாரம் மூன்று நாள் விஜயம் மேற்கொண்டு இந்தியாவுக்கு வருகை தந்திருந்தார். அவரது வருகை இந்துக்களைப் பெரும்பான்மையினராக



பாப்பரசர் 2ஆவது அருளப்பர் சின்னப்பர்

கக்கொண்ட இந்தியாவில் பெரும் சர்ச்சையைக் கிளப்பிவிட்டுள்ளது.

400ஆண்டுகளுக்கு முன்னர் போர்த்துக்கேயர் ஆட்சியின்கீழ் கோவாவில் இடம்பெற்ற சம்பவங்களுக்காக பாப்பரசர் மன்னிப்புக் கேட்கவேண்டும் என்று மத கடும்கோட்பாளர்களினால் கோரிக்கை முன்வைக்கப்பட்டிருந்தது. மத தீவிரவாத அமைப்பான விஷ்வ இந்து பரிஷத் கோவா மாநிலத்தில் இருந்து புதுடில்லிவரை ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்தவும் பாப்பரசரின் வருகையின்போது அவருக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களை நடத்தவும் திட்டமிட்டிருந்தது.

எனினும் அரசாங்கத்தின் தலையீடு காரணமாக கோவாவில் இருந்து புதுடில்லிக்கு ஆர்ப்பாட்டப் பேரணி நடத்துவதுடன் விஷ்வ இந்து பரிஷத் தனது போராட்டத்தை நிறுத்திக்கொண்டது.

## கிறிஸ்தவ அமைப்புக்கள்

இந்தியாவில் உள்ள ஏழை இந்துக்களுக்கு அங்குள்ள கிறிஸ்தவ அமைப்புக்கள் பணம் வழங்குவது மூலம் அவர்களை கிறிஸ்தவர்களாக மதம் மாற்றுகின்றன என்பது நீண்டகாலமாக இந்துமத கடும்கோட்பாளர்களினால் தெரிவிக்கப்பட்டுவரும் குற்றச்சாட்டு ஆகும். இதற்காக வத்திக்கான் மற்றும் வெளிநாடுகளில் உள்ள

உலக உலா
என்.பி.சீலன்

கிறிஸ்தவ அமைப்புக்கள் வருடாவருடம் கோடிக்கணக்கான டொலர்களை இந்தியாவுக்குள் இறைப்பதாகவும் வெளிநாட்டு அரசுகளின் மறைமுக ஆதரவுடன் இது இடம்பெற்றுவருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

1998 மார்ச்சில் வாஜ்பாய் தலைமையிலான பாரதீயஜனதா அரசு பதவிக்கு வந்தபின்னர் இத்தகைய குற்றச்சாட்டுக்கள் பெரும் அளவில் கிளப்பப்பட்டு வருகின்றன. கடந்த இரண்டு ஆண்டுகளில் கிறிஸ்தவர்களுக்கு எதிராக 150 வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றதாகமுறையிடப்பட்டிருந்தது. ஒரிஸாவில் ஆஸ்திரேலிய கிறிஸ்தவ மத போதகர் ஒருவரும் அவரது புதல்வரும் படுகொலைசெய்யப்பட்டது இந்தச் சம்பவங்களில் ஒன்று.


பாப்பரசர் தனது இந்திய விஜயத்தை ஆரம்பிக்க முன்னரே வத்திக்கானில் அதிகாரிகள் இந்த விடயம் தொடர்பாக முதல் தடவையாக நேரடியாக கருத்துவெளியிட்டிருந்தமை பாப்பரசரின் வருகைதொடர்பாக இந்தியாவில் புதிதாக சர்ச்சையைக் கிளப்பிவிட்டிருந்தது.

இந்தியாவில் கிறிஸ்தவர்களுக்கு எதிரான வன்முறைகள் குறித்து பாப்பரசர் கவலை கொண்டிருப்பதாக வத்திக்கான் அதிகாரிகள் கருத்துத் தெரிவித்திருந்தனர்.

வத்திக்கானின் சர்ச்சைக்குரிய கருத்துக்கள், இந்தியாவில் மத கடும்போக்காளர்களின் எதிர்ப்பு ஆகியவற்றுக்கு மத்தியில் பாப்பரசரின் இந்திய விஜயம் அசம்பாவிதம் எதுவும் இன்றி நடைபெற்று முடிந்தது வரவேற்றகத் தக்கதே.

1978ஆம் ஆண்டு பதவி ஏற்ற பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் தனது 21வருட பதவிக்காலத்தில் மேற்கொண்ட 89ஆவது வெளிநாட்டுப் பயணம் கடந்தவார இந்திய விஜயம் ஆகும்.

பகைமை அல்லது வன்செயல்கள் அல்லது பாகுபாடு ஆகியவற்றைத் தூண்டுவதற்கு மதத்தை ஒரு கருவியாகப் பயன்படுத்த வேண்டாம் என்று இந்தியவிஜயத்துக்கு சில நாள்களுக்கு முன்னர் பாப்பரசர் உலக மதத் தலைவர்களுக்கு வேண்டுகோள் விடுத்திருந்தார். இந்திய விஜயத்தை, மனதில் கொண்டே அவர் இந்த வேண்டுகோளை விடுத்திருக்கலாம்.




## சிவசேனையும் கடும் எதிர்ப்பு

பாப்பரசரின் இந்திய விஜயத்துக்கு சிவசேனைக் கட்சியும் கடும் எதிர்ப்புத் தெரிவித்து வந்தது. தொழில்வளம் நிறைந்த மகாராஷ்டிர மாநிலத்தில்

## மத தீவிரவாத அமைப்புக்கள் போர்க்கோலம்

செல்வாக்குமிக்க கட்சியாக சிவசேனை இருந்துவருகிறது. பாப்பரசரின் இந்திய வருகைக்கு முன்னதாக புதுடில்லிப் பொலீஸார் சிவசேனையைச் சேர்ந்த ஒன்பது தலைவர்களைக் கைதுசெய்திருந்தனர்.

சமீபத்தில் புதுடில்லியில் சிவசேனை நடத்திய எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றில் இந்தியாவில் கட்டாய மதமாற்றத்தைக் குறிக்கும் கொடும்பாவி ஒன்று எரிக்கப்பட்டது.




இந்துக்களை கிறிஸ்தவர்கள் மதமாற்றம் செய்வதற்கு எதிர்ப்புத் தெரிவித்து புது டில்லியில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தைப் படத்தில் காணலாம்.

பாப்பரசரின் கடந்தவார இந்திய விஜயம், அவர் பதவி ஏற்ற பின்னர் இடம்பெற்ற இரண்டாவது விஜயம் ஆகும். 1986 பெப்ரவரியில் பாப்பரசர் இந்தியாவுக்கு 10நாள் விஜயம் மேற்கொண்டிருந்தார். அப்பொழுது கோவாவுக்கும், புதுடில்லி, கல்கத்தா, மும்பாய், சென்னை ஆகிய நகரங்களுக்கும் அவர் விஜயம் செய்தார். ஆனால் இந்தத் தடவை அவரது விஜயம் புதுடில்லியுடன் மட்டுப்படுத்தப்பட்டுவிட்டது. இனமத பாகுபாடுகளுக்கு அப்பாற்பட்ட தலைவர் என்ற அந்தஸ்தை இந்தியாவில் அவர் எதிர்பார்த்திருக்க முடியாது. தமது மூன்று நாள் இந்திய விஜயத்தின்போது பாப்பரசர் தெரிவித்த சிலகருத்துக்கள் பாரதீயஜனதா அரசுக்கு ஏற்புடையதாக இருக்கவில்லை என்றே கருதப்படுகிறது. "ஒவ்வொருவரும் சுயவிருப்பத்தின் பேரிலேயே மதம் மாறுகின்றனர் அதனை எந்தவொரு அரசாங்கத்தினாலும் தடைசெய்ய முடியாது." என்று பாப்பரசர் புதுடில்லியில் தெரிவித்தார். "எந்த மதத்தைப் பின்பற்ற வேண்டும் என்பது ஒவ்வொருவரினதும் தனிப்பட்ட விருப்பமாகும். இதில் எவரும் தலையிடக் கூடாது. ஒவ்வொருவரினதும் மத சுதந்திரம் பேணப்பட வேண்டும் என்றும் பாப்பரசர் கூறியிருந்தார்.

## நாடளாவிய ரீதியில் விவாதிக்க கோரிக்கை

பாப்பரசரின் இந்தக்கருத்தை அடுத்து இந்தியாவில் மதமாற்றம் இடம்பெறுவது குறித்து நாடளாவிய ரீதியில் விவாதிக்க வேண்டும் என்று பாரதீய ஜனதாக் கட்சியின் செயலாளர் வெங்கையநாயுடு கோரிக்கை விடுத்துள்ளார். "மதத்தைப் பின்பற்றுவது ஒருவரது தனிப்பட்ட உரிமை என்பதை பாரதீய ஜனதாகக் கட்சி ஏற்றுக்கொண்டுள்ளது. அதே நேரம் ஏழை மக்களை கட்டாயப்படுத்தி மதமாற்றம் செய்வதை கட்சி எதிர்க்கும் என்று அவர் தெரிவித்துள்ளார். சமத்துவம் என்ற பெயரில் மத மாற்றம் செய்வது குறித்து பாரதீயஜனதாக் கட்சி கவலை தெரிவித்துள்ளது. மனித சமுதாயத்துக்குச் செய்யும் சேவை மதத்துடன் சம்பந்தப்பட்டிருக்கக் கூடாது என்று அது தெரிவித்துள்ளது.

## தடை வருமா?

இந்தியாவில் மத மாற்ற நடவடிக்கைகளுக்கு முழுமையாகத் தடை விதிக்கவேண்டும் என்று அயோத்தியைச் சேர்ந்த பிரபல மதப் பிரமுகர்கள் குழு ஒன்றும் இந்திய ஜனாதிபதி கே.ஆர்.நாராயணனைக் கேட்டுள்ளது.

இந்தியாவில் மதமாற்ற நடவடிக்கைகளுக்கு முழுத் தடைவிதிக்க வேண்டும் என்று இந்தக்குழு அறிக்கை ஒன்றில் கோரிக்கை விடுத்துள்ளது. வெளிநாடுகளில் இருந்து பெரும் நிதி உதவி பெற்று மதமாற்ற நடவடிக்கைகளில் ஈடுபடும் அரசசார்பற்ற அமைப்புக்களுக்குத் தடைவிதிக்க வேண்டும் என்றும் இந்தக்குழு கோரியுள்ளது.

இந்தியா அணு வெடிப்புப் பரிசோதனை நடத்தியதுக்கு எதிர்ப்புத்தெரிவித்த ஐரோப்பியநாடுகளே இந்தியாவில் மதமாற்றம் நடைபெறுவதற்காக பெருமளவு பணத்தை அனுப்பி வருகின்றன என்று இந்தக்குழு குற்றஞ்சாட்டி உள்ளது.

பாப்பரசர் தனது இந்திய விஜயத்துக்கு முன்னர் சோவியத் யூனியனின் முன்னாள் குடியரசு நாடுகளில் ஒன்றான ஜோர்ஜியாவுக்கும் விஜயம் செய்திருந்தார். ஜோர்ஜியாவில் மரபுவாத கிறிஸ்தவர்கள் பெருமளவு வாழ்கின்றனர்.

1991ஆம் ஆண்டு சோவியத்யூனியன்துண்டாடப்பட்டபோது ஜோர்ஜியா தனி நாடாகியது. சோவியத்குடியரசுகளில் ஜோர்ஜியாவும் ஒன்று.

கோகாசஸ் பிராந்தியத்தில் உள்ள சின்னஞ் சிறுநாடான ஜோர்ஜியாவில் மிகவும் குறைந்தளவு கிறிஸ்தவர்களே வாழ்கின்றனர். எனினும் நீண்ட வரலாறுகளைக்கொண்ட மரபுவாத கிறிஸ்தவம் ஜோர்ஜியாவில் இன்னும் இருந்துவருகிறது.

சமீபத்தில் ஜோர்ஜியாவில் நடைபெற்ற தேர்தல்களில் எட்வர்ட் செவனாட்சேயின் கட்சி வெற்றிபெற்றிருந்தது. எட்வர்ட் செவனாட்சே சோவியத் யூனியனின் காலத்தில் சோவியத்யூனியனின் வெளிவிவகார அமைச்சராக இருந்தவர்.

## சந்தேகம் நீங்குமா?

இந்தியாவில் கிறிஸ்தவ மதம் தொடர்பாக இருந்துவரும் சந்தேகங்களை பாப்பரசரின் வருகை ஓரளவு நீக்கும் என்றே எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் பாப்பரசர் இந்தியாவில் தெரிவித்த கருத்துக்கள் அவரது மதக் கோட்பாடுகளில் உள்ள உறுதியை வெளிக்காட்டுகிறது. எனினும் மத கடும்போக்காளர்களின் உணர்வுகளை அது மேலும் தூண்டிவிட்டுள்ளது.

பாரதீய ஜனதாக் கட்சியின் செயலாளர் வெங்கையநாயுடு, மதமாற்றம் குறித்து தேசியரீதியில் விவாதம் நடத்தப்படவேண்டும் என்று கோரிக்கை விடுத்திருப்பது இந்தப்பிரச்சினை தீர்ந்துவிடப்போவதில்லை என்பதையே காட்டுகிறது.

புத்தாயிரம் ஆண்டில் கிறிஸ்தவ மதத்தைப் பின்பற்றுதல் மற்றும் மதமாற்றம் ஆகியவற்றுக்கு ஆசியாவில் முக்கியத்துவம் கொடுக்கப்படும் என்று சாரப்பட கடந்த ஞாயிற்றுக்கிழமை புதுடில்லியில் நடைபெற்ற ஆராதனை ஒன்றில் பாப்பரசர் தெரிவித்திருந்தார்.

பாப்பரசரின் கருத்துக் குறித்து விஷ்வ இந்து பரிஷத் உட்பட தீவிரவாத மத அமைப்புக்கள் கண்டனம் தெரிவித்துள்ளன.

ஒரு நபரின் மத நம்பிக்கை தொடர்பாக நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அவரைக் கட்டுப்படுத்துவதற்கு எந்த ஓர் அரசுக்கும் உரிமை இல்லை என்றும் புதிய நூற்றாண்டில் ஆசியாவில் பெரும் சமய எழுச்சி ஏற்படும் எனவும் பாப்பரசர் இந்த ஆராதனையில் தெரிவித்திருந்தார். நற்செய்தியும் மதமாற்றமும் ஆசியாவில் உள்ள கத்தோலிக்க ஆலயங்களின் முதற் பணி என்றும் பாப்பரசர் தெரிவித்திருந்தார்.

பாப்பரசரின் கூற்றுக்கு விஷ்வ இந்து பரிஷத் கண்டனம் தெரிவித்து விடுத்த அறிக்கையில் பின்வருமாறு தெரிவித்துள்ளது:-

'கல்வி அறிவுள்ள மக்களை மதம்மாற்ற வத்திக்கானால் முடியாது. சமய போதனைகள் புரிய பாப்பரசருக்கு உரிமையுண்டு. ஆனால் மதமாற்றத்துக்கு அழைப்பு விடுக்கும் உரிமை பாப்பரசருக்குக் கிடையாது. இயேசுநாதர் உயிருடன் இருந்திருந்தால்கூட இதனை அனுமதிக்கமாட்டார். எல்லாச் சமயங்களும் இறைவனை அடையவே வழிகாட்டுகின்றன என்பதுதான் இந்து மத நம்பிக்கை. வேதாகமத்தினால் மட்டும் இதனைச் சாதிக்கமுடியாது என பாப்பரசர் கூறியிருந்தால் நாம் அவரை ஆதரித்திருப்போம். ஆனால் வேதாகமத்தினால் மட்டும்தான் இதனைச் சாதிக்க முடியும் என்கிறார். இங்குதான் பாப்பரசர் தவறிழைக்கிறார்.

இப்படி விஷ்வ இந்து பரிஷத்தின் மத்திய குழுச் செயலாளர் பி.எல்.வர்மா பிரேம் தெரிவித்துள்ளார்.

பாரதீய ஜனதாக் கட்சியைப் பொறுத்தவரை இந்தியாவில் மத தீவிரவாதம் வளர்வதற்கு கிறிஸ்தவ சமயத்தவர்களின் நடவடிக்கைகளும் காரணம் என்று கருதுகிறது.

எனினும் மதத் தீவிரவாதம் வாஜ்பாய் அரசுக்கு எதிர்காலத்தில் தொடர்ந்து நெருக்கடிகளையே கொடுக்கப்போகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**சஞ்சீவி விளையாட்டரங்கு**

# இந்திய கிரிக்கெட் அணியின் அபார சாதனைகள்

இந்திய - நியூசிலாந்து அணிகளுக்கிடையே கடந்த 8ஆம் திகதி ஹைதராபாத்தில் நடைபெற்ற ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் இந்திய அணிவீரர்களால் தேசிய ரீதியிலும், சர்வதேசரீதியிலும் பல சாதனைகள் நிலைநாட்டப்பட்டுள்ளன.


நடைபெற்று முடிந்த இந்த ஆட்டத்தில் இரண்டாவது விக்கெட்டிற்காக சச்சின் - ட்ராவிட் இணை 331 ஓட்டங்களைப் பெற்று புதிய உலக சாதனையை நிலைநாட்டியது. இதுவரை உலகசாதனையாக இருந்துவந்த கங்குலி - ட்ராவிட் இணையின் (இவர்களும் இந்திய ஜோடி) 318 ஓட்டங்கள் இதன்மூலம் பின்தள்ளப்பட்டது.

இந்த ஆட்டத்தில் சச்சின் டெண்டுல்கர் ஆட்டமிழக்காது பெற்ற 186 ஓட்டங்களும், இந்திய அணி மொத்தமாகப் பெற்ற 376 ஓட்டங்களும் புதிய தேசிய சாதனையாக மாறின. ராகுல் ட்ராவிட் பெற்ற 153 ஓட்டங்களுடன் சச்சின், ட்ராவிட் ஆகியோர் தமது அதிஉயர் ஓட்டங்களையும் இந்த ஆட்டத்திலேயே பெற்றனர்.

இந்த ஆட்டம் உண்மையில் கிரிக்கெட்டில் ஒருநாள் போட்டிகளை விரும்பிப் பார்ப்போரின் கண்களுக்கு கிடைத்த காணற்கரிய விருந்து என்றே சொல்லவேண்டும்.

அன்றைய ஆட்டம் தொடங்குமுன் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணியின் தலைவர் சச்சின் டெண்டுல்கர் தமது அணி முதலில் துடுப்பெடுத்தாடப்போவதாக அறிவித்தார்.

இந்திய அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் செளரவ் கங்குலி துரதிர்ஷ்டவசமாக அணியின் ஓட்ட எண்ணிக்கை 10ஆக இருக்கும்போதே ஆட்டமிழந்தார். அவரின் இடத்திற்கு துடுப்பெடுத்தாட களமிறங்கினார் அணியின் இன்னோர் நம்பிக்கை நட்சத்திரம் ராகுல் ட்ராவிட்.



சச்சின் - ட்ராவிட் இணை

இந்திய அணியின் அபார துடுப்பாட்டத்தை நீண்ட நாள்களின்பின் அப்போதுதான் காணக்கூடியதாயிருந்தது என்றே சொல்லவேண்டும். அவ்வளவு அற்புதமாக சச்சின் - ட்ராவிட் இணை துடுப்பெடுத்தாடத் தொடங்கியது. நியூஸிலாந்து அணியின் பந்துவீச்சாளர்கள் வீசிய பந்துகளை, கடந்த போட்டியில் நியூஸிலாந்து அணிவீரர்கள் விளாசியதுபோலவே பவுண்டரிகளாக அனுப்பிக்கொண்டிருந்தனர் சச்சின் - ட்ராவிட் இணை.

சச்சின் - ட்ராவிட் இருவருமே தமது அரைச்சதத்தை எட்டிய சற்றுநேரத்திற்கெல்லாம் சதமடித்துக் கொண்டனர். இந்த இணைதொடர்ந்தும் பந்துகளைத் தமக்கேற்றவாறு பவுண்டரிகளாகவும் சிக்ஸர்களாகவும் அனுப்பிக் கொண்டே இருந்தது. ஆட்டம் படிப்படியாக சூடுபிடிக்கத் தொடங்கியது. ராகுல் ட்ராவிட் 77 ஓட்டங்கள் பெற்ற நிலையில் டானியல் விற்டோரி வீசிய பந்தை அவரிடமே பிடியாக அனுப்பிய போதும் அதை டானியல் விற்டோரி தவறவிட்ட நிகழ்ச்சியை நியூஸிலாந்து அணியினர் அப்போது நினைவு கூர்ந்தனர்.

சச்சினும், ட்ராவிட்டும் அடித்த சதங்கள் சச்சினின் சத எண்ணிக்கையை 24 ஆகவும் ட்ராவிட்டின் சத எண்ணிக்கையை 7 ஆகவும் உயர்த்தின.

அணியின் மொத்த ஓட்ட எண்ணிக்கை 300ஐத் தாண்டி ஓடிக்கொண்டே இருந்தது. 48ஆவது ஓவரில் அணியின் ஓட்ட எண்ணிக்கை 341ஆகவும் ட்ராவிட்டின் ஓட்ட எண்ணிக்கை 153ஆகவும் இருந்தவேளை ராகுல் ட்ராவிட், கிறிஸ் கெய்ன்ஸ் வீசிய பந்தையும் எல்லைக்கு அனுப்ப முயற்சிசெய்தவேளை அடி பிழைத்துப் போக அணித்தலைவர் ஸ்டீபன் பிளமிங்கின் கைகளில் பந்து சரண் புகுந்தது. அணியின் இரண்டாவது விக்கெட் வீழ்ந்ததைத்தொடர்ந்து களமிறங்கினார் இந்திய அணியின் உபதலைவர் அஜய் ஜடேஜா. அடித்து ஆடிக்கொண்டிருந்த சச்சினுக்கு வாய்ப்பை வழங்கிக்கொண்டேயிருந்தார். சச்சினும் அதை நல்லமுறையில் பயன்படுத்திக்கொண்டார்.

ஆட்டநேர இறுதியில் 150 பந்துகளில் 20 பவுண்டரிகள், 3 சிக்ஸர்களை விளாசிய சச்சின் டெண்டுல்கர் ஆட்டமிழக்காது 186 ஓட்டங்களை - தனிநபர் ஓட்ட எண்ணிக்கையாக - பெற்றார்.

இவர் பெற்ற இந்த 186 ஓட்டங்கள் இந்திய அணியில் இதுவரை பெற்றிருந்த ஆகக்கூடிய தனிநபர் ஓட்ட எண்ணிக்கையான 183 ஓட்டங்களை முறியடித்துவிட்டது. நடந்து முடிந்த உலகக்கிண்ணப் போட்டித்தொடரில் இலங்கை அணிக்கு எதிரான ஆட்டத்தில் செளரவ்கங்குலி இந்த ஆகக்கூடிய தனிநபர் ஓட்ட எண்ணிக்கையான 183ஐப் பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

அத்துடன் ஆட்டத்தின் கடைசிப் பந்து பரிமாற்றத்தில் 10 ஓட்டங்களை சச்சின் பெற்றிருந்தால் பாகிஸ்தான் அணிவீரர் சயீட் அன்வர் ஒருநாள் போட்டிகளில் பெற்ற ஆகக்கூடிய தனிநபர் ஓட்ட எண்ணிக்கையான 194 ஓட்டங்களை பின்தள்ளியிருக்க முடியும். ஆனால் சச்சின் அந்தச் சாதனை பற்றிச் சிந்திக்கவில்லையோ என்னவோ!

ஆனால் தற்போது சர்வதேச, ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளில் ஆகக்கூடிய தனிநபர் ஓட்ட எண்ணிக்கை பெற்றவர்கள் வரிசையில் முதலிடத்தில் பாகிஸ்தான் அணிவீரர் சயீட் அன்வரும், இரண்டாவது இடத்தில் மேற்கிந்திய தீவுகள் அணிவீரர் விவியன் ரிச்சட்ஸும் (189*) மூன்றாவது இடத்தில் தென்னாபிரிக்க அணிவீரர் கரி கேர்ஸ்டனும் (188*) நான்காம் இடத்தில் சச்சின் டெண்டுல்கரும் (186*) உள்ளனர்.

இன்னோர் சாதனையாக சச்சின் - ட்ராவிட் இணைபெற்ற 331 ஓட்டங்கள் உலக சாதனையாக மலர்ந்துள்ளது. இதற்கு முன் ட்ராவிட் - கங்குலி இணை பெற்ற இரண்டாவது விக்கெட்டுக்கான இணைப்பாட்ட சாதனையான 318 ஓட்டங்களை இந்தச்சாதனை பின்தள்ளியுள்ளது.

**ராஜ் - வீகன்**

அத்துடன் ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளில் ஓர் அணி பெற்ற ஆகக்கூடிய ஓட்ட எண்ணிக்கை 398 ஆகும். இது இலங்கை அணி கென்யா அணிக்கு எதிராகப் பெற்றமை குறிப்பிடத்தக்கது. இரண்டாவது அதிஉயர் ஓட்ட எண்ணிக்கை இந்திய அணி நியூஸிலாந்து அணிக்கு எதிராகப் பெற்ற 376 ஓட்டங்களே ஆகும்.

அண்மையில் முதுகுவலி காரணமாக சத்திரசிகிச்சையின் பின் மீண்டும் விளையாடத் தொடங்கிய சச்சின் டெண்டுல்கர் தனது திறமைகளை வெளிக்கொணர்ந்தபடியுள்ளார்.

நடந்து முடிந்த நியூஸிலாந்து அணியுடனான டெஸ்ட் போட்டியில் தனது அதிகூடிய டெஸ்ட் ஓட்ட எண்ணிக்கையான 217 ஓட்டங்களையும், நடந்த ஒருநாள் போட்டியிலும் தனது அதிகூடிய ஒருநாள் போட்டிக்கான ஓட்ட எண்ணிக்கையான 186 ஓட்டங்களையும் சச்சின் நிலைநாட்டியுள்ளார்.

# பீஜித் தீவில் பாதிரியார்



சுமார் 180 ஆண்டுகளுக்கு முன்பு பீஜித் தீவுகள் காட்டுமிராண்டிகள் வாழும் காடாகத் திகழ்ந்தது. அப்போது பிறநாட்டு மக்கள் அங்கு நுழைந்தால் திரும்பிவர முடியாத நிலை இருந்தது.

காரணம், அங்கு மனிதர்களை மனிதர்களே தின்னும் பழக்கம் அப்போது இருந்ததாம்.

பேட்டிஸன் என்ற பாதிரியார் ஒருவர் கிறிஸ்தவ மதத்தைப் பரப்பும் பொருட்டு தன்நண்பர்களுடன் பீஜி தீவுகளுக்குச் சென்றார். அங்கு அவர் கிறிஸ்தவ மதப்பிரசாரத்துடன், மக்கள் நாகரிகம் பெறவும் தொண்டாற்றினார்.

அவர் மக்களோடு மக்களாகப் பேதமின்றி 'எல்லோரும் இறைவன் பிள்ளைகள்' என்ற உணர்வுடன் பழகினார், உதவினார்.

அவர் ஒரு நாள் ஒரு புதிய தீவுக்குச்சென்றார். அதுவும் பீஜித் தீவுக் கூட்டத்தைச் சேர்ந்த ஒரு தீவுதான்.

நண்பரைப் படகில் இருக்கச் செய்து விட்டு பாதிரியார் தான் மட்டும் நிலைமையை அறிந்து வருவதற்காகக் கரையில் இறங்கினார்.

அந்நியர் ஒருவரைப் பார்த்தவுடன் அந்தத் தீவின் அபாயச் சங்குகள் அலறின. அதனால் திமுதிமுவென்று தீவைச் சேர்ந்த பலர் ஓடி வந்தார்கள். அவர்கள் பேட்டிஸன் பாதிரியாரை அடித்தே கொன்றுவிட்டார்கள்! அவர் பேசுவதற்கே அவர்கள் இடம் தரவில்லை. இதெல்லாம் கண்ணிமைக்கும் நேரத்தில் நடந்து முடிந்துவிட்டது.

படகிலிருந்த பாதிரியாரின் நண்பர் பதைபதைத்தார். 'இனி என்ன செய்வது? என் நண்பரின் உடலையாவது பெற்றுப் போகலாம்' என்ற எண்ணத்தில் அவர் படகிலிருந்து கரையில் இறங்கினார்.

உடனே தீவைச் சேர்ந்த சிலர், அவரைக் கைதுசெய்து தீவின் தலைவன் முன்னால் கொண்டுபோய் நிறுத்தினார்கள்.

இவரைப் பார்த்த தலைவன் வெகுண்டு எழவில்லை! அவரை வெட்டும்படி கூறவில்லை! குறுக்கு விசாரணை செய்யவுமில்லை!

"பெரிய தவறு நேர்ந்துவிட்டது! என்னை மன்னிக்க வேண்டும்!" என்று மன்றாடினான். பாவமன்னிப்புக் கேட்டான். அது மட்டுமல்ல.

"பாதிரியார் அடிபட்டு இறக்கும் போதும் எங்களுக்காகப் பிரார்த்தனை செய்தார். அதைப் பார்த்ததும்தான் எங்கள் தவறு எங்களுக்குத் தெரிந்தது!" என்று கண்ணீர் மல்கக் கூறினான்.

அதோடு அவன் பாதிரியாரின் சடலத்தையும் அவரது நண்பரிடம் கொடுத்தான்.

– நன்றி: [illegible]

# ஜப்பானியக் குரு

பேராசிரியர் ஒருவர் இருந்தார். அவர் ஒரு சமயம் 'நான்-இன்' (NAN-IN) என்ற ஜப்பானியக் குருவிடம் பல விவரங்களைக் கேட்டுத் தெரிந்து கொள்ளவேண்டும் என்று விரும்பினார்.

அதனால் பேராசிரியர் ஒரு நாள் குருவைத் தேடிச்சென்றார்.

அந்த ஜப்பானிய குரு ஒரு குடிசையில் இருந்தார்.

இந்தப் பேராசிரியர் ரொம்ப தூரம் நடந்து அந்தக் குடிசைக்கு வந்து சேர்ந்தார்.

அவரிடம் குரு, "நீங்கள் மிகவும் களைப்பாகக் காணப்படுகின்றீர்கள்... கொஞ்சம் இளைப்பாறுங்கள்... உங்களுக்குத் தேநீர் தயார் செய்கிறேன்... ஒரு கோப்பை தேநீர் அருந்திய பிறகு நாம் கலந்துரையாடலாம்!" என்றார்.

இவ்விதம் குருசொல்லிவிட்டு தேநீர் தயாரிப்பதற்காக வெந்நீர் கொதிக்க வைத்தார்.

அதே சமயம் அவர் பேராசிரியரையும் லேசாகக் கவனித்தார்.

ஒரு பக்கம் தண்ணீர் கொதிக்கிறது... இன்னொரு பக்கம் பேராசிரியரும் கொதித்துக்கொண்டிருக்கிறார்.

தேநீர் பாத்திரத்திலிருந்தும் சத்தம் வந்து கொண்டிருக்கிறது.. பேராசிரியரிடமிருந்தும் சத்தம் வந்து கொண்டிருக்கிறது!

ஏனென்றால் அவர், 'இந்த குருவிடம் என்ன கேட்பது... எப்படி கேட்பது...எங்கே இருந்து ஆரம்பிப்பது...' என்றெல்லாம் தனக்குத்தானே கேட்டுக்கொண்டு தன்னைத் தயார் செய்து கொண்டிருந்தார்.

அந்தப் பக்கம் தேநீரும் தயாராகிவிட்டது.

ஜப்பானியக் குரு சிரித்துக் கொண்டே இதையெல்லாம் கவனித்தார்.

அதன் பிறகு அவர் ஒரு கோப்பையில் தேநீரை ஊற்ற ஆரம்பித்தார்.

பேராசிரியர் கோப்பையைக் கவனித்தபடியே இருந்தார். கோப்பை நிரம்பிவழிய ஆரம்பித்தது.

அதைப் பார்த்து பொறுக்க முடியாமல் பேராசிரியர், "நிறுத்துங்கள்... கோப்பையில் இனி மேல் கொஞ்சம் கூட தேநீர் ஊற்ற முடியாது... உங்களுக்கு என்ன பைத்தியமா?" என்று கத்தினார்.

இப்போது அந்தக் குரு சொல்கிறார்:-

"இதே நிலையில்தான் இப்போது நீங்களும் இருக்கின்றீர்கள்... நீங்களும் உங்கள் சொந்தக் கருத்துக்களாலும், எண்ணங்கள் என்ற கோட்டைகளாலும் நிறைந்திருக்கின்றீர்கள்... நீங்கள் உங்கள் கோப்பையைக் காலி செய்யாத வரையில் நான் உங்களுக்குப் புதிதாக என்ன கொடுத்துவிட முடியும்?" என்றார் குரு.

'கோப்பை நிரம்பி விட்டது. அது இனிமேல் கொள்ளாது' என்ற விழிப்புணர்வு அந்தப் பேராசிரியருக்கு இருந்தது. ஆனால் தன்னைப் பற்றிய விழிப்புணர்வு அவருக்கு இல்லை!

அவர் தன்னுடைய சொந்தக் கருத்துக்கள், கோட்பாடுகள், தத்துவங்கள் ஆகியவற்றால் நிரப்பப்பட்டுப் பொங்கி வழிந்துகொண்டிருக்கிறார்.

அதனால் ஜப்பானிய குரு, "நீங்கள் ஏற்கனவே அதிகம் அறிந்திருக்கிறீர்கள்.. அதற்கு மேலும் நான் உங்களுக்குப் புதிதாக எதையும் கொடுக்க முடியாது!" என்று கூறினார்.



மேலும் அவர், "என்னைத்தேடி வருவதற்காக நீங்கள் மிகவும் சிரமப்பட்டிருக்கின்றீர்கள். வீணாகப் பிரயாணம் செய்து வந்திருக்கிறீர்கள். நீங்கள் உங்கள் கோப்பையைக் கொஞ்சம் காலியாக வைத்திருந்தால் நான் அதில் கொஞ்சமாவது ஊற்ற முடியும்!" என்று தெரிவித்தார்.

'கோப்பையைக் காலிசெய்' என்றால், 'மனதைக் காலி செய்!' என்பது பொருள். ஏனென்றால் அங்கே 'நான்' என்ற ஆணவம் பொங்கி வழிந்து கொண்டிருக்கிறது. ஆணவம் அங்கு இருக்கும் வரையில் வேறு எதையும் அங்கு கொண்டுபோய்ச் சேர்க்க முடியாது.

அதனால்தான், "கோப்பையைக் காலிசெய்.... இல்லாவிட்டால் அதை வீசி எறிந்துவிடு" என்று ஒரு பெரியவர் கூறியிருக்கிறார்.

"கோப்பையை எறிந்து விடு" என்று சொன்னால் அதற்கு, "நான் வெறும் புறமாக (எண்ணங்களுக்கு வெளியே) இருக்கிறேன் என்ற உணர்வுகூட இல்லாமல் இருக்கவேண்டும்" என்பதுதான் பொருள்.

ஒருதடவை சீடன் போதி தர்மரிடம் வந்து, "ஐயா! நீங்கள் என்னை வெறுமையாக இருக்கச் சொன்னீர்கள்.... நான் இப்போது வெறுமையானவன் ஆகிவிட்டேன்.... நான் மேற்கொண்டு என்ன செய்யவேண்டும்?" என்று கேட்டான்.

அதற்கு போதிதர்மர் ஒரு கம்பை எடுத்து அவன் தலையில் அடித்தபடியே, "போய் அந்த வெற்றுத் தன்மையையும எறிந்துவிட்டு வா!" என்றார்.

"நான் காலியாக இருக்கிறேன்" என்றால், அதிலேயும் 'நான்' இருக்கிறது இல்லையா..... அந்த 'நான்' காலியாக இருக்க முடியாது. ஆகவே நீ வெறுமையானவன் என்று சொல்ல முடியாது!" என்பது அவருடைய கருத்து.

– தென்கச்சி சுவாமிநாதன் –

## கல்வி கரையில....

பெருந்துறவி பரத்வாஜர், 'வேதங்களைக் கற்று வல்லுநராக வேண்டும்' என்று நினைத்தார் அதனால் அவர் கருத்தூன்றி வேதங்களை நூறு ஆண்டுகள் கற்றார் என்றாலும் அவரது வேதப்படிப்பு முடியவில்லை.

பரத்வாஜர், "இந்திரனே! என்வேதப்படிப்பு முடியவில்லை. என் ஆயுள் இன்னும் நூறுஆண்டுகள் நீடிக்க வரம் தரவேண்டும்" என்று கேட்டார். "அப்படியே ஆகட்டும்" என்று சொல்லிவிட்டு இந்திரன் மறைந்தார்.

அடுத்த நூறுஆண்டுகள் கடந்தன. இந்திரனை நினைத்தார் அவர். இந்திரன் தோன்றினார். "இருநூறு ஆண்டுகள் படித்தும் என் வேதப்படிப்பு முடியவில்லை. இன்னும் நூறு ஆண்டுகள் என் ஆயுளை நீடித்தரவேண்டும்" என்று வேண்டினார்.

"அப்படியே வரம் தந்தேன்" என்று சொல்லிவிட்டு மறைந்தார் இந்திரன்.

மறுபடியும் நூறு ஆண்டுகள் கழிந்தன. மீண்டும் பரத்வாஜர் இந்திரனை நினைத்தார். அவர்முன்னால் இந்திரன் தோன்றினார். பரத்வாஜர், "இன்னும் என் வேதப்படிப்பு முடியவில்லை. மேலும் நூறுஆண்டுகள் என் ஆயுளை நீடித்தரவேண்டும்" என்று வேண்டினார்.

'கல்வி கரை காண முடியாதது. எவ்வளவு ஆண்டுகள் படித்தாலும் முழுமை பெறமுடியாது' என்பதைப் பரத்வாஜருக்கு உணர்த்த நினைத்தார் இந்திரன்.

"பெருந்துறவி பரத்வாஜரே! அதோ அங்கிருக்கும் அந்த மூன்று பெரிய மலைகளைப் பாருங்கள். தாங்கள் படிக்க வேண்டிய வேதக்கல்வியின் அளவை அவை குறிக்கின்றன. அவற்றின் அருகில் மூன்று கைப்பிடி மண் கிடக்கின்றன பாருங்கள். நீங்கள் இதுவரை படித்த வேதக்கல்வியின் அளவை அவை குறிக்கின்றன. எத்தனை இலட்சம் ஆண்டுகள் நீங்கள் படித்தாலும் கல்வியில் கரை காண இயலாது" என்றார் இந்திரன்.

வேதககல்வியின் எல்லையற்ற தன்மையை உணர்ந்த பரத்வாஜர் வியப்பில் மூழ்கினார். இந்திரன் அங்கிருந்து மறைந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்மொழி

இயலிசை நாடகம் என மூன்றாய்
இலங்கும் எம்தமிழ் முத்தமிழாம்
பயனுடை நூல்கள் பலப்பலவும்
பைந்தமிழ்மொழியிற் பயில்கிறதாம்.

இலக்கண இலக்கியத் துறைகளிலே
இன்றமிழ் நூல்கள் பலப்பலவாம்
நலமொடு விளங்கும் நற்றமிழே
நாநிலம் புகழும் நன்மொழியாம்.

அகத்தியர் முதலாம் ஆன்றோரும்
அழகுக் குமர ஆண்டவனும்
செகமதில் வளர்த்த செந்தமிழாம்
சேர்புகழ் கொண்ட சீர்தமிழாம்.

அமிழ்தென இதற்கு மறுபெயராம்
ஆன்றோர் இட்ட அரும்பெயராம்
தமிழினிமை கண்டே அயலாரும்
தாமும் கற்ற தண்டமிழாம்.

ஐம்பெருங் காப்பியங் கொண்டதுவாம்
அருந்தமிழ் மொழியே புகழுடைத்தாம்
கம்பன், கச்சி, காளமேகம்
கவிகள் படைத்த கனிமொழியாம்.

நுணுகிப் பொருளை விளக்கிடவே
நூலோர் வகுத்த சொற்பலவாம்
அணுகிப் பார்த்தால் அதன் சுவையே
அமிழ்தம் போலே இனித்திடுமாம்.

நாளும் பொழுதும் தானறிந்த
நற்புகள் கொண்ட மொழிகளிலே
நாளும் இனிமை சேரும் மொழி
நற்றமிழ் என்றான் பாரதியே.

சிலேடை முதலாம் அணிகளினால்
சீராய்ப் பொருளை விளக்கிடலாம்
மலைபோற் புகழுடை மொழியிதுவாம்
மண்டலம் போற்றும் மொழியிதுவாம்.

உயிரும் மெய்யும் உயிர்மெய்யும்
உலவும் ஆய்த எழுத்ததுவும்
பயின்று வழங்கும் பைந்தமிழைப்
பாவலர் நாளும் வளர்த்தனரே.


இயற்சொல் திசைச்சொல் திரிசொல்லாம்
இலங்கும் வடசொல் சேர்தமிழாம்
பெயர்வினை இடையுரி எனநான்கு
பெரும்பிரிவுடைய பெட்புடைத்தாம்.

அயல்நாட் டறிஞர் போப்பையர்
அகராதி சமைத்த அருந்தமிழாம்
பயனுடை சொற்கள் பைந்தமிழிற்
பாரோர் புகழப் பலவுண்டாம்

இச்சகம் மீதில் இன்றமிழை
இனிதே வளர்க்க வேண்டுமென
முச்சங்கம் வைத்து முன்னோர்கள்
முனைப்பொடு வளர்த்த முத்தமிழாம்.

உலகம் போற்றும் மறைநூலாம்
உத்தமக் குறளைத் தந்தமொழி
நலமே என்றும் வாழியவே
நாநிலம் போற்ற வாழியவே!

- செ.சுதாகரன் -
மட்டுவில் வடக்கு.




# பூமியின் பாரம்

பூமியதன் கன்னத்தில் பொங்குகிற கடற்கண்ணீர்
ஏனின்னும் வற்றவில்லை?
ஏனென்றால்....'பூமியதன்
மானுடனைப் பற்றிய மனக்கவலை' தினம் கூடிப்
போகிறது;
நரனின் புன்செயலால் புண்பட்டு
நாகரீகத் துள்ளும் நரம்பு நோகப் புவியுளது!
ஒருவேளை.....
மனிதர்கள் ஒருவருமே இல்லாத
பொழுது புவியினது 'கண்ணீர்க் கடல்' வற்றும்!
அழுது சுற்றும் புவிஅன்று
ஆறுதலாய் நின்று விடும்?

-அரு[illegible]-

# சினிம(ா)க்கள்

கட்டார் 'ஓவர்ரைம்' இல்
அப்பர் –
கஸ்ரப்பட்டுக் காசனுப்ப
கொட்டாவி விட்டு – சினிமா
கொண்டாட்டச் செலவிங்கு!
பாட்டி முதல் பாலர் வரை
பஞ்சமில்லை பார்த்து ரசி!

'படியப்பன்' அம்மா சொல்ல
படையப்பா வோடு பையன்!
விடிய விடிய வீடியோ!
உடை நழுவும் ஊத்தைகளும்
உதவாத கேடிகளும்
தடையில்லை உந்தனுக்கு
தாராளம் பார்த்து ரசி!
சமர்க்களத்தோடு எங்கள்
சந்ததி போக – இங்கு
அமர்க்களம் சினிமாவில்
அஜித்தோடு நாம்!

மிலேனிய மாண்டில்
மிதக்கப் போகின்றோம்.
கணனிக்குள் கூட
காதல் வைரஸ்!
கன்னிமேரியே போய்
காதல் மரியா வந்தாச்சு!
ஓ மரியா, ஓமரியா...

கண்டதை எல்லாம்
காப்பாற்றிக் கொள்வோம்.
காறி உமிழ்வதை
கைப்பற்றிக் கொள்வோம்!

அண்டத்தைக் கூட
அசைக்க முயலும்
விஞ்ஞானம் வளர்ந்த
வியத்தகு உலகிது!

மனிதர்கள் –
வேறோர் கிரகம் போய்
வேளாண்மை செய்யலாம்!
இறக்கையும் இயந்திரமும்
இல்லாமல் பறக்கலாம்!
ஆயினும்,
எவனோ சொன்னது
எமக்கும் பொருந்தும் –
கூரை ஏறி
கோழி பிடிக்கத் தெரியாதவன்
வானம் ஏறி
வைகுண்டம் போவானோ?

- மானியூர் ரட்ணேஸ் -

# அமுதைப் பொழியும் நிலவே அருகில் வராத தேனோ?!

வானத்தின் மேலே போகும்
மங்கையே என்னை வந்து
மோனத்தின் கொடுமை நீக்கி
முகத்தினைக் காட்டு என்ன,
நாணித்தான் ஏகினாயோ? – நிலவே
நம்பிக்கை தானிழந்தாயோ?

இரவிலே பலநாள் உந்தன்
ஒளியிலே உணவு கொண்டு
விரலினாற் சுட்ட உன்னை
வியந்து என் தம்பி பார்த்தான்!
அருகிலே அழையென் றென்னை
அடம்பிடித் தழுது நின்றான்!

பூரணை ஒளி மேல்பட்டால்
பொங்கிய மனதும் அடங்கிப்
பாரணை செய்து மனத்தைப்
பண்பினால் சாந்தமாக்கும்
ஊருணி போல நின்றென்
உள்ளமே ஆகிக்கொண்டாய்!

மின்னொளி வந்த பின்னர்
உன்னை நான் பார்க்கவில்லை
என்றுதான் கோபமோடி?
என்னடி, பதில தெங்கே?
கண்மணி இங்கே "கரண்ட்கட்"
கதைப்பமோ, சற்று வாடி!

உச்சியில் ஏறி நின்று
உலகத்தைச் சுற்றி வந்தாய்,
உதைபடும் தமிழர் எங்கும்
உழல்கிற நிலையும் கண்டாய்
வதையினைக் கண்ட மதியே – உந்தன்
வாயினைச் சற்றுத் திறவேன்!

உண்மைகள் சொல்லல் இங்கு
உயிரிற்கு ஆப்பு வைக்கும்
தன்மையைக் கண்டுதானோ
தாழினைப் பூட்டிக் கொண்டாய்?
வெண்மதி உன்னால் தான்டி
[illegible]

- [illegible]புத்திரன் -

# சுதந்திரம்

ஈர்த்தெடுத்த எந்தன் காதற் கண்ணாள்
இப்பவந்து வீட்டில்கேளும் என்றாள்
போர் தொடுத்த 'வீரன்' அவள் அப்பா
போட்டு வைத்தான் நிபந்தனையை தப்பாய்!

சூட்டொலிக்கு நடுக்கமில்லா உடலும் – வெறும்
துவக்கொலிக்கு வெருளலில்லா உரமும்
வாட்டுகின்ற துன்பம் வரும் போதும் – நன்கு
வாழ நேர்மை என்பதுவும் வேண்டும்!

என்று சொன்னான் தன்மகளைத் தரவே
என்று பல நிபந்தனைகள் இடவே
நன்று நன்று எந்தன் நிலை கேளும் – இதில்
நன்மையேது தீது ஏது கூறும்!

சாவடிமுன் இறங்குகிற நிலையில் – சும்மா
தடவிட முன் உடல் முழுதும் நனையும்
காவடி போல் ஆடியுடல் நடுங்கும் – துவக்கை
கண்டவுடன் மூச்சு கூட ஒடுங்கும்

எந்தன் நிலை இந்தநிலை என்றேன்
இங்கு உள்ளார் கண்டநிலை யென்றேன்
'வந்து வாய்த்த வைரவராய் ஆனீர் – இனி
வாழமாட்டன், கோவணத்தில் போம்நீர்'

என்று போன சுதந்திரமாம் பெண்ணாள்
ஈனமுள்ள இடத்தில் வாசம் பண்ணாள்!
வென்று பாய்வோர் வாழமடர் காட்டில் – இப்ப
வேலையாகி உள்ளதாகக் கேள்வி!

- கி.குருபரன் -

# மழைத்தேர்தல்

வாடைக் காற்றெழுந்து வழமைபோல்
கோடையின்மேல்
நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவர –

குளிர்த்துண்டை
தோள்களிலே போர்த்த தொண்டர்களாய்
இலை தளிர்கள் 'நாளை செழிப்பு வரும்'
என்று தலையாட்ட

வேளைக்கே சேர்த்த கூட்டத்தார்
கைதட்டல் போலக் கடல் எழுந்து
கரைதட்ட
இவ்வொலியில்
கூழில்லை என்று மீனவக் குடில்களுக்குள்
குழறுகிற சிறிசுகளின் குரல் அடங்க –

ஆழத்தில் கிடக்கும்
அழுக்கு நிணங்களின்மேல்
காளான்கள் அமைதிக்
குடைபிடிக்க.....

இனியொரு
புது விதியைச் செய்வமெனப் புறப்பட்ட
பட்சி சில
வைரத்துகழ்களென
மழைத்துளிச் சலுகைகளால்
இறகு கனக்க இதங்கண்டு
தங்கள்
வைராக்கியம் விட்டு வானம் தொழுதலென்ற
இலக்கை மறந்து இடைநடுவில்

தாழ்ந்து பறந்து தடுமாறி
கீழ் விரிந்த
ஆழ்ந்த கடல்மேலே ஆளுயர அலைமாலை
சூடி மயங்கிச் சுகம் காண
இந்தப்

பேடிகளைப் பாரென்று
பெருங்கடலோ வான் இடுப்பில்
நுள்ளிவிட வானம் நுதனமாய்
மின்னலென்ற
கொள்ளிச் சிரிப்பைக் குபீரென்று
பிரசவிக்க....

கடலுக்கு மட்டும் புரிகின்ற
மழைத்தேர்தல்
முடிவுகளை உணராது
வீணாகத் தம்முள்ளே
உட்கட்சி மோதலுக்கு உசாராகிக்
கோஷமிடும்
மாரித் தவளைகளின் அறிக்கை மறுப்பறிக்கை
வீர சபதங்கள் வெற்றி முழக்கமென
ஊரெல்லாம் மழைத்தேர்தல் உலாவரும் இப்பருவம்

இந்த மழையேனும் இறைப்பில்லா இத்தறைக்கு
நன்மை தருமோ?
நம்பிக்கை வீண்போமோ?

- ச.முகுந்தன் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆஸ்திரேலியாவிலும் ஒரு செம்மணி...

## உயிரை உறையவைக்கும் உண்மைச்சம்பவங்கள்!

**மு.சிவநேசன்**

இலங்கையில் இனப்பிரச்சினை என்று தாயகத்தை விட்டுத் தரணியெங்கும் ஓடுகிறார்கள் தமிழர்கள். இங்கு வெளிப்படையாக எதிர்நோக்கப்படும் பிரச்சினைகள் பல போகுமிடங்களிலெல்லாம் சந்திக்காது என்றல்ல. அங்கெல்லாம் கூட நாளாந்தம் பல அவலங்களைச் சந்திக்கத்தான் வேண்டியிருக்கிறது. பல படு பயங்கரமான வெளிநாட்டுச் செய்திகளும் அடிக்கடி பத்திரிகைப் பக்கங்களைப் பிடித்துக்கொள்கின்றன.

பெண்கள் தனித்து திரிவது முன்னேறிவிட்ட நாடுகளிலும் கூட ஆபத்தான சமாச்சாரமாகவே இன்றும் இருக்கிறது. சில சந்தர்ப்பங்களில் காவலுக்குப்போகும் ஆண்கள் கூடக் காலி பண்ணப்பட்டுவிடுகிறார்கள்.

புகலிடம் தேடிப்போன இடங்களில் புதைகுழிகளைக் கண்டுகொண்டவர்களுக்கோ குறைச்சல் இல்லை. உல்லாசமாக உலகை வலம்வரப் புறப்பட்ட பல இளம்பெண்கள் சுவடு தெரியாமல் அழிக்கப்பட்டிருக்கிறார்கள்.

1990ஐ அடுத்துவந்த ஆண்டுகளில் ஆஸ்திரேலியாவில் இப்படியான மர்மக்கொலைகள் இடம்பெற்றிருந்தன. போன இடம் தெரியாமல் பல இளம் பெண்கள் மறைந்துபோயினர். பொலீஸாரின் பெருமெடுப்பிலான தேடுதல் முயற்சிகள் எதுவித பலனையும் கொடுக்கவில்லை.



பெலென்குளோ அரசவனப் பிரதேசத்தில் தேடுதல் நடத்தும் ஆஸ்திரேலியாப் பொலீஸார்.

கணனித் திரைகளில் குற்றவாளிகள் பட்டியலைத் துளாவிக் கொண்டிருந்தார்கள் அவர்கள். பட்டியல்கள் நீண்டு கொண்டேபோயின. குற்றம் இழைப்போரின் பட்டியல்கள் அவர்களின் செயல்களுக்கேற்ப இடம், விவரம், தகவல்களுடன் நிரைப்படுத்தப்பட்டன. ஆயுதங்கள், வாகனங்கள் மற்றும் இதர பல சாதனங்களை கையாளும் லட்சக்கணக்கானோரின் விவரங்களை பெருகிவரும் குற்றச்செயல்களோடு பொருத்துவது ஒன்றும் சுலபமான காரியம் அல்லவே.

* * *

டெபோறாவின் தாய் பற்றீசியா எவரிஸ்டிற்கு ஏக்கம் பிடித்துக் கொண்டது. மூன்று நாள்களாக பத்தொன்பது வயதுப் பருவ மகளின் தொலைபேசி அழைப்பைக் காணோம் என்ற ஏக்கமே அது.

டெபோறாவின் அழகோ காண்பவரைக் கிறங்கடிக்கும். நீலநிற விழிகள் - கடல்போலும் ஆழமானவை அவளது



மர்மக்கொலைகளின் சூத்திரதாரி மிலற்

பார்வைகள். அவளோடு அவளது சினேகிதி ஜேம்ஸ் ஜிப்சன் கூடவே சென்றிருந்தாள். அவளுக்குமோ வயது பத்தொன்பதுதான்.

1989 இன் கிறிஸ்மஸ் கொண்டாட்டங்களை முடித்துக்கொண்டு இருவரும் டிசம்பர் 28இல் வீட்டை விட்டுக் கிளம்பி சிட்னி நகருக்கு வந்திருந்தனர். சிட்னி வந்திறங்கியதும் வீட்டுடன் தொலைபேசியில் தொடர்புகொண்டாள் டெபோறா. பின்னர் தொடர்புகள் ஏதும் இல்லை.

பதறிப்போன டெபோறாவின் தாய் ஜேம்ஸ் ஜிப்சனின் வீட்டுக்குத் தொலைபேசியில் தொடர்புகொண்டாள். அங்கும் அதேநிலைமைதான்.

இருவருமே ஒருவாரத்தில் மெல்போன் திரும்புவதாக உறுதிகூறி இருந்தனர். டெபோறாவுக்கான அடுத்த வகுப்புகள்ஆரம்பமாகின்றன. ஜேம்ஸின் சகோதரி மேரி ஆனிற்கு திருமணம் நெருங்கிக்கொண்டிருந்தது. எனினும் இருவருமே வீடுதிரும்புவதாக இல்லை.

நண்பர்கள் துண்டுப்பிரசுரங்களைத் தயாரித்து விநியோகித்து தேடுதல் முயற்சிகளை முடுக்கிவிட்டனர். பெற்றோர் இவர்களின் படங்களைக் காட்டிக்காட்டி சிட்னிக்கும் மெல்போனுக்கும் இடைப்பட்ட சுமார் 400மைல் நீளமான சாலையின் இருமருங்கும் பலரையும் விசாரித்தார்கள். வழமையாகப் போய்வரும் டிறக் சாரதிகள், கடைகள், எரிபொருள் நிலையங்கள் என்று சாத்தியமான பலரிடமும் பெற்றோர் அலைந்தனர். எவரும் உருப்படியான தகவல்களைத் தராதது அவர்களுக்கு ஏமாற்றமாக இருந்தது.

பிள்ளைகள் விபத்தில் சிக்கியோ நினைவிழந்தோ இருப்பார்கள். என்றோ ஒருநாள் தம்மிடம் வருவார்கள் என்ற எதிர்பார்ப்பும் பெற்றோரிடம் இருந்தது. நாள்கள் யுகங்களாகக் கழிய அடுத்த கிறிஸ்மஸ் நெருங்கியும் துப்பு ஏதும் துலங்காததுவேதனைத்தீயை வளர்த்து விட்டிருந்தது.

டெபோறாவுக்கான கிறிஸ்மஸ் பரிசுகளைக்கூட தாய் தயார்செய்தாள். மகள் வந்து குதித்துவிட்டால் அவளை மகிழ்விக்க வேண்டும் என்ற ஆதங்கம். தங்கச் சங்கிலி ஒன்றும் மேக்கப் சாதனங்களும் அவள் வரவுக்காகக் காத்திருந்தன. அவள் வருவாளா?

* * *

பிரிட்டனில் இருந்து உலகினை அரை வலம்வந்து ஆஸ்திரேலியாவில் இறங்கி இருந்தார்கள் றேயும் அவனது மனைவி கில்லும். 22 வயதான தமது அழகு மகள் ஜோனேயின் மூச்சுப் பேச்சைக் காணோமே என்று அவளைத் தேடியே அவர்கள் வந்துசேர்ந்தனர்.

1991 மே மாதம் பிரிட்டனை விட்டுப் புறப்பட்ட ஜோனே 1992 ஏப்ரல் வரை வீட்டுடன் தொலைபேசித் தொடர்பில் இருந்தாள். பின்பு தொடர்பு துண்டிக்கப் பட்டுவிட்டது.

பிரிட்டனில் இருந்து கொண்டு ஆஸ்திரேலியாவில் இல்லாமல் இருக்கும் மகளைத் தேடுவது மிகவும் கடினமானதாக இருந்தது அவர்களுக்கு.

முதலில் அவளது வங்கியை விசாரித்தான் றே. ஏப்ரல் 15இன் பின்னர் வங்கிக் கணக்குஇயக்கப்படவில்லை என்ற செய்தி பீதியைப் பரவவிட்டது.

ஜோனே ஆஸ்திரேலியாவில் தங்கியிருந்த இடங்கள், நண்பர்கள், ஹோட்டல்கள், பொலீஸ் நிலையங்கள் என்றெல்லாம் தொலைபேசியில் தேடித் தேடி விசாரித்தான் றே. எந்தத் தகவலும் கிட்டவில்லை.

கரோலின் என்ற ஆங்கிலப் பெண்ணுடன் தான் தங்கியிருப்பதாக ஜோனே தனது கடைசித் தொலைபேசி அழைப்பின்போது தெரிவித்திருந்தாள்.

விக்டோரியா மாநிலத்தின் பண்ணையொன்றில் இருவரும் வேலை செய்த விவரங்களைத் தெரிந்து கொண்ட றே கரோலினைக் கண்டு பிடித்துத் தன் மகளைக் கேட்க வேண்டும் என முயற்சிகளை மேற் கொண்டான்.

கரோலினோ கிளாக் என்ற இங்கிலாந்து வங்கி அதிகாரியின் மகள் எனக் கண்டுபிடித்தான் றே. ஆஸ்திரேலியத் தகவல்களின் அடிப்படையில் கிளாக்கைத் தேடிப்பிடித்து விசாரித்த போது அவனும் தனது மகளைத் தேடிக்கொண்டிருப்பது தெரியவந்தது.

ஆக கரோலினும் ஜோனேயும் ஒன்றாகக் காணாமற் போய்விட்டார்கள் என்ற தகவல் ஊர்ஜிதமாகிவிட்டது. இப்படி உலகின் மூலை முடுக்கெல்லாம் தினசரி எவராவது காணாமற் போய்க்கொண்டேயிருப்பார்கள்.

அவரவர் தத்தமது உறவுகளைத் தேடித் தவிர்பார்களே தவிர அடுத்தவர்களுக்கெல்லாம் அதைப்பற்றிக் கவலைப்பட நேரமேது? ஆஸ்திரேலியாவில் தொலைந்துவிட்ட தமது பிள்ளைகளுக்காக ஏங்கும் இரு பெற்றோர்களும் பல ஆயிரம் மைல் தொலைவில் பிரிட்டனில் இருந்து கொண்டு எதைச் சாதிக்க இயலும்?

எனவேதான் 1992 ஒகஸ்ட் 24இல் ஆஸ்திரேலியாவுக்குப் புறப்பட்டனர் றேயும் அவனது மனைவி கில்லும். அந்தப் பரந்த தேசத்தில் வந்து இறங்கி விட்டால் ஏதாவது வெட்டிவிழுத்தி விடலாம் என்றில்லை.

அவர்கள் நாடுமுழுவதும் மகளைத் தேடிச் சல்லடை போடலாயினர். பொலீஸாருடன் அடிக்கடி தொடர்புகளைக் கொண்டிருந்தனர். எனினும் காணாமற்போன மகளினதும் அவளது சிநேகிதியினதும் தகவல்கள் ஏதும் உருப்படியாகக் கிட்டவில்லை.

* * *

ஆஸ்திரேலியாவில் காணாமற் போனோர் சங்கமோ ,அவர்களைப்பற்றி ஆராயும் மனித உரிமை அமைப்புக்களோ அவசியமாகப்படவில்லை.

சாதாரணமாக இயங்கிக் கொண்டிருக்கும் நாட்டில் பொலீஸ்துறைக் கணனிகளே பட்டியலை வைத்திருந்தன. நிலைமை இப்படி இருக்கையில் விடயங்களை ஒன்றோடொன்று தொடர்புபடுத்தி ஆராய எந்தக்காரணங்களும் கூட இருக்கவில்லை.

ஜேர்மனியில் இருந்து 1991 ஜனவரி 19இல் ஆஸ்திரேலியா வந்திறங்கிய 21 வயதான சிமோன் ஷிமி கூடக் காணமாற்போயிருந்தாள். தனது சினேகிதிகளுடன் லிவப்பூல் என்ற இடத்தில் தங்கியிருந்துவிட்டு மெல்போன் விமான நிலையத்துக்குத் தாயை வரவேற்கப் புறப்பட்டவேளையில் அவளைக் காணவில்லை.

நகரங்களில் தனித்து உலாவிக் காணாமற்போனவர்களைக் காணவில்லை என்று தெரிந்துகொள்ளவே பல மாதங்கள் பிடிக்கக்கூடும். அடுத்தகணமே தேடத்தொடங்க உன்னிப்பாகக் கவனிக்கும் உறவுகள் அங்கே கிடையாது.

ஷிமியின் தாய் மெல்போனில் வந்து இறங்கியதுமே அவளது தாயிடம் மகளைக் காணவில்லை எனச் சினேகிதிகள் முறையிட்டனர். பயனேது?

* * *

1991 டிசம்பர் 25 - கிறிஸ்மஸ் அன்று வீட்டுக்குத் தொடர்பு கொண்டவன் கபோர். அந்த 21 வயது இளைஞனைப் பின்னர் தொடர்புகொள்ளத் தகப்பனால் இயலவில்லை. ஆஸ்திரேலியாவில் இருந்து இந்தோனேஷியாவுக்குப் புறப்படஇருந்த தனது மகனின் விமான டிக்கெட்டுக்கள் பாவிக்கப்படவில்லை என்பதையும் அவனுக்கும் அவனது காதலியான அன்ஜாவுக்கும் என அனுப்பப்பட்ட பரிசுப்பொருள்கள் அவர்களால் பெறப்படவில்லை என்பதையும் பின்னர் தெரிந்துகொண்டான் தகப்பன்.

ஜேர்மனியிலிருந்து மகனைத் தேடி ஆஸ்திரேலியா வந்திறங்கிய அவன் நான்கு வாரங்கள் அங்கு தங்கியிருந்து பல ஆயிரம் மைல்கள் ஓடித்திரிந்து, பல ஆயிரம் டொலர்களைச் செலவழித்தும் மகனைக் கண்டுபிடிக்க இயலவில்லை.

இருபது வயதுக் கட்டழகி அன்ஜாவுடன் உலாவந்ததுதான் கபோரின் உயிருக்கு உலை வைத்தது என்ற விடயம் கூட அப்போது விளங்கவில்லை. அன்ஜாவின் சகோதரனும் கூட அவளைத் தேடி கபோரின் தகப் [illegible] பரந்த தேசமான ஆஸ்திரேலியாவில் காணாமற்போய் பல ஆண்டுகள் கடந்த நிலைமையில் இவர்களையெல்லாம் யார் கண்டுபிடித்துத் தரப்போகிறார்கள்?

* * *

வசந்த காலத்தின் அழகுக்கோலங்கள் நீலவானில் பொன்னிறம் பரப்ப அந்தக் கிளப்பைச் சேர்ந்த எட்டுப் பேர் பயிற்சிகளைச் செய்துகொண்டிருந்தனர்.

இயூக்கலிப்ரஸ் மரங்கள் நெடிதாக வளர்ந்து, உயர்ந்த அந்தப் பிரதேசம் பெலென்குளோ எனப்படும் அரசவனப் பிரதேசமாகும். சுமார் ஒன்பதினாயிரம் ஏக்கர் விஸ்தீரணம் கொண்ட அந்த வனம் நெடுஞ்சாலையில் இருந்து சுமார் 7 மைல்கள் உள்ளே அமைந்திருக்கிறது. தேடிவருவோர் தவிர ஏனையோர் கண்களுக்கு அது புலப்படாது.

குறித்த இடங்களை இலக்கு வைத்து ஓடிவரும் பயிற்சியாளர்கள் முதலில் ஏதோ துர்நாற்றம் வீசுவதை அவதானித்தனர். மூக்கைப் பொத்திக் கொண்டாலும் கண்கள் தேடாமலா விடும்?

ஏதாவது காட்டு மிருகம் செத்துக் கிடக்கலாம் என நினைத்தவர்கள் கண்களில் அகப்பட்டதோ குச்சிகளும் தடி தண்டுகளும்தான். ஆனால் ஆழமாகப் பார்த்தபோது ஆறடி நீளமான அழுகிச் சிதையும் உடலொன்று கண்ணில் பட்டது. தலை மயிர்க்கற்றை, ரீசேட், சப்பாத்து என்பன ஒரு மனித உடலை உருவகப்படுத்தின.

தமது மோபைல் தொலைபேசி மூலம் பொலீஸாருக்கு உடனடியாகத் தகவல் தந்தனர் அவர்கள். இருள் கவியும் நேரம் அங்கே பொலீஸார் அணித்திரளத் தொடங்கினர்.

அந்தப் பகுதியில் கண்ணில்பட்ட குச்சி குப்பை ஒன்றும் விடாமல் கமெராக்கள் பிளாஷ்பண்ணித் தள்ளின. முகம் குப்புறக் கிடக்கும் ஒரு பெண்ணின் உடல் கண்ணில்பட்டது. நீல நிறமான ஜீன்ஸ், நீல ரீசேட் - தோள் வரை உயர்த்தப்பட்டுக் கிடந்தது. கறுப்புநிறச் சப்பாத்து இப்படியாகத் தகவல்கள், தடயங்கள் சேகரிக்கப் பட்டன.

மறுநாள் செப்ரெம்பர் 20-1992



பெலென்குளோ அரசவனப் பிரதேசத்தில் தேடுதல்பணி இடம்பெற்றசமயம் அப்பகுதியை முற்றுகையிட்டிருந்த வாகனங்கள்.

விடிந்ததும் தேடல்கள் முடுக்கிவிடப் பட்டன. காடு கிடுகிடுத்தது. சுமார் 100 அடி தொலைவில் அடுத்த பெண்ணுடல் படுத்திருந்தது தெரியவந்தது. அரைகுறையாக கிடந்த ஆடைகளும், விடுபட்டுக்கிடந்த இரண்டொரு அணி கலன்களும் பல், எலும்பு அமைப்புகளும் வீசப்பட்டுக் கிடந்த அவர்களை அடையாளம் காட்டின.

சுமார் ஒரு மாதத்திற்கு முன்னர் தமது மகளைத் தேடி ஆஸ்திரேலியா வந்திறங்கியவர்கள்தான் றேயும் கில்லும். அவர்கள் அடிக்கடி பொலீஸாருடன் தொடர்பில் இருந்தனர்.

தமது மகள் ஜோனேயினதும் அவளது சிநேகிதி கரோலினினதும் உடல்கள் கண்டுபிடிக்கப்பட்டதை அறிந்து துடித்தனர் அவர்கள். இப்படிக்காணவா இங்கு வந்து தேடினோம் எனப் புலம்பினர் பெற்றவர்கள்.

உடல்கள் ஆய்வுகூடப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. சுமார் 6 மாதங்கள் இயற்கையோடு ஒன்றிக் கிடப்பில் கிடந்த உடல்களை பரிசோதிப்பதும் தடயங்களைத் தேடுவதும் சிரமாக இருந்தது.

ஜோனேயின் உடலில் 14 வரையான கத்திக்குத்துக் காயங்கள் தென்பட்டன. அவை அவளது மார்பையும் முதுகையும் பதம்பார்த்து இருந்தன. தொண்டையைச் சுற்றி கயிறு இறுக்கி இருந்தது.

கரோலினின் முதுகில் ஒரேயொரு கத்திக்குத்து மட்டும் இருந்தது. ஆனால் தலையில் 10துப்பாக்கி வேட்டுக்கள் பாய்ந்து இருந்தன. இருவரின் உள்ளாடைகளும் உடலோடு காணப்படவில்லை.

அந்தவனப் பிரதேசத்தில் பெருமெடுப்பிலான தேடுதல் ஒன்றை பொலீஸார் முடுக்கிவிட்டிருந்தனர். அங்குலம் அங்குலமாகச் சடலங்கள் கிடந்த பிரதேசம் ஆராயப்பட்டது. அகப்பட்டதோ 10 தோட்டா உறைகள் மட்டும்தான். அவையோ 0.22 றகர் தானியங்கி றைபிளுக்குரியவை எனத் தெரியவந்தது.

அந்த ரகத் துப்பாக்கிகள் 55 ஆயிரம் வரையில் அமெரிக்காவிலிருந்து ஆஸ்திரேலியாவுக்கு இறக்குமதியாகி இருந்தன. அவற்றில் ஒன்றே இவர்களைப் பதம் பார்த்திருக்கிறது. எனவே இந்த ரகத் துப்பாக்கிகளை வைத்திருப்பவர்களின் பட்டியலை கணனியில் தயாரிக்கும் முயற்சிகளை துப்பறியும் பொலீஸார் தொடங்கியிருந்தனர்.

களவாக வைத்திருப்பவர்களைப் பட்டியலிடுவது கடினமான பணி. நேர்மையாக வைத்திருக்கும் அப்பாவிகளை அலசுவது வீண்வேலை. நீண்டு இழுபடும் துப்பறியும் பணிக்கு முடிவேது?

இந்த ஆழமான காட்டுப் பிரதேசத்துக்குள் சாதாரணமாக யாரும் எவரையும் கடத்திவந்து வன்முறையில் இறங்க இயலாது. அதற்கு ஆள் உதவியோ வாகன உதவியோ தேவைப்படும். அதுவும் சாதாரண வாகனங்கள் இக்கரடுமுரடான பாதைகளில் இறங்க இயலாது. பிக்கப் ரக நான்கு சக்கர வலு கொண்ட வாகனங்களே இங்கு நுழைந்து மீள இயலும்.

அந்தப் பிரதேசத்தைச் சார்ந்த அத்தகைய வாகனங்களைக் கொண்டிருப்போரின் பட்டியல்கள் கணனி மயமாக்கப்பட்டன. இவற்றில் இனி குற்றச் செயல்களில் ஈடுபடுவோர் 0.22 றகர் ரக துப்பாக்கி வைத்திருப்போர் என்றெல்லாம் விவரங்கள் குறுக்குப் பரிசீலனை செய்யப்பட்டன. எனினும் பட்டியல்களின் நீளத்தைக் குறைக்க இயலவில்லை. எனவே குற்றவாளியை இனங்காண்பது தொடர்ந்தும் கடினமாகவே இருந்து வந்தது. 6 மாதங்களாக எந்த முன்னேற்றமும் விசாரணைகளில் ஏற்படவில்லை.

* * *

இயற்கைப் பிரியர்கள் இந்த வனப் பிரதேசத்தில் உலாவருவது இயல்பு. அவசர உலகில் ஆறுதலாக ஆறஅமர-வாகனத்தில் உலாவர எல்லாம் இந்தப் பிரதேசம் வாய்ப்பானது.

நெடிது வளர்ந்து நிற்கும் இயூகலிப்ரஸ் (மின்சாரம்) மரங்கள் சோலை கொள்ள - சருகுகளும் புல்வெளியும் மெத்தை விரிக்க - இதமான இயற்கை பிரியர்களை அரவணைக்கும் இடம் இது.

93 இன் ஒக்டோபர் 5ஆம் திகதி அன்று அங்கு தனது பிக்அப்பில் வந்து ஓர் இடத்தில் குதித்தான் பிறயர் என்பவன். அடிக்கடி விறகு பொறுக்க இப்பிரதேசத்துக்குப் பிக்அப்பில் வருவதும் அவனது வழமை.

அவனது வழியை மறிக்குமாப்போல் ஒரு கால் எலும்பு கண்ணில் பட்டது. அது கங்காரு ஒன்றின் எலும்பாக இருக்கலாம் என எடுத்து ஆராய்ந்தான். இல்லை, இல்லவே இல்லை. அது ஒரு மனிதத் தொடை எலும்பு.

(XI ஆம் ப்க்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னி வாழ்வும் வடக்கிருப்போரும்

"அம்மா..............."

சிந்தனை வசப்பட்டிருந்த வாசுகி, மகள் மாலாவின் குரல் கேட்டுத் திரும்பிப்பார்த்தாள். அவளுடைய சிந்தனைத்தொடர் அற, 'என்ன?' என்பது போல மகளை ஏறிட்டு நோக்கினாள்.

"அரிசி கொஞ்சம்தானம்மா இருக்கு..."

மாலா மெதுவாகக் கூறினாள்.

"இண்டைக்கு பத்தாதே?"

ஈனசுரத்தில் வாசுகியின் வார்த்தைகள் வெளிவந்தன.

"இண்டைக்குமட்டும்தான் போதும். போடட்டே?"

தாயின் அனுமதியைக் கோருவது போலப் பார்த்தாள்.

"கிடக்கிறதைப்போடு. நாளையிற் பாட்டைப்பற்றி நாளைக்கு யோசிப்பம். தெய்வம் ஏதோ வழிவிடும்தானே?"

வெளிப்பக்கமாக வெறித்துப் பார்த்தபடி, பதிலளித்தாள் வாசுகி.

"அப்ப சரியம்மா..... கறிக்கு ஒண்டுமில்லை, பருப்புக் கொஞ்சம்தான் கிடக்குது....."

"ஒரு கறி போதும், நாங்கள் ரண்டு பேரும்தானே. பருப்பை மட்டும் ஆக்கு."

அவளுடைய வார்த்தைகளைத் தொடர்ந்து ஒரு நீண்ட பெருமூச்சும் வெளிப்பட்டது. வார்த்தைகளில் ஒரு வித விரக்தி இழையோடியது.

"நிவாரணம் இப்போதைக்கு வராது போல இருக்கு. எல்லோரும் அப்படித்தான் கதைக்கினம்."

"ம்... மாலா, அவங்கள் எப்பவெண்டாலும் ஒழுங்காய்த் தந்தவங்களே? ஆடிக்கொருக்கால கார்த்திகைக்கொருக்கால்தானே வாறது. அதை நம்பி இருக்கேலாது. தாற நேரம் கண்டுகொள்ள வேண்டியதுதான். நாளைக்கும் தெய்வம் விட்ட வழி." என்று இழுத்தாள் வாசுகி.

"ஏதோ எல்லாத்துக்கும் தெய்வம், தெய்வம் எண்டு சொல்லிக்கொண்டிருக்கிறியள். ஆனால் அந்தத் தெய்வத்தாலை அப்பாவையோ தம்பியையோ காப்பாற்ற முடியேல்லையே?"

தனது அபிப்பிராயத்தைக் கூறியபடியே சட்டெனத் திரும்பி உள்ளே சென்று மறைந்தாள் மாலா.

மாலாவின் வார்த்தைப் பிரயோகத்தினால் வாசுகியின் உடல் ஒருகணம் சிலிர்த்தது. வெட்டவெளியைப் பார்த்துக்கொண்டிருந்தவள், திடுக்குற்றுத் திரும்பிப் பார்த்தாள், அங்கே மாலா இல்லை.

'அவள் சொல்லுறதிலை என்ன பிழையிருக்கு?'

தனக்குத் தானே கூறிக் கொண்டாள் வாசுகி.

* * *

வன்னிப் பிரதேசத்தில், புதுக்குடியிருப்பில் அமைக்கப்பட்டிருந்த குடிசைகளில் ஒன்றுதான் இக்கதை நடக்குமிடம். குடிசையின் முன்பக்கத்தில் வாசுகி குந்தியிருந்தாள். முழந்தாள்கள் இரண்டையும் இருகைகளாலும் பிணைத்தபடி நெடுநேரமாகச் சிந்தனையில்ஈடுபட்டிருந்தவளை, மாலாவின் குறுக்கீடு இவ்வுலகிற்கு அழைத்துவந்திருந்தது. மாலாவின கடைசிவார்த்தைகள் அவளுடைய சிந்தனைத்தொடரை மீண்டும் புதுப்பித்தது.

ஒரு வாரத்திற்கு முன்புவரை நான்காக இருந்த அவர்களின் குடும்ப எண்ணிக்கை, இப்போது இரண்டாகக் குறைந்துவிட்டது. அவளுடைய கணவன் மகாதேவன், மகன் மாதவன் இருவரும் இன்று இல்லை. இதனை நினைக்கும்போது அவர்கள் இருவரினதும் உருவங்களும் அவள் கண்களுக்குள் நிழலாடின. கூடவே ஒரு பெருமூச்சும் வெளிப்பட்டது.

'அதைப்பற்றி யோசித்து என்ன பிரயோசனம்? எல்லாம் எங்கள் தலை விதி!'

தன்னைத்தானே சமாதானப்படுத்திக்கொள்ள அவள் உள்ளம் முயற்சித்தது. ஆனால் சிறகடித்துப் பறக்க முற்பட்ட மன உணர்வுகளை அவளால் கட்டுப்படுத்த முடியவில்லை. அது தன்போக்கில் செல்ல ஆரம்பித்தது.

வழமைபோல மரக்கறி முதலான அத்தியாவசியப் பொருள்களை வாங்கி வருவதற்காகச் சந்தைக்குப் புறப்பட்டார் மகாதேவன். தினமும் நண்பகலுக்கு முன்பு சிலமணிநேரங்களுக்கு மட்டும் அங்கே சந்தை கூடும். பிந்தினால் கலைந்துவிடும்.

அன்று மகாதேவன் புறப்பட்ட போது மாதவன் தானும் வரப்போவதாகக் கூறித்தந்தையுடன் புறப்பட்டுச் சென்றான்.

சிறிதுநேரம் சென்றிருக்கும், ஏதோ இரைச்சல் கேட்டது. வெளியே வந்து எட்டிப் பார்த்தாள். இரண்டு விமானங்கள் அப்பகுதிக்கு வந்து வானத்தில் வட்டமிட்டன.

வாசுகிக்கு புரிந்துவிட்டது. அவை நிச்சயமாகக் குண்டுவீச்சு விமானங்கள்தான்.

உள்ளே ஏதோ அலுவலாகஇருந்த மாலாவைக் கூவிஅழைத்தாள். இருவரும் ஓடிச்சென்று பதுங்கு குழிக்குள் தஞ்சமடைந்தனர்.

மறுகணம் பெருத்த குண்டுச் சத்தங்களில் அந்தப்பிரதேசம் முழுவதுமே அதிர்ந்தது. விமானங்களின் இரைச்சல் ஓய்ந்ததும்தான் இருவரும் வெளியே வந்தனர்.

சிறிது நேரத்தின் பின் குண்டு வீச்சுப் பற்றி தகவல்கள் சிறிது சிறிதாகப் பரவத்தொடங்கின. குண்டுகள் சந்தைப்பகுதியில் வீழ்ந்து வெடித்ததாகவும், சந்தைக்குள் நின்ற பலர் இறந்துவிட்டதாகவும், இன்னும் பலர் கடுமையான காயங்களுக்கு உள்ளானதாகவும் தகவல்கள் வெளியாகின. இதனைக் கேட்டதும் வாசுகியின் நெஞ்சு



படக்படக்கென அடிக்கத் தொடங்கிவிட்டது. தனது கணவருக்கும் மகனுக்கும் ஒரு தீங்கும் நேர்ந்து விடக்கூடாதென, இறைவனை வேண்டிக் கொண்டாள்.

குடிசைவாயிலில் வாசுகியும், மாலாவும் தரித்துநின்று போவோர் வருவோரிடம் விபரம் அறியமுற்பட்டனர்.

அவர்களுடைய குடும்பத்திற்கு நெருங்கிய ஒருவர், சம்பவம் நடந்த இடத்திற்குச் சென்று பார்த்துவிட்டு, வந்து கூறிய செய்தி பேரிடியாக இருந்தது.

ஆம். மகாதேவனும், மாதவனும் இறந்தவர்களுள் அடக்கம்!

இருவரும் பதறித் துடித்தபடி சம்பவம் நடந்த இடத்திற்குச் சென்றனர். அடையாளம் காணமுடியாதவாறு உருக்குலைந்த உடலங்களைத்தான் காணமுடிந்தது.

* * *

திடீரெனச் ஷெல் சத்தமொன்று கேட்டது.

வாசுகி திடுக்குற்றாள். சிந்தனைத் தொடர் அறுந்தது. மீண்டும் சில சத்தங்கள் கேட்டன. ஆனால் அவை தூரத்திலேயே கேட்டதனால் பயம் நீங்கியது.

வாசுகியின் சொந்த இடம் சங்கானை. அவளது பெற்றோர் தாம் பரம்பரையாக வாழ்ந்த வீட்டுடன், வயல், தோட்ட நிலம் ஆகியவற்றையும் சீதனமாக வழங்கியிருந்தனர். அவற்றிலிருந்து கிடைக்கும் வருமானம் அவர்களுடைய வாழ்க்கையைக் கொண்டு நடத்தப் போதுமானதாக இருந்தது. மகாதேவனும் ஒரு சிறந்த விவசாயி. நுணுக்கங்கள் நன்கு தெரிந்தவர்.

95 ஆம் ஆண்டு பிற்பகுதியில் அங்கிருந்து இடம் பெயர்ந்து வெளியேறும்வரை, அவர்களுக்குப் பற்றாக்குறை என எதுவும் இருக்கவில்லை. துன்பம் என்றால் என்ன என்றே தெரியாது வாழ்ந்தவர்கள்.

அன்றைய நிலையுடன் இப்போதைய நிலைமையைச் சிலவேளைகளில் ஒப்பிட்டுப் பார்த்து அவள் பெருமூச்சு விடுவதுண்டு.

மறுகணமே 'எல்லாமே விதிப்படிதானே நடக்கும்' என எண்ணித் தன்னைத்தானே தேற்றிக்கொள்வாள்.

மகாதேவன் இருக்கும்வரை அவர்களுக்கு அவ்வளவு பிரச்சனை இருக்கவில்லை. மகாதேவன் அன்றாடம் ஏதாவது வருமானத்தைத் தேடிக்கொள்வார். வாழ்க்கைச் செலவு திருப்திகரமாகச் சமாளிக்கப்பட்டது. அவரது மறைவுக்குப்பின் எல்லாமே சூனியமாகிவிட்டது. வருமானம் என்று கூற எதுவுமே இல்லை.

வாசுகி பிறந்தது முதல் பொறுப்பு என்றால் என்னவென்றே அறியாமல் வளர்ந்தவள். திருமணமாகும்வரை ஒரு செல்லப் பெண்ணாகவே வீட்டில வலம் வந்தவள். தாய்க்கு உதவியாகச் சமையலில் ஈடுபட்டதைத்தவிர, அன்றாடம் வரவு செலவுகளைப் பற்றி அவள் எதுவுமே உணர்ந்ததில்லை.

திருமணத்தின் பின்பும் அதே நிலைதான். மகாதேவன் வரவு செலவுகளைத் தாமே கவனித்துக்கொண்டார். வாசுகிக்கு ஒரு பொறுப்பும் இருக்கவில்லை.

பொறுப்பு என்றால் என்ன என்பதனை அனுபவரீதியாக இப்பொழுதுதான் உணரத் தொடங்கினாள். திடீரென்று ஏற்பட்ட பொறுப்புகள் அவளுக்குப் பெரும் சுமையாகத் தோற்றியது. திக்குமுக்காட வைத்தது. என்ன செய்வது என்று புரியாது மயங்கினாள்.

"என்ன வாசுகி கடுமையான யோசனையிலைஇருக்கிறாய்போல இருக்கு?"

திரும்பிப்பார்த்தாள். குடிசை வாயிலில் இராசசேகரம்.

"ஒண்டுமில்லை" என்றவள் "உள்ளுக்கு வாங்கோ மாமா" என அழைத்தாள்.

இராசசேகரம் அவளுடைய தூரத்து உறவினர். மகாதேவனின் மறைவுக்குப் பின்பு அவர் தாமாகவே முன்வந்து உதவிகள் செய்துவருகிறார். சுகதுக்கங்களில் பங்குகொள்ள முயன்று வருகிறார்.

உள்ளே வந்த அவர், ஒரு பக்கமாக நிலத்தில் அமர்ந்துகொண்டார்.

சிறிதுநேரம் அங்கே இனம்புரியாத ஓர் அமைதி நிலவியது.

"வாசுகி..... நெடுகவும் நடந்ததுகளை நினைச்சுக் கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறதாலே ஒரு பிரயோசனமும் இல்லை. இனி நடக்க வேண்டியதைப் பற்றித்தான் ஆலோசிக்க வேணும்......"

அமைதியைக் கலைத்துக்கொண்டு அவரது வார்த்தைகள் வெளிவந்தன.

வாசுகியின் சோகம் நிறைந்த கண்கள் அவரை ஏறிட்டு நோக்கின. என்ன செய்யலாம் என்ற கேள்வி அதில் தொக்கிநின்றது.

"ம்.... என்ன செய்யலாம் எண்டு கேட்கிறாய் போல இருக்கு.....?"

'ஆம்' என்பது போலத் தலையாட்டினாள், வாசுகி.

"நீங்கள் ரண்டுபேரும் சங்கானைக்குப்போய் உங்களின்ர சொந்த வீட்டிலை இனி இருங்கோவன். அதுதான் புத்திசாலித்தனம் எண்டு என்ரை மனதிலை படுகிறது."

கூறிவிட்டு அவளுடைய முகத்தை உற்று நோக்கினார் இராசசேகரம். அவளின்முகமாறுதல்களிலிருந்து அவளை அளவிட முயன்றார்.

வாசுகியின் முகத்தில் எவ்வித சலனத்தையும் காணமுடிவில்லை. உச்சி முகட்டை உற்றுப்பார்த்தபடி இருந்தாள். வாயிலிருந்து வார்த்தைகள் எதுவும் வெளிவரவில்லை. சிறிது நேரம் அங்கே இனம்புரியாத மௌனம் நிலவியது.

"உன்ரை அண்ணை வாசுதேவன் அங்கேதானே இருக்கிறார்" மௌனத்தைக் கலைத்தார் இராசசேகரம்.

"அவர் இருக்கிறது சங்கானையல்ல, மானிப்பாய்."

"ஓமோம், அது தெரியும். யாழ்ப்பாணத்துக்குள்ளேதானே இருக்கிறார் எண்டு கேட்டனான்" என விளக்கமளித்தவர் தொடர்ந்தார்.

"வாசுதேவன் கொஞ்சம் வசதியாக இருக்கிறார் எண்டு கேள்விப்பட்டிருக்கிறன். சங்கானைக்குப் போனால் அவற்றை உதவியும் ஓரளவுக்குக் கிடைக்கும் எண்டு நினைக்கிறன். இனி உனக்கும் வளவு, வருமானம் ஓரளவு இருக்கும். அதோடை கூலியைப் போட்டு தோட்டத்தையும் வயலையும் செய்கை பண்ணினால் ஒருமாதிரிச் சமாளிக்கலாம்."

"உண்மைதான் மாமா, ஆனால் இவள் மாலாவுக்கு இளம் வயசு. இவளைப் பற்றித்தான் யோசிக்கவேண்டியிருக்கு. அங்கை அடிக்கடி சுற்றி வளைப்புகளும் கைதுகளும் நடக்குதாம். இவர் உயிரோடை இருக்கேக்கே பிள்ளையள் ரண்டையும் யோசிச்சுத்தானே போகப் பின்னடிச்சவர். அதுதான்......" என இழுத்தாள் வாசுகி.

"அதுவும் உண்மைதான். ஆனால் இங்கேயும் ஷெல்லுக்கும் குண்டுவீச்சுக்கும் பயந்துகொண்டுதானே ஒவ்வொரு நாளையும் கடத்தவேண்டியிருக்கு. நயமும் நட்டமும் எல்லா இடத்திலையும் இருக்கத்தான் செய்யுது. ஆனால் உன்னாலை இங்கேயிருந்து இனியும் சமாளிக்க முடியாது. நிவாரணமும் ஒழுங்கில்லை. ஒவ்வொரு நாளும் செத்துப்பிழைக்க வேண்டியிருக்கு. உன்ரை அண்ணைக்கும் இளவயதுப்பிள்ளையள் இருக்கினம்தானே. அவரும்சமாளிக்கிறார்தானே. அதோடை அவர் இயக்கம் இருக்கேக்கை அவர்களின்ரை முக்கிய தூணாயிருந்தவரெல்லே."

இராசசேகரத்தின் வாதங்கள் வாசுகியை நன்கு சிந்திக்கவைத்தன. அவள் மனதில் பலவித சிந்தனைகள் அலைமோதின.

95 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் யாழ். குடாநாட்டிலிருந்து எல்லோரும் அவசரமாக வெளியேறியபோது, அவளுடைய குடும்பமும்வாசுதேவன் குடும்பமும் ஒன்றாகத்தான் வெளியேறின. தென்மராட்சியில் நுணாவிலில் இரண்டு குடும்பங்களும் ஒன்றாகத்தான் தங்கியிருந்தன.

வாசுகியின் கணவர் வன்னிப் பிரதேசத்திற்குச் செல்லத் தீர்மானித்த போது, வாசுதேவனையும் அழைத்தார். ஆனால் அவர் உடன்படவில்லை. ஆகவே இவர்கள் மட்டும் வன்னிக்கு வந்தனர். தென்மராட்சியிலிருந்து எல்லோரும் யாழ்குடாவுக்குத் திரும்பிய போது அவரும் குடும்பமும் திரும்பிச் சென்றதாகப் பின்னர் தெரியவந்தது.

தாங்கள் வன்னிக்கு வந்தது முட்டாள்தனமான செயலாகிவிட்டதென அவள் சிலவேளைகளில் நினைத்ததும் உண்டு. ஆனால் மறுகணமே வேறு கேள்விகள் மனதில்எழும். இளம் வயதுப் பிள்ளைகளுடன் யாழ்ப்பாணம் சென்று குடியிருப்பதும் ஆபத்தானதுதானே என எதிர்ப்பக்க நியாயம் எழும்.

மகாதேவன் இருக்கும்வரை யாழ்ப்பாணம் திரும்பிச்செல்வது பற்றி அவள் ஒரு முறையேனும் சிந்தித்தது கிடையாது. அதற்கான ஏது நிலையும் ஏற்பட்டதில்லை. இப்போது சூழ்நிலையில் மாற்றம் ஏற்பட்டுவிட்டது.

இராசசேகரத்தின் அறிவுறுத்தல் அவளை அந்தவகையில் இப்போது சிந்திக்கத் தூண்டியது. அதுவே தனது நிலையில் எடுக்கக்கூடிய முடிவாகவும் அவளுக்குத் தோற்றியது.

"அது சரி மாமா, கையிலை காசு ஒண்டும் இல்லை. பிரயாணச்செலவை எப்படிச் சமாளிக்கிறது?" என மெதுவாகக் கூறினாள் அவரைப் பார்த்து.

அதைப்பற்றி யோசியாதை, செலவுக்கு நான் உதவி செய்யிறன். நீ போகவிரும்பினால் சொல்லு மிச்ச அலுவல் எல்லாம் நான் பார்க்கிறன்.

"குமர்ப்பிள்ளையையும் கொண்டு எப்படிப் பயணம் செய்யிறது எண்டு தான்......"

மீண்டும் இன்னொரு பிரச்சினையை முன்வைத்தாள்.

"அது அவ்வளவு கஷ்டமில்லை, வாசுகி, வாற கிழமையளவிலை இங்கேயிருந்து இரண்டு மூண்டு குடும்பங்கள் போகுது. அவர்களோட சேர்த்து அனுப்பிவிடுகிறன்."

"அப்படியென்றால் சரி. ஒழுங்கு செய்து தாருங்கோ."

"அப்ப சரி, நான் வாறன்" எனக் கூறிவிட்டு அங்கிருந்து வெளியேறினார் இராசசேகரம்.

* * *

யாழ்ப்பாணம்வரை துணைவந்த குடும்பங்கள், யாழ்.பேருந்துநிலையத்தில் வைத்து வாசுகியிடமும் மாலாவிடமும் விடைபெற்றுக்கொண்டன. வாசுகிக்கு அவ்வளவு உதவியுமே போதுமானதாக இருந்தது. மனத் திருப்தியுடன் நன்றிகூறி விடை கொடுத்தாள்.

இருவரும் பேருந்து நிலையத்தில் காத்திருந்து மானிப்பாய் வீதியில் செல்லும் பேருந்தில் ஏறிக்கொண்டனர்.

வாசுகி, 'மானிப்பாய்' எனக் கூறி, பயணச் சீட்டைப் பெற்றபோது மாலாவுக்குக் காரணம் புரியவில்லை.

**பளையூர் சுந்தரம்பிள்ளை**

"ஏனம்மா மானிப்பாய்க்கு, சங்கானைக்கு எல்லே போகவேணும்?" என்றாள்.

"அங்கே வீடு, வாசல் எப்படி நிலமையிலை இருக்கோ தெரியாது. கண்ணிவெடிகளும் இருக்குமெண்டு எல்லாரும் சொல்லிச்சினம். ஆனபடியால் நேரே அங்கே போறது அவ்வளவு புத்தியில்லை."

காரணத்தை விளக்கினாள் வாசுகி. மேலும் விளக்கினாள்.

"ரண்டுநாளைக்கு மாமா வீட்டிலை தங்கி இருந்திட்டு, வீட்டு நிலைமையைப் பற்றி விசாரிச்சு அறிஞ்சு கொண்டு பிறகு போகலாம். இப்ப நேரமும் பிற்பகலாகிவிட்டுது. இந்த நேரம் போய் அங்கே இறங்கி என்ன செய்ய முடியும்?"

தாய் கூறியதில் நியாயம் இருப்பதாகவே மாலாவுக்கும் தோற்றியது. அவள் மேலே எதுவும் கூறவில்லை.

வாசுதேவன் வீட்டு வாயிலில் இருவரும் இறங்கினர். அங்கே பூட்டிய வாயில் கேற்றே அவர்களை வரவேற்றது. இருவரும் திகைத்தபடி நிற்பதைக் கண்ட எதிர் வீட்டுக்காரர் வந்து விசாரித்தார்.

"நாங்கள் வன்னியிலேயிருந்து வாறம். நான் அவற்றை தங்கை" எனத் தன்னை அறிமுகப்படுத்தினாள் வாசுகி.

"அடடா, அப்பிடியே?" என்றவர், "அவை வர நேரம் செல்லும். ஏன் றோட்டிலே நிக்கிறீர்கள். உள்ளுக்கு வந்து இருங்கோ." என உள்ளே அழைத்துச் சென்றார்.

"எங்கே போனவர்கள்?" என விசாரித்தாள் வாசுகி.

"உங்களின்ரை அண்ணைக்கு இண்டைக்கு ஒரு பாராட்டுவிழா" என்று கூறியபடியே அன்றைய 'உதயன்' தினசரியைக் கொண்டுவந்து கொடுத்தார்.

வாசுதேவனின் படத்துடன் ஒரு முழுப்பக்க விளம்பரம் வெளியாகியிருந்தது. அவர்கள் ஆவலுடன் வாங்கிப் படித்தனர். நீதி அமைச்சினால் சமாதான நீதிபதிப் பதவி வழங்கப்பட்டத்தைப் பாராட்டி அவ்விழா ஒழுங்கு செய்யப்பட்டிருப்பதாக விவரம் தெரிவிக்கப்பட்டிருந்தது.

செய்தித்தாளை வாசித்துவிட்டுத் தாயும் மகளும் ஒருவரையொருவர் பார்த்து முகத்தைச் சுழித்துக்கொண்டனர். இதனை வீட்டுக்காரர் அவதானித்துவிட்டார்.

"ஏன் முகத்தைச் சுழிக்கிறீர்கள்?" என நேரடியாகவே கேட்டார்.

மாலாவுக்கு மனதைக் கட்டுப்படுத்த முடியவில்லை. உள்ளத்தில் எழுந்த புகைச்சலைக் கொட்டித்தீர்த்தாள்.


"வேற என்ன மாமா? கேவலம் ஒரு சமாதான நீதிவான் பதவியை

(XV ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூகமாக வாழ்கின்ற கொட்டும் குளவி

பூச்சியினங்களைச் (INSECTA) சேர்ந்த விலங்குகளில் குளவியுமொன்று (WASP). இடுப் பழகிகளுக்கு இவற்றை உதாரணமாகக் கொள் ளலாம். நூல்போன்ற இடுப்பு என்பதற்கு இவை தான் இலக்கணம். பூச்சிகளை அவற்றின் ஆறு (மூன்றுசோடி) கால்களிலிருந்து அறிந்து கொள் ளலாம். ஆறு கால்கள் உள்ளபடியால் அவை அறுகாலிகள் (HEXAPODA) என்றும் அழைக் கப்படும். கால்கள் ஒவ்வொன்றும் பல துண்டங் கள் கொண்டவையாயிருக்கும். அமைப்பில் குளவி இறகு முளைத்த எறும்பைப்போல, ஆனால் பெரி யவையாக, இருக்கும்.



பிற இனக்குடம்பியினுள் முட்டைகளைச் செலுத்தும்குளவி, இங்கு காட்டப்பட்டுள்ளது. வண்ணத்துப்பூச்சிகள், அந்துப்பூச்சிகளின் குடம்பி (மயிர்க் கொட்டி).

குளவியின் உடலும் பலதுண்டுகளின் இணைப் பால் ஏற்பட்டதுபோலக் காணப்படும். உடலை மூன்று பகுதிகளாகப் பிரிக்கலாம். தலை, நெஞ்சு, வயிறு. தலையில் பல துண்டுகளிலி ருந்தும் அவை துலக்கமாகத் தெரிவதில்லை. நெஞ்சில் மூன்றுதுண்டுகளும், வயிற்றுப்பகுதி யில் பத்துத்துண்டுகளுமுண்டு. தலையில் ஒரு சோடி உணர்கொம்புகளும், இரு கூட்டுக்கண்க ளும், வாயுமுண்டு. உணர்கொம்புகள் மண உணர்ச்சியையும் தொடுகையுணர்ச்சியையும் அறி யப்பயன்படும். உணர்கொம்புகளும் பல துண்டங் களின் சேர்க்கையினால் ஆனவை. உணர்கொம் புகளில் பல நுண்ணிய மயிர் போன்ற வளர்ச்சி களுண்டு. இவையே உணர்ச்சிகளைக் கிரகிக்க உதவும். கண்ணும் பல தனிக்கண்களின் சேர்க் கையினால் ஆனவை. அதனால் இவை கூட்டுக் கண்கள் எனப்படும். குளவிகளின் பார்வைத்திறன் மிகச்சிறந்தது; மனிதனுக்கு ஒப்பானதாகக் கொள் ளலாம். மேலும், மனிதனைப்போல இவற்றினா லும் நிறங்களைப் பெயர்த்தறிந்துகொள்ள முடி யும் (பாலூட்டிகளில் மனிதனையும் குரங்குகளை யும் தவிர ஏனையவை நிறக்குருடானவை. (COLOUR BLIND). குளவிகளில் தலைக்கும் நெஞ்சுக்குமிடையேயுள்ள இணைப்பு (கழுத்து) மெல்லியதாயிருக்கும்.



குளவியின் பக்கத்தோற்றப்பார்வை. உணர்கொம்புகள்,கூட்டுக்கண்,கால்கள்,செட் டைகள், மெல்லிய இடுப்பு, பின்முனையில் கொடுக்கு போன்றவற்றைக் கவனியுங்கள்.

### மார்பின் அமைப்பு

மார்புப்பகுதியில், ஒவ்வொரு துண்டிலும் ஒரு சோடிக் கால்களுண்டு. இரண்டாவது மார்புத்துண் டிலும் மூன்றாவது மார்புத்துண்டிலும் ஒவ்வொரு சோடி செட்டைகள் காணப்படும். பின்சோடியைக் காட்டிலும், முன்சோடிச் செட்டைகள் பெரியவை. செட்டைகள் மெல்லிய, ஒளிபுகவிடுகின்ற, மென் றகடுகள்போலிருக்கும். செட்டைகளுக்கு ஆதார மாக நரம்புகள் காணப்படும்.

### வயிற்றின் அமைப்பு

வயிற்றுப்பகுதி ஆரம்பத்தில் மெல்லியதாயி ருக்கும். பின் தடித்து, மீண்டும் மெல்லிய கூராக முடியும். வயிற்றுப்பகுதியின் முனையில் ஒரு கொடுக்கு (STING) உண்டு. சில நச்சுப்பைக ளின் கால்வாய்கள் இந்தக்கொடுக்குடன் இணைக் கப்பட்டிருக்கும். குளவி கொட்டும்போது கொடுக் கைச் செலுத்தி, நச்சுப் பைகளைச் சுருக்கி, நஞ்சைப் பாய்ச்சும். நச்சுப்பைகளைச் சுருக்கு வதற்கென்றே சில தசைநார்களுண்டு. தேனீயைப் போலல்லாது குளவி மீண்டும் மீண்டும் தனது கொடுக்கைப் பயன்படுத்தவல்லது. தேனீ கொட் டும்போது கொடுக்கும் நச்சுப்பைகளும் அதன் தசைகளும் சில உள்ளுறுப்புக்களும் கழன்று போய்விடும்; அதனால் தொடர்ந்து உயிர்வாழ முடியாது தேனீ இறந்துவிடும்; ஆனால் தசைச் சுருக்கங்களின் பயனாகத் தொடர்ந்து நஞ்சு புகுத் தப்பட்டுக் கொண்டேயிருக்கும். தேனீயின் கொடுக்கு கழருவதற்குக்காரணம் அதிலுள்ள பின்நோக்கிய முட்கள். குளவியின் கொடுக்கு அழுத்தமானது (மர எறும்பின் கொடுக்கும் குளவி யினதைப் போன்றதே).

**குகன்**

நெஞ்சுப் பகுதியிலும், வயிற்றுப்பகுதியிலும், பக்கவாட்டில், சிறிது கீழ்ப்புறமாகச் சில துவாரங் கள் தென்படும் (துண்டத்துக்கு ஒருசோடி). இவை சுவாசத் துவாரங்களாகும். இச்சுவாசத் துவாரங் கள் வாயிலாக உட்செல்லும் காற்று சுவாசக் குழாய்கள் மூலமாக உடலின் பல பகுதிகளுக் கும் நேரடியாகவே எடுத்துச்செல்லப்படும்.


குளவிகளில் ஆண்,பெண் வேறுபாடு உண்டு. இன வேறுபாடுகளுமுண்டு. இனத்துக்கு இனம் அமைப்பிலும் நிறத்திலும் வேறுபாடுகள் காணப் படும். ஒரே இனத்துக்குரியவை ஒரே கூட்டுக்குரி யவற்றையும், பிற கூடுகளுக்குரியவற்றையும் மணத்திலிருந்து தெரிந்துகொள்ளும். தம்மவர்க ளைச்சேர்த்துக்கொள்ளும். மற்றவரைக் கலைத்து விடும்.

### தொழிற்பிரிவு
(DIVISION OF LABOUR)

சமூதாய வாழ்க்கையை மேற்கொண்ட அங் கிகளே மனிதன் தோன்றுவதற்கு மில்லியன் கணக்கான அண்டுகளுக்கு முன்பே தொழிற் பிரிவைக் கண்டுபிடித்து விட்டன. மனிதன் கண்டு பிடித்தது 'தொழிற் பிரிவு' என்ற "லேபலை"த்தான் (LABEL).


சில குளவி இனங்கள் பெருமரங்களில் - உதாரணமாகக் காட்டு மரங்களில் - அல்லது பனைமரத்து ஓலைகளில் கூடுகட்டி வாழும். உக்கிய மரப்பட்டைகளையும் மரத்துகள்களை யும் அரைத்துத் தமது உமிழ்நீருடன் கலந்து பிசைந்து கூடுகளைக் கட்டும். தாள் உற்பத்தி யில் (PAPER MAKING) முதன்முதலாக ஈடு பட்டவை இவைதான். கூடு, தாளிற்கு ஒப்பான பொருளினால் ஆக்கப்பட்டிருப்பதனால் சூளைக் கொண்டு பற்றவைக்கும்போது அது சுலபமாக எரிந்து விடுகின்றது. கூடுகளில் பல அறைக ளுண்டு. அறைகள் அடுக்கடுக்காகவிருக்கும். கூட்டிற்குரியவை கூட்டமாக, சமூகமாகவாழும் குளவிகள். இவைகளில் தொழிற் பிரிவு உண்டு. நன்றாக விருத்தியடையாத பெண்கள் ('சிறுமி கள்') தொழிலாளிகளாக இயங்கும். இவை கூடுகளைக்கட்டியும், பழுதுபார்த்தும், உணவைச் சேர்த்தும், வளரும் குளவிகளுக்கு உணவூட்டி யும், கூடுகளைப் பாதுகாத்தும், சமூகத்துக்குத் தொண்டு புரியும். பூரண விருத்தியடைந்த பெண் கள் முட்டைகளை இடும். ஆண்கள் பெண்களின் முட்டைகளின் கருவூட்டத்திற்கு உதவும். முட் டைகள் இடப்பட்டதும் தொழிலாளிகள் அவற்றை அறைகளில் கொண்டுசென்று வைக்கும். முட்டை கள் பொரித்து குடம்பிப் பருவம் தோன்றியதும் அவற்றிற்கு உணவளிக்கும். குடம்பிகளுக்கு பூச் சிகளையும் புழுக்களையும் கொணர்ந்து உண வாகக் கொடுக்கும். சிறிது காலத்திற்குப்பின் குடம்பி கூட்டுப்புழுவாக மாறி, உருமாற்றம் பெற்று, குளவிகளாக மாறும். கருக்கட்டாத முட் டைகளிலிருந்து ஆண்களும், கருக்கட்டிய முட் டைகளிலிருந்து பெண்களும் தோன்றும். குழந் தைக் குளவிகள் மாமிச பட்சணிகள், வயதுவந்த குளவிகள் மலர்களிலிருந்து தேனையும், தாவ ரங்களிலிருந்து சாறுகளையும் உணவாகப் பெற்று வாழும்.

சில குளவி இனங்கள் சமூகமாகவாழாது தனித்து வாழும். இவற்றில் சில சிலந்திகளைக் கொன்று, நிலத்தில் குழிதோண்டி, சிலந்திகளை அங்கோ வைத்து, அதன் மேல்முட்டையிட்டு, குழியை மூடிவிடும். முட்டைகள் பொரித்து குடம்பிகள் வெளியேறியதும் சிலந்தி களை உணவாக அருந்தி வளர்ச்சிபெறும். பூரண வளர்ச்சி அடைந்ததும் கூட் டுப்புழுவாக மாறி உருமாற் றம்பெற்றுக் குளவியாக மாறும். இப்படித் தோன்றிய குளவி மண்ணைத் துளைத் துக்கொண்டு வெளியேறும். இவ்வகைக் குளவிகள் சில சமயங்களில் புலிமுகச் சிலந்திகளுடன் போராடி, அவற்றைக்கொன்று, தமது குடம்பிகளுக்கு உணவாக வைப்பதுண்டு. சில சமயங் களில் போரில் தோற்று, மடிந்து, புலிமுகச்சிலந் திக்கு உணவாகப் போவதுமுண்டு. மரங்களிற் கூடுகட்டி வாழும் குளவிகளும் இவையும் மிக விஷமுள்ளவை.



வளையில் சிலந்திகள், குளவி வளையை ஏற்படு களைப் பிடித்து நஞ்சூட்டி அங்கு கொண்டு சென்று டைகளை இட்டு வைக்கும். வெளியேறும் குடம்பிகளு தயார் நிலையில் இருக்கும்.

சில குளவியினங்கள் புத்தக அடுக்குகளிலும், இடுக்குகளிலும், யன்னல்களிலும், கதவுகளிலும், அலுமாரிகளிலும், படங்களின் கண்ணாடிகளின் மேலும் களிமண்ணைக்கொண்டு கூடு கட்டி, கூட்டுக்குள் சிலந்திகளையும் புழுக்ளையும் இட்டு நிரப்பி, முட்டைகளை இட்டு வைப்பதுண்டு. இவை தமது உமிழ்நீரால் களிமண்ணைக் குழைத் துக் கூடுகளைக் கட்டுகின்றன. கறையான் புற்றி லிருந்து களிமண்ணைப் பொதுவாகப் பெற்றுக் கொள்ளும். இவையும் சமூகமாக வாழாது தனி யாக வாழும் குளவிகள் ஆகும்.



பனைமரத்தில் ஓலையில் தொங்கும் குளவிக்கூடு. கூட்டின் மேலும், பறந்து திரி கின்றதுமான குளவி களைக் கவனிக்கவும்.

சில குளவியினங்கள் வீட்டுக்கூரைகளிலும், மரங்களிலும், மற்றும் இடங்களிலும் மெழுகு கொண்டு தேன்கூட்டையொத்த ஆனால் சிறிய கூடுகளைக் கட்டிச் சமூகமாக வா கள் உருவத்தில் சிறியவை. ம சிவப்பு நிறமுள்ளவை. கூடு கலைக்கப்படும்போது இவை கூ தாக்கும். ஆயினும் இவை அதி வையன்று. இவற்றைச் சாதார காணலாம். வாழ்க்கையில் ஒரு இவற்றிடம் கடிவாங்கியிருப்பீர்க கீழே, கதிரைக்குக் கீழே, கட் போன்ற இடங்களிலும் இவை கூ விடயமறியாது பிடித்துத் தூக் சமயங்களில் இவை கொட்டிவி

ஓலை வீட்டுத் தாழ்வாரங் காலங்களில், தாழ்வாரத்து ஓ சில இனக் குளவிகள் கூட்டம வதைக்காணலாம். இவை பச்சை முடையவை. இவை பொதுவா தில்லை.

சில குளவியினங்கள் தாவரங் ளில் முட்டைகளை இட்டு வைக் பொரித்ததும் வெளியேறும் குட களை உண்ண ஆரம்பிக்கும். அ ளில் திரட்சிகள் தோன்றி, குடம்பி

**அங்கிகள் பலவிதம்**
**ஒவ்வொன்றும் ஒ**

களில் மூடப்படும். திரட்சிக்கு குடம்பிகள் வளர்ச்சியடைந்து மாறி, உருமாற்றம் பெற்றுக் குள குளவிகளாக வந்ததும் திரட்சிக தக்கொண்டு இவை வெளியேறு

சில இனக்குளவிகள் வேற்றி குடம்பிகளின் உடலுக்குள் தமது இட்டு வைக்கும். முட்டைகள் தோன்றும் குளவிக் குடம்பிகள் யாகிய குடம்பியில் ஒட்டுண்ணிக விருத்தியடையும். பீடைகளாகவு குக் கேடுவிளைவிக்கின்ற, சில இ பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவத யினங்களைப் பயன்படுத்துவது


குளவிகளுக்குத் தம் குளவிக களுக்கு) உணவளிக்க வேண்டு பூக்கம் (INSTINCT) மிகவதிக லைக்குட்பட்டாயினும் குளவிகள் ளுக்கு உணவைத் தேடிவைக் ளுக்கு உணவூட்டி வளர்க்கும் ளில் ஒரு குளவியையும் ஒரு கு யையும் ஒரு சாடிக்குள் அடை குடம்பிக்கு உணவு தேடவேண்டு பூக்கம் உந்த, குளவி சாடியை யேறி உணவுதேடச்செல்லும் நோ மங்கும் அலைந்து, வெளியேற மு டைந்து", இருந்தும் உணவு செ டுமே என்ற கவலையில்" விநோ யில் பிரச்சினைக்குத் தீர்வுகாணு வாற்புறமாக ஒரு துண்டைக் க வாய்ப்புறமாக ஊட்டி மகிழும்.

'இதுதான் இயற்கை இட்டப எழுதிவைத்த இலக்கணமோ?'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விகள்

சமூகமாக வாழும். இக்குளவி
சிறியவை. மஞ்சள் அல்லது
வை. கூடு உள்ள இடம்
து இவை கூட்டமாக வந்து
இவை அதிக விஷமுள்ள
றைச் சாதாரணமாக நீங்கள்
கையில் ஒரு தடவையாவது
கியிருப்பீர்கள். மேசைக்குக்
கீழே, கட்டிலுக்குக் கீழே
ம் இவை கூடுகட்டுவதுண்டு.
த்துத் தூக்கும்போது சில
வ கொட்டிவிடுவதுண்டு.
தாழ்வாரங்களில், மழைக்
வாரத்து ஓலைத்துளிர்களில்
கள் கூட்டமாகவந்து தங்கு
இவை பச்சை கலந்த நீலநிற
வ பொதுவாகக் கொட்டுவ



யை ஏற்படுத்தி, சிலந்தி
டு சென்று வைத்து, முட்
குடம்பிகளுக்கு உணவு

கள் தாவரங்களின் இலைக
இட்டு வைக்கும். முட்டைகள்
யேறும் குடம்பிகள் இலை
ம்பிக்கும். அப்போது இலைக
ன்றி, குடம்பிகள் இத்திரட்சி

## லவிதம் ...ன்றும் ஒருவிதம்

திரட்சிக்குள்ளிருந்தபடியே
ரியடைந்து கூட்டுப்புழுவாக
பற்றுக் குளவிகளாக மாறும்.
ம் திரட்சிகளைத் துளைத்
வெளியேறும்.
கள் வேற்றினப் பூச்சிகளின்
க்குள் தமது முட்டைகளை
முட்டைகள் பொரித்ததும்
குடம்பிகள் விருந்துவழங்கி
ஒட்டுண்ணிகளாக வாழ்ந்து
டைகளாகவுள்ள, மனிதனுக்
ன்ற, சில இனப் பூச்சிகளின்
டுப்படுத்துவதற்கு இக்குளவி
படுத்துவதுண்டு.
தம் குளவிகளுக்கு (குடம்பி
க்க வேண்டுமென்ற இயல்
) மிகவதிகம். என்ன தொல்
ம் குளவிகள் தம் குடம்பிக
தேடிவைக்கும். குடம்பிக
வளர்க்கும் குளவியினங்க
யும் ஒரு குளவிக் குடம்பி
குள் அடைத்து வைப்பின்
தேடவேண்டுமென்ற இயல்
வி சாடியை விட்டு வெளி
செல்லும் நோக்குடன் இங்கு
வெளியேற முடியாது "மனமு
உணவு கொடுக்க வேண்
யில்" விநோதமான முறை
தீர்வுகாணும். குடம்பியின்
துண்டைக் கிள்ளியெடுத்து
மகிழும்.
கை இட்டபடி இதுவென்று
கணமோ?'

*

# 20ஆம் நூற்றாண்டில் உலக இலக்கியம்

## 27

## சில குறிப்புகள்

இந்தத் தசாப்தத்தில் உலகின் கவனத்தை ஈர்த்த இலக்கியப் படைப்பாளியொருவரை பங்களாதேஷம் உருவாக்கியிருந்தது. அவர் தஸ்லிமா 'நஸ்ரீன். ஆறு அல்லது ஏழு ஆண்டுகட்கு முன்னர் வங்காள மொழியில் தஸ்லிமா எழுதிய 'லஜ்ஜா' (வெட்கம்) என்ற சிறிய நாவல், இஸ்லாமிய அடிப்படைவாதிகளின் ஆத்திரத்தைக் கிளப்பிற்று. இதன் விளைவாய் இளம் மருத்துவரான இந்நாவலாசிரியை பல இன்னல்களை எதிர்நோக்கவேண்டியும் வந்தது. ஸல்மான் ருஷ்டி முகங்கொடுக்க நேர்ந்த அத்தனை பயமுறுத்தல்களையும் தஸ்லிமாவும் சமாளிக்க வேண்டியிருந்தது. - எனினும் ருஷ்டி போலவே - தஸ்லிமாவும் தம் நிலையினின்றும் பின்வாங்கினாரில்லை.

92 பிற்பகுதியில் அயோத்தியில் இந்து தீவிரவாதிகள் பாபர் மசூதியை இடித்துத் தள்ளியபோது அதன் எதிர்விளைவாய், பங்காளாதேஷில் சிறுபான்மையினராயிருந்த இந்துக்கள் பெரும்பான்மை முஸ்லீம்களின் வேட்டைக்கிலக்காக நேர்ந்தது. அப்பின்னணியை வைத்தெழுதப்பட்டநாவல் 'லஜ்ஜா'. பரம்பரை பரம்பரையாக வங்க மண்ணில் வாழ்ந்துவந்த பல இந்துக்குடும்பங்கள் தாய்நாட்டைவிட்டு வெளியேறி இந்தியாவில் அடைக்கலம் புகுந்தபோதும், அவ்வாறு புறப்பட மறுத்து - தன் சொந்த மண் தன்னைக் கைவிடாது என்ற நம்பிக்கையுடன் - தங்கிவிட்ட ஓர் இந்துக் குடும்பம் எதிர்கொள்ளும் பயங்கரங்கள், அழிவுகள் - இவற்றுக்கெல்லாம் மேலாக - ஏமாற்றங்கள் எல்லாவற்றையும் கூறுகிறது நாவல்.

தஸ்லிமா, முஸ்லிமாக இருந்த போதிலும், வகுப்புவாதத்தையும், அடிப்படைவாதத்தையும் எதிர்த்தார். அவற்றின் பயனாய் விளைந்த - வன்முறைக்கெதிரான குரலாய் உரத்து ஒலித்த - இப்படைப்பு உலகின் கவனத்தை ஈர்க்கத் தவறவில்லை. இன ஒற்றுமையைக் குலைக்கிறது என்று கூறி, பங்களாதேஷ் அரசு நாவலை தடைசெய்தது. அடிப்படைவாதக் குழுவொன்று ஆசிரியைக்கு மரண தண்டனையும் விதித்தது. தலை மறைவு வாழ்க்கை, நாட்டைவிட்டு வெளியேறும் நிர்ப்பந்தம் எல்லாம் நேர்ந்தன. மூல நூல் வெளியான அடுத்த ஆண்டிலேயே ஆங்கில மொழிபெயர்ப்பும் வெளியாகி பெரும் வரவேற்பைப்பெற்றது. கவிஞராகவே தமது இலக்கிய வாழ்வைத் தொடங்கிய தஸ்லிமா, பின்னர் கட்டுரைகளையும் நாவல்களையும் எழுதலானார். 'லஜ்ஜா'வின் எதிர்விளைவுகளால் இன்னமும் அலைப்புறும் தஸ்லிமா, தம் எதிர்காலமானது இலக்கியத்தினின்றும் விலகாது என்பதிலும் திடமாயுள்ளார். வங்கமொழி இலக்கியத்திற்கு அவரது பங்களிப்பு தனித்துவமானது.

கடந்த நூற்றாண்டின் இறுதியிலிருந்தே வங்காளி இலக்கியத்தில் நாவல்களின் செல்வாக்கும் ஆரம்பமாகிவிட்டது. பங்கிம் சந்திரர் காலத்து நாவல்களை, மேலும் பலபடிகள் முன்னெடுத்தவர் சரத் சந்திரர். இந்நூற்றாண்டின் ஆரம்பத்தில் அவர் கையாண்ட கருப்பொருள்கள் அக்காலத்தைப் பொறுத்தளவில் - மிக மிகப் புரட்சிகரமானவையாகவே அமைந்தன. எண்ணிக்கையில் மட்டுமன்றி, தரத்திலும் கூடிய பல நாவல்களை எழுதியவர் சரத் சந்திரர். அவருடைய சமகாலத்தவரான மகாகவி ரவீந்திரநாத்தாகூர், இலக்கியத்திற்கான நோபல்பரிசு பெற்ற ஒரே இந்தியர். கவிஞராக மட்டுமன்றி, நாவலாசிரியராகவும் தம்மை இனங்காட்டியவர் தாகுர். அவருடைய 'கோரா', சுதேசி இயக்கத்தை அடிப்படையாய்க் கொண்டெழுந்த குறிப்பிடத்தக்க நாவல்களுள் ஒன்று.

இவர்களைத் தொடர்ந்து வந்த தாராசங்கர் பானர்ஜி, விபூதி பூஷண், மாணிக் பந்தோபாத்யாயபோன்றோர் வங்காளி இலக்கியத்தின் - குறிப்பாக நாவலின் - வளர்ச்சிக்கு பெரும் பங்களிப்பு செய்தவர்களாவர். இந்த இலக்கிய மேதைகளின் படைப்புகள் பலவும் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு பெரும் வரவேற்பைப் பெற்றதுடன்; இந்நூற்றாண்டின் மூன்றாம் தசாப்தத்திலிருந்து ஆறாம் தசாப்தம் வரையான தமிழ் வாசகர்களிலும், எழுத்தாளர்களிலும் பெரும் செல்வாக்குச் செலுத்தின எனக் கூறுவதும் மிகையாகாது.


இந்த வரிசையில், எண்பதுகளின் தொடக்கத்தில் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு - இந்தியன் நேஷனல் புக்ட்ரஸ்ட்டால் - வெளியிடப்பட்ட ஒரு குறிப்பிடத்தக்க நாவல், 'நீலகண்டப் பறவையைத் தேடி'. இதை எழுதியவர், அதீன் பந்தோபாத்யாய. முதலில் 'கிழக்கு பாகிஸ்தான்' ஆகவும், பின்னர் 'பங்களாதேஷ்' ஆகவும் ஆகிவிட்ட கிழக்கு வங்காளத்தில் பிறந்தவர் அதீன். இந்தியாவுக்குக் குடிபெயர்ந்து இந்தியராகவே தொடர்ந்திருந்தபோதும் அவருடைய இளமை நினைவுகளின் களமாகிவிட்ட கிழக்கு வங்கமே, இந்நாவலின் களமுமாய் அமைந்தது. இந்நாவலின் அத்தியாயங்கள் பல, தனிச்சிறுகதைகளாகவே முதலில் உருப்பெற்றவை. நாவலின் தொனிப்பொருளும் - இது போன்ற ஒரு - பல்நோக்குக் கொண்டது. சுதேசி இயக்கம், இன வேற்றுமைகள், பொருளாதார ஏற்றத் தாழ்வுகள், என்று பலவற்றை அது தொட்டுச்செல்கிறது. இயற்கையிலிருந்து பிரிக்கப் படமுடியாத ஒரு வாழ்வையும் சூழலையும் கொண்டு நகர்கிறது. மண்ணுக்கும் விண்ணுக்கும் இடையில் அலைவுகொள்ளும் 'நீலகண்டப் பறவை' இந்நாவலில் ஒரு குறியீடாகவே அமைகிறது. நாட்டு, மத எல்லைகளுக்கப்பால் - இன்னொரு வங்காளியான - 'வங்க பந்து' என்றழைக்கப்படும் - ஷேக் முஜிபுர் ரஹ்மானுக்கு சமர்ப்பிக்கப்பட்ட படைப்பு இது.

## சாந்தன்

இந்தியமொழி இலக்கியங்களில், மலையாளமொழி இலக்கியங்கள் முன்னே நிற்கின்றன என்பது பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்று. நவீன மலையாள இலக்கிய மலர்ச்சி, இந்நூற்றாண்டின் ஆரம்பத்துடன் தொடங்கிற்று. மலையாள இலக்கியத்தின் மகா கவிகள் எனப் போற்றப்படும் குமரன் ஆசான், வள்ளத்தோள் இருவரும் கவிதை வளர்ச்சிக்கு வித்திட்டவர்கள். இவர்களுடன் மூன்றாமவராக, உள்ளூர் பரமேஸ்வர ஐயரும் - இவர் பிறப்பால் தமிழர் - கணிக்கப்படுகிறார். இவர்களைத் தொடர்ந்து, பாரதீய ஞானபீடப் பரிசை முதலில் பெற்றவரான ஜி.சங்கரக்குரூப், சங்கம் புழை (கிருஷ்ணபிள்ளை), வயலார் (ராம வர்மா), ஓ.என்.வி.குரூப், பாஸ்பரன், சுகத குமாரி, கிருஷ்ண வாரியார், எம்.கோவிந்தன், ஐயப்பப்பணிக்கர் - என ஒரு நீண்ட பரம்பரை உருவானது. மலையாளக் கவிதைகள் தமிழ் மொழிபெயர்ப்பில் கிட்டியதிலும் பல மடங்கு அதிகமாக மலையாளப் புனைக்கதைகள் தமிழில் வெளியாகின. இதனால் நவீன தமிழ் இலக்கியகாரருக்கு மலையாளப் புனைகதைகளுடனான பரிச்சயமும், பாதிப்பும் அதிகமாகவே கிட்டின.

முப்பதுகள் மற்றும் நாற்பதுகளின் சோஷலிஸ யதார்த்தவாதம், மார்க்ஸீயப் பார்வை - இவற்றால் உருவானவர்கள் தகழி சிவசங்கரப்பிள்ளை, கேசவதேவ், பொன்குன்னம் வர்க்கி ஆகியோர். தகழி என்றவுடன் - ஏன் மலையாள இலக்கியம் என்றாலே கூட - அநேகமானவர்களின் நினைவில் முதலில் வருவது, அவருடைய, 'செம்மீன்' நாவல்தான். மீனவக் கிராமமொன்றின் மக்களின் கதை அது. மீனவப் பெண்ணான கருத்தம்மாவிற்கும், மீன் வியாபாரியான பரீத்குட்டி என்ற முஸ்லீம் இளைஞனுக்குமிடையிலான காதலையும் அது கூறிற்று. சாகாவரம் பெற்ற இந்நாவல், இந்திய சாகித்ய அகாடமிபரிசு பெற்றதுடன்; அனைத்து இந்திய மொழிகளிலும், ஆங்கிலம் மற்றும் ருஷ்யன், செக், அரபி, பேர்ஷியன் மொழிகளிலும் பெயர்க்கப்பட்டு பெரும் வரவேற்பைப்பெற்றது. அறுபதுகளில் வெற்றிகரமான ஒரு திரைக்காவியமாகவும் 'செம்மீன்' வெளியாகி, ஜனாதிபதி பரிசையும் பெற்றது . (தொடரும்)

## மருத்துவர்களின் லட்சியம்



ஆயுர்வேதத்தில் மிகச் சிறந்த நிபுணராகத் திகழ்ந்தவர் நாகார்ஜுனர்.

அவருக்குத் தன்னுடைய பரிசோதனைச்சாலையில் உதவிசெய்வதற்கு ஓர் ஆள் தேவைப்பட்டது.

அந்த வேலையைப் பெற அவரிடம் இரண்டு இளைஞர்கள் வந்தார்கள்.

நாகார்ஜுனர் இரண்டு பேரிடமும் ஒரு குறிப்பிட்ட பொருளைக்கொடுத்து, "இதைப் பயன்படுத்தி இரண்டு நாள்களில் ஒரு மருந்துக் கலவையைத் தயார் செய்துகொண்டுவாருங்கள்" என்று கூறினார்.

இரண்டு நாள்களுக்குப் பிறகு ஓர் இளைஞன் ஒரு மருந்துக் கலவையுடன் வந்தான்.

அவனிடம், "உனக்கு ஏதாவது விசேஷத் தடங்கல் ஏற்பட்டதா?" என்று கேட்டார் நாகார்ஜுனர்.

இளைஞன், "என் தாய்க்குக் கடுமையாக காய்ச்சல். தந்தைக்கு வயிற்றுப் போக்கு. என் தம்பியின் கால் எலும்பு முறிந்துவிட்டது. இருந்தாலும் நான் என் சாதனையில் முழுஈடுபாட்டுடன் இருந்தேன்" என்று கர்வத்துடன் பதிலளித்தான்.

இரண்டாவது இளைஞன் வந்து, "ஐயா, என்னால் நீங்கள் குறிப்பிட்டபடி மருந்து தயாரிக்க இயலவில்லை. நான் இங்கிருந்து வீட்டிற்குச் செல்லும் வழியில் நோய்வாய்ப்பட்ட ஒரு வயோதிபரைப் பார்த்தேன். அவருக்கு உதவியாக யாரும் இல்லாததால், நானே அவரை மூன்று நாள்கள் கவனித்துக் கொண்டேன்" என்றான்.

"மருந்து உயிரைக் காப்பாற்றத்தான் இருக்கிறது. அதைத்தயாரிப்பவர் உயிரைக் காப்பாற்றும் விஷயத்தில் பாராமுகமாக இருந்தால் அவரை நான் எப்படி ஏற்பது? ஆகவே இரண்டாவது இளைஞனே என் மாணவன்" என்றார் நாகார்ஜுனர்.

## ஆவின் நிறம்போல் அறநெறிபலவாம்

**தேன்கூடு**

பசுக்கள் பலபல நிறத்தன. அவற்றின் பால் வெண்மை நிறத்தது. அறநெறிகளும் பலப்பல உள; அவற்றின் முடிவும் ஒன்றேயாம். நமது நாட்டிலே இந்து தருமம், பௌத்த தருமம், இஸ்லாம் தருமம், கிறீத்துவ தருமம் எனப் பல்வேறு நெறிகள் இருத்தலை அறிவோம். ஒவ்வொரு நெறியினரும் தத்தமக்கு ஒவ்வோர் முதல்வனைக் கொண்டுள்ளார்கள். அம்முதல்வன் இறைவன் என்று அழைக்கப்படுகின்றான்.

அண்மைக்காலக் கவிஞர் ஒருவர், 'அல்லா என்பார் சில பேர்கள் அரனரி என்பார் சிலபேர்கள், வல்லான் அவன் பர மண்டலத்தில் வாழும் தந்தை என்பார்கள்; சொல்லால் விளங்கா நிருவாணம் என்றும் சிலபேர் சொல்வார்கள். எல்லோரும் இப்படிப் பலபேசும் ஒரு பொருள் இருக்கவே செய்கின்றது. 'நிந்தை பிறரைப் பேசாமல் நினைவிலும் கெடுதல் செய்யாமல் அதை வந்திப்போம்; சுகமாய் வாழ்ந்திடுவோம் என்று கூறி அமைந்தார்.

பழந்தமிழ்த் தொகைநூல்களுள் ஒன்றாய புறநானூற்றில் வரும் 'ஏற்று வலனுயரிய.....'என்று தொடங்கும் பாடல் மூலம் பண்டைத் தமிழ் மாந்தர் சிவனையும், பலராமனையும் திருமாலையும் முருகனையும் வழிபட்ட செய்தியினை அறிகின்றோம். நந்தமிழர் கேடும் ஆக்கமும் பிறர் தரவாரா, நோதலும் அது தீர்த்தலும் தாமேவருவன. சாதல் புதுவதன்று. வாழ்தல் இனிதென மகிழ்ந்திலர். பேராற்றில் நீரின்வழியே செல்லும் மிதவை போல் அரிய ஊழின் வாழ்வு அமையும் என்று தெளிந்திருந்தனர். தமக்கென்றே தனி அறத்தை வகுத்து, மனத்தின்கண் மாசின்றி, அழுக்காறு அவா வெகுளி இன்னாச் சொல் நீக்கி வாழ்ந்தனர். வற்றா இன்பம் கண்டர்.

பிற்காலத்தே, சமயவாதிகள் தத்தம்மதங்களே தலையாயவை என்று அரற்றி மலையும் நிலை உண்டாகியது. தாயுமானார் அடிகள் கூறுவது போல, ''சமய கோடிகளெல்லாம் தந்தெய்வம் மேலானது: எந்தெய்வம் மேலானது'' என்று எதிர்வழக்கிடும் நிலை உருவானது. முரண்பாடுகள் விரிந்தன.

கிறீத்துவ வருடம் 1893 இல் அமெரிக்க நாட்டுச் சிக்காக்கோவில் சர்வதர்ம மகாசபை கூடியது. அங்கு சுவாமி விவேகானந்தர் தமது பேருரையில். உபநிடதங்களில் பயிலும் ஓர் அரிய சுலோகத்தின் வாயிலாகச் சமயப் பொதுமையை விளக்கினார்.

அது வருமாறு:-

''பல்வேறு இடங்களில் நின்றும் புறப்படும் நதிகள் வெவ்வேறு வழியோடிவரினும், அவை ஒரேகடலிற் போய் சங்கமமாவது போல, விருப்பு வேறுபாட்டால், மக்கள் பற்றும் மார்க்கங்கள் வேறுபடினும், அவர்கள் முடிவில் உனது பொற்பாத கமலங்களையே அடைகின்றனர்' என்பதாகும்.

**சிந்திப்போம் செயற்படுவோம்**

கீதாசாரியனும், பார்த்தனை விளித்து எவர் எவர் என்னை எந்தெந்த விதமாக ஆராதித்தாலும், அவர்கள் மனவிருப்பின்படி நான் அவர்களை அடைகின்றேன் என்று கூறியருளுதலும் காண்க.

இனி, சைவமாம் சமயம் கூறுவதையும் காண்போம்.

சிவஞான சித்தியார்:-

"யாதொரு தெய்வங் கொண்டீர் அத் தெய்வம் ஆகி ஆங்கே
மாதொரு பாகனார் தாம் வருவர்" என்றும் -

திருக்கைலாய ஞான உலா:-

"ஓவாதே எவ்வுருவில் யாரொருவர் உள்குவார்
உள்ளத்துள்"

அவ்வுருவாய்த் தோன்றி அருள் கொடுப்பார் என்றும் -

கந்தபுராணத்தில்:-

"யாதொரு பொருளை யாவர் இறைஞ்சிடினும் அதுபோய் முக்கண் மூர்த்தியை அடையும் அம்மா"

என்றும் குறிப்பிடுதலைக் காண்கின்றோம். அனைத்தும் ஓரிடைத்தையே அடைகின்றன. நிற்க

இதே கருத்தினைக் கவிச்சக்கரவர்த்தி கம்பநாடரும் இராமாயணம் பாலகாண்டம் ஆற்றுப் படலத்தில் 'கல்லிடை' என்று தொடங்கும் பாட்டில் சரயு நதி வெள்ளம் பல நிலையை அடைதலைக் குறிப்பிடும் போது -

''பரம்பொருள் ஒன்றேயாய் இருப்பது போல,சரயு நீர் வெள்ளம் ஒன்றேயாயிருந்தும், பல சமயத்தவர் ஆராய்ச்சிக்குட்பட்டு அப்பரம் பொருள், பல படியாகச் சொல்லப்படுவது போல் ஏரி, தடாகம் முதலிய பல இடங்களில் பொருந்திப் பல பெயருடனே வழங்கலாயிற்று'' என்று கூறுகின்றார்.

இனி, பதினெண் கீழ்க் கணக்கு நூல்களுள் ஒன்றாய நாலடியாருக்கு வருவோம். அங்கு -

''பசுக்கள் வெவ்வேறு நிறத்தை உடையனவாய் இருந்தாலும், அப்பசுக்கள் தந்த பால், வெண்ணிறத்தனவே அன்றி வெவ்வேறான நிறத்தை உடையவை ஆகமாட்டா. அந்தப் பால் போல தருமமானது ஒரே தன்மையுடையதாம். அத் தருமத்தின் வழிகள் இவ்வுலகத்தில் பல ரூபங்களைக் கொண்டிருத்தல் பசுக்கள் போலாகும்'' என்று கூறப்படுகின்றது.

இனி பாடலைப் படித்துப் பாருங்கள்,

ஆவே(று) உருவின ஆயினும் ஆபயந்த
பால்வே(று) உருவின அல்லவாம் - பால்போல்
ஒரு தன்மைத் தாகும் அறநெறி ஆபோல்
உருவு பல கொளல் ஈங்கு.


என்பது அது.

இறுதியாக மணிவாசகத்தில் இருந்து ஒரு வாசகம்:-

திருச்சிற்றம்பலம்
அத்தேவர் தேவர் அவர்தேவர் என்றிங்ஙண்
பொய்த்தேவு பேசிப் புலம்புகின்ற பூதலத்தே
பத்தேதும் இல்லாதென் பற்றறநான் பற்றிநின்ற
பொய்த்தேவர் தேவர்க்கே சென்றூதாய் கோத்தும்பீ.
திருச்சிற்றம்பலம்.

தொடரும் . சிகண்டியார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மௌனமொழி

## உங்கள் கவிதைகள்

அன்றொரு ராத்திரி நடந்தது யாத்திரை
அடை மழையையும் பாராது தொடர்ந்தது யாத்திரை
கையில் அகப்பட்டதையெல்லாம் பையில்,
போட்டுக் கொண்டே பயத்திரை சூழத் தொடர்ந்தது யாத்திரை!
பச்சிளம் குழந்தைகளைக் கடுங்குளிர் பலி கொளப்,
பார்த்திருந்த வேர்களும் பொத்தென விழுந்தன கிளாலியிலே!
அபயம் தேடி அகதி நாமம் சூடியன்று தொடர்ந்தது
அவல ராத்திரிகளின் ஆரம்பயாத்திரை!

- ந.வே.அகியோபி -
வதிரி.

பத்தடி அகல
பாதை – அதில்
பகல் வருமுன்
பத்து இலட்சம்
பாதங்கள் – தடயம்
பதித்த
பதிவு இது.
பாரில் இதுவரை
பார்த்திராத சாதனை!

- ம.ஜெகூ -
கிளிநொச்சி.

இடப்பெயர்வும்....
இன அழிப்பும்....
இலட்சிய......
விடுதலைப் பாதையின்
தடைக்கற்களல்ல...
இவை.....
உடைபடப்போகும்...
ஒரு..... தேசத்தின்.....
உத்வேக.....
மைல்..... கற்கள்!!!

- நா.சோபினி -

நல்வரவின் வளைவு
தூரத்தியது அன்று!
நடந்த பாதையில்
அடிவைக்க இடமில்லை...
குடிக்க நீரில்லை....
குடியிருக்க இடமில்லை...
இன்று மீண்டனர் என்று
எண்ணிய பலர்
நல்வரவின் தூண்களுக்கு
உரமிட்டே மாண்டனர்...
நூற்றுக் கணக்கானவர்
எலும்புகளும் இல்லை...
விடியலுக்கான பாதையும் இல்லை.

- ச.தியானேஸ்வரசர்மா -
நுணாவில் மத்தி.

இது இறக்கைப் பிராணிகளின்
பருவ இடப்பெயர்வல்ல -
இனவெறியால் தூண்டப்பட்ட
மனித இடப்பெயர்வு.
இது தீர்த்த யாத்திரையல்ல;
தீப்பிழம்புகளின் மத்தியில்
ஓர் இனத்தின் தியாக யாத்திரை.
இவர்கள் இடம்பெயர்ந்தவர்களல்ல;
இடம் பெயர்த்தப்பட்டவர்கள்
இவர்கள் சென்றது
இன்பத்தை ருசிக்கும் தேனிலவுக்காகவல்ல;
இறைமையை வென்றெடுக்கும்
இலட்சியப் போராட்டத்துக்காக!

- இ.உ.தயசங்கர் -

நடந்து நடந்து
நா வறண்ட வேளையிலே
மழை நீரை
மாதாவின் குடை வழியே
ஏந்திக் குடித்த சோகம்
ஓ! அது
ஒக்ரோபர் முப்பதின்
காலத்தால் அழியாத
கருத்துள் ஒன்றிவிட்ட
வரலாற்றுப் பதிவு.

- மயூறனி -
வன்னி.

வானத்து அன்னை பொழியும் கண்ணீர்
உன் மகன் தாகம் தீர்க்குமா?
அன்னையே நீ சிந்தும் கண்ணீர்
உன் இனத்தின் சோகம் தீர்க்குமா?

- லோகா -
சங்கையூர்.

தமிழ்த்தாய் குடைபிடிக்கின்றாள்
நாம் வான்மழையில் நனையாமல் இருக்க அல்ல;
அடிமைப்பருவ மழைக்குள் அகப்பட்டு
அழிவுற்று போய்விடாமல் தடுக்க.

- தி.க.திருக்குமரன் -
வட்டுக்கோட்டை.

வரவேற்பு யாருக்கு
வருகின்ற மழைக்கோ
மறைக்காமல் சொல்கின்றேன்
மழையொன்றும் பெய்யவில்லை
விழியிங்கு பெய்து
விழுகின்ற நீர்கள்
தரையோடு சேராமல்
தடுக்கின்றார் காண்மீன்!

- சூட் -

நடந்தேறும் நாடகங்கள் நம்மண்ணில் நீறாகி
நிடமான வோர்தீர்வு எங்கட்கு வாராதோ?
அவலத்தில் வாழ்ந்திங்கே அன்றாட மல்லலுறும்
பாவமக்க ளெவைவரதும் துயரிங்கு தீராதோ?
ஆட்சியதி லிருந்தவர்கள் இற்றைவரை செய்ததெல்லாம்
சாட்சியில்லாச் சாவுகளை சொந்தமாகத் தந்ததுதான்!
அடுத்துவடு கின்றவர்கள் என்னசெய்வ ரென்றெண்ணி
நடுத்தெருவில் நாய்போல நாதியற்று ஏங்குகிறோம்!!

- பொலிகையூர் சு.க.சிந்துதாசன் -

கவிதை வடிக்க – இது
கலை நயம் இல்லையப்பா!
சொல்லில் வடிக்க – இது
சொற்பதுயரம் இல்லையப்பா!
இன்னல்கள் பல கொடுத்த
இடம்பெயர்வு நிகழ்வப்பா!

- வி. கனில்டா -
ஆனைக்கோட்டை.

இது அடக்கப்பட்ட
மக்களின் அழுகுரல்
நாளல்ல! ஒன்றுபட்ட
தமிழினத்தை ஒடுக்கிவிட
முடியாதென அறைகூவிய
வரலாற்றின் புனிதநாள்!

- எஸ்.வீ.ரூபன் -
அராலி.

காலம் உருண்டென்ன
கோலம் உறையவில்லை
கால்கள் வலிமறக்க
நாலாண்டு போதவில்லை
பையில் பணமிருந்தும்
மெய்யை மழை நனைத்தும்
கால்மிடறால் வாய்நனைக்க
கதியேதும் கிடைக்கவில்லை
இவைகள் நினைவு வர
இமைபனிக்க மறக்கவில்லை!

- கச்சாயூர் கம்பர் -

பதி இழந்தோம் பாலகனை இழந்தோம்
நிதி இழந்தோம் நிர்கதி ஆனோம்
எதுவரினும் எம் இடப் பெயர்வு
வரலாற்றின் வெற்றிப் புள்ளிதான்.

- லோ.யாமினி -
வண்ணை.

வடக்கிருந்து வந்த,
'சூரியப் பிரகாசம்'
ஆரியப் பிரவேசமானது.
வளமான தமிழர் வாழ்வை
வடித்துத்துடைத்து
குடை நீரே குடிநீராகி
கண்ணீரும் செந்நீராகிறது.

- லோ.கமலவதனி -
ஓட்டுமடம்.

கைபிடித்தவளை
நாவற்குழிவரை
இரவிரவாய் கரை சேர்த்தேன்
காலை முகம் பார்த்தேன்
அவள் நானில்லை என்றாள்!

- க. நந்தன் -

வன்னிப் பரப்பினிலே
வாழ்விழந்த சோதரனே
வளைவு வரவேற்கிறது ~ என்று
வந்தோர் சேதி தெரியாதா?
வல்லூறுகள் இருக்கும் வரை
வந்து மாட்டிக் கொள்ளாதே!
வாழ்வை வளம்படுத்த எழாவிட்டால்
நாளையும் இப்படித்தான்.

- சங்கர் -
சண்டிலிப்பாய்.

வரலாறு கூறும்
நல்லூர் தேருமல்ல!
வல்லிபுரம் கடலாடலல்ல!
நாவற்குழியால் - நாம்
நகர்ந்தது,.....
பாகற்காயைப் போல்
கசந்தது!......
கறைபடிந்த வரலாறிது!!
சொரணையில்லா மக்களென,
போரைத்திணித்தனர்!
யாரிடம் நோவது!

- மாருதி -
ஆவரங்கால்.

இயற்கை அன்னையின் கொடையில்
உன் அன்னையின் குடையில்
வழிந்திடும் நீரை – நீ
பருகடா; பசி ஆறடா!

- க.நித்திலா -
சங்குவேலி.

அடையாளம் காட்ட
அட்டையுடன் திரியவில்லை – அன்று
நடுநிசியிலும் நங்கையர்
துணையின்றி உலாவினர்
தொண்ணூற்று ஐந்துடன்
தொலைந்தது சுதந்திரம் – இன்று
யாழ்ப்பாணம் வரவேற்கிறது
வாயிலில் வனப்புமிகு வாசகம்
வாயிலைக் கடந்தபின் (வெளி)
வரவேர்க்கிறது?

- கனகராயனூரான் -

அன்று........
யாழ்ப்பாணம் விடைகொடுத்தபோது.....
தென்மராட்சி வரவேற்றது.
ஆனால் இன்று....
தென்மராட்சி விடைகொடுக்கும்போது....
யாழ்ப்பாணம் 'வரவேர்க்கிறது' ஏன்??
செம்மணிப் புதைகுழிகள்....
சிந்திய இரத்தங்கள்......
சிந்தையைக் கலக்குவதால்.....!

- பொன். சிந்துஜா -
நுணாவில் மத்தி.

வானம் அழுதிருக்க
வலிகள் பலசுமந்து
நாங்கள் நடந்தோம்
நல்லது நடக்குமென்று
இன்றும் நடக்கின்றோம்
இதே இடந்தனிலே
இறங்கி ஏறி
இரக்கம் இல்லாதவர் முன்!

- சிவன் -
பளை.

## மௌனமொழி-60




உங்கள் கவிதைக்கான எங்கள் ஓவியம் இது. இதனை வரைந்தவர் பருத்தித்துறையைச் சேர்ந்த ஜெயதீபன்.

வரலாற்றுப் புலம்பெயர்வு
நடந்த அன்றும் -
வரிசையாய் புதைகுழிகள்
கிடக்கின்ற இன்றும் -
வாயடைத்தே நிற்குதே
வரவேற்பு வளைவு!

- ஜே.எஸ்.அருள்ராஜ் -

அஞ்சிப் பயந்தழுது
அலைவது தான்
வாழ்க்கையாச்சு!
தஞ்சம் புகுவதற்கும்
தக்கதோர் இடமில்லை!
எங்கு செல்கின்றோம்?
எங்களுக்கே புரியவில்லை!

- க. குகன் -
இணுவில்.

'எல்லாம் இறங்கு' என்று
சொல்லால் முழங்கியதால்
நில்லாது இறங்கியவள்
தள்ளாடும் திரளோடு
மழையும் உணராது - மழலை
பசியும் பாராது
வீதிநிலை மறந்து
விழியை பறக்கவிட்டாள்
செம்மணியுள் சருகான
கண்மணியாம் - தன்கணவர்
பொன்னுடலைத் தேடவோ..??

- க.கலைவாணி -
கச்சாய்.

யாழ்ப்பெயர்வின் சோகச்சுமைகளில்
இத்தாயின் சுமைகளில் இதுவுமொன்று!
"அம்மா! அம்மா!
தம்பீன்ர தலை நனையுது
தம்பிக்கு குடை பிடியம்மா"
.......?
அவன் உயிர் பிரிந்து
அரைமணிக்கு மேலென்று
அவளுக்குத்தான் தெரியும்!
அவர்களுக்கா தெரியும்?

- பராங்கதன் -

மண்ணில் குடியிருந்த
மக்களை மந்தைகளாய்
இடம்பெயர வைத்தாய்.
மக்கள் மனதிலுள்ள
மண்பற்றை ~ உன்னால்
இடம்பெயர்க்க முடிந்ததா?

- சாவையூர் சுகந்தி -

இடப்பெயர்வும்
அகதி வாழ்வும்
வழமையாகி விட்ட
தேசமிது.
சொந்த மண்ணிலேயே
ஷஅகதி; எனப்
பட்டம் பெற்ற
தமிழினமிது.

- பிராதிகி -
பூநகரி.

குடைவழி நீர் கூட
குடித்துப் பழகியது
குரல்வளை நெரிகையில்
குளிர்பானம் அருந்தவா?

- முன்னயன் வளவாள் -
மயிலிட்டி.

வரவேற்கின்ற யாழ்நகர் – உன்னை
வழியனுப்பி வைக்கின்றது
அஞ்சாதே தாயே! – உன்
குழந்தைகள் குடைநீர் குடித்தாலும் – நாளை
குதித்தெழும் விடியலுக்காய்!

- ந. வதனராஜ் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்த வார இராசி பலன்

**13 - 11 - 1999 இலிருந்து 19 - 11 - 1999 வரை**

## மகாதேவா ஜோதிடம்

| | | | |
|---|---|---|---|
| | வி சனி | | |
| | இராசிச்சக்கரம் | | ரா |
| கே | | | |
| செவ். சந். | | சூ புத. | வெ |

*மாற்றம்:- பூராடம் தனுராசியில் சந்திரன் நிற்கும். 15.11.1999 இல் மகரம் இராசியில் செவ்வாய் மாறும்.*

*அரசியலும் தேர்தலும் யுத்தமும் கலக்கமும் மாறிமாறி நடக்கும். உலக நாடுகள், அயல்நாடுகள் என்பன எட்டிப் பார்த்து என்ன நடக்கிறது, உதவி தேவையா? எனக் கேட்கும். மக்கள் முழக்கங்களால்பயப்படுவார்கள். மாணவர்கள் சந்தர்ப்பம் பார்த்து உரிமைக் குரல் எழுப்புவார்கள். தொழிலாளர்கள், உத்தியோகத்தர்கள், எதிர்க்கட்சியினர் சம்பளப் போராட்டம், அரசியல் சாணக்கிய நிலைகளை வைத்து பிரசாரம் செய்வர்.*

*இந்தியா வடக்கு, தெற்கு நாடுகளைக் கொஞ்சம் அக்கறையுடன் அவதானிக்கும். மேற்கு உலகம் கிழக்கு - மத்தியநாடுகளுக்கு பொருளாதார அழுத்தங்களைக் கொடுக்கும். மழை, காற்று, பூகம்பம், இயற்கைஅழிவுகள் சில இடங்களில் ஏற்பட்டு அழிவுகள் மாறி மாறிக் கொடுக்கும் எனக் கிரக நிலைகள் காட்டுகின்றன.*

### மேடம்

தகுதி குறைந்தவர்களுக்கு கீழ் தகுதி கூடியவர்கள் தொழில் செய்ய விரும்பமாட்டார்கள். அதுபோல நீங்கள் தொழில் ஸ்தானத்தில் தகுதி குறைந்தவர்கள் சரிபிழை சொல்லும் பொழுது அடிக்கடி கொதித்து எழுவீர்கள். பொறுமையாக இருக்கவும். எதிர்ப் பாலருக்குக் கஷ்டங்கள் குடும்பத்தில் வரும். அடிக்கடி காரியத்தடை, இன விரோதம், மனக்கவலைகள், செமியாக் குணம், கிருமித்தாக்கம், காயங்கள் என்பன ஏற்படலாம். மின்சாரம், வியாபாரம், தொழில்நுட்பம், மருந்து, நகை, பத்திரிகைதுறைகளுடன் தொடர்பானவர்கள் அதிகலாபம் அடைவார்கள். பெரியவர்களின்உதவிகள் கிடைக்கும். கோவில் குளம் என ஓடியாடித்திரிவீர்கள். தூரதேசச் செய்திகள் அதிர்ச்சியும் தரும். ஆறுதலும் தரும்.

*அதிர்ஷ்டநாள் :- திங்கள்,வெள்ளி.*

### இடபம்

உண்மைகளை அறியும் பொழுது எல்லாம் ஒடுங்கி அரிதாகிவிடுகின்றது. ஒளிபிறந்து நியாயம் பிறக்கிறது. தொழில் ஸ்தானத்திலும் புதிய வரவும் மதிப்பும் புகழும் தேடிவரும். மேலதிகாரிகள் வாழ்த்துவர். கோவில் செலவுகள் அதிகரிக்கும். ஆயுதபயம் அல்லது வாகனங்களிலிருந்து தவறிவிழச் சந்தர்ப்பங்கள் ஏற்படலாம். சோகம் ஒன்று தூரத்துச் செய்தியாக மனதில் அழுத்தும். சலவருத்தம், கைகால் சோர்வு ஏற்படும். சட்டம்,மருந்து, நிர்வாகம், நகை, கமிஷன் வேலைகள் என்பனவற்றில் ஈடுபடுபவர்களுக்கு இலாபங்கள் அதிகரிக்கும். ஓய்வு முக்கியம்.

*அதிர்ஷ்டநாள்:- திங்கள், வெள்ளி,*

### மிதுனம்

உணர்ச்சிவசப்பட்டு அடிக்கடி அங்கும் இங்கும் ஓடியாடித்திரிவதனால் எதுவும் நடந்துவிடாது. தொழில் ஸ்தானத்தில் எல்லோருடனும் அன்பாக இருங்கள். குடும்பத்தில் எதிர்ப்பாலரின் பேச்சுக் கிடைக்கும். வயிற்றுநோ, கண்எரிச்சல், வாய்வுத்தொல்லை என்பன ஏற்படும். சிலருக்கு பதவிஉயர்வு ஏற்படும். நினைத்ததைச் சாதிக்கும் காலமாகும். சூட்டு வருத்தங்கள் ஏற்படும். பொன்னாங்காணி,அகத்தி,பசளி வகைகளை சாப்பாட்டில் சேர்க்கவும்.அடிக்கடி ஓய்வு எடுத்துக்கொள்ளுங்கள். அரச அதிகாரிகளுடன் விரோதங்கள் ஏற்படலாம். மருந்து, நகை, போக்குவரத்து, கோவில் வேலை, விவசாயம், குருத்துறை போன்றவற்றுடன் தொடர்புடையவர்கள் அதிகலாபங்களைப் பெறுவார்கள். அந்நியர்களால் பல உதவிகள் கிடைக்கும்.

*அதிர்ஷ்டநாள்:- திங்கள்.*

### கடகம்

நடக்காததை நடத்திக்காட்ட எவராலும் முடியாது. விதி என்ற ஒன்று விளையாடும் பொழுது எவரும் இடையில் நிற்கமுடியாது.தொழில் ஸ்தானத்தில் ஏட்டிக்குப் போட்டியான சம்பவங்கள் ஏற்படும். உறவினர்கள் உதவுவார்கள். அடிக்கடி களைப்பு, காய்ச்சல், கண்வருத்தம், கிருமித்தாக்கம்,சலமல வருத்தங்கள் என்பனவற்றால் வருந்த நேரிடும். உறவினரும் நண்பர்களும் உதவிகள் செய்வார்கள். கௌரவக் குறைவான சம்பவங்கள் ஏற்படலாம். கடல், சட்டம், நிர்வாகம், விவசாயம், பத்திரிகைத்துறை போன்றவை தொடர்பானவர்கள் நன்மைஅடைவார்கள். இடமாற்றங்களைத் தவிர்க்குக. வாகனம், வீடு சம்பந்தமான செலவுகள் அதிகரிக்கலாம். ஆலயதரிசனம் மனஆறுதலைத் தரும்.

*அதிர்ஷ்டநாள்:- சனி, திங்கள், வியாழன்.*

### சிங்கம்

கண்டும் காணாமலும் கற்பனையில் வாழ்வது ஒரு சிலரைக் காப்பாற்றியபடி இருக்கும். ஆனால் வெளிநாட்டில் பிறந்த குழந்தைகளுக்கு நாம் கற்பனைசெய்து குறிப்புகளை எழுதக் கூடாது. யாழ்ப்பாண நேரத்துக்கு நேரத்தை மாற்றி எழுதுவது பிழையானதாகும். அந்தநாடுகளுக்கு கணிப்புக்கள செய்து சரியாக குறிப்புக்களை எழுதவேண்டும். எப்பொழுதும் சரியான முடிவே உண்மை - சத்திய முடிவாகும். அதிலிருந்து மாறாத மனோநிலை கொண்ட நீங்கள் தொழில் ஸ்தானத்தில் தவறுகள் நடப்பதை எதிர்த்து உண்மையை நிலைநாட்டிப் புதிய திட்டங்களை உருவாக்கி நன்மைகளைச் செய்யதபடி இருப்பீர்கள். நெஞ்சுநோ, அடிவயிற்றுவியாதி,வாய்வுத்தொல்லை என்பன ஏற்படும். அயலவர்கள் கோள் சொல்வார்கள். பொருள் தவறும். கவனமாக இருக்கவும். குரு, மின்சாரம், சட்டம், கமிஷன்துறை தொடர்பானவர்கள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்:- சனி, வியாழன்.*

### கன்னி

இறைபக்தி உள்ளவர்களின் சாபங்கள் சிலரைப் பின்தொடர்ந்தபடி இருக்கும். ஏன் உங்களுக்கு தொழில் ஸ்தானத்தில் புதிய வருமானங்கள் அதிகரிக்கும். கவலையை மறந்து பல நல்ல காரியங்களைச்செய்வீர்கள். நண்பர்கள் உதவிசெய்வார்கள். சில ஏமாற்றங்களை எதிர்கொள்வீகள்காசு,பொருள்,கொடுக்கல்வாங்கலில் அவதானமாக இருக்கவும். கண்வலி,வயிற்றுநோ,கீறல்காயங்கள் வரலாம். நகை, ரீ.வி, பத்திரிகை, வைத்தியம், குருத்துறை தொடர்பானவர்களுக்கு அதிக இலாபங்கள் வர இடமுண்டு. கறிமுருங்கைஇலை, அகத்திக்கீரை, பொன்னாங்காணி, கறிவேப்பிலை, பசளி, போன்றவற்றை உணவில் சேர்த்து அதிகநன்மை அடையுங்கள். அடிக்கடி திட்டங்கள் மாறினாலும் சட்டங்களைக் கண்டபடி மாற்ற முடியாமல் இருப்பீர்கள்.

*அதிர்ஷ்டநாள்:- சனி, வியாழன், வெள்ளி*

### துலாம்

மனதில் ஆறுதல் வர இடமாற்றங்கள் செய்வது நல்லதுதான். தொழில் ஸ்தானத்திலும் மாற்றங்கள் செய்யச் சிந்தனைகள் ஏற்படும். உங்கள் ஊக்கத்திற்கு தகுந்த மாதிரி நன்மைகள் ஏற்படும். வருமானம் பெருகும். அறிவு, ஆற்றல், புத்திநுட்பம் அனுபவசாலியான சூரியன்,வியாழன்பார்வை, புதன், சனிபார்வை கலந்த பலன்களைக் கிரகங்கள் தருவதனால் மதிநுட்பத்தால் பல கர்ரியங்களை அனுபவரீதியாகச் செயற்படுத்தி வெற்றிகாண்பீர்கள். பிறருக்குத் தகுந்த ஆலோசனைகள் சொல்லி நல்லபெயர் எடுப்பீர்கள். எதிலும் ஆராய்ச்சிசெய்ய மனம்ஏவும். தலைவலி, தோல் வருத்தங்கள், சல வருத்தங்கள், வயிற்றுக்கோளாறு என வருத்தலாம். புடைவை, கடல், ரீ.வி., கோவில்வேலைகள்,செய்தித்துறையில் ஈடுபடுபவர்களுக்கு நற்பலன்கள் அதிகரிக்கும்.

*அதிர்ஷ்டநாள்:- சனி, ஞாயிறு, வியாழன், வெள்ளி.*

### விருச்சிகம்

சாபங்கள், இறைபக்தி கொண்டவர்களின் கவலைகள் அது சம்பந்தப்பட்டவர்களைக் கட்டாயம் மாற்றக்கூடியது. இதை உணர்ந்து நடவுங்கள். தொழில் ஸ்தானத்தில் நன்மை, தீமை கலந்து நடக்கும். மேலதிகாரிகளை நம்பமுடியாது. பக்கத்தில் இருப்பவர்களுக்கு பரிதாபம் பார்க்காதீர்கள். எல்லாம் கொடுக்குமட்டும் வாழ்த்துவார்கள். அடுத்த நிமிடம் நன்றி மறந்து தூற்றும் சந்தர்ப்பவாதிகள் [illegible] உலகில் நாம் வாழுகின்றோம் என்பதை மறவாதீர்கள். நெஞ்சுநோ, வயிற்றுக்குழப்பம், நாரிவலி, கிருமித்தாக்கம், காய்ச்சல் என்பனவரலாம். அடிகாயங்கள் அல்லது இடறிவிழச சந்தர்ப்பங்கள் உண்டு. கடல், போக்குவரத்து, மருந்து, இரும்பு, வியாபாரம், நகை வேலை செய்பவர்களுக்கு அதிகமாற்றங்கள் கொடுத்துக்கொண்டிருக்கும்.

*அதிர்ஷ்டநாள்:- சனி, ஞாயிறு, வியாழன், வெள்ளி.*

### தனுசு

மலையுடன் மோதினாலமலைக்கா நஷ்டம்? பெரியபலம் அல்லது பணபலம், அதிகாரபலம், அறிவுப் பலம் கொண்டவர்களுடன் யோசிக்காமல் மோதினால் யாருக்கு நஷ்டம்? கொஞ்சம் நிதானித்து தொழில் ஸ்தானத்தில் அதிகாரிகளுடன் மோதாமல் இருங்கள். அல்லது வீண் நஷ்ட, கஷ்டம் அடைவீர்கள். நாரிநோ, வாய்வுத், தொல்லை, பிடிப்பு, காய்ச்சல் உடல் நோக்கள் என்பன வரலாம். இடமாற்றங்களைக் கட்டுப்படுத்துங்கள். பொருளால் வேதனைகள் வரும். அடிக்கடி மனக்கலக்கம், கோபம் எவரிலாவது வந்து வருத்தலாம். பொருள்வரவு சிலருக்கு வரலாம். கடல், போக்குவரத்து, நிர்வாகம்,வியாபாரம், விவசாயத்துறை என்பனவற்றால் அதிக முன்னேற்றங்கள் ஏற்பட இடமுண்டு. உங்கள் உழைப்பை நம்பி வாழமுற்படுங்கள் தேவையற்ற பிரயாணங்களைத்தவிர்த்துக்கொள்ளுங்கள்.

*அதிர்ஷ்டநாள்:- சனி,ஞாயிறு,*

### மகரம்

நாட்டில் காலத்திற்குக் காலம் முன்னேற்ற வளர்ச்சி, மாற்றங்கள் நடந்தபடி இருக்கும். இலங்கையில் புதைகுழி ஆராய்ச்சிகள் வளர்ச்சி பெற்றபடி இருக்கின்றன என எண்ணாதீர்கள். உலகில் பல நாடுகளிலும் இந்த ஆராய்ச்சிகள் தொடர்ந்தபடி இருக்கின்றன. ஆனால் நீங்கள் தொழில்ஸ்தானத்தில பல முன்னேற்றகர ஆராய்ச்சிகளை, பொருளாதார திட்டங்களை அமுல்படுத்த எண்ணியபடி இருப்பீர்கள். ஞர்னம் பேசி னால் காசுவருமா? செயற்பாட்டில் ஊக்கத்துடன் இருந்து வெற்றி பெறுவீர்கள். சளி, நெஞ்சுநோ, நரம்புச் சோர்வு கொடுக்கும். போக்குவரத்து, வியாபாரம், கூலித்துறையினர்களுக்கு அதிகநன்மை ஏற்பட்டபடியிருக்கும்

*அதிர்ஷ்டநாள்:- சனி, திங்கள், வியாழன், வெள்ளி.*

### கும்பம்

இறைநாம பிரார்த்தனைகள், மன உறுதியும் சமநிலை நோக்கும் உங்கள் நற்பாதையில் எப்பொழுதும் செல்லச்செய்தபடி இருக்கும். தொழில் ஸ்தானத்தில் மறைமுகப் போட்டிகள் இருக்கும். ஆயினும் உங்களை எவரும் வெல்லமுடியாது. எதையும் இலகுவில் அறிந்து செயற்படுவீர்கள். நாரிவலி, முள்ளந்தண்டு நோ என்பன தொடரும். வைத்தியம் செய்யவும் இடமாற்றம், வாகனசெலவுகள், சகோதரர்களுடன் மனக்கசப்பு என்பன கொடுக்கும். வியாபாரம், விவசாயவேலை கமிஷன் தொழில், இயந்திரம், நகைத் துறையினர் அதிக நன்மைகள் அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்:- சனி, வியாழன், திங்கள்.*

### மீனம்

காணி, வீடுவளவு எல்லாவற்றையும் விற்றுவிட்டு கனடா, லண்டன், சுவிஸ் என ஓடுகிறார்கள். நாம் ஏன் இருப்பான் என யோசிக்கிறீர்களா? பிறந்த மண்வாசனை என்றோ ஒரு நாள் வரும்போதுதான் தெரியும் அதன் அருமை. அப்பொழுது லட்சம் சீதனம் வாங்குபவர்களின் நிலை, மண்ணின் விலை மதிப்பு எல்லாம் புரியும். பிறந்த நாட்டு வேலையை மறந்திடாமல் வாழ நினைக்கிறீரோ? நல்லது தொழில் ஸ்தானத்தில் நல்லதைச்செய்து இலாபங்கள் அடைய முயற்சி எடுக்கவும். நாரிவிறைப்பு, கைகால்தாக்கம், நரம்புச்சோர்வு என்பன கொடுக்கும். கடல், போக்குவரத்து,தொழில்நுட்பம், ஹோட்டல் போன்றவற்றில் தொடர்பானவர்களுக்கு அதிகஇலாபங்கள் தேடிவரும். பிரயாணங்களைத் தவிர்க்கவும். அல்லது இழப்புக்களைச் சந்திப்பீர்கள்.

*அதிர்ஷ்டநாள்:- சனி,திங்கள், வியாழன்.*

---

# ஆஸ்திரேலியாவிலும்.....

(VI ஆம் பக்கத் தொடர்ச்சி)

அளவைப் பார்த்தால் ஒரு பெண்ணுடையதாக இருக்கலாம் எனக் கணித்தான் அவன்.

காணாமற்போனோர் பட்டியலில் இன்னொரு பெண்ணை மீட்கும் பணி இவனிடமா?

எலும்பு கிடைத்த இடத்தைச் சுற்றி சுற்றும் முற்றும் தேடினான். ஆங்காங்கே சிறுசிறு எலும்புத்துண்டுகள் தென்படலாயின. மேலும் தேடல் விரிவடையவும் அந்த மனிதமண்டையோடு கண்ணில்பட்டது.

பொலீஸுக்குத் தகவல் கொடுத்தான் பிறயர். கூட்டம் கூட்டமாக பொலீஸார் பெலன்குளோ வனத்தை மீண்டும் மொய்த்தனர். பிறயர் கண்டுபிடித்த இடத்திலிருந்து 120 அடி தொலைவில் அடுத்த எலும்புக் கூடும் உடைகளும் கண்டுபிடிக்கப்பட்டன.

இப்போது கண்டுபிடிக்கப்பட்ட இரண்டு மனிதத்தடயங்களும் ஜொனேயும் கரோலினும் கிடந்த இடத்திலிருந்து சுமார் 2,000 அடி தொலைவில் இருந்தன. ஆக காணாமற்போனோரில் 4 பெண்கள் எலும்புக்கூடாக ஒரே பிரதேசத்தில் மீட்கப்பட்டனர்.

இப்போது கண்டுபிடிக்கப்பட்ட எலும்புகளில் தசைகள் அற்றுப்போய் விட்டன. எனினும் அடிகாயங்கள் ஏற்பட்டமை உறுதியாயிற்று. ஆடைகள் களையப்பட்டிருந்த விதம் இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட 4 கொலைகளையும் ஒரேஆள் செய்திருப்பதை உறுதிப்படுத்தியது.

பற்கள், ஆடைகள், கிடைத்த அணிகலங்கள் என்பன அந்த இரு பெண்களையும் அடையாளம் காட்டின. அவர்கள் காணாமற்போய் சுமார் இரண்டரை ஆண்டுகள் கழிந்த நிலையில் இப்படி மீட்கப்பட்டுள்ளார்கள்.

டெபோறா, ஜேம்ஸ் ஜிப்சன் ஆகிய இரண்டு ஆஸ்திரேலிய இளம் பெண்களின் கதி இப்படியானதை இத்தனை காலம் கழித்து உறுதி செய்யவேண்டிய நிலைமை அவர்களது உறவுகளுக்கு இருந்தது. இங்கும் கொலையாளியை இனங்காட்டும் தடயங்கள் பெரிதாக அகப்படவில்லை.

இத்துப்புத் துலக்கும் பணிக்காக ஒரு தனி அலுவலகம் நிறுவப்பட்டது. ஒரு குழு நியமிக்கப்பட்டது. முப்பது தொலைபேசிகள், பன்னிரண்டு கணனிகள் என்பன ஒதுக்கப்பட்டன. கணனிகள் பொலீஸ் நிலையக் கணனிகளுடன் இணைக்கப்பட்டன. பெருமெடுப்பிலான துப்பறியும் பணிகள் முடுக்கிவிடப்பட்டன. 'பழைய கேஸ்கள் அலசப்பட்டு குற்றவாளிகள் ஆராயப்பட்டார்கள். தினமும் 2,000க்கும் மேற்பட்ட தொலைபேசித் தகவல்கள் பரிமாறப்பட்டன.

சுமார் 300 பொலீஸார் வனப்பகுதியைச் சல்லடைபோடும் பணியில் இறங்கித் தொடர்ந்தனர். கொலையாளிகளாக இருக்கக்கூடிய சாத்தியம் கொண்ட சுமார் இரண்டாயிரத்து ஐந்நூறு பேரை பொலீஸ் தகவல்கள் இனங்கண்டுகொண்டன. அத்தனை பேரையும்தனித்தனியாக ஆராய்வதோ மிகச் சிரமமாக இருந்தது.

அடுத்த மாதம் - அதாவது 93இன் நவம்பர் (முதலாம் திகதியன்று -மாலை 3.00 மணியளவில் காட்டில் மேலும் [illegible] உடல் கண்டுபிடிக்கப்பட்டது. அதுவும் இரண்டரை வருடங்கள் கழிந்த நிலையில் எலும்புக்கூடு சிதைந்தே கிடைத்தது. பழுதடைந்துவரும் ஆடைகள் ஜேர்மனியப் பெண்ணான 21வயது அழகி சிமோன் ஷிமியினது என்பது தெளிவாகியது.

அவள் நண்பிகளிடமிருந்து பிரியும்போது அணிந்திருந்த ஆடைகள் அவை. அவளது தலை பான்ட்டும் கண்டுபிடிக்கப்பட்டது. அவளது மோதிரமும் கழுத்துச் செயினும் கூட மேலும் தகவலை உறுதிசெய்தன.

அதேவாரம் மேலும் ஒரு மைல் தொலைவில் அன்ஜா, கபோர் ஆகிய இருவரது உடல்களும் கண்டுபிடிக்கப்பட்டன. கபோரின் மண்டையை அதே 0.22 துப்பாக்கியின் 6 வேட்டுக்கள் பதம்பார்த்து இருந்தன. சன்னங்கள் அதை உறுதிசெய்தன.

அன்ஜாவின் மண்டையோடு கிடைக்கவில்லை. அடிகாயங்கள் ஏற்பட்டமைக்கான அறிகுறிகள் தெரிந்தன. விவரமறிந்து ஓடிவந்த கபோரின் தாய் அந்த வனப்பிரதேசம் முழுவதும் அழுதபடி திரிந்தாள். அவளை ஆறுதல்படுத்த பொலீஸ் அதிகாரிகளால் இயலவில்லை.

40 வரையான துப்பறியும் நிபுணர்களும் - 20 கணனித்துறை நிபுணர்களும் - அந்த விசேட பணிமனையில் கடமையில்இருந்தனர். கொலை செய்யப்பட்டவர்கள் போனஇடம் வந்த இடம் கண்டவர்கள், கேட்டவர்கள் என்றெல்லாம் பலரும் விசாரிக்கப்பட்டார்கள். அனைத்துத் தகவல்களும் உடனுக்குடன் கணனிமயப்படுத்தப்பட்டன.

முக்கியமாக 0.22 றகர் ரகத் துப்பாக்கிகளை வைத்திருப்போர், திருத்துவோர், வாங்குவோர், விற்போரின் பட்டியல்கள் கணனியில் தயாராகின.

கபோரின் உடலுக்குச் சற்றுத் தொலைவில் கிடந்த வெற்றுத் தோட்டாப்பெட்டி வின்செஸ்டர் ரகத்தைச் சேர்ந்தது. அதன் தொகுதி இலக்கம் ACDICF 2 என்பதாகும்.

அத்தொகுதியில் மூன்று இலட்சத்து இருபதினாயிரம் வரையான தோட்டாக்கள் 1988இன் பின் அரை ஆண்டில் ஆஸ்திரேலியாவில் விற்பனைக்கு விடப்பட்டிருக்கின்றன. இதில் இங்கு பாவிக்கப்பட்ட 16 வேட்டுகளுக்கான ரவைகளை வாங்கியவர் யாரோ?

கண்டுபிடிப்பது சுலபமான காரியமாகப் படவில்லை. சுமார் 15 இலட்சம் தகவல் துணுக்குகளைக் கொண்டு கணனிகள் திணறின. நவீன கணனிகளைப் புகுத்தி அவற்றுக்குத் தகவல்களைப் பரிமாறும் பாரிய வேலைத்திட்டமும் செயற்படுத்தப்பட்டது.

புதிய நுட்பங்கொண்ட கணனிகள் தகவல்களைத் தரம்பிரிக்கத் தொடங்கின. 0.22 றகர் துப்பாக்கி, பிக்கப் ரக வாகனம், கத்திக் குத்துக் குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்கள், பாலியல் குற்றவாளிகள், அந்தப் பிரதேசத்தை சுற்றிச் சுழல்பவர்கள் என்றெல்லாம் பலரகத்துள்ளும் அடங்கும் ஆட்களைத் தேர்ந்து கண்காணிப்பதில் ஈடுபட்டனர் பொலீஸ் அதிகாரிகள்.

பட்டியலிடப்பட்ட குற்றவாளிகளின் வேலைத்தளங்கள் ஆராயப்பட்டன. அவர்கள் விடுமுறை பெற்றிருக்கும் நாள்களுக்கும் இக்கொலைகளுக்கும் இடையேயுள்ள தொடர்புகள் ஆராயப்பட்டன. விளைவு - சாத்தியமான கொலையாளிகளின் பட்டியல் குறுகத்தொடங்கியது.

எனவே சாத்தியம் உள்ள இடங்களை இறுக்கி, நெருங்கி ஆராயத் தொடங்கினர் நிபுணர்கள். பெண்கள் மாட்டிக்கொண்டு தப்பிவிட்ட சந்தர்ப்பங்களும் தெரியவந்தன. தப்பியது போதும் என்று புகார்செய்தவர்களும் இப்போது வாக்குமூலம் தரத் தயாராகிறார்கள். அவர்களால் கொலையாளியின் படத்தை அடையாளம்காட்ட முடிகிறது.

யார் கொலையாளியாக இருக்கக் கூடும் என்பதற்கான சந்தேகம் இப்போது பத்திற்கும் குறைவானோரின் மீதே விழுகிறது. அவர்களின் வரலாறுகள், செயல்கள்,தன்மைகள் ஆழமாக ஆராயப்படுகின்றன. மிகவும் பொறுமையான - நீண்டகாலம் எடுத்த பணியாக அது அமைந்தது.

நான்கு பெண்கள் இருவேறு சந்தர்ப்பங்களில் மாட்டுப்பட்டுத் தப்பியிருக்கிறார்கள். அவர்கள் நால்வரும் ஐவன் மிலற் என்பவனின் படத்தையே அடையாளம் காட்டி இருந்தனர்.

இந்த ஐவன் மிலற் 1990இல் ஒரு பிரிட்டிஷ் உல்லாசப் பயணியைக் கடத்தி பயணப்பையை பறிக்க முயன்ற சமயம் அந்தப் பயணி தப்பிக் கொண்டான். 1994இல் அவனிடம் காட்டப்பட்ட 14படங்களில் தன்னைக் கடத்திய மிலற்றின் படத்தை எடுத்துக் கொடுத்தான். மிலற்றிடம் 0.22 றகர் துப்பாக்கி இருப்பதையும் உறுதிப்படுத்தினான்.

விசாரணைகள் ஐவன் மிலற் மீது சந்தேகத்தைத் திணித்தாலும் பெலன்குளோ படுகொலைகளுடன் அவனைத் தொடர்புபடுத்துவது சிக்கலாகவே இருந்தது.

மிலற் குடும்பமே பயங்கரப் பேர்வழிகள். பல சகோதரர்கள் வன்முறைகளில் ஈடுபட்டுத் தப்பிப்பிழைத்து வாழ்பவர்கள். அவர்களில் ஒருவனான அலெக்ஸ் மிலற் வீட்டில் ஷிமோனின் பயணப்பை கண்டுபிடிக்கப்பட்டது. அவர்களுக்கு மிலற் ஐவன் அதைப் பரிசளித்து இருந்ததும் தெரியவந்தது.

மிலற் கைது செய்யப்பட்டு அவனது வீடு சல்லடை போடப்பட்டபோது ஆங்காங்கே மறைத்தும் வெளிப்படையாகவும் கிடந்த பல தடயப் பொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டன. 0.22 றகர் ரக துப்பாக்கி உதிரிப்பகுதிகள், தோட்டாக்கள், கடத்தப்பட்டவர்களின் சிறுசிறு உடைமைகள் எல்லாம் உறுதிபடத் தெளிவாக மிலற்றைக் காட்டிக்கொடுத்தன.

175வரையான சாட்சிகளும் சுமார் 800 தடயப்பொருள்களும் நீதிமன்றத்தில் மிலற்றின் மீதான சந்தேகத்தை உறுதிசெய்ய அவனது ஆயுள் தண்டனை உறுதியாகிறது. எதுவும் இழப்புக்களை ஈடுசெய்யவோ பாதிக்கப்பட்டவர் மனங்களை ஆறுதல்படுத்தவோ போவதில்லை என்பது மட்டும் உண்மை.

எனினும் ஆபத்தான பேர்வழி ஒருவன் கூண்டுக்குள் அடைபட்டபோது பலருடைய ஏக்கங்களுக்கான விடைகள் தெளிவாயின. இனம்புரியாது வியாபித்து நின்ற பீதி நீங்கத் தொடங்கியது.

*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலையில் படும் வெளவால்கள்

இலுப்பைப்பூ வாசனை மூக்கை நிறைத்தது. இப்போதுதான் பூத்துக், காய்த்து முடிந்து போனமாதிரி இருந்தது. மரம் பூத்தது, காய்த்தது, வளவு முழுக்க இலுப்பைக் கொட்டைகள் சிதறிக் கிடந்தன, பொறுக்கியது, வெயிலில் காயவைத்து, பருப்பெடுத்தது, எண்ணெய் ஊற்றியது.......

எல்லாம்... இப்போது....ம் இப்போது தான் என மனது அடித்துச் சொல்லிக் கொண்டிருந்தது. ஆனால் அதற்கிடையில் மறுபடியும்......

இலுப்பைப் பூ வாசனை மூக்கை....




மரத்தின் கீழ் இலுப்பைப் பூ மெத்தை விரித்ததுபோல் பரவிக் கிடக்கும். பூவைக் கையிலெடுத்து பிசுக்கினால் தண்ணியாகவரும். பின் ஒரு வாசனை எழும்.

அது என்ன வாசனை? சொல்ல முடியாது. பூ வாசனையில் மயங்கிக் கிடக்கையில்... நாள்கள் ஓடிவிடும். இரவில் சில வெளவால்கள் வந்து மரத்தை நோட்டம் பார்த்துவிட்டு கீச் கீச் என்ற கத்தலுடன் பறந்து போய்விடும். இன்னும் தாங்கள் வருவதற்கு நேரமிருப்பதை உணர்ந்துவிடும்.

வெளவாலுக்கு எப்படித் தெரிகிறது. இலுப்பைப் பூ வாசனை அவ்வளவு தூரத்துக்கு போகின்றதா? யார் போய் சொல்ல இருக்கிறார்கள்? சொல்லி இருப்பார்கள்?

எங்கள் வீடு இடது பக்க சுவரோடு இலுப்பை மரம் கம்பீரமாக எழும்பி நின்றது. மரத்தின் வயது அறுபதைத் தாண்டிவிட்டது. வீட்டின் கூரையின் அரைவாசிப் பகுதியை இலுப்பைக் கொப்புக்கள்தான் மறைத்து வைத்திருந்தன. ஏற்கனவே எங்கள் வீடு பழைய கால நாற்சார் வீடு.

இலுப்பை மரத்தின் இலையுதிர் காலத்தின் சருகுகள் காற்றில் சுழன்று வந்து நாற்சார் முற்றத்தின்மேல் அடித்திருக்கும் கம்பி வலையில் தொங்கியபடி இருக்கும்.

பூக்கள் விழுந்து விழுந்து களைத்துப்போக மரக்கொப்புக்களில் குலை குலையாக இலுப்பைக் காய்கள் தெரிகின்றன. வழமையைவிட மரத்தில் காய்கள் அதிகமாக இருக்கிறது. காய்ப் பாரத்தினால் கொப்புகள் முறிந்து விழுந்த சம்பவங்களும் உண்டு.

நவராத்திரி பூசை காலத்தில், புரட்டாதி மாதத்தில் இலுப்பைப்பழம் விழத் தொடங்கிவிடும். மழைநேரம் நிலம் ஈரலிப்பும், சகதியுமாக கால் வைத்தால் மண் காலில் இறுக ஒட்டிக்கொள்ளும்.

யுத்தமேகங்கள் போல் கருமேகங்கள் வானை மறைத்து மழைவருமென பயமுறுத்திக்கொண்டிருந்தன. வெயில் இம்முறை சனத்தை நன்றாக வாட்டிவிட்டது. நிலம் வெடித்துப் பிளந்து, புல்பூண்டுகள் கருகி, மரங்களும் செத்துப்போய் நின்றன. பங்குனி மாதம் போல் அனல் பறந்து புழுதி அடித்தது. வயலில் மேய்ந்து கொண்டிருந்த கால்நடைகள் எல்லாம் வாயில் அகப்படும் காய்ந்த புற்களைக் கடித்துத் தின்று பசியாறிக்கொண்டிருந்தன.

மாடுகளின் இருபக்க வயிறும் குழி விழுந்து விலாஎலும்புகள் தெரிந்தன.

'கடவுளே என்ரை அண்ணை குடும்பமும் வன்னியில என்ன கஸ்ரப்படுகினமோ?'

'அண்ணை பேசாமல் இங்கேயே நின்றிருக்கலாமோ? அப்படி ஆரம்பத்திலேயே இங்கு நின்றிருந்தால்..... எவ்வளவுபேர் இங்கு நிக்கிறார்கள்... சந்தோஷமாக.... மோட்டார்சைக்கிளிலும், பிக்அப்பிலும்.... முகத்தில் வெயிலை மறைக்க குளிர் கண்ணாடி போட்டுக் கொண்டு.... மற்றவர்களை அதிகாரம் பண்ணிக்கொண்டு... சுதந்திரமாக.....'

'என்ரை அண்ணனுக்கு இந்தச் சுதந்திர வாழ்க்கை தெரியாமல் போய்விட்டதா? இவனுக்கு மட்டும் ஏன் இப்படி கஷ்டப்படவேண்டுமென்ற தலையெழுத்தா? இப்ப யோசித்து என்ன பயன்?'

'அண்ணன் போய்விட்டான்.'

அண்ணையை நினைக்க நினைக்க மனம் கனக்கின்றது. எப்போது அண்ணன் குடும்பத்தைப் பார்க்கப்போகிறேன்? சித்தப்பா, சித்தியென்று, காலடியில் சுற்றிக்கொண்டிருந்த பிள்ளைகள் இன்னும் வளர்ந்திருப்பார்கள். இடையில் வந்த கடிதத்தில் மாறிமாறி எல்லோரும் மலேரியா வந்து படுத்தெழும்புகின்றோம் என எழுதினார்கள். ஒரு குடும்பப் படமும் அதில் வைத்திருந்தார்கள். அவர்களின் கோலத்தைப் பார்க்கமுடியவில்லை. அக்கா வாய்விட்டு அழுதே விட்டாள்.

என் மனைவி விம்மலுடன் நின்றாள்.

என் மூன்று வயதுச் சோடிப் பிள்ளைகள் "அப்பா இவர்கள் யார்" என்று தெரியாமல் குழம்பினார்கள்.

நிலையில்லாத வாழ்க்கை இது, இதுவரை பதினாறு இடங்களுக்கு மேல் இடம் மாறிவிட்டார்களாம். அதிகாரப் பேய் எம்மினத்தை குண்டு வீச்சுப் போல் துரத்தியடித்துக் கொண்டு இருக்கின்றது.

'ஆண்டவா நாங்கள் என்ன பாவம் செய்தோம்?' - மனம் அழுது புலம்புகின்றது.

நித்திரை வரவில்லை. குளிர்காற்று திடீரென்று வீசி, வீட்டுக் கூரையில் படுத்துக்கிடந்த சருகுகளை எழுப்பி வேறிடம் படுக்கவைத்தன. இயற்கை எதையும் நிலையாக வைத்திருக்க விரும்புவதில்லை.

அண்ணர் குடும்பமும் இப்போது இடம்மாறி இருக்குமோ?

.....ம் இன்னும் கொஞ்சநாளில வெளவால்களின்ரை அமளி தொடங்கிவிடும். வானில் ஒவ்வொரு திக்காகப் பறந்து வந்து, பொழுது சாய இலுப்பை மரத்தை உலுப்பத் தொடங்கி அவை அட்டகாசம்புரியும். கொப்புக் கொப்பாய் உலுப்பும். ஓட்டில் பழங்கள் சத்தமிட்டு உருண்டுவிழும். பிடுங்கி வாயில் திணித்த பழங்களின் கொட்டைகளை வெளியே பிதுக்கி தள்ளி விட்டு.....

அடுத்த தாக்குதல் தொடங்கிவிடும். பத்துப்பரப்பு காணியிலுள்ள ஒவ்வொரு தென்னைமர உச்சியிலும் சாவகாசமாய் பேசியபடி சாப்பிட்டுத் துப்பிய இலுப்பைக் கொட்டைகள் மரத்தினடியில் சிதறிக்கிடக்கும்.

அட எவ்வளவு ஆனந்தமான வாழ்க்கை?

அதிகாலை இரண்டு மணிக்குள் எல்லா அமளியும் ஓய்ந்துவிடும். ஆச்சரியம் இலுப்பை மரம் சாமியாராகி மௌனமாக விறைத்து நிக்கும்.

வெளவால்கள் இங்கு வருவதையும், போவதையும் யார் தடுக்கப் போகிறார்கள்? எவ்வளவு சுதந்திரம்?

கடவுளே எங்களை இப்படி எப்ப வாழவைக்கப் போகிறாய்?

இருந்தாற்போல் மழை பெய்யத் தொடங்கியது. இரைச்சல் அதிகமாக இருந்தது. மழை அதிகரிக்க நாற்சார் முற்றத்திலிருந்து தூவானம் எல்லாப் பக்கமும் அடித்தது. படுக்க முடியவில்லை. மனைவி பிள்ளைகளுடன் எமது படுக்கை இடம்மாறியது.

"என்னப்பா இந்த முறை கும்ப பூசையோட மழை பிடிச்சிடும் போல.... இலுப்பையும் பழுக்கத் தொடங்கினால் சேத்துக்க நல்லாத்தான் இருக்கும்"

மனைவி தன் பாட்டுக்குப் புலம்பினாள்.

"என்னப்பா வன்னியிலும் இப்ப மழை பெய்யுமோ? இந்த வீட்டுக்குள்ளேயே தூவானம் எத்தி நிலத்தை நனைக்கும்போது..... அங்கே கொட்டில்களின் நிலை எப்படி இருக்கும்?"

"ஏன் சும்மா அண்ணை அண்ணையென்று யோசித்து சாகிறியள் அவராத்தானே வன்னிக்கு போனவர்? அவரென்ன சின்னப் பிள்ளையே?"

மனைவி என்னை சமாதானப் படுத்த முயன்றாள்.

"அந்த நேரத்தில நாங்களும் போகத்தான் நிண்டனாங்கள். கடைசியில மாட்டுப்பட்டுப்போனம். அவர் நின்றிருந்தால் பிரச்சினையில்லாமல் இருந்திருப்பரே? அந்த நேரத்தில் உடன இங்க யாழ்ப்பாணம் வந்த ஆக்களிலை இப்ப எத்தனைபேர் காணாமல் போய் சனங்கள் தேடிக் கொண்டு இருக்குதுகள். சரி ஏதோ அவரை கண்ணால காணாட்டியும் இருக்கிறார் என்ற நம்பிக்கை."

"சரி பிறகேன் மண்டையைப்போட்டு குழப்புறியள்? படுங்கோவன். எனக்கு இலுப்பைக் கொட்டை பொறுக்கிறதை நினைக்க நித்திரை வருகுதில்லை."

இரவு பெய்யத் தொடங்கிய மழை நவராத்திரி பூசையோடு தொடர்ந்து பலமாக பிடித்தது. வயற்காணியெல்லாம் வெள்ளம் நிரம்பத் தொடங்கியது.

இலுப்பை பழுக்கத்தொடங்கி விட்டது. வெளவால்களின் கொண்டாட்டமும் இரவில் ஆரம்பமாகியது. இரவில் 'கீச் கீச்' என்ற சத்தமும் 'சட சட'வென இறக்கைகள் அடிக்கும் சத்தமும், காதில் மோதின. மேலே பறக்கும்போது வெளியேற்றும் எச்சம் நாற்சார் வலையூடாக நிலத்தில் 'நச்' சென விழுந்தது.

தென்னை மரங்களுக்கடியில் பரவிக்கிடந்த இலுப்பைக்கொட்டைகளை பொறுக்கும் வேலை தொடங்கியது.

"என்னடா யோசித்துக்கொண்டு நிக்கிறாய்? வாத்தியார் வீட்டுத் தென்னோலையிலும் சுந்தரியக்கா வீட்டுக்குப் பக்கத்தில நிக்கிற வேம்பிலையும் வலையைக் கட்ட கணக்கா இருக்கும்."

"இல்லையடா தூரம் கூடிப் போச்சு போல கிடக்கு"

"உனக்கு விசரே... நல்ல வடிவாய் காணும்."

சரசரவென தென்னை மர உச்சியில் ஏறி தடியைக் கட்டினான். அதே போல வேப்பமரத்திலும் இதே நாடகம் அரங்கேறியது. இருபக்கமும் கம்பிகள் மூலமாக கயிற்றினை இழுத்து வலையை மேலே கொண்டுபோனார்கள்.

இலுப்பை மரத்தைத் தேடிவரும் வெளவால்களுக்கு வலை விரிக்கப் பட்டுவிட்டது. எடுத்த காரியம் முடிய கீழே நிண்ட சின்ன வாண்டுகள் பெரிதாக கூச்சல் போட்டுச் சிரித்தார்கள்.

பார்த்துக்கொண்டிருந்த எனக்கு பகீரென்றது. மனைவியை அவசரமாக அழைத்தேன். வந்து பார்த்தாள்.

"உதுக்கே இப்ப கத்தினீங்கள்? நான் இலுப்பைக் கொட்டை பொறுக்கிக்கொண்டு நிண்டனான் அதை விட்டுப்போட்டு ஓடிவாறன்."

'இது சாதாரண விசயமே?' மனது தவித்தது.

இத்தனை நாளும் தங்கள் பாட்டுக்கு வந்து போய்க் கொண்டிருக்கும் வெளவால்களுக்கு இது தெரியாதே? அதுகள் அப்பாவிகள்,எவ்வளவு தூரத்தில இருந்து நம்பிக்கையோட வருகுதுகள் - பசியாறிவிட்டுப் போறதுக்கு. அதுகளை யார் தடைபோடுறது?

திடீரென்று இன்று விரித்த வலை அவையளுக்கு தெரியவா போகின்றது.

மனது பெரிதாக ஓலமிட்டது.

"என்னப்பா நீங்கள் சின்ன விசயத்தைப் பெரிசாய் தூக்கிப் பிடிச்சுக் கொண்டு... எனக்கு குனிஞ்சு குனிஞ்சு இடுப்புக்குள்ள பிடிக்குது. நீங்களும் வந்து கொஞ்சம் பொறுக்குங்கோ."

உற்சாகமில்லாமல் வேலை தொடர்ந்தது. பொழுது சாயத்தொடங்க மனதில் பயம் பிடித்துக்கொண்டது. வெளவால்கள் கூட்டம் கூட்டமாக வரத்தொடங்கின.

வெளியில் வாத்தியார் வீட்டு வளவில் வாண்டுகளின் கூக்குரல் கேட்டது.

"அட கத்தாம இருங்கோடா"

"அதுகள் சத்தத்தில கலவரப் பட்டுப்போகும்"

"அவை முந்தி வாற பழக்கத்தில நல்ல குசியில வருவினம். நாங்கள் வலை கட்டினது அவையளுக்குத் தெரியாது"

"டோர்ச்லையிட்டை இப்ப அடிச்சுப் போடாதேங்கோ வாறது ஓடிப்போயிடும்"

வாண்டுகள் தயாராக இருந்தார்கள். நான் தெருவில் இறங்கி இருளோடு இருளாக நின்றேன். வாண்டுகளும் சத்தமில்லாமல் பதுங்கி இருந்தார்கள். நிமிடங்கள் கடந்தன. வெளவால்கள் வலையில் படவில்லை. எனக்கு சந்தோஷமாக இருந்தது. அவையளுக்கு வலை விரிக்கப்பட்டு இருப்பது தெரிந்துவிட்டதோ? அதுதான் எல்லாம் உஷாராகிவிட்டனவோ?

மனது சந்தோஷத்தில் துள்ளிக் குதித்தது. 'அறுவான்கள் அது பாட்டுக்கு பாவம் பழந்திண்டுபோட்டுப் போயிடும். அதுகளைப் பிடிக்க வலை கட்டி வைச்சிருக்கிறாங்கள்.'

நான் என்னை மறந்து சந்தோஷத்தில் நிற்க... அப்போது கேட்ட அவலச்சத்தம் நெஞ்சைத் துளைத்தது; ரோமங்கள் சிலிர்த்து குத்திட்டு நின்றன.

கீச்ச்ச்ச்..............

"டேய் ஒருத்தர் மாட்டுப்பட்டு போனார். கெதியாய்.... கெதியாய் சனியன் வலையை அறுத்துப்போடும்."

வாண்டுகள் உஷாரானார்கள். வெளவால் ஒன்று வலையில் பட்டுவிட்டது. நான் தெருவைக் கடந்து வாத்தியாரின் காணியை நெருங்கினேன்.

வேப்பமரத்தின் நுனியில் கட்டப்பட்டிருந்த வலையின் ஒரு பகுதி கப்பியூடாக கீழே இறக்கப்பட்டது.

"கெதியாய்...கெதியாய்...டோர்ச்சை எடு"

வலை நன்கு கீழே வர, வலையின் இடது பக்கத்தில் கறுப்பாக வெளவால் துடித்துக்கொண்டிருந்தது 'டோர்ச்லையிற்' வெளிச்சத்தில் தெரிந்தது. அது வலையில் நன்றாக சிக்கிக் கொண்டுவிட்டது.

வாண்டுகள் வெளவாலை வெளியில் எடுக்கச் சிரமப்பட்டார்கள்.

"சனியனடா நல்லா சிக்கிப் போட்டுது"

"கவனமடா அதன்ரை வாய்க்குள்ள விரல் ஆப்பிட்டா துண்டாக்கிப் போடும்"

வெளவால் தான் இருக்கும். இறுதி நிலையிலும் எதிர்த்துப் போராடிக் கொண்டிருந்தது.

'டோர்ச்சை பதிச்சு அடி. மேல அடியாதே.'

எனக்கு உடம்பு எரிந்தது. இருள் நன்றாக சூழ்ந்து விட்டது.

நீண்ட நாசியும், நாய் போன்ற ஒடுங்கிய முகமும், வெண்மையான கூரான பற்களும் கொண்ட வெளவால், பல பிரயத்தனமான முயற்சியின் பின்னர், வலையிலிருந்து வெளியே எடுக்கப்பட்டு, பின் அதன் இறக்கைகள் பட்,பட் என முறிக்கப்பட்டன.

"இனிப் பறக்கமாட்டார்."

நிலத்தில் விழுந்த வெளவால், இறக்கையின் எலும்புகள் முறிந்த நிலையில் பறக்க முடியாமல் வேதனையில் கத்தியபடி ஊர்ந்து திரிந்தது.

மனது சுள் சுள் என வலித்தது. ஒரு சில நிமிடங்களில் எல்லாம் நடந்து முடிந்து விட்டது.

வெளவால் என்ன குற்றம் செய்தது?

மறுபடி வலை மேலே ஏற்றப்பட்டது. வாண்டுகள் அடுத்து வரும் வெளவாலுக்கு குறிவைத்து விட்டார்கள். கடவுளே எந்த அப்பாவி வெளவால் மாட்டுப்படப் போகிறதோ?

மனைவி பெரிதாக சத்தமிட்டு என்னைக் கூப்பிட்டாள்.

"என்ன செய்து கொண்டு நிக்கிறியள்? அட வெளவால் பிடிக்கிறதை பாத்துக்கொண்டு நிக்கிறியளே?"

மனைவியும் என்னோடு சேர்ந்து விட்டாள். வாண்டுகள் சத்தமின்றி இருளோடு பதுங்கி இருந்தார்கள்.

நேரம் கடந்தது. ஒரு வெளவாலும் வலையில் படவில்லை.

"டேய் இப்ப என்ன நேரமடா?"

"புது நேரம் ஒன்பது மணி ஆகுதடா!"

"அட ஊரடங்கு சட்டமெல்லே. வெளவால்கள் இனி வரமாட்டினம்."

ஒருத்தன் சொல்ல மற்றவர்கள் தங்களை மறந்து சிரித்தார்கள். மரத்திலிருந்த வெளவால்கள் இறக்கைகளை அடித்தபடி இடம்மாறின.

"என்னடா இன்னும் வெளவால் படக் காணேல்லை" வாண்டுகள் பொறுமையின்றி நின்றார்கள்.

"என்னப்பா இன்னும் ஒண்டும் பிடிக்கேல்லையே?" மனைவி காதில் கிசுகிசுத்தாள்.

"ஒண்டைப் பிடிச்சுப் போட்டாங்கள். அறுவான்கள் அதன்ரை செட்டையெல்லாம் முறிச்சுப் போட்டாங்கள்."

மனைவி திடுக்கிட்டு என்னைப் பார்த்தாள். அவளின் மூச்சுக்காற்று என் முகத்தில் அடித்தது.

"எப்ப நடந்தது?"

"நீர் வர கொஞ்சம் முன்னம்தான்" மனைவி மௌனமானாள். குளிர்காற்று வீசியது. மனைவி எதையோ சொல்ல நினைப்பது போல் தெரிந்தது.

"சரசுவின்ரை பெடியனை காணேல்லையென்று கதைச்சினம்"

"..................."

"போன கிழமைதான் வன்னியில இருந்து வந்தவனாம்."

"..................."

"கொஞ்சக் காலம் இயக்கத்தில இருந்தவனெல்லே?"

இதற்கிடையில் வாண்டுகளிடமிருந்து சத்தம் எழுந்தது.

"டேய் நேரம் போட்டுதடா. போவம். விடிய வந்து பாப்பம்."

"ஓமடா, போவம். ஒரு சத்தத்தையும் காணேல்லை."

அவர்கள் அங்கிருந்து மறைந்தார்கள். வலை வெளவாலை எதிர்பார்த்து காத்திருந்தது.

வீடு திரும்பியும் மனம் இருப்புக் கொள்ளவில்லை. நாற்சார் முற்றத்தில் அங்கும் இங்கும் நடைபயின்றேன்.

விடிவதற்கு முன் நிச்சயம் வெளவால் ஒன்று வலையில்படும்.

ஒன்றா? இரண்டா? எத்தனை படப் போகிறது? தாயா? தந்தையா? குழந்

(XV ஆம் பக்கம் பார்க்க)

## குறள்வெள்ளம்

கற்றவர்கள் பலரை நாம் கண்டிருக்கிறோம். அவர்கள் அடுத்தவரோடு கலந்து பழகாமல் தனிவழி நிற்பதையும் கேள்விப்படுகிறோம்.

பட்டம் பதவிகள் தரும் இறுமாப்பு - அதாவது கர்வம் - உலகுக்கு உதவாதனவாகவே உன்னை மாற்றிவிடும். இது அறியாமையே தவிர அறிவுடைமை ஆகாது.

தற்பெருமையோடு வாழாமல் எளிமையாக வாழப் பழகவேண்டும். உலகோடு ஒத்து ஒட்டவேண்டும். [illegible] நில்லாமல் நாலு பேர் மதிக்கின்ற வழி நின்று அவரவர் மதிப்பினையும் வென்றுவிடல் வேண்டும்.

சரியோ பிழையோ தனது கொள்கையில் விடாக் கண்டனாக நின்று அடுத்தவர் அறிவினையும் அனுபவத்தையும் எடுத்தெறிந்து எதையும் நிலைநாட்டிவிட இயலாது.

உலகத்தோடு - நடைமுறையோடு - ஒட்டி உறவாடி ஒழுகுவதே அறிவுடைமை. இதை உணராதவர் எவ்வளவு கற்றும் அறிவுடையார் ஆகிவிடமாட்டார்.

அவர் அறிவை எளியோரும் மதியார்.

**'உலகத்தோ டொட்ட ஒழுகல் பலகற்றும் கல்லார் அறிவிலா தார்'** - 0140


-அம்பிகைபாகன்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மீண்டும் அதிகரித்துள்ள காசநோய்

மிக முக்கியமான தொற்று நோய்களில் காசரோகமும் ஒன்றாகும். இது ஒரு நாள்பட்ட நோயுமாகும். வளர்முக நாடுகளில் காசநோய் ஒரு பொது சுகாதாரப் பிரச்சினையாக இருந்துவருகின்றது. அண்மைக் காலமாக வளர்ச்சியடைந்த நாடுகளிலும் காசநோய் கணிசமான அளவு அதிகரித்துள்ளது. இதற்கு அந்நாடுகளில் அதிகரித்து வரும் 'எய்ட்ஸ்' நோயின் பாதிப்பும் ஒரு காரணமாகும்.

காசநோய் மைக்கோ பற்றீரியம் எனப்படும் ஒருவகை கோலுருவான பற்றீரியாவினால் உருவாகின்றது.



இதில் 3இனங்கள் உள்ளன. மைக்கோ பற்றீரியம் ரியுபர்கியுளோசிஸ் (MYCO BACTERIUM TUBERCULOSIS) மனிதரிடையே பெரும்பாலும் காணப்படும் சுவாசப்பை காசநோய்க்குக் காரணியாக விளங்குகின்றது. இதனைத்தவிர மைக்கோ பற்றீரியம் போவிஸ் (MYCOBACTERIUM BOVIS) எனப்படும் பக்ரீறியா கால் நடைகளைத் தாக்கி அவற்றின் பால் மூலம் மனிதரை சென்றடைந்து நோயை குடலில் ஏற்படுத்துகின்றது.

## நோய் ஏற்படும் முறை

காசநோயானது பொதுவாக நுரையீரல்களையே தாக்குகின்றது. இந்த நோயினால் பாதிக்கப்பட்டுள்ளவரின் சளியில் இக்கிருமிகள் காணப்படுகின்றன. அவர் தும்மும் போதும் இருமும் போதும் இக்கிருமிகள் சளியுடன் வெளியேறி சூழலை அடைகின்றன. உலர் வெப்ப சூழல்களால் இக்கிருமிகள் அழியக் கூடியதாக இருப்பினும் அது சளியுடன் சேர்ந்து காணப்படும்போது ஓரளவு வெப்பத்தை சில மணி நேரங்களுக்கு தாங்கக்கூடியதாக இருக்கும். இக்கிருமிகள் சளி காய்ந்தவுடன் தூசுடன் கலந்து சுகதேகி ஒருவர் சுவாசிக்கும்போது சுவாசக்காற்றுடன் உள்ளே சென்று நுரையீரலை அடைகின்றன.

நுரையீரலில் இவை விருத்தியடைய நுரையீரல் இழையங்கள் சிதைவடையத் தொடங்குகின்றன. இவ்வாறு சிதைவடையும் பகுதிகளில் குழிகள் உருவாகும். இக்குழிகளில் இந்த காசநோய் பற்றீரியாக்கள் பெருமளவில் காணப்படும். இவை நோயாளி இருமும்போது சளியுடன் வெளிவருகின்றன. இது படிப்படியாக நீண்டகாலத்துக்குத் தொடர்ந்து நடைபெறுவதனால் காசநோய் ஒரு நாள்பட்ட நோய் எனப்படும். (CHRONIC DISEASE).

இழையங்களில் பல்கிப் பெருகும் பற்றீரியாக்கள் அவற்றுடன் தொடர்புடைய நிணநீர் கணுக்களை சென்றடைகின்றன. கழுத்திலுள்ள நிணநீர் கணுக்கள், வாதநாளியைச் சூழவுள்ள நிணநீர் கணுக்கள் இவ்வாறு தொற்றுதலுக்குள்ளாகி வீக்கம் அடைகின்றன. இக்கட்டத்தில் குருதியினுள் இக்கிருமிகள் கலக்கின்றன. சுவாசப்பைக்கு வெளியேயுள்ள இழையங்களுக்கு இக்கிருமிகள் தொற்றஆரம்பிக்கின்றன. இக் கிருமிகளால் தாக்கப்படக் கூடிய உறுப்புகளாவன:-

* எலும்புகள், மூட்டுகள்
* என்பு மச்சை
* தோல்
* கண்
* சிறுநீரக, இனப்பெருக்கதொகுதி
* இதய சவ்வு
* மூளை மென்சவ்வு
* அதிரினல் சுரப்பி

இருமும் போது வெளியேறும் சளியை காறி உமிழாது விழுங்குவார்களேயானால் அச்சளியிலுள்ள கிருமிகள் உணவுக் கால்வாயை அடைந்து அங்கு தொற்றை ஏற்படுத்துகின்றன. இம்முறையைத் தவிர நோயினால் பீடிக்கப்பட்ட கால்நடைகளில் இருந்து அவற்றின் பாலுடன் வெளியேறும் கிருமிகள், பாலை முறையாகக் காய்ச்சாதபொழுது சமிபாட்டுத் தொகுதியை அடைந்து அங்கு தொற்றை ஏற்படுத்தும்.

காசநோய் எவருக்கும் வரலாம். ஆனால் பின்வருவோரில் காச்நோய் ஏற்படும் வாய்ப்பு கூடுதலாகும்:-

(1) நடுத்தர வயதினர், வயது முதிர்ந்தவர்கள்.

(2)வறியோர், போசனைக் குறைபாடு உள்ளோர்கள்.

(3)காசநோயாளிகளுடன் நெருங்கிப் பழகுபவர்கள்.

(4) சலரோக நோயாளிகள்.

(5) மது அதிகம் அருந்துபவர்கள், போதைப் பொருள் பாவிப்பவர்கள்.

(6) நீர்ப்பீடன சக்தி குறைந்தவர்கள் (உ+ம் - எய்ட்ஸ் நோயாளிகள்).

(7) நீர்ப்பீடன சக்தியைக் குறைக்கும் சிலவகை மருந்துகளை உபயோகிப்பவர்கள் (Corticosteroids, Cytotoxic Drug).

(8) நோயளியுடன் தொடர்புடைய ஊழியர்கள்.

(9) விடுதிகளில் தங்கியிருப்பவர்கள், சனத்தொகை கூடிய இடங்களில் வாழ்பவர்கள், குறைந்த சமூகப்பொருளாதார நிலைமையுடையவர்கள்.

## நோயின் குணங்குறிகள்

* தொடர்ச்சியான இருமல்.
* சளியுடன் இரத்தம் வெளியேறுதல்.
* பசியின்மை.
* நிறை குறைதல், உடல் மெலிதல்.
* சோர்வு, களைப்பு.
* மாலை நேர மெல்லிய காய்ச்சல்.
* நித்திரையில் அதிகம் வியர்த்தல்.

நோயாளியில் காணப்படும் மேற்குறிப்பிட்ட குணங்குறிகள், காசநோயாளிகளுடன் நெருங்கிப் பழகியமை பற்றிய விவரம் மேற்குறிப்பிட்ட நோய் அதிகம் ஏற்படும் வாய்ப்புடையவர்கள், பளுவுடைத் தசைகளின் மெலிவு, கழுத்துப் பகுதி நிணநீர்க்கணுக்களின் வீக்கம், சளிப் பரிசோதனை முடிவு, மார்புப் பகுதி எக்ஸ்கதிர் படம் ஆகியவற்றின் அடிப்படையில் ஒருவருக்கு இந்நோய் ஏற்பட்டுள்ளது என அறியலாம். அதனை உறுதிப்படுத்துவதில் சளிப் பரிசோதனை முக்கிய பங்கு வகிக்கின்றது.

சளிப் பரிசோதனையின் போது அதிகாலையில் நோயாளியினால் காறி உமிழ்ந்து எச்சில் கலக்கப் படாத சளி பெறப்படும். இது ஆய்வு கூடத்தில் நுணுக்குக் காட்டியில் பார்ப்பதற்கு உபயோகிக்கப்படும் கண்ணாடித்தட்டில் படலமாக்கப்படும். பின் இக்கிருமிக்கு உரிய சாயமிடப்பட்டு நுணுக்குக் காட்டியில் உயர்வலுவில் அவதானிக்கப்படும். இதன்போது இக் கிருமியைக் கண்டறியலாம். ஆனால் இது மிகச் சிறந்த முறையல்ல. ஏனெனில் வாய்க்குழிக்குள் காணப்படும் நோயைத் தோற்றுவிக்காத சில பிறகிருமிகளும் காசநோய் கிருமிகள் போல் தோன்றலாம்.

ஆய்வுகூடத்தில் சளியில் இருந்து வரும் காசநோய் கிருமியை அதற்கு உரிய ஊடகத்தில் வளர்ப்பதே மிகச் சிறந்த முறையாகும் (CULTURE METHOD). இவ்வாறு வளர்ப்பதன் மூலம் அக்கிருமிக்குரிய சில தனித்துவமான பரிசோதனைகளை மேற்கொண்டு அது காசநோய் கிருமிதான் என்பதனை உறுதிப்படுத்தலாம். ஆனால் இக்கிருமி ஆய்வுகூடத்தில் வளர்வதற்கு மிக நீண்டநாள்கள் அதாவது 6-8 கிழமைகள் வரை தேவைப் படும்.

## சிகிச்சை முறை

இந்நோய் மருந்துகளை சரியான முறையில் உட்கொள்ளுவதன் மூலம் முற்றிலும் குணப்படுத்தக்கூடிய ஒன்றாகும். இந்நோய்க்கான மருந்து வகைகளை தொடர்ச்சியாக 6 மாதங்களுக்கு உட்கொள்ளல் வேண்டும். முதல் இருமாதங்களும் 4 விதமான மாத்திரைகளும் தொடர்ந்துவரும் நான்கு மாதங்களுக்கு 2 விதமான மாத்திரைகளும் உட்கொள்ளல் வேண்டும்.

**1997ஆம் ஆண்டில் இலங்கையில் காசநோயினால் பாதிக்கப்பட்டவர்களின் புள்ளிவிவரம்.**

| வயது | 100,000 சனத்தொகையில் பாதிக்கப்பட்டவரின் எண்ணிக்கை |
|---|---|
| 0 - 14 | 4.4 |
| 15 - 24 | 25.1 |
| 25 - 34 | 36.8 |
| 35 - 44 | 49.5 |
| 45 - 54 | 74.5 |
| 55 - 64 | 84.8 |
| 65 - 74 | 84.1 |
| 75 + | 56.3 |

முதல் 2 மாதங்கள் ஒவ்வொரு நாளும்:-

Rifampicim
Isoniazid
Pyrazinamide
Ethambuto

அடுத்த 4 மாதங்கள் ஒவ்வொரு நாளும்:-

Rifampicim
Isoniazid

இந்நோய்க் கிருமியானது இம் மாத்திரைகளில் சிலவற்றை ஒழுங்கின்றி உட்கொள்ளும்போது அதற்கான எதிர்ப்பு சக்தியை உருவாக்கிக் கொள்ளும். எனவே இதைத் தவிர்ப்பதற்கு மேற்குறிப்பிட்ட மாத்திரைகள் யாவற்றையும் குறித்த ஒழுங்கின்படி 6 மாதங்களுக்கும் தொடர்ச்சியாக உட்கொள்ள வேண்டும். மருந்தை உட்கொண்டசிலமாதங்களிலேயே நோயின் தாக்கமும் அறிகுறிகளும் மறைந்து விடுவதனால் பெரும்பாலான நோயாளிகள் மருந்து உட்கொள்ளுவதை நிறுத்திவிடுகின்றனர். இது முற்றிலும் ஆபத்தானது. மாத்திரைகளை இடையில் நிறுத்தும் போது நோயின் அறிகுறிகள் இல்லாத பொழுதும் நோய்க்கிருமி உடலில் இருந்து முற்றாக அழியாது. சில வருடங்களின் பின் மீண்டும் நோய் ஏற்படும். இவ்வாறு திரும்பவும் நோய் ஏற்படும் சந்தர்ப்பத்தில் மீண்டும் 6 மாதங்கள் தொடர்ச்சியாக மாத்திரைகள் உட்கொள்ள வேண்டி இருப்பதுடன் சில சந்தர்ப்பங்களில் அம் மாத்திரைகள் மூலம் நோயைக் கட்டுப்படுத்தமுடியாது சில ஆபத்தான விளைவுகளும் ஏற்படலாம்.

## நோய்க்கான தடுப்புமுறைகள்

பொதுவான தடுப்பு முறை:-

காசநோயாளியின் உடலிலிருந்து இருமும் போதும் தும்மும் போதும் வெளியேறும் சளித்துளிகளே முக்கிய தொற்று மூலங்களாகும். காசநோய்க்கிருமிகள் உலர்ச்சியைத்தாங்கும் வல்லமை கொண்டவையாதலால் இத்துளிகள் படும் தூசித் துணிக்கைகளிலும் அவை நீண்டகாலத்திற்கு உயிர் பிழைக்கக் கூடியவை.

**அ.நிருபா - சு.கல்பனா**
*(4ஆம் ஆண்டு மருத்துவமாணவர்கள்)*

எமது நாட்டைப் பொறுத்தவரை நோய் பற்றிய அறிவின்மை சமூகபெருளாதார பின்தங்கிய நிலையுமே நோய் தொற்ற முக்கிய காரணமாக அமைகின்றன.

அடிப்படை வசதியீனங்களைக் களைவதே முதற்படியான தடுப்பு முறையாகும்.

(1) போசாக்கு நிலையை மேம்படுத்தல்.

(2) இட நெருக்கடியானவாழ்க்கை முறையை தவிர்த்தல்.

(3) தனிநபர் சுகாதாரம்.

(4) வீட்டுச் சுகாதாரம் என்பன கண்டிப்பாகப் பேணப்படல்வேண்டும். நல்ல காற்றோட்ட வசதி, போதிய சூரிய வெளிச்சம் ஆகியன கிடைக்கக்கூடிய வீடுகளில் வசித்தல் சிறந்தது.

## தனிநபர் தடுப்பு முறை

பி.சி.ஜி தடுப்பூசி போடுதல்.

ஆய்வுகூடத்தில் வளர்க்கப்பட்டு வீரியம் குறைக்கப்பட்ட காசநோய் கிருமிகளை உடலுள் செலுத்தி அதற்கான



எதிர்ப்பு சக்தியை எமது உடலில் தோற்றுவிப்பதே பி.சி.ஜி தடுப்பு முறையாகும்.

பி.சி.ஜி போட்டபின் -

அ) தடுப்பூசி போட்ட இடத்தில் உண்டாகும் தழும்பின் பருமன் நீர்ப்பீடன சக்தியின் ஓர் அளவை ஆகும். தடுப்பூசி போட்ட குழந்தை ஒன்றில் ஊசி போட்ட தழும்பு இல்லாவிடில் ஊசி போடப்பட்ட வைத்தியசாலையை நாடி யோசனை பெறல் வேண்டும்.

1)தடுப்பூசி போட்ட இடத்தில் காயம் ஏற்பட்டு நீர்வடிய ஆரம்பித்தால் மருந்து உபயோகித்து காயத்தை குணப்படுத்த முயற்சிக்க வேண்டியதில்லை. காயத்தைதுப்புரவாக வைத்திருத்தல் போதுமானது.

பி.சி.ஜி தடுப்பூசி பின்வருவோர்க்கு செலுத்தப்படுகின்றது:-

(1) குழந்தைகள்.

(2)காசநோயாளியுடன் நெருங்கிய தொடர்புடையோரில் பரிசோதனையின் மூலம் (Tuberculine Test) தொற்று அற்றவர்கள் எனக் கண்டறியப்பட்டவர்கள்.

ஆ) நோய்க்கு எதிரான மாத்திரைகளை உட்கொள்ளல்:-

நோயினால் பாதிக்கப்பட்ட கர்ப்பவதிகள் குழந்தையைப் பிரசவிக்கும் போதும் அந்நோயின் தாக்கத்திற்கு ஆளாகியிருப்பின் குழந்தைக்கு நோய் வருவதற்கான சாத்தியக் கூறுகள் அதிகம். எனவே குழந்தைக்கு சில மாத்திரைகளை குறிப்பிட்ட காலத்திற்கு கொடுப்பதன் மூலம் நோய் வராமல் தடுக்கலாம்.

நோய் மற்றவர்களை தாக்காமல் தடுக்கும் முறைகள்:-

(1) காற்றோட்டத்தை வெளி நோக்கி செலுத்தக்கூடிய சாளரங்களைக் கொண்ட தனியான அறையில் நோயாளி தங்கவேண்டும்.

(2) நோயாளி குழந்தைகளை அணுகுதலைத் தவிர்த்தல் வேண்டும்.

(3) போசாக்கான - குறிப்பாகப் புரதம் நிறைந்த - உணவை உண்ணும் அதேசமயம் பூரண ஓய்வெடுத்தல் வேண்டும். இது அவரின் எதிர்ப்பு

(XV ஆம் பக்கம் பார்க்க)

# பேசாப் பொருளை உணர்த்திய... 'உண்மை கொடிது'

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெள்ளிவிழாக் கொண்டாட்டங்களின் ஓர் அங்கமாக அமைந்த கண்காட்சியில் 'நாடகமும் அரங்கியலும்' பயிலும் மாணவர்களால் நடத்தப்பட்ட 'உண்மை கொடிது' என்ற தலைப்பிலான இருபதுநிமிடங்களைக்கொண்ட ஆற்றுகை நிகழ்வு பலரது கவனத்தையும் ஈர்ப்பதாக அமைந்தது.

தமிழர்களின் சமகாலத்து துன்பியல் நிகழ்வுகளை - எவருமே பேசுவதற்கு அச்சப்படுகின்ற போரின் விளைவுகளை - பேசத்துணிந்த மாணவர்கள் உண்மையிலேயே பாராட்டப்பட வேண்டியவர்கள்.

மஹாகவி,வில்வரெத்தினம்,சேரன், அப்துல் ர.'.மான் முதலான கவிஞர்களின் உயிர்த்துடிப்புள்ள கவிதை வரிகள் இவ் ஆற்றுகையை மேலும் அணிசெய்வதாக அமைந்திருந்தன.

போரின் கொடுமையான கரங்கள் தமிழர் தம் குரல்வளைகளை நெரிக்காத 'அந்தக்காலத்து' யாழ்ப்பாணத்தை;

*"குல்லத்தை எடுங்கள் குரல்*
*கேட்டதும்*
*கோலி எடுத்த நெல்லைக்*
*காற்று வளமாய் நின்று தூற்றத்*
*தொடங்கினர்.*
*கொட்டும் பொன்னருவி என*
*குதூகல நெல்மணிகள் ஓசையிட*
*நிறைமணிச் சொல்லெடுத்துத்*
*தூக்கிய தமிழின் பாட்டும் தொடர்ந்*
*திசைய*
*கூட்டிசைந்த வாழ்வின் கொள்*
*கலமாய்*
*நேற்றெல்லாம் நிரம்பி வழிந்த*
*முற்றம்...."*

மேல்வரும் கவிதை வரிகள் அச்சொட்டாக எடுத்து விளம்பின. அதை உள்[illegible] புதமாக அமைந்தது. இவ்வாறு ஆனந்தமயமாக இருந்த அதே முற்றத்தில்

*"ஒற்றையாய்*
*உறவிலியாய்*
*சுற்றஞ் சூழவிருந்த வாழ்வைத்*
*தொலைத்துவிட்ட வறியனாய்...."*

முட்கம்பிச் சுருள்களினூடே உதிரம் தோய்ந்த உடலாக வீழ்ந்துகிடந்த மனிதஉடலம் தமிழ்ச் சமூகத்தின் அவல நிலையின் 'பதச்சோறாக' காட்சிப்படுத்தப்பட்டிருந்தமை சிறப்பாக இருந்தது. எந்த விடியலுக்காக இவ்வளவு விலை கொடுத்தோமோ - கொடுத்துக் கொண்டிருக்கிறோமோ - அந்த விடியல் இதுவல்ல என்பதனை இவர்களுடைய 'உண்மை கொடிது' ஆற்றுகை அப்பட்டமாக வெளிக்கொணர்ந்தது.

## ஆற்றுகை விமர்சனம்

தமிழ்ச் சமூகம் அவாவி நிற்கின்ற இப்பேசாப்பொருளை அல்லது கேட்காவரத்தை இம்மாணவர்கள் செவ்வனே நிறைவேற்றிவிட்டார்கள். காட்சிகள் ஒவ்வொன்றும் அதனைப்பார்த்த எல்லோருடைய உள்ளங்களையும் அவர்களுடைய ஏதோஒரு மனப்பதிவினை மீளவும் அசைபோடவைப்பதாக அமைந்திருந்தன.

பாத்திரப்பொருத்தம், காட்சிகளின் ஒருங்கிணைப்பு, இசையமைப்பு, ஒளி அமைப்பு முதலானவை கச்சிதமாக அமைந்திருந்தன. நவீன நாடகமேடை உத்திகளையும் ஈழத்தின் பாரம்பரிய நாடக மரபுகளையும் இணைத்தெழுந்த தன்மையும் இவ் ஆற்றுகையின் வெற்றிக்கான காரணங்களில் ஒன்றெனலாம். அந்தக்காலத்து யாழ்ப்பாணத்து இயல்புநிலையை இசைநாடக, கூத்துப்பாடல்கள் கண்முன்னே விரிய வைத்தன.

*"கண்முன்னாலேயே*
*கொள்ளை போகிறது கிராமம்*
*விழிகளை இறுக மூடிக்கொண்டி*
*ருப்பதாய்*
*பாவனை செய்தாக வேண்டும்...."*

தமிழர்களின் சமகாலத்து 'இருப்பினை' 'அவலத்தினை' - மேலே குறிப்பிட்ட கவிதை வரிகளை உள்வாங்கிய 'காட்சி' மிகத் துல்லியமாக வெளிப்படுத்தியது. குறைந்த வசதிகள், குறைந்த காலஅவகாசம், என்பனவற்றுக்கிடையிலும் இந்த ஆற்றுகையை நேர்த்தியாகப் படைத்த மாணவர்கள் உண்மையிலே பாராட்டப்படவேண்டியவர்கள். ஆயினும் அற்புதமான கவிதைவரிகள் பலவும் அமிழ்ந்து, உணர்விழந்து உச்சரிக்கப்பட்டமை இந்த ஆற்றுகையின் குறைபாடாக இருந்தமையையும் இவ்விடத்தில் குறிப்பிட்டாகவேண்டும்.

*"யாழைக் கொணர்ந்திங்கு மீட்டி*
*யதால்*
*ஓர் யாசகன் மன்னனிடமிருந்து*
*பாலையைப் பரிசு பெற்றாலும்*
*அப்பாலையைப் பச்சைப் படுத்தி*
*வாழத் தொடர்ந்து முயன்றதனால்*
*இந்த வையத்துயர்ந்தது யாழ்ப்*
*பாணம்"*

மேலே குறிப்பிட்ட கவிதை வரிகள் எடுத்தியம்புவது போல எத்தனையோ இடர்களுக்கு மத்தியிலும் மீண்டும் உயிர்த்தெழுவோம் என்ற உயிர்ப்புள்ள நம்பிக்கையை இந்த ஆற்றுகை அதனைக் கண்டோருக்குப்புலப்படுத்தியது.

**கி.விசாகரூபன்,**
*சிரேஷ்ட விரிவுரையாளர்,*
*தமிழ்த்துறை.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காதல் தோல்வியை யாருக்கும் கூறலாமா?


**கோப்பாய். வசுமதி.**
கார் ஓட்டுவதற்கு வயது தடையா?
☺**எந்த வயதிலும் ஓட்டலாம்.**

❀ ❀ ❀

**குளப்பிட்டி. சேகர்.**
அந்தக் காலத்தில் 'நையின்ரிகள்' வயக்கரா இல்லாமல் எப்படிச் சாதித்தார்கள்?
☺**வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்.**

❀ ❀ ❀

**அச்சுநகர். சந்திரி.**
திருமணத்தின் போது மணமகள் அம்மி மிதிப்பது ஏன்?



☺**அம்மிக்கு நடந்ததுதான், பின்னர் மாப்பிளைக்கும், அவரது மம்மிக்கும் கூட நடக்கும் என்பதை எச்சரிக்கும் சமிக்ஞை அது!**

❀ ❀ ❀

**பண்டத்தரிப்பு. சாந்தி.**
மோதலுக்குப் பின்புதான் காதல் பிறக்குமா?
☺**மோதலுக்குப் பின்பு காதல் நிச்சயமோ தெரியாது. ஆனால் காதலுக்குப் பின்பு மோதல் நிச்சயம்!**

❀ ❀ ❀

**நவிண்டில். சுகு.**
கணவன் - மனைவி சண்டை தீர்ந்தால் யாருக்கு நஷ்டம்?
☺**பல்லு டாக்டருக்கு!**

❀ ❀ ❀

**நாவலடி. கேசவன்.**
காதல் தோல்வியை மற்றவருக்குக் கூறலாமா?
☺**மாட்டிக்கொண்டதை காட்டிக்கொள்ளலாமா?**

❀ ❀ ❀

**கைதடி. மகேசன்.**
இந்தக்காலத்தில் சிகரெட், குடி, சின்னவீடு இல்லாதவன் தெய்வமல்லவா?
☺**வித்துவானை அதிகம் புகழாதீர்!**

❀ ❀ ❀

**வடலியடைப்பு. செல்வம்.**
"நன்றி! மீண்டும் வருக!!" என்று ஒரு தனியார் மருத்துவமனையில் எழுதி இருக்கின்றதே?
☺**தமது வைத்தியத்தின் சிறப்பை உணர்ந்தவர்கள் போலும்!**

❀ ❀ ❀

**அராலி. சிவகுகன்.**
திருமணத்தின்போது தாலிகட்டுவது ஏன்?
☺**குதிரைச் சவாரிக்கு முன் கடிவாளம் போடுவது ஏன்?**

❀ ❀ ❀

**தட்டாதெரு. சு.வரதன்.**
தண்ணீரிலிருந்து பாலைப்பிரித்து அருந்தும் இயல்புடைய அன்னங்கள் முன்னொருகாலத்தில் வாழ்ந்தன என்பதை நம்புகின்றீர்களா?
☺**'தெய்வந் தொழா அள் கொழுநன் தொழுதெழுவாள்' என்பதற்கு இலக்கணமான பத்தினிப் பெண் வாழ்ந்தாள் என்பதை நம்புகின்றீரா?**

❀ ❀ ❀

**புத்தூர். செல்வி.**
வித்துவான் அப்பா! பிறக்கப்போகும் 21ஆம் நூற்றாண்டில் நீங்கள் என்ன செய்ய ஆசைப் படுகின்றீர்கள்?
☺**நீங்கள் தந்த பதவியை எட்டுவதற்காக ஏதோ செய்ய ஆசைப்படுகின்றேன்.**

❀ ❀ ❀

**யாழ். சசி.**
யாழ்ப்பாணத்தில் உயர் கல்வி நிறுவனங்களில் பணிபுரியும்சில பிரமுகர்கள் அடிக்கும் லூட்டியைப் பார்த்தால் அவர்களுக்கு 'மகா வித்துவான்' பட்டம் கொடுக்கலாம் போல் தோன்றுகின்றதே?
☺**சீ.....! நீர் இப்படி எனது பட்டத்தைக் கேவலப்படுத்துவீர் என்றால் நான் அதனையே துறந்து விடுவேன். வெறும் 'பென்' மூலம் மட்டும் அவ்வப்போது 'குசும்பு' பண்ணும் என்னை 'பெண்'களோடு நேரில் குசும்பு பண்ணுபவர்களோடு ஒப்பிடும் விதத்தில் பட்டம் வழங்கும் உங்கள் போக்கு கண்டிக்கத்தக்கது! இது உங்களுக்கே நியாயமா ஐயா?**

❀ ❀ ❀

**ஊரெழு. தனு.**
அரசியல்வாதிகளின் வாக்குறுதிகளை எதற்கு ஒப்பிடலாம்?



☺**குடிகாரன் பேச்சுக்கு. அது விடிந்தால் போச்சு. இது தேர்தல் முடிஞ்சால் போச்சு!**

❀ ❀ ❀

**நாவற்குழி. ரி.ரஞ்சன்.**
'தம்பி உள்ளவன் சண்டைக்கு அஞ்சான்' என்று கூறுவது உண்மையா?
☺**உண்மையாகவா? இன்று தமிழினம் இப்படி இனமானம் காக்க உக்கிரமாகப் போரிடுவது யாராலே?**

# காதலின் விளைவு என்ன?

**மந்துவில். ப.மாலதி.**
பெருங்காயம் இருந்த பானையில், பெருங்காயம் இல்லாதபோதும் வாசனை வீசுமே! உண்மையா?
☺**பஸ்ஸில் வாலிப வயது தாண்டிய நைன்ரிகளுக்குப் பக்கத்தில் இருந்து பயணித்துப் பாருங்கள்! இல்லாத வாலிபத்தின் வாடை வீசும்!**

❀ ❀ ❀

**வல்லை. வந்தனா.**
கிழட்டுப் பூனையை பாலுக்குக் காவல் வைக்கலாமா?



☺**பாலைக் கண்டதுமே பூனைக்கு வாலிபம் திரும்பிவிடுமே!**

❀ ❀ ❀

**கொடிகாமம். செல்வன்.**
முதலில் ஒரு பெண்ணைக் காதலித்து விட்டு இடையில் வேறு பெண் மீது காதல் வைக்கலாமா?
☺**இடையில் மட்டும் காதல் கொள்வது தவறு தம்பி!**

❀ ❀ ❀

**கொக்குவில். கோகுலன்.**
முட்டை சாப்பிடுவீர்களா?
☺**முட்டை சாப்பிடமாட்டேன். ஆனால் (வயிறு) முட்டச் சாப்பிடுவேன்.**

❀ ❀ ❀

**யாழ். சு.ராஜன்.**
வன்னிப் பகிடிவதையில் கோவணம் கட்டுவதற்கு பொலித்தீன்பை கொடுத்தார்களாமே.....!
☺**உள்ளதை உள்ளபடி காட்டும் முயற்சி இது. நான் அவர்களின் 'காட்டு' மிராண்டித்தனத்தைச் சொன்னேன்.**

❀ ❀ ❀

**மானிப்பாய். ரொனி.**
ஆண்களை ஏன் ஆடவர் என்கின்றார்கள்? ஆட்டம் போடுவதாலா?
☺**ஆடு போல பல இடத்திலும் வாய் வைத்து நுனிப்புல் மேய்பவர்கள் என்பதால் 'ஆடு + அவர் = ஆடவர்' என்று கருதினார்களோ என்னவோ?**

❀ ❀ ❀

**வரணி. நியூட்டன்.**
காதலின் விளைவு என்ன?
☺**கரு.**

❀ ❀ ❀

**நாவற்குழி. வி.தேவா.**
வளர்ந்த ஆணுக்குக் கட்டுப்போடுவதா, கட்டுப்படுத்துவதா சிறந்தது?
☺**நீங்கள் கட்டுப்படுத்துங்கள். முடியாவிடில் கட்டுப்போடுங்கள். கட்டியவள் கட்டுப்படுத்துவாள்.**

❀ ❀ ❀

**பளை. தீபன்.**
நிலவு என்று பெண்களை வர்ணிக்கும் ஆண்களை நம்பலாமா?
☺**ஆம்ஸ்ட்ரோங் மாதிரி இறங்கித் தடம் பதித்து விட்டு மாறிவிடுவார்கள் கவனம்.**

❀ ❀ ❀

**துறையூர். ஜெஸ்ரின்.**
நிரந்தரம் - தற்காலிகம். விளக்குங்கள்!
☺**மனைவி - சின்னவீடு.**

☺**'கோழி மேய்ச்சாலும் கோன்மேர்ந்திலை மேய்க்க வேணும்' என்று ஒரு பழமொழி உள்ளது. ஆனால் நம்மவர்கள் இப்போது வீட்டு வேலையில்தானே சிரத்தை காட்டுகிறார்கள்!**

❀ ❀ ❀

**குப்பிளான். எம்.சிவானந்த்.**
ஆட்சிக்கு வந்தால் வடக்கு - கிழக்கை புலிகளிடம் ஒப்படைப்பேன் என்கிறாராமே ரணில்.
☺**எல்லோரும் ஆட்சிக்கு வந்தவுடன் இப்படி ஏதாவது சொல்லுவார்கள். இவர் வர முன்னர் சொல்லுகிறார். அதுதான் வித்தியாசம்.**

❀ ❀ ❀

**யாழ்ப்பாணம். பி.சூட்.**
வடபகுதியில் இம்முறை எங்கு தீபாவளி மும்முரமாகக் கொண்டாடப்பட்டது? கூறுவீரா?
☺**இம்முறை தீபாவளி மும்முரமாகக் கொண்டாடப்பட்ட இடம் வன்னிதான்! வெடி ஓசைகள் காதைப் பிளக்க.**

❀ ❀ ❀

**திருநெல்வேலி. ஆர்.தாட்ஷாஜினி.**
வித்து ஸார்! பலரைக் காதலிக்கும் இளம் பெண்கள் குறித்து உங்கள் கருத்து என்ன?
☺**அவர்கள் பிழைக்கத் தெரிந்தவர்கள். ஆனால் திருமண நாளில் 'திறில்' இருக்காது.**

# வித்துவான் பதில்கள்

❀ ❀ ❀

**கொழும்புத்துறை. ஜோ.ஜெ.**
எனது நண்பன் பெண்கள் ஏறும் பஸ்ஸில் தினமும் ஏறுகின்றானே?
☺**ஏறுவதற்கு வேறு வாய்ப்புகள் இல்லாததால் போலும்!**

❀ ❀ ❀

**நல்லூர். சசி.**
நோவின்றிக் குத்தும் தொழில் ஒன்று கூறுங்கள்!
☺**தொலைத தொடர்பகத்தில் வேலைக்குச் செல்லும். (நம்பர்களை) சுழட்டலாம்; அல்லது குத்தலாம்!**

❀ ❀ ❀

**சுன்னாகம். வாணி.**
பக்தியை பயத்துடன் சேர்த்து 'பயபக்தி' என்கின்றார்களே. ஏன்?
☺**பயத்தின் அடிப்படையில் வந்த பக்தி என்பதால். பல இடங்களில் (என் வீடு உட்பட) சதி மீது பதி வைக்கும் பக்தி கூட இத்தகையதே!**

❀ ❀ ❀

**ஈச்சமோட்டை. மேகலன்.**
வித்தூ! ஓட்டல் சாப்பாடு சாப்பிட்டால் நோய் வருமா?
☺**வராது. பிடிக்கும்.**

❀ ❀ ❀

**யாழ். மோனா.**
காதலை வெளிப்படுத்தும் சாதனம் எதுவோ?
☺**கடிதமும் கண்களும்.**

❀ ❀ ❀

**வல்வை. அனு.**
வித்துவான் ஸார்! அறுபதுவயதில் மறுமணம் செய்வோர் குறித்து உங்கள் கருத்து என்ன?
☺**அறுபதிலும் ஆசை வரும் என்று சும்மாவா சொன்னார்கள்?**

❀ ❀ ❀

**நீராவியடி. ப.சுரேஷ்.**
யாராவது அழகான 'பெண்' வைத்திருந்தால் அதன் மீது கண் வைத்துவிடுகின்றாரே எனது நண்பர்?



☺**அவர் கண் வைப்பது இரண்டு சுழி 'ன்' மீதுதானே! மூன்று சுழி 'ண்' மீது அல்லவே! ஆகவே விட்டுவிடும்.**

❀ ❀ ❀

**உடுவில். சதீஸ்.**
எந்த வேலை நல்லது? அரச உத்தியோகமா? தனியார்துறை உத்தியோகமா?

❀ ❀ ❀

**யாழ்ப்பாணம். ஜெரின்.**
வித்துவான் ஐயா! 100 ரூபாக் காதல் யாழ்ப்பாணத்தில் பரவி வருகிறதாமே!
☺**கசிப்பு ஒருபுறம், களவு மறுபுறம் அவை போதாதென்று இப்படியும் ஒரு கேடா....**

❀ ❀ ❀

**யாழ். ரவி.**



யோவ்! க்டந்த சஞ்சீவியில் அவ்வைசண்முகி மாதிரி நீரே வித்துவாட்டி வேடம் போட்டு, உமது நீண்ட..... நாடியைக்கையால்மறைத்து, எங்களை ஏமாற்றப் பார்த்தீரா? வித்துவான் வாசகர்களா? கொக்கா? (உமது மூக்கு அப்படியே காட்டிக் கொடுத்து விட்டது)
☺ **ஹ".....! ஹ"......ஹ"!! "உமது கோரிக்கைக்காக மிகக் கஷ்டப்பட்டு நான் எடுத்த படம்" என்று நான் பதில் தந்தபோதே உங்களுக்கு உண்மை விளங்கி விடும் என்று எதிர்பார்த்தேன்.**

❀ ❀ ❀

**துறையூர். ஜோ.டிமெல்.**
வீட்டில் மா, தூள் எல்லாம் நான்தான் இடிக்க வேண்டி உள்ளதே......!
☺**நானும் அதைத்தான் செய்து கொண்டிருக்கிறேன். இடிக்காவிட்டால் வித்துவாட்டியிடமிருந்து இடி விழுகிறது.**

## இவ்வார ஜோக்

**சின்னப் பையன் ஒருவனை அவனது தந்தை அடித்து விட்டார். பையனுக்குப் பயங்கரக் கோபம். அழுதபடி கோயிலுக்குப்போய் கடவுளைத் தியானித்தான். கடவுளுக்குத்தான் குழந்தைகள் என்றால் கொள்ளைப் பிரியமே! கடவுள் பையன் முன் தோன்றினார். 'என்ன வேண்டும்?' என்று கேட்டார்.**

**தன் தந்தை இறக்கவேண்டும் என்று பையன் வரம் கேட்டான்.**

**கடவுள் எவ்வளவோ சொல்லிப் பார்த்தார். பையன் கேட்பதாக இல்லை. வேறு வழியின்றி இறுதியில் கடவுள் வரம் கொடுத்தே விட்டார்.**

**அப்பா செத்திருப்பார் என்ற நினைவோடு வீட்டுக்குத் திரும்பிய பையனுக்குப் பயங்கர ஏமாற்றம். அப்பா வாசல் திண்ணையில் சாய்மனைக் கதிரையில் அமர்ந்தபடி ஆறுதலாகப் பத்திரிகை படித்துக்கொண்டிருந்தார்.**

**ஆனால் பக்கத்து வீட்டில் ஒப்பாரிச் சத்தம் கேட்டது.**

# அம்மி மிதிப்பது ஏன்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உண்மை

இரவு!

மணி பன்னிரண்டு இருக்கும். படுக்கையறையில் பூரண அமைதி. எங்கும் ஒரே இருட்டு படுக்கையறையின் மூலையில் ஒரு குப்பி விளக்கு. அந்தக் குப்பி விளக்கினுள் நிம்மதியாக இரு உருவங்கள் தூக்கிக்கொண்டிருக்கின்றன. அவைகளில் ஒன்று கணவன் மற்றது மனைவி. குப்பி விளக்கினுள் இணைந்து வாழும் அந்தக் கணவன் - மனைவி திரியும் மண்ணெண்ணையும்தான். சற்று நேரத்தின் பின் -

திரி விழித்துக்கொண்டது. கீழே தூங்கும் மண்ணெண்ணையை மெல்ல எழுப்புகின்றது. திரியின் குரல் கேட்ட மண்ணெண்ணெய் விழித்தது. "என்ன இப்பொழுது பேசுகிறீர்கள் எத்தனை மணி?" மண்ணெண்ணெய் கேட்டது.

"இப்பொழுது பன்னிரண்டு மணி" எனக்கு தூக்கம்வர மறுக்கிறது. இருட்டில் தனியே விழித்துக் கொண்டிருக்க முடியவில்லை. தூக்கம் வரும் வரை ஏதாவது கதைக்கலாம் என்றே உன்னை எழுப்பினேன் என்றது திரி.

"அத்தான் எதைக் கதைப்பது?" என்றது மண்ணெண்ணெய்

"ஒன்றுமில்லைத் தேவி; இந்த உலகத்தையும் மனிதர்களின் வாழ்வையும் நினைக்கும் போது சிரிப்பும் சிந்தனையும்தான் வருகிறது" என்றது திரி.

## சிந்தனைக்கதை

"ஏனத்தான் அப்படிச் சொல்லுறீங்கள்" மண்ணெண்ணெய் கேட்டது.

"இங்கே பார்! நானும் நீயும் பிரிந்து வாழ்ந்தால் இருவருமே பெயரவில்தான் வாழ்வோம். எங்களில் மாற்றம் ஏற்படாது. எமக்கோ மனிதர்களுக்கோ பிரயோசனமில்லை. எம் வாழ்வில் ஒளி பெற முடியாது. யார்தான் என்னையும் உன்னையும் பிரித்து வைத்து தனித்தனியே ஒளியூட்டினாலும் ஒளி பெற மாட்டோம் பார்! என்னையும் உன்னையும் சேர்த்து வாழச் செய்வதற்கே இவ்வீட்டுப் பெண்மணி எம்மிருவரையும் ஒரு குப்பியில் வைத்திருக்கிறாள். என்னையும் உன்னையும் தொடர் பறுத்து வைத்தால் எமக்கோ, ஏனையவர்களுக்கோ பயன்இல்லை. ஒளி பெறாது என்பதை அப்பெண்மணி நன்கு அறிந்துதான் அப்படிச் செய்திருக்கிறாள் என்றது திரி.

"ஆம் அத்தான் உங்கள் விடை முற்றிலும் சரியானது" என்றது மண்ணெண்ணெய் 'ஆனால்' என்று மீண்டும் தொடர்ந்தது.

"அத்தான்! நாம் சேர்ந்து வாழ்வதால் ஒளிபெற்று ஏனையோருக்கும் உதவுகிறோம். அப்படியானால் சந்திரனைக் கூட வென்ற மனித இனத்தில் கணவன், மனைவியர்க்கிடையே பிரிவு ஏன்? அவர்களையும் சேர்த்து வாழ வைத்துப் பயன்பெற முடிவதில்லையா?"

**கனகராயனூரான்**

மண்ணெண்ணெய் கேட்டது.

"அதைத்தான் கண்ணே நானும் சிந்திக்கிறேன்" என்று திரி கூறியது.

அச்சமயம் -

அந்தப் படுக்கையறையில் படுத்திருந்த கணவனைக் கைவிட்டு வாடும் பெண்மணி எழுந்து அந்த குப்பிவிளக்கின் திரியில் தீயைப் பற்ற வைக்கிறாள்.

குப்பி விளக்குத் திரி இருட்டறையில் ஒளிவீசச் செய்கிறது. மண்ணெண்ணெய் திரிக்கு தன் சக்தியை ஊட்டி அர்ப்பணித்துக் கொண்டிருக்கிறது என்னே? திரி, மண்ணெண்ணெய் தம்பதிகளின் இணைந்த வாழ்வு!

"அத்தான்! என்னையும் உங்களையும் இணைத்து வாழ வைத்தால்தான் ஒளி பெறமுடியுமென உணரும். இப்பெண் தன்வாழ்வில் கணவனைக் கைவிட்டு ஒளியிழந்து வாழ்கிறாளே! இவளுக்கு எமது வாழ்க்கையாவது தெரிவதில்லையா?" என்று கேட்டது மண்ணெண்ணெய்.

"எங்களைவிட பெரிய மனித இனத்திற்கே இவற்றை உணர்ந்து வாழத் தெரியாவிட்டால் நாம் என்ன செய்ய முடியும்? என்றது திரி.

"அது உண்மை" என்று கூறி திரியை மண்ணெண்ணெய் முத்தமிட்டுக் கொண்டது.

சிந்தனைக்கரு:– "வாழ்க்கையின் கோலங்கள்".

## இத்தகைய பேறு கிடைக்குமா?

பாண்டிய அரசனான வரகுணபாண்டியன் சிவபெருமானிடம் பேரன்பு பூண்ட அடியவனாக விளங்கினான்.

அவன், சிவபெருமானின் திருக்கோயில்களுக்குச் சென்று வழிபடுவதைத் தலையாய கடமையாகக் கொண்டிருந்தான்.

ஒருமுறை அவன் திருவிடைமருதூரை அடைந்தான். திருக்கோயிலுக்குள் செல்வதற்கு முன்பு கோயில் இருந்த வீதியை வலம் வந்தான்.

அங்கே வழியில் ஒரு மண்டையோடு கிடந்தது.

அதைப் பார்த்த அவன் தன் கண்களில் கண்ணீர் மல்க அந்த மண்டையோட்டைப் பலமுறை நிலத்தில் விழுந்து வணங்கினான்.

'எதற்காக இப்படி மண்டையோட்டை வணங்குகிறீர்கள்?' என்று உடன் வந்தவர்கள் கேட்டார்கள்.

''இறந்தபின்பும் திருவீதியில் கிடக்கும் நற்பேறு இந்த மண்யோட்டிற்கு இருக்கிறதே! இப்படிப்பட்ட நற்பேறு எனக்கும் கிடைக்க இறைவன் அருள் புரிய வேண்டும் என்ற எண்ணத்தில்தான் இப்படிப் பல முறை வணங்கினேன்'' என்று பதில் சொன்னான் வரகுணபாண்டியன்.

-கோமதி-

## சிறுவர் சுடர் விடை

(XVI ஆம் பக்கத்தில் பிரசுரமாகியுள்ள 'சிறுவர்சுடர்' பகுதியில் தவறிவிடப்பட்டது எது? என்ற புதிருக்கான விடை)

A) வால்
B) பென்டுலம்(ஆடுதண்டு)
C) காதணி
D) இறக்கை
E) காது
F) கால்

## நன்னெறிக்கு வழிகாட்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாற்றால் தலைவர்களுடைய புத்தி, அவர்களோடு தொடர்புபட்டவர்களின் ஊழ் காரணமாகப் பேதகமடையுமென்பதை, புராண இதிகாசங்கள் எடுத்துக்காட்டுகின்றன. மக்களின் நல்வினை தீவினைகளுக்கேற்றவாறு மன்னனின் மனமே மாற்றமடையுமானால், கொன்றிடு குத்தென்று கூறிடும் மக்களால் தெரிவுசெய்யப்படுந் தலைமை எவ்வாறமையும்! நாட்டிலே நல்லாட்சி நடைபெறவேண்டுமானால் மக்கள் நல்லவர்களாக வாழவேண்டும்.

நல்லவர்களாக வாழவேண்டுமானால், தெய்வங்களை வணங்குவதன் மூலம் சிவநிந்தனை செய்யாமை, செய்ந்நன்றி மறவாமை, அஞ்சாமை, பாவகாரியம் செய்யாமை, பாவஞ் செய்பவர்களை மதியாமை முதலிய அறநெறிகளைக் கடைப்பிடிக்க வேண்டும்; புன்னெறியதனிற் செல்லும் போக்கினை விலக்கவேண்டும்.

இவ்வாறு வாழ்வாங்கு வாழ வழிகாட்டும் கந்தபுராணம் கந்த விரதங்கள் பற்றியும் கூறுகிறது. வெள்ளிக்கிழமை விரதம், கார்த்திகைவிரதம், கந்தசஷ்டி விரதம் என்பன கந்த விரதங்கள். இவ்விரதங்களை அனுட்டித்து வரம் பெறவேண்டுமானால் நன்னெறியில் ஒழுகவேண்டும். நன்னெறியிற் செல்வதை ஒழித்து, உணவை ஒழிப்பது மாத்திரமே விரதமெனக் கருதினால் அது அனுபானத்தைத் தவிர்த்து மருந்தை மாத்திரம் உண்ணக் கருதுவது போன்றதாகும்.

## வன்னி வாழ்வும்......

(VII ஆம் பக்கத் தொடர்ச்சி)

அரசாங்கத்திட்டைக் கையேந்திப் பெற வேணுமா? நீங்களே சொல்லுங்கோ. வன்னியிலை எங்களின்ரை சனங்கள் எவ்வளவு கஷ்டப்படுகுதுகள்? குண்டு வீச்சிலும் ஷெல்வீச்சிலும் எத்தனை பேர் நாளாந்தம் சாகினம்? எத்தனை பேர் முடமாப் போகினம்? பசி பட்டினியாலே, மருந்துகள் இல்லாமல் சாகிறவை எத்தனை பேர்?ஆனால் இதைப் பற்றிக் கொஞ்சமும் சிந்திக்காமல், இந்தக் கைங்கரியங்களைச் செய்கிறவையிட்டைக் கையேந்தி இப்படிச் பிச்சை வாங்கவேணுமா?"

பொரிந்து தள்ளினாள் மாலா.

"ஓம் பிள்ளை, என்ரை அபிப்பிராயமும் அதுதான். இந்தப் பதவியாலை ஒரு லாபமும் இல்லை. சும்மா பேர்தான்." என்றார் வீட்டுக்காரர்.

"உந்தப் பாராட்டு விழாவுக்குச் செலவழிக்கிறகாசை வன்னிக்கு அனுப்பிவிட்டிருக்கலாம். எத்தனையோ பேருடைய பசியைத் தீர்த்திருக்கும். இப்ப பாருங்கோ, போனகிழமை நடந்த சம்பவத்திலை எவ்வளவுபேர் செத்துப் போச்சினம்" என வாசுகி கூற, இடையில புகுந்து மாலா கூறினாள்.

"மாமா,அப்பாவும் தம்பியும் அதிலை செத்துப்போச்சினம். அங்கே செத்த வீடு. இங்கு கலியாணவீடு" என முடித்தாள்.

தகவல் கேட்ட வீட்டுக்காரர் சிறிது நேரம் அதிர்ச்சிஅடைந்தவராக மெளனமாக இருந்தார். சிறிதுநேர அமைதிக்குப்பின்பு தொடர்ந்தார்.

"உங்களுக்கும் பெரிய இழப்பு ஏற்பட்டிருக்கு. உங்களின்ரை நிலையோடை ஒப்பிடேக்குள்ளே இது பாரதூரமான விடயம்தான்.". என்றவர், எததனையோ காது கொடுத்து அவதானித்துவிட்டு "ஊர்வலம் வருகிறது போல இருக்கு" என்றார்.

"என்னது ஊர்வலமுமா?"

ஆச்சரியத்துடன் கேட்டாள் மாலா.

"ஓமோம். ஊர்வலம்தான்" என்று அவர் கூறிக்கொண்டிருக்கும்போதே, ஊர்வலம் வீட்டுவாயிலுக்கு வந்துவிட்டது. அங்கிருந்தபடியே அவதானித்தனர். வாசுதேவனும் குடும்பத்தவர்களும் மலர்மாலைகள் அணிவிக்கப்பட்டு அழைத்துச் செல்லப்பட்டனர். இது அவர்களின் ஆத்திரத்தை மேலும் அதிகரித்தது.

வாசுகி ஏதோ நினைத்தவளாகத் திடீரென எழுந்து நின்றாள்.

"மாலா... வா போவம்" என்றவள் வீட்டுக்காரரிடம், "நாங்கள் போட்டு வாறம்" என்று கூறியபடியே வீதியை நோக்கி நகர்ந்தாள். மாலாவும் எழுந்து பின் தொடர்ந்தாள்.

"அண்ணையைச் சந்திக்கவில்லையா?" எனக் கேட்டார் வீட்டுக்காரர்.

"அவரை என்ன சந்திக்கிறது?" அண்ணை எண்டு சொல்லவே வெட்கமாயிருக்கு. என்றவள் ,"வன்னியிலே கணவரும் மகனும் செத்தினம். இண்டையோடை அண்ணையும் செத்துப் போனார்." என்று கூறியபடியே மகளுடன் வீதியிலிறங்கி நடக்கத் தொடங்கினாள்.

(யாவும் கற்பனை)

## வலையில் படும்.....

(XII ஆம் பக்கம் பார்க்க)

தையா? அல்லது குடும்பமாகவா?

வலையில் பட்டுத்தப்புவதற்கு முயற்சி எடுத்து மேலும் வலையில் சிக்கிக்கொள்ளும். பின் களைத்துச் சோர்ந்து போகும். கண்களில் ஒரு காட்சி.....


தாய், தந்தையோடு ஒரு குடும்பமே வலையில் பட்டுள்ளது. விடியவாண்டுகள் வருவார்கள். வலை கீழே இறக்கப்படும். வௌவால்கள் பிடிக்கப்பட்டு இறக்கைகள் ஒவ்வொன்றாக முறித்து, முறித்து.....

"ஐயோ என்ரை அண்ணை. இங்க வந்திடாதேங்கோ.... இங்க வந்திடாதேங்கோ...பிள்ளையளோட அங்கேயே இருங்கோ." நான் என்னை மறந்து வெறிபிடித்தவன் மாதிரிக் கத்தினேன். வௌவால்கள் அதிர்ச்சியுடன் இடம் மாறின.

(யாவும் [illegible])

# சொற்சிலம்பம்

## புதிர்ப் போட்டி இல.128



### சொற்சிலம்பம் இல. 128

சஞ்சீவி,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

பெயர்: ........................................................................

விலாசம்: ....................................................................

..............................................................................

.........................இங்கே வெட்டுக.........................

முடிவுத் திகதி:- 19 - 11 - 1999

### இடமிருந்து வலம்

1. ஒன்பது கோள். 6. ஆசான். 7. குழப்பம். 9. மதம். 11. விழி. 12.பங்கு/பாகம். 13. நினைக்க/கணக்கிட 14. அனுபவித்துப்பெறு. 15.கிரகங்களுள் ஒன்று. 17. பார்வையின்மை. 18. வரம்பெற்ற புலவன். 20. சிரசு. 22. சிதம்பரம். 23. தொப்பி.

### மேலிருந்து கீழ்

1. சிரி. 2. ஆண்டு. 3. விற்பனை/விற்பனைத்தொகை. 4. விதம் 5.பயிருக்கிடையே முளைப்பவை. 8. கூர்மையான அறிவு. 10. மண்டி (எண்ணெய்) 11. பார்த்த. 12. அம்பிகாவதியின் சோடி. 13. அடைதல். 14. பலருக்கும் கன்னத்தில் வருவது. 16. வாயினால் எழுப்புவது. 17.ஒருங்கு சேர். 19. இது அறுபத்தினான்கு. 21. மஜ்னு விரும்புவது இவளை.

### சொற்சிலம்பம் 126 இன் விடைகள்

#### இடமிருந்து வலம்

1. சமபந்தி. 5. விடை. 6. கங்கை. 7. யாகம். 9. வாகு. 10. சகலமும். 11. சம்பவம். 13. கள். 14. கல்வி. 16. பலதரம். 17. இரவல். 18. பகர. 20. ராமன். 21. மன்றம்.

#### மேலிருந்து கீழ்

1. சகவாசம். 2. மங்கும். 3. பகை. 4. தியாகம். 5. விம்முதல். 8.கல. 10. சவள்தல். 12. பகலவன். 14. கம்பன். 15. விவரம். 16. பரம. 17. இரா. 19. கற.

பல நூற்றுக்கணக்கான வாசக நேயர்கள் இப்போட்டியில் ஆர்வத்துடன் பங்குபற்றி விடைகளை எழுதி அனுப்பியுள்ளனர். அவர்களில் அதிர்ஷ்ட சீட்டிழுப்பு மூலம் தெரிவு செய்யப்பட்ட முதல் மூன்று அதிர்ஷ்டசாலிகள் வருமாறு:-

**முதலாம் பரிசு:-** கே.இராஜகோபால்,
'பொன்மனை',
தொல்புரம்,
சுழிபுரம்.

**இரண்டாம் பரிசு:-** சோ.பதந்தன்,
37/3 மானிப்பாய் வீதி,
தாவடி,கொக்குவில்.

**மூன்றாம் பரிசு:-** உ.ஜனனி,
ஸ்ரீ ஜனா வெதுப்பகம்,
கரணவாய் தெற்கு, கரவெட்டி.

புதிர்ப்போட்டிக்கு விடைகள் அனுப்பும்போது கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் போட்டியின் இலக்கத்தை தவறாது குறிப்பிடவும்.

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்று பேர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசில்கள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன் - சஞ்சீவி ஊழியர்கள், அவர்களது குடும்ப உறுப்பினர்கள் போட்டியில் கலந்துகொள்ள முடியாது.

| | |
|---|---|
| முதற் பரிசு: | ரூபா 150.00 |
| இரண்டாம் பரிசு: | ரூபா 100.00 |
| மூன்றாம் பரிசு: | ரூபா 50.00 |

புதிர்ப்போட்டி இலக்கம் 127 இன் முடிவுகள் அடுத்தவார சஞ்சீவியில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தொகுப்பு: நம்பி

# அம்மா எது?

இந்தியாவின் மராட்டிய மன்னர்களுக்கு அமைச்சராக விளங்கியவர், நானா என்று அழைக்கப்பட்ட நானாபத்னாவிஸ். அவர் மிகுந்த மதியூகி. அவர் தமது புத்திசாதுரியத்தால் அரசுக்கு ஏற்பட்ட பலவிதப் பிரச்சனைகளையும் வெற்றிகரமாகத் தீர்த்துவைத்தார்.

ஒருநாள் அரபு நாட்டுக்குதிரை வியாபாரி ஒருவன் அரச தர்பாருக்கு வந்தான். அவன் தன்னோடு இரண்டு குதிரைகளைக் கொண்டுவந்திருந்தான். ஒரே மாதிரியாக இருந்த அந்த இரண்டு குதிரைகளும் அழகாகக் கம்பீரத்தோடு விளங்கின. மன்னர் அவற்றின் கம்பீரத்தில் லயித்துப்போனார். என்னவிலை கொடுத்தாவது அவற்றை வாங்கிவிட முடிவு செய்தார்.

ஆனால் வியாபாரியோ வெறும் பணத்திற்காக அவற்றை விற்கத் தயாராக இல்லை. அவன் மன்னனைப் பார்த்து, "அரசே! இந்தக் குதிரைகளை நான் என் குழந்தைகளைப் போல் வளர்த்திருக்கிறேன். மிகுந்த புத்திசாதுரியம் கொண்டவை இவை. வெறும் பொன்னாசைகொண்டு இவற்றை நான் விற்கப்போவதில்லை. நான் பல நாடுகளுக்கும் சென்று வந்திருக்கிறேன். பல மன்னர்கள் என் குதிரைகளை வாங்க ஆசைப்பட்டனர். ஆனால், குதிரைகளை நன்கு பயன்படுத்தத் தெரிந்த புத்திசாதுரியமுள்ள நாட்டிற்கு மட்டுமே விற்பதென்று உறுதியாக முடிவு செய்திருக்கிறேன்" என்றான்.



"சரி வணிகரே! எங்கள் நாட்டின் சாதுரியத்தை எவ்வாறு நீர் சோதிக்கப் போகின்றீர்?" என்றார் சேனாதிபதி.

அதற்கு அந்த வியாபாரி, "நான் இதற்கென்று ஒரு சிறிய பரீட்சை வைத்து வருகின்றேன். நான் கொண்டு வந்துள்ள ஒரே மாதிரியான இந்த இரண்டு பெண் குதிரைகளில் ஒன்று தாய், மற்றது அதன் குட்டியாகும். இவற்றுள் எது தாய், எது குட்டி என்று எந்த நாட்டில் கண்டு பிடிக்கிறார்களோ, அந்த நாட்டு மன்னருக்கே குதிரையை விற்பேன்" என்றான்.

சபையிலிருந்த எல்லோரும் இரண்டு குதிரைகளையும் சுற்றிச் சுற்றி வந்து பார்த்தார்கள். வயது வித்தியாசத்தைக் காட்டும் எந்த அறிகுறிகளுமே அவற்றிற்கு இடையில் காணப் படவில்லை.

அவற்றிற்கிடையில் வித்தியாசமே கண்டுபிடிக்க முடியவில்லை. எல்லோருடைய கண்களும் நானாபத்னாவிஸின் மீது திரும்பின. அமைச்சர் நானா தமது அறிவுத்திறமையால் நாட்டின் மானத்தைக் காப்பாற்றுவார் என்று அவர்களுக்கு அபாரநம்பிக்கை. இரண்டொரு நாள்கள் அவகாசம் கொடுத்தால் இதற்கு விடை காண்பதாகக் கூறினார் நானா. மன்னனும் வியாபாரியும் சம்மதித்தனர்.

மறுநாள் குதிரைகளைக் கட்டியிருந்த லாயத்திற்குப் போனார் நானா. இரண்டு குதிரைகளையும் கூர்ந்து கவனித்தார். அவைகளின் நிறம், அங்க அடையாளங்கள், வாலின் நீளம் போன்ற எல்லாமே ஒரே மாதிரியாக இருந்தன. பிரச்சினைக்கு விடை காணமுடியாமல் கவலையோடு வீட்டிற்குப் போனார் நானா. அன்றிரவு முழுவதும் அவருக்குத் தூக்கம் வரவில்லை. மறுநாள் காலைப்பொழுது விடிந்தது. 'சோ' வென்று பெருமழை பெய்து கொண்டிருந்தது. நானாவின் மனதில் திட்டமொன்று உதயமாயிற்று.

குதிரைகளிரண்டையும் அழைத்து வருமாறு வியாபாரியிடம் கூறினார் நானா. எல்லோரும் குதிரைகளோடு ஆற்றங்கரைக்குப் போனார்கள். மழை காரணமாக ஆற்றில் வெள்ளம் அதிகமாக ஓடிக்கொண்டிருந்தது.

"குதிரைகளை அவிழ்த்து ஆற்றிலே விரட்டிவிடுங்கள். அவை நீந்தி அக்கரைக்குப் போகட்டும்" என்று காவலர்களுக்குக் கட்டளையிட்டார் நானா.

பொங்கிச் சுழித்தோடும் வெள்ளத்தில் குதிரைகளிரண்டும் இறக்கப்பட்டன. கூடியிருந்தவர்களுக்கு நானாவின் இச்செயல் பைத்தியக்காரத்தனமாகப்பட்டது.

ஆற்றிலே இரு குதிரைகளும் நீந்த ஆரம்பித்தன. ஆற்றின் நடுவிலே ஒரு பெரிய சுழல் தென்பட்டது. அதை நெருங்கியவுடன் இரு குதிரைகளும் சிறிதுநேரம் தயங்கிநின்றன. திடீரென்று ஒரு குதிரை முன்னேறிச் செல்ல ஆரம்பித்தது. மற்றையது முதலாவதைப் பின் தொடர்ந்தது. விரைவில் இரு குதிரைகளும் பத்திரமாக அக்கரை போய்ச்சேர்ந்தன. அங்கே காத்திருந்த காவலர்கள் அவற்றைப் பாலத்தின் மூலம் இக்கரைக்குக் கொண்டுவந்தனர்.

நானா குதிரை வியாபாரியைப் பார்த்து, "வியாபாரியே! சுழலிலிருந்து முதலாவதாக முன்னேறிச் சென்றதே, அதுதான் தாய்க்குதிரை. அனுபவத்தோடு தாயன்பும் கொண்டது அது. அதனால், தான் முந்திச் சென்று குட்டிக்கு வழிகாட்டி உதவியது" என்றார். தாயையும் குட்டியையும் சரியாகக் கண்டு பிடித்த நானாவை மெச்சிய வியாபாரி, தனது இருகுதிரைகளையும் மன்னருக்கு விற்றுவிட்டுப் புறப்பட்டான். மகிழ்ந்த மன்னர் நானாவைப் பாராட்டிப் பரிசளித்தார்.

- பி. சுந்தரி -

# இவர்தான் அவர்!



சென்ற வாரம் துண்டு துண்டான நிலையில் கிரிக்கெட் வீரர் ஒருவரின் படத்தைப் பிரசுரித்து அவர் யாரென்று கேட்டிருந்தோம். அவர் ஆஸ்திரேலிய அணியின் சூழல்பந்து வீச்சாளர் ஷேன்வோர்ண்தான். சரியாகக் கண்டு பிடித்தவர்களுக்குப் பாராட்டுக்கள்!.

சரியாகப பொருத்த முடியாமல் போனவர்கள் மீண்டுமொரு முறை முயற்சித்துப் பாருங்கள்!

# ஐந்து பவுண் கடிதம்

விக்டோரியா மகாராணியின் பேரன்களில் ஊதாரித்தனமாகச் செலவு செய்யும் பேரன் ஒருவன் தன் பிறந்தநாளைக் கொண்டாடுவதற்குத் தனக்குப் பணம் அனுப்புமாறு ராணியாருக்கு மடல் எழுதியிருந்தான்.

மகாராணியார் பணம் அனுப்பாமல், அவனது ஊதாரித்தனத்தைக் கண்டித்தும் அறிவுரை கூறியும் கடிதம் அனுப்பினார்.

அதற்குப் பேரனிடமிருந்து வந்த பதில் ராணிக்கு வியப்பை அளித்தது. பேரன் திருந்திவிட்டான் என்று நினைக்கிறீர்களா? அதுதான் இல்லை. 'மகாராணியார் தனது கைப்பட எழுதிய கடிதம் என்று கூறி அதை ஐந்து பவுணுக்கு விற்றுவிட்டேன். பணம் அனுப்பாவிட்டாலும், தாங்கள் அனுப்பிய அறிவுரைக் கடிதத்திற்கு மிக்க நன்றி" என்று பேரன் அக்கடிதத்தில் எழுதியிருந்தான்.


# மந்திரவித்தை

அருமைச் சிறுவர் சிறுமியரே!

உங்கள் நண்பர்களைப் பிரமிக்கச் செய்வதற்காக நீங்கள் செய்யக்கூடிய தந்திரம் ஒன்றை உங்களுக்கு நான் கற்றுத் தரப்போகிறேன். உங்க்ள் நண்பர்களிடம் நீங்கள் இதனை 'மந்திரவித்தை'யாகச் செய்து காண்பிக்கலாம்.

எழுதுவதற்குப் பாவிக்கும் சிலேட் ஒன்றை எடுத்துக் கொள்ளுங்கள். மிக எளிதாக சிலேட்டின் ஒரு பக்கத்தின் மீது பொருந்தக் கூடியதான அளவில் கறுப்பு மட்டை ஒன்றையும் எடுத்துக் கொள்ளுங்கள் (படம் 1)

சிலேட்டின் ஒரு பக்கத்தில் ஏதாவது வார்த்தைகளையோ அல்லது பெயரையோ வெண்கட்டியின் (சோக்) உதவியுடன் எழுதிக் கொள்ளுங்கள்.




சிலேட்டில் எழுதிய பக்கத்தின் மீது கறுப்பு மட்டையை வைத்து மூடிக் கொள்ளுங்கள். இப்போது சிலேட்டின் இருபுறமும் எதுவும் எழுதப்படாதது போலத் தோன்றும் (படம் 2)

இப்போது சிலேட்டை கூடியிருக்கும் உங்கள் நண்பர்களிடம் காட்டி (சற்றுத் தொலைவில் வைத்துத்தான்!) ஏதாவது எழுதப்பட்டுள்ளதா என்று கேளுங்கள். அவர்கள் 'இல்லை' என்று கூறுவார்கள்.

சிலேட்டை மேசையில் வைத்துவிட்டு வெண்கட்டியை எடுத்துக்கொண்டு அந்தரத்தில் ஏதோ எழுதுவது போலப் பாவனை செய்யுங்கள். 'இப்போது இங்கு அந்தரத்தில் எழுதியதை சிலேட்டில் வரவழைத்துக் காட்டுகிறேன்' என்று நண்பர்களிடம் கூறுங்கள்.

மேசையிலுள்ள சிலேட்டின் மீது துணி ஒன்றைப் போட்டு மூடிக் கொள்ளுங்கள். மூடும்போது கறுப்பு மட்டை கொண்டு மூடியுள்ள சிலேட்டின் பக்கம் அடிப்புறத்தில் இருக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டியது அவசியம்.

வாயில் வரும் வார்த்தைகளை 'சூ! மந்திரகாளி! கிறீம்...'(மந்திரம்) கூறியவாறே கைக்குட்டையை நீக்கிவிட்டு சிலேட்டைக் கையில் எடுத்துக்கொள்ளுங்கள். இப்போது சிலேட்டில் வார்த்தைகள் எழுதியிருந்த பக்கத்தை மூடியிருந்த கறுப்பு மட்டை மேசை மீது தங்கிவிடும் (படம் 3)

சிலேட்டை நண்பர்களிடம் காட்டுங்கள். சிலேட்டில் வார்த்தைகள் பளிச்சென்று தென்படும்.

நீங்கள் செய்த மந்திர வித்தையைக் கண்டு உங்கள் நண்பர்கள் வாயடைத்துப் போவார்கள்!

- மஜிக்மாமா -

# வழிபடுவோம்...!

காந்தி என்றொரு தாத்தாவாம் - அவர்
சாந்தி உருவாய் அமைந்தவராம்
அன்பின் வடிவாய் மிளிர்ந்தவராம் - நிதம்
அகிம்சைப் பொருளாய் திகழ்ந்தவராம்
இன்பமும் துன்பமும் ஒன்றெனவே - அவர்
உலகில் மதித்து வாழ்ந்தவராம்!

- காந்தி

அணுவின் சக்தி மிகப்படைத்த - கொலை
ஆயுதங் கொண்ட வல்லரசை
துணிவாய் எதிர்த்து அகிம்சையினால் - அவர்
சுதந்திரம் பெற்ற திருமகனாம்!

- காந்தி

சட்டம் படித்த பெருமகனாம் - கால்
சட்டை தொப்பியை வெறுத்தவராம்
பட்டப் படிப்பில் தேர்ந்திருந்தும் - முழத்
துண்டே உடுத்தி வாழ்ந்தவராம்!


- காந்தி

அன்பு பொங்கும் கருணையுரு - இவ்
அகிலம் அறிந்த பெருஞ்ஜோதி
இன்பம் பொங்கும் அவருருவாம் - அதை
இதயத் திருத்தி வழிபடுவோம்!

- காந்தி

விதுஷணி தவதாஸ்,
சாவகச்சேரி.

# தவறவிடப்பட்டது எது?




இங்கேயுள்ள ஆறு படங்களையும் நன்கு உற்றுப் பாருங்கள். இவற்றை வரையும் போது ஒவ்வொரு படத்திலும் தலா ஒவ்வொரு பகுதிகள் விடுபட்டுப் போயுள்ளன. அவை எவை என்று கண்டுபிடிக்க முடிகிறதா பாருங்கள். முடியாவிட்டால் XV ஆம் பக்கத்தில் பார்த்துத் தெரிந்து கொள்ளுங்கள்.

# மழை

அந்திப் பட்டு வானிலே
அன்று மேக ஊர்வலம்
அந்த ஊர்வ லத்திலே
அக்கி னிதான் மின்னுறான்

பின்தொ டர்ந்து வந்தவர்
முரச றைந்து செல்கிறார்
தந்த னத்தோம் தாமெனத்
தாள லயம் கேட்குதே

என்ன விந்தை விந்தையோ...
சூரி யனைக் காணலை?
அண்ணா வந்து பாரடா
ஆன தென்ன கூறடா?

வான மீது வில்லென
வந்து நிற்ப தேதடா?
ஆன தென்ன அற்புதம்?
அங்கு மழை பெய்யுதே.

- வி.சரிதாஷினி,
இந்துமகளிர் கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org